ஸ்ரீ

சந்திரசேகரன்

இது

ஸ்ரீ பங்கிம் சந்திர சட்டோபாத்யாயரால்

வங்காளபாஷையில் இயற்றப்பட்டு

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயம்,

விவேகானந்த விஜயம், ஆனந்தமடம்,

இந்நூல்கள் இயற்றிய

மஹேச குமார சர்மா

அவர்களால்

தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
P.A.GANERI.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி

மயிலாப்பூர், மதராஸ்

காபிரைட்] [விலை

MADRAS: G. C. LOGANADHAM BROS.
THE GUARDIAN PRESS, MOUNT ROAD

...ight by the General Supplies Co., Mylapore, Madras.
January 1912.

Б. 14

4099

ஸ்ரீ

சந்திரசேகரன்

பீடிகை

முதல் அத்தியாயம்

பாலகன், பாலிகை

பாகீரதி யாற்றங்கரையிலுள்ள ஒரு மாந்தோப்பிலே ஒரு பாலகன் உட்கார்ந்து அந்தி நேரத்திலே கங்கா ஜலத்தில் மந்தமாயெழும் அலைகளின் மெல்லிய ஓசையைக் கேட்டுக்கொண்டிருந்தான். அவனது காலண்டையில் ஒரு பாலிகை பசும் புற்படுக்கையில் அமர்ந்து மௌனமாய் அவனது முகத்தைப் பார்த்த வண்ணமாயிருந்தாள். அவள் அதே கருத்தாய்ப் பார்த்துப் பார்த்து, பிறகு ஆகாசத்தையும், ஆற்றையும், மரங்களையும் கண்ணுற்று மறுபடியும் அவனது முகத்தையே பார்ப்பாளாயினள். அந்தப் பாலகனது பெயர் **பிரதாபன்.** அந்தப் பாலிகையின் பெயர் **சைவலிநி.** சைவலிநி அப்பொழுது எழு அல்லது எட்டுவயதுள்ள குழந்தை; பிரதாபனோ அப்பொழுதுதான் யௌவன தசைக்கு வருபவனா யிருந்தான்.

தலைக்கு நேரே வானம்பாடிப் பறவை இனிமையாய் இசைபாடிக் கொண்டு ஆகாச மண்டலத்தைச் சங்கீத வெள்ளத்தால் நிறைத்துப் பறந்து கொண்டிருந்தது. சைவலிநியும் அதன் இனிய குரலை அநுகரித்துக் கரையிலுள்ள மாந்தோப்பு குலுங்குமாறு பாடினாள். அந்தப் போலிப்பாட்டுடன் கங்காநதியின் ஓசையும் கலந்துகொண்டது.

அந்தப் பாலிகை தன் சின்னஞ்சிறிய 'தளிர்க்கைகளால், அக்கைகளைப்போன்ற மெல்லிய காட்டு மலர்களைப் பொறுக்கி மாலையாகக்

கட்டிப் பாலகனுடைய கழுத்தில் சூட்டினுள். மறுபடியும் அதை யெடுத்துத் தன் கொண்டையில் அணிந்தாள் ; திரும்பவும் அதை யெடுத்து அவனது கண்டத்தைச் சுற்றி யலங்கரித்தாள். அம்மாலையை யார் அணிவதென்று அவர்களுக்குள் நிச்சயமாகாமையால், பக்கத்தில் பெருத்துக்கொழுத்த ஒரு பசு மேய்ந்துகொண்டிருப்பதைப் பார்த்து, விவாதத்தில் விழுந்த அம்மாலையை அப்பசுவின் கொம்புகளிற் சுற்றி ஞள். இவ்விதமாக அவ்வழக்குத் தீர்ந்தது. இத்தகைய வழக்குகள் அவர்களுக்குள் அடிக்கடி விளையும். அப்பொழுது பாலகன் மாலைக்கு மாற்ருகச் சில சமயங்களில் பறவைக் கூடுகளினின்று குஞ்சுகளைக் கொணர்ந்தும், மாம்பழக்காலத்தில் கனிந்த இனிய பழங்களைக்கொண்டு வந்தும் கொடுப்பான்.

அந்திவேளையில் மந்தமாய்த் திகழும் மெல்லிய ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் தோன்றும்போது, அவர்கள் அவற்றை யெண்ணத் தொடங்குவார்கள். யார் முதலிற் பார்த்தது? எந்த நக்ஷத்திரம் முத லிற் கண்ணுக்குத் தெரிந்தது ? உனக்கு எத்தனை நக்ஷத்திரம் தெரிகி கிறது ? நாலா ? எனக்கு அஞ்சு தெரிகிறதே. அதோ ஒன்று, அதோ ஒன்று, அதோ ஒன்று, அதோ ஒன்று, அதோ ஒன்று. அதெல்லாம் வெறும் பொய் ; சைவலினிக்கு மூன்று நக்ஷத்திரத்துக்கு மேல் தெரியவேயில்லை.

அஃதிருக்கட்டும். இந்தப் படகுகளை எண்ணுவோம். எத்தனை படகு போகிறது? சொல் பார்ப்போம். பதினுரு ? வா, பந்தயம் போடு வோம், நான் பதினெட்டு என்கிறேன். சைவலினிக்கு எண்ணத் தெரியவில்லை. முதல்தரம் எண்ணினுள். ஒன்பது இருந்தது. இன் னெருதரம் எண்ணினுள், இருபத்தொன்ருய்விட்டது. அதன் பிறகு எண்ணுவதை நிறுத்திவிட்டு, அவர்கள் இருவரும் ஒரே படகின்மேல் பார்வையைச் செலுத்தி அதையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந் தனர். அந்தப் படகில் யார் இருக்கிறது? அது எங்கே போய்க்கொண் டிருக்கிறது ? எங்கிருந்து வருகிறது ? சுக்கானல் அடிபட்டு அலையலை யாய்ப்பிரிந்து இரைச்சலிடும் ஜலத்தில் பொன்னனது எப்படிப் பளபள வென்று மின்னுகின்றது பார் ?

இரண்டாம் அத்தியாயம்

முழுகிப்போவது யார், முழுகாதிருப்பது யார் ?

இவ்வாறு இவர்களுக்குள் ஆசை உண்டாயிற்று. அதைக் காதலென்ருலும் சரி, அல்லவென்ருலும் சரி, உங்களிஷ்டம். பதினறு வயதுக் காதலன், எட்டு வயதுக் காதலி ! வெகுநேர்த்தி ! எவ்விதமாயியினும், பாலகர்களைப்போல் நேசமா யிருப்பதற்கு மாத்திரம் ஒருவருக்குந் தெரியாது.

பாலிய நேசத்துக்கே ஒரு சாபக்கேடு உண்டாயிருப்பதாய் நினைக்கின்றேன். பால்யத்தில் எவரெவர்களை நேசிக்கின்ருேமோ, அவர்களுள் எத்தனை பேரை யௌவன காலத்தில் நேரிற் பார்க்கிருேம்? அவர்களுக்குள்ளும் எத்தனை கொஞ்சம்பேர் அதுவரையிற் பிழைத்திருக்கிருர்கள் ? அவர்களுக்குள்ளும் நேசத்துக்குப் பாத்திரமாய் இருப்பவர் எத்தனைபேர் ? கிழத்தனத்திலோ குழந்தைப்பருவத்து நேசத்தின் ஞாபகம்மாத்திரம் இருக்கிறதேயன்றி மற்றதெல்லாம் மறந்துபோய்விடுகிறது. ஆனல் அந்த ஞாபகம் ஒன்றுமே எவ்வளவு மதுரமா யிருக்கிறது ?

ஒவ்வொரு பாலகனும் எப்பொழுதாவது ஒரு சமயத்தில் எந்தப்பெண் முகத்தையாவது கண்டு, அது விசேஷ மனோஹரமா யிருக்கிறதென்ற கருத்து அவன் உள்ளத்தில் பதிந்திருக்கவேண்டும். அவளது கண்களில் இன்ன தென்று சொல்லிமுடியாத அப்படிப்பட்ட அழகு விளங்குகின்றது. அவன் எத்தனை தரம் தன் விளையாட்டை நிறுத்திவிட்டு, அவள் முகத்தைப் பார்த்திருப்பான் ! அவளையெட்டிப் பார்க்கலாமென்று அவள் போகும் வழியில் எத்தனை முறை போய் கின்றிருப்பான் ? அதன் பிறகு அந்த மதுரமான முகமும், அந்தக் கபடமற்ற கடைக்கண் நோக்கும் எல்லாம் காலத்தின் மஹாப்ரவாஹத்தில் அடித்துக்கொண்டுபோய் விடுகிறது. எங்கே என்ருல் ஒருவருக்குந் தெரியாது. அதை மறுபடியும் காணவேண்டுமென்று உலகமுழுவதும் தேடிப்பார்த்தாலும், அதன் ஞாபகம்

மாத்திரம் இருக்கிறதேயன்றி, மற்றெதுவும் அகப்படுவதில்லை. ஆகையால் தான், பாலிய நேசத்துக்குச் சாபக்கேடு உண்டாயிருக்கிறதென்று சொன்னேன்.

சைவலினி தன்னைப் பிரதாபனுக்குக் கல்யாணம் செய்து கொடுப்பார்களென்று எண்ணியிருந்தாள். பிரதாபனுக்கோ அது நடவாதென்று நிச்சயமாய்த் தெரியும். ஏனெனில், அவள் அவனுடைய தாயாதியின் மகள், தூர பந்துவாயினும் தாயாதி தாயாதிதானே. இதை அறியாமற் போனது சைவலினியின் யோசனையில் முதல் தவறு.

சைவலினி ஏழைவீட்டுப் பெண். பெற்ற தாயைத்தவிர அவளுக்கு வேறு பந்து ஒருவரும் இவ்வுலகத்தில் இல்லை. அவர்களுக்குச் சொத்தும் ஒன்றும் கிடையாது, கேவலம் ஒரு கூரைக்குடிசையும் சைவலினியின் ரூபராசியுந்தான் அவர்களுக்கிருந்த ஆஸ்தியெல்லாம். பிரதாபனும் ஏழையே.

சைவலினி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தாள். அவள் வடிவழகு வளர்பிறைபோல் ஓங்கிப் பூர்ணமாய்ப் பொலிவுற்றுத் திகழ்ந்தது. ஆனல் இன்னும் கல்யாணமாகவில்லை. கல்யாணமென்றால் சாமான்யமா? அதிகப் பணச்செலவாகுமே, அதை யார் பொறுப்பவர்? அந்தக் காட்டிற்போய் அந்த ரூபராசியைத் தேடி அதை விலையில்லா மாணிக்கமென்று கொண்டாட யாருக்கு அவ்வளவு அக்கறை?

சைவலினிக்குப் புத்தி தெரியும் பிராயமாயிற்று. இவ்வுலகத்திற் பிரதாபனைத்தவிர தனக்கு வேறு சுகமில்லையென்று அவளுக்குத் தெரிந்தது. இந்த ஜன்மத்தில் பிரதாபனை யடையும் அதிர்ஷ்டம் தனக்கில்லையென்றும் அவளுக்குத் தெரிந்தது.

அவர்கள் இருவரும் கூடி இதைப்பற்றி யோசனை பண்ணினார்கள். பலநாள் ஏகாந்தமாய் ஆலோசனை செய்தார்கள். சங்கதி ஒருவருக்குந் தெரியாது. ஒருநாள் அவர்கள் மனத்தில் ஏதோ நிச்சயம் செய்துகொண்டு, கங்காநதியில் நீராடச் சென்றார்கள். அன்று வெகு ஜனங்கள் நதியில் நீந்திக்கொண்டிருந்தார்கள். "சைவலினி, நீஞ்சலாம் வா" என்று பிரதாபன் அழைக்க, உடனே இருவரும் நீந்தத் தொடங்

கினர். நீந்தும் வித்தையில் அவ்விருவரும் மிக்க வல்லவர். அவர்களைப் போல் நீந்த அவ்வூரில் வேறெந்தப் பிள்ளைகளாலும் ஆகாது.

அது மாரிகால மானபடியால் கங்கை பூர்ணப்பிரவாஹத்துடன் போய்க்கொண்டிருந்தது. கங்காஜலமானது துள்ளிக்குதித்தும் ஆடி ஓடிக்கொண்டும் சென்றது. அவர்கள் பிரவாஹத்தை இருகூறாகப் பிளந்துகொண்டும் நுரையெழும்பும்படிக் கடைந்துகொண்டும் நாற் புறமும் வாரி இறைத்துக்கொண்டும் நீந்திச் சென்றார்கள். நுரையுடன் கூடிய நீர்க்குமிழிகளில் பிரதிபலித்த அவர்களின் அழகிய பால வடி வங்கள் வெள்ளிமோதிரத்திற் பதித்த ரத்னயுகளம் போல் திகழ்ந்தன.

அவர்கள் இவ்வாறு நீந்திக்கொண்டு வெகுதூரம் போய்விட்டதை ஸ்நான கட்டத்தில் நீராடிக்கொண்டிருந்தவர்கள் பார்த்து, திரும்பி வரும் படி கூவியழைத்தனர். அவர்கள் அதை லக்ஷியம் செய்யாமலே இன் னும் போய்க்கொண்டே யிருந்தார்கள். நீராடுந் துறையிலிருந்தவர்கள் மறுபடியும் அவர்களைக் கூவியழைத்தார்கள். பயமுறுத்தினார்கள், வைதார்கள். என்ன செய்தும், அவர்கள் சிறிதேனும் லக்ஷ்யம் செய்யா மல் இன்னும் போய்க்கொண்டே யிருந்தனர். வெகுதூரம் போய்விட்ட பிறகு பிரதாபன் திரும்பி, "சைவலினி, கல்யாண முடியைப் போடுவ தற்கு நமக்கு இதுதான் சமயம்" என்றான்.

"இன்னும் அதிகதூரம் போவதில் என்ன பிரயோஜனம்? இங் கேயே ஆகட்டுமே" என்றாள் சைவலினி. பிரதாபன் முழுகிவிட்டான்.

சைவலினிக்கோ முழுக மனம் வரவில்லை. அவள் பயப்பட்டாள். அவள் தனக்குள்ளே, 'நான் என் சாகவேணும்? பிரதாபன் எனக்கு யார்? எனக்குப் பயமாயிருக்கிறது. என்னால் முடியாது, நான் சாக மாட்டேன்' என்று நினைத்தாள். சைவலினிக்கு முழுகிப்போக மனம் வரவில்லை. அவள் திரும்பி நீந்திக்கொண்டுபோய் கரை சேர்ந்தாள்.

மூன்ருவது அத்தியாயம்

விவாஹம்

பிரதாபன் முழுகிப்போன விடத்திற்கு வெகுதூரமல்லாத விடத்தில் ஒருபடகு வந்துகொண்டிருந்தது. அதிலிருந்த பிரயாணிகளில் ஒருவன் பிரதாபன் முழுகிப்போவதைப் பார்த்து நீரில் குதித்தான். அந்தப் பிரயாணியின் பெயர் **சந்திரசேகர சர்மா.**

சந்திரசேகரன் நீந்திக்கொண்டு போய்ப் பிரதாபனைப் பிடித்துத் தூக்கிப் படகில் எடுத்து விட்டான். படகு கரை சேர்ந்ததும், அவன் பிரதாபனை அவனகத்திற் கொண்டு போய்ச் சேர்த்தான்.

பிரதாபனது தாயார் சந்திரசேகரனை உடனே வீட்டுக்குத் திரும்பிப்போகக் கூடாதென்று தடுத்து, அன்றைக்குத் தன் வீட்டிலிருந்து விருந்துண்டு போகவேண்டுமென்று அவன் காலில் விழுந்து நிர்ப்பந்தமாய்க் கேட்டுக்கொள்ள, சந்திரசேகரன் அதற்கிசைந்தான். பிரதாபன் நீரில் விழுந்ததற்குக் காரணம் இன்னதென்று அவனுக்கு விளங்கவில்லை.

அதற்கப்புறம் சைவலினி பிரதாபனுக்குத் தன் முகத்தைக் காட்டினளில்லை. ஆனல் சந்திரசேகரன் மாத்திரம் அவளைப் பார்த்தான். பார்த்து மோஹபரவசனுயினன்.

அந்த ஸமயத்தில் சந்திரசேகரனுக்கு இன்னது செய்வதென்று தோன்ருமல், அவன் மனம் தாமரையிலையில் விழுந்த நீர்போல் தத்தளித்தது. அவன் அப்பொழுதுதான் முப்பத்திரண்டாம் வயதில் அடிவைத்ததும் வைக்காததுமாயிருந்தான். அவன் ஸம்ஸாரத்தில் இருந்தபோதிலும் அவன் மனம் மாத்திரம் அதில் பொருந்தியில்லை. இன்னும் அவனுக்கு விவாஹம் ஆகவில்லை. விவாஹம் ஸாதாரணமாகக் கல்விப்பயிற்சிக்கு விகாதமாயிருப்பதன்ருே? ஆகையால் அவன் விவாஹத்தில் மனமில்லாதவனுயிருந்தான். ஆனல் ஸமீபத்தில் அவன் தாயார் தேஹவியோகமடைந்து விட்டாள். அது நடந்து ஒரு வருஷத்துக்கு மேலாயிற்று. இப்பொழுது பிரஹ்மசாரியாயிருப்பதே கல்விப்

பயிற்சிக்கு விகாதமாயிற்று. முதலாவது, வீட்டில் வேறு மநுஷ்ய ஸஹாயமில்லாமையால், தானே சமையல் செய்துகொள்ளவேண்டும்; அதற்குச் செல்லும் நேரமோ சொற்பமானதன்று. கல்வி கற்பதற்கும் கற்பிப்பதற்கும் அஃதோர் இடையூறுதானே. அஃதொரு பக்கமிருக்க, வீட்டில் சாளக்கிராம முதலிய தேவபூஜை செய்யவேண்டும். அந்தப் பூஜைக்கு வேண்டிய தெல்லாம் அவன் கையாலேயே செய்தாகவேண்டும். அதற்கும் நேரம் செல்லும். தேவபூஜை கிரமமாய் நடப்பதில்லை, குடும்பம் தாறுமாருய்ப் போய்விட்டது. கடைசியில் பிரதிதினமும் போஜனங்கூட வேளைக்கு ஆகிறதில்லை. புஸ்தகங்கள் வைத்த இடத்தில் இருப்பதில்லை, வேண்டும்போது அகப்படா. வந்த பணத்தை எங்கே வைத்தோம் யாருக்குக் கொடுத்தோம் என்பதைப் பலமுறையும் மறந்து விடுவான். அவனுக்குச் செலவு அதிகமில்லையாயினும், வருகிற வருமானம் செலவுக்குக் கட்டவில்லை. ஆகவே கல்யாணம் பண்ணிக்கொண்டால், இந்தக் கஷ்டங்களெல்லாம் ஒருவாறு தீர்ந்து, தான் நல்ல ஸ்திதிக்கு வரக்கூடுமென்று சந்திரசேகரன் நினைத்தான்.

ஆனால் அப்படிக் கல்யாணம் பண்ணிக்கொள்வதா யிருந்தால், அழகுள்ள பெண்ணை மணப்பதில்லையென்று தீர்மானங் கொண்டான். அழகுவாய்ந்த பெண், தன் அழகால் புருஷனை மயக்கி அவன் மனத்தை அடிமை கொள்வாளாகையால், அப்படிப்பட்டவளை மணந்து ஸம்ஸார பாசபந்தத்தில் சிக்கிக்கொள்ள அவனுக்கு மனமில்லை.

இத்தகைய மனச்சஞ்சலத்தில் இருக்கையில்தான், சந்திரசேகரன் சைவலினியைக் காணலுற்றான். மடமங்கையின் வடிவத்தைக் கண்டதும் மஹரிஷியின் ஞானவைராக்கியமெல்லாம் பறந்துபோய் விட்டது. அவன் வெகுநேரம் யோசனை பண்ணினன். என்ன செய்யலாமென்று தியங்கினன்; கடைசியில் தன் விவாஹத்தைத் தானே பேசி முடித்துச் சைவலினியைப் பாணிக்கிரஹணம் செய்துகொண்டான். அழகின் மோஹன சக்திக்குமுன் யாருடைய ஜபம் சாயும்?

இந்த விவாஹம் நடந்த எட்டு வருஷங்கள் கழித்து நாம் சொல்லப் போகும் கதை ஆரம்பிக்கின்றது.

ஸ்ரீ

சந்திரசேகரன்

முதற் பாகம்

பெண் பாவி

முதல் அத்தியாயம்

தலனி பேகம்

பங்காளம், பேஹார், ஒரிஸ்ஸா என்னும் நாடுகளுக் கதிபதி யான **நவாப் அலிஜா மீர் காஸிம் கான்** என்பவன் மாங்கீர் துர்க் கத்தில் வஸித்தான். அத்துர்க்க மத்தியில், அந்தப்புரத்தில், ரங்க மஹல் என்னும் ஓரிடம் மிகவும் நேர்த்தியாயிருந்தது. இரவின் முதல் ஜாமம் இன்னும் ஆகவில்லை. அவ்விடத்தில் ஓர் அறையில் பலவித சித்ரவர்ணங்கள் அமைந்த கற்கள் பதித்த தரையின்மேல் மெல்லிய ரத்னகம்பளம் விரிக்கப்பெற்றிருந்தது. வெள்ளித் தீபங்களில் கந்தபரி மள தைலத்தால் ஜொலிக்கும் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. நறுமணங் கமழும் மலர்களின் சுவாஸனையால் அவ்வறை முழுவதும் நிறைந்திருந்தது. '**கிங்காப்**'பட்டுத்தலையணையில் தலைசாய்த்து ஒற்றை நாடி சரீரமுள்ள இளமங்கை யொருவள் சயனத்தில் அமர்ந்து 'குலிஸ்தான்' என்னும் பார்ஸி புஸ்தகத்தைப் படிக்க எத்தனம் பண் ணிக்கொண்டிருந்தாள். அவளுக்கு வயது பதினேழாயிருந்தும் வடிவத்தில் குட்டையாயும் குழந்தைபோல் மென்மை பொருந்தியு மிருந்தாள். குலிஸ்தானைப் படித்துக்கொண்டிருக்கையில், அவள் ஒவ்வொரு ஸமயத்தில் திடீரென்று எழுந்து உட்கார்ந்துகொண்டு

தன்னைச்சுற்றிலும் பார்த்துத் தனக்குள்ளே பேசிக்கொள்வாள். ஒரு ஸமயத்தில், ‘ இதுவரையிலும் அவர் வராதிருப்பதற்குக் காரணமென்ன” என்று ஆச்சர்யங்கொள்வாள். இன்னொரு ஸமயம் “அவர் என் வரவேண்டும்? ஆயிரம் அடிமைகளுக்கு நடுவில் நானும் ஒரு அடிமை தானே? எனக்காக இவ்வளவு தூரம் அவர் ஏன் வரவேண்டும்?” என்று சொல்லிக்கொள்வாள். சற்றுக் கழித்து அவள் மறுபடியும் குலிஸ்தானைப் படிக்கத் தொடங்கினாள். சற்றுப் படித்தானதும், மறுபடியும் நிறுத்திவிட்டு ‘சீ, இதுஒன்றும் எனக்குப்பிடிக்கவில்லை’ யென்று, புஸ்தகத்தைக் கீழே வைத்துவிட்டு, “அவர்தான் வராமலிருந்தாலும் அவர் இஷ்டப்படும் பக்ஷத்தில் நானாவது அவரிடம் செல்வேன். ஆனால் அவர் ஏன் என்னைப்பற்றி நினைக்கவேண்டும்? ஆயிரம் அடிமைகளுக்கு நடுவில் நானும் ஒருத்தியே யொழிய அதிகமில்லையே” என மனோராஜ்யம் செய்வாள். மறுபடியும் புஸ்தகத்தைக் கையில் எடுத்தாள், மறுபடியும் அதை வெறுப்புடன் எறிந்துவிட்டு, “ஸரி, ஆண்டவன் இப்படி யேன் செய்யவேண்டும்? ஒருவனுக்காக ஒருத்தி ஏன் இப்படி வாடி வருந்தவேண்டும்? அது அவருடைய திருவுள்ளமாயின், யார் எவளுக்குக் கிட்டுவது ஸுலபமோ அவரை அவள் ஏன் அடைய விரும்பக் கூடாது? கிடைத்தற்கரிய புருஷனைப்பற்றி இந்த ஆசை ஏன் கொள்ளவேண்டும்? கேவலம் கொடியைப்போன்ற நான் உயர்ந்த சாலமரத்தின்மேல் படர ஏன் ஆசைப்படவேண்டும்?” என்று தனக்குள் பேசினாள். அந்த யுவதி பிறகு புஸ்தகத்தை யொருபுறம் போட்டுவிட்டு எழுந்து நின்றாள். அவளது மாசற்ற மஸ்தகத்தில் ஸர்ப்பராசியை நிகர்த்துச் சுருண்டு தொங்கிய அடர்ந்த கேச பாரம் குலுங்கிற்று. அவள் தரித்திருந்த சுகந்தம் வீசும் பொற்சரிகைச் சேலையும் அப்போது அசைந்து குலுங்கிற்று. அவளது அங்கங்களில் சொற்ப அசைவு உண்டானபோதிலும், அவ்வறை முழுவதிலும் அவளது வடிவழகின் அலைகள் புரண்டு பரப்பதுபோலிருந்தன. ஆழங் காணமுடியாத ஜலத்தில் சிறிது அசைவு உண்டாயினும், அலைகள் எவ்வாறு உண்டாகுமோ அப்படிவிளங்கினஅவளது அழகுக்கடலின் அலைகள். பிறகு அந்தச் சுந்தரி சிறு வீணையொன்றைக் கையில் ஏந்தி அதை

மீட்டத்தொடங்கி,மெல்ல மெல்ல மெல்லிய குரலில் பாடத் தொடங்கி ளுள். அவள் மெதுவாய்ப் பாடுவதைப் பார்த்தால்,தன்பாட்டைக்கேட்டு எங்கே யாராவது வந்துவிடுவார்களோ என்று பயந்து பாடினவள்போ லிருந்தது. அந்தச் சமயத்துக்குச் சரியாக, அருகிலுள்ள காவலாளியின் ஸலாம்செய்யும் குரலோசையும்,பல்லக்குத் தூக்குவோரின் காலடியரவ மும் அவளது செவிகளில் நுழைந்தன. அவள் திடுக்கிட்டெழுந்து கதவண்டை போய்ப் பார்த்தாள். நவாபின் பல்லக்கு வந்தது. நவாப் மீர்காசிம் ஆலிகான் பல்லக்கினின்றிறங்கி அறையிற் பிரவேசித்தான்.

நவாபு ஆஸனத்தில் அமர்ந்து,“தலனிபீபி, என்ன பாட்டுப்பாடிக் கொண்டிருந்தாய்?” என்று கேட்டான். அந்தப் பாலகுமாரியின் உண்மைப் பெயர் **தௌலத் உந்நிஸ்ஸா** என்பதுபோலும். நவாப் அவளைச் சுருக்கமாகத் ‘தலனி’ யென்று கூப்பிடுவது வழக்கம். அக் காரணத்தைக்கொண்டே அரண்மனையிலுள்ளவர்க ளெல்லாரும் அவ ளைத் ‘**தலனி பேகம்**’ அல்லது ‘**தலனிபீபி**’ என்று அழைத்து வந்தார்கள்.

தலனி வெட்கத்தால் தலைகுனிந்து கொண்டாள். அவளது துரதிஷ்டத்துக்கேற்க நவாபும், “பாட்டு நடக்கட்டும், ஏன் நிறுத்து கிறாய், எனக்குக் கேட்க, ஆசையாயிருக்கிறது” என்றான்.

அப்போது ஒரு பெரிய அமளிகுமளி உண்டாய்விட்டது. வீணை யின் தந்திகள் முரணிக்கொண்டன. என்ன முயன்றும் சுருதி கூட்ட முடியவில்லை. அவள் அந்த வீணையை நிராசையாய் எறிந்துவிட்டுப் பிடிலை எடுத்தாள். பிடிலிலும் அபஸ்வரம் உண்டாயிற்று.நவாபுஅவளது கஷ்டத்தைப்பார்த்து “அது போகட்டும். வாத்தியம் வாசித்துக்கொண் டே நீயும் பாடு” என்றான். இதைக் கேட்டுத் தலனி தனக்கு ஸங்கீத ஞானமில்லையென்று நவாபுக்கு நிச்சயமாகி விட்டதென்று நினைத் தாள். இந்த எண்ணம் அவளுக்கு உண்டாகவே அதுமுதல் உதட்டை அசைக்கவும் அவளால் முடியவில்லை. அவளால் ஆனவரையிலும் அவள் முயன்று பார்த்தாள், அவள் வாய் அவள் பேச்சைக் கேட்க வில்லை. அது இதோ திறக்கும் போலிருந்தது. முக்கால்பங்கு திறந்தாய்விட்டது, ஆனால் கடைசியில் திறக்கவே இல்லை. மந்தார

முள்ள தினத்தில் தரைக்கமலத்தைப்போல் அவளது வதனம் மலர்ந்துவிடும் போலிருந்தது. ஆனால் மலரவில்லை. சங்கோசமுள்ள பாவலனது பாமாலையைப்போல், அவள் வாய்திறந்து பேசும் ஸமயமாயிருந்தது, ஆனால் பேசவில்லை ; பிணங்கிய மங்கையர் தம் கணவருடன்கூடும்போது அவர்களின் நெஞ்சத்தில் குழம்பிவரும் ஸரஸமொழியைப்போல், அவள் வாக்கு பேசும் ஸமயமாயிருந்தது, ஆனால் பேசவில்லை.

அப்பொழுது அவள் திடீரென்று வீணையைக்கீழே வைத்துவிட்டு "நான் பாடமாட்டேன்" என்றாள்.

நவாபு ஆச்சரியத்துடன் "என், உனக்குக்கோபமோ; " என்றான்?

தலனி:—"கல்கத்தாவில் இங்கிலீஷ்காரர் பாடும்போது உபயோகிக்கும் வாத்தியத்தை முதலில் கொண்டுவந்தால், நான் மறுபடியும் பாடுவேன், இல்லாவிட்டால், மாட்டேன்."

மீர்காசிம் புன்சிரிப்புடன், " வழியில் கஷ்டம் ஒன்றும் இல்லாவிட்டால் அவசியம் உனக்குக் கொண்டுவந்து கொடுக்கிறேன்" என்றான்.

தலனி:—" எவ்வித கஷ்டமாவது என் இருக்கவேண்டும் ?"

" இங்கிலீஷாருடன் சண்டையிட வேண்டிவந்தாலும் வரலாம். என், அதைப்பற்றி நீ ஒன்றும் கேள்விப்படவில்லையோ ?" என்று, நவாபு விசனமாய்க்கேட்டான்.

" ஆமாம், கேள்விப்பட்டிருக்கிறேன் " என்று சொல்லி மௌனமாயிருந்தாள் தலனி.

" தலனிபீபி, நீ ஏதோ சிந்தாகுலமாய் நினைத்துக் கொண்டிருப்பதாய்த் தோன்றுகிறதே, அதென்ன ?" என்று கேட்டான் மீர்காஸிம்.

தலனி:—இங்கிலீஷாருடன் யார் சண்டையிட்டாலும் தோல்வியடைவது நிச்சயம் என்று ஒருநாள் நீங்கள் என்னுடன் சொன்னீர்கள். அப்படியிருக்க, அவர்கள் ஜோலிக்கு நீங்கள் என் போகவேண்டும்? நானோ பெண், உங்கள் பாதத்தை ஸேவிக்கும் பணிவிடைக்காரி ; இந்த ஸங்கதிகளைப்பற்றி நான் பேசுவது சிறிதும் ஸரியல்லவென்று எனக்குத் தெரியும். ஆனாலும் எனக்குப் பேசுவ

தற்கு ஓர் அதிகாரமிருக்கிறது. எப்படியெனில், நீங்கள் கருணை கூர்ந்து என்மேல் வைத்திருக்கும் காதலே அந்த அதிகாரத்தைக் கொடுக்கிறது.

நவாபு:—“அது வாஸ்தவமே, தலனி, உன்மேல் காதல் வைத் திருக்கிறேன். உன்னைக் காதலிப்பதுபோல் நான் ஒரு போதும் எந்தப் பெண்ணையும் காதலித்ததில்லை, இனி காதலிக்கப்போகிறது மில்லை.”

தலனியின் தேகம் ஸந்தோஷத்தால் புளகாங்கிதம் அடைந்தது. சிறிதுநேரம் வரையில் அவள் யாதொன்றும் பேசாது மௌனமா யிருந்தாள். அவள் கண்களில் நீர் ததும்பியது. அதைத் துடைத்துக் கொண்டு அவள் சொல்லலுற்றாள்: “இங்கிலீஷாருடன் யார் சண் டைக்குப் போகிறார்களோ அவர்கள் தோல்வியடைவது நிச்சயமென்று உங்களுக்குத் தெரியுமானால், அவர்களைப் போருக்கிழுக்க என் தீர்மா னம் பண்ணியிருக்கிறீர்கள் ?”

மீர்காஸிம் சற்று மெதுவாய் மொழியலானான். “எனக்கு வேறு வழியில்லை. உன்னை எனக்குச் சொந்தமானவளென்று நான் நினைக்கிற படியால், இந்த ஸங்கதிகளை யுனக்குச் சொல்லுகிறேன். இந்தச் சண்டையால் என் சிங்காதனத்துக்கே அபாயம் உண்டாகுமென்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும். ஒருவேளை என் பிராணனும் போய் விடலாம். அப்படியிருக்க, நான் ஏன் சண்டை போடவேண்டும் ?— என்று நீ கேட்கலாம். இந்த இங்கிலீஷார் நடப்பதைப் பார்த்தால், நாட்டை யாள்வோர் அவர்களேயன்றி நானல்ல வென்றே எல்லாருக் கும் தோன்றும். எந்த ராஜ்யத்துக்கு நான் அரசனல்லவோ, அப்படிப் பட்ட ராஜ்யத்தால் என்ன பிரயோஜனம்? அதுமாத்திரமா? அவர்கள் சொல்வதைப் பார். “உண்மையில் ஆள்வோர் நாங்களே ; ஆனால் ஜனங்களை இம்ஸிக்கும் வேலையை மாத்திரம் உனக்கு விட்டிருக்கிறபடி யால், எங்களுக்காக அந்த வேலையை நீ செய்யவேண்டும்” என்கிறார் கள். நான் ஏன் அதைச் செய்யவேண்டும்? என் பிரஜைகளின் க்ஷேமத் துக்காக நான் அரசுசெலுத்த முடியாமற்போமாகில், அதைவிட என் சிங்காதனத்தினின்றும் நீங்குவதே உத்தமமல்லவா? வீணுக்காவது அவர்களது பாவத்தையும் அபகீர்த்தியையும் நான் என் பங்கிட்டுக்

கொள்ளவேண்டும்? அதற்கு நான் விராஜத்தௌலாவுமல்ல, மீர் ஜாபருமல்ல."

பங்காள நாட்டின் அதிபதி இவ்வாறு பேசினதை, தலனி தன் மனத்திலேயே நூறுதடவை கொண்டாடி, வெளிப்படையாய் விளம்பலானுள்: "என் பிராணேசா, நான் என்ன பதில் சொல்லப்போகிறேன்? ஆனுல் நான் பண்ணிக்கொள்ளவேண்டிய பிரார்த்தனை ஒன்றுண்டு. அதாவது—நீங்களே நேராக யுத்தத்துக்குப் போகவேண்டாம்."

"இப்படிப்பட்ட ஸங்கதிகளில், ஸ்திரீகள் சொல்லும் புத்தியைப் பங்காள நவாபு கேட்பது நியாயமாகுமா, அல்லது அப்படிப் புத்தி சொல்வதுதான் அவர்களுக்குச் சரியாகுமா?"

தலனி வெட்கமும் துயரமும் உற்று மொழியலானுள். "என்னை மன்னிக்கவேண்டும்,நான் யோசனையின்றிப் பேசிவிட்டேன்,ஸ்திரீயின் மனது கொஞ்சத்தில் ஆறுவதில்லை. ஆகையால் இந்தப் பேச்சுகளைப் பேசினேன். ஆனுல் எனக்கு இன்னெரு பிரார்த்தனை யிருக்கிறது."

"அதென்ன?"

"யுத்தத்துக்குத் தங்களுடன் என்னையும் அழைத்துக்கொண்டு போவீர்களா?"

"என், நீ சண்டைபோடப் போகிருயோ? அப்படியானுல் சொல்லு, குர்கன்கானை நீக்கிவிட்டு அவனுக்குப் பதிலாய் உன்னை ஏற்படுத்திவிடுகிறேன்."

தலனி மறுபடியும் நாணமுற்றுப் பேச நாவெழாமல் இருந்தாள்.

"நீ ஏண்டி யுத்தத்துக்குக்கூட வரவேண்டுமென்கிருய்?"என்று செல்வமாய்க் கேட்டான் மீர்காஸிம்.

"உங்களுடன்கூட இருக்கவேண்டுமென்னும் ஆசையால்தான்."

மீர்காஸிம் அதற்குச் சம்மதிக்கவில்லை. அவன் அதற்கு ஒருபோதும் ஸம்மதியான். தலனி மந்தஹாஸத்துடன் சொன்னுள்: "என் நாதா! நடக்கப்போகிறதை முன்னுடி அறிந்து சொல்ல உங்களுக்குத் தெரியுமே. யுத்தத்தில் நான் எங்கே இருப்பேனென்பதை அறிந்து சொல்லுங்கள்."

"அப்படியானுல் மசிக்கூடு பேனுவேண்டும்" என்றுன் சிரித்துக்

கொண்டே மீர்காஸிம். தலனியின் உத்தரவின்பேரில் ஒரு பாங்கி பொன்னல் செய்த மசிக்கூடும் பேனவும் கொணர்ந்தாள்.

மீர்காஸிம் ஹிந்துக்களிடத்திலிருந்து சோதிடம் கற்றிருந்தான். அதை யனுசரித்து இப்பொழுது சக்கரம்போட்டுக் கணக்கிட்டுப்பார்த்தான். சற்றுக் கழித்து கடிதத்தைத் தூர எறிந்துவிட்டு, துயரத்துடன் உட்கார்ந்திருந்தான்.

"என்ன பார்த்தீர்கள் ?" என்று வினவினள் தலனி. மீர்காஸிம் சொன்னன் : "தான் பார்த்தது மிகவும் விசித்திரமாயிருக்கிறது. அதை நீ காதால் கேட்கவேண்டாம்."

நவாபு அப்பொழுதே வெளியேவந்து மா முனஷி என்ற முக்ய கார்யஸ்தனை அழைத்து வரச்சொல்லி, பின்வருமாறுகட்டளையிட்டான். "மூர்சிதாபாத்தில் ஒருஹிந்து உத்தியோகஸ்தன் இருக்கிருன். அவனுக்கு நீ பிறப்பிக்கவேண்டிய உத்திரவு என்னவென்ருல்:—மூர்சிதாபாத்துக்கு வெகுதூரமல்லாத விடத்தில் வேதக்கிராமம் என்னும் ஊர் ஒன்றிருக்கிறது. சந்திரசேகர சர்மா என்றும் பண்டிதனொருவன் அங்கே இருக்கிருன். அவன் எனக்கு ஜோதிஷம் கற்பித்தான். அவனை அழைத்துவந்து, சீக்கிரத்தில் இங்கிலீஷாருடன் யுத்தம் நேரும் பக்ஷத்தில், யுத்தகாலத்திலும், அதற்குப்பிறகும் தலனிபேகம் எங்கே யிருப்பாள் என்பதைக் கணனத்தால் அறிந்து சொல்லச் செய்யவேண்டும்."

மீர்முனிஷி நவாபின் கட்டளையை நிறைவேற்றினன். சந்திரசேகர சர்மாவை மூர்ஷிதாபாத்துக்கு வரவழைக்கும் பொருட்டு ஆள் அனுப்பினன்.

இரண்டாம் அத்தியாயம்

பீமா புஷ்கரணி

பீமா என்னும் ஒரு பெரிய புஷ்கரணியின் நாற்புறங்களிலும் அடர்ந்த பனைமரவரிசைகள் இருந்தன. அஸ்தமனமாய்க் கொண்டிருக்கும் சூர்யபகவானுடைய பொன்னிறக்கதிர்கள் அந்தப் பொய்கையின் கரியநீரில் விழுந்தன ; கரிய நீரில் சூரிய கிரணங்களுடன் பனைமரங்களின் கரிய நிழலும் கலந்து படிந்தன. ஒரு ஸ்நாந கட்டத்தின் பக்கத்தில் கொடிகள் சுற்றிய சில சிறு மரங்கள் அக்கொடிகளால் ஒன்றுடனொன்று பின்னப்பெற்று நீர்மட்டம் வரையிலும் தொங்கிய கிளைகளுடன் கூடி, ஜலக்ரீடை புரிந்துகொண்டிருந்த குலமாதர்களைப் பிறர் பார்க்கவொட்டாமல்மறைத்தன. அவ்வாறுமறைக்கப்பட்டிருந்தசொற்ப இருளுடன் கூடிய ஏகாந்த ஸ்தானத்திலே சைவலிநியும் ஸௌந்தரியும் கையில் குடங்களை யேந்தி ஜலத்தில் விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

சிறு பெண்களுடன் ஜலமானது க்ரீடை செய்கிறதென்றால் என்ன? அது என்னவோ நமக்குத் தெரியாது, நாம் ஜலமாயிருந்தாலல்லவோ அது நமக்குத் தெரியும்? எவன் அழகைக் கண்டமாத்திரத்தில் ஜலமாய் உருகி இருக்கிறானோ அவனல்லவோ அதைச் சொல்லமுடியும்? ஜலமானது குடத்தின்மேல் மோதி அலைக்குமிழிகளை எழுப்பி, பெண்களின் கைகளில் அணிந்துள்ள ஆபரணங்களின் ஒலியாலுண்டாகும் தாளத்திற்கிசைய நர்த்தனம் செய்வதையும், அவர்களின் ஹிருதயத்தின்மேல் விழும் ஜலஜ மலர்மாலையைத் தொங்கலாடச்செய்து, நீந்துவதில் ஆவல்கொண்டிருக்கும் சிறு பறவையை அலையச்செய்து, பெண்களைச்சுற்றி வட்டமிட்டு, அவர்களது கைகளிலும், கழுத்திலும், புஜங்களிலும், மார்பிலும் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டு அலைகளை மேலுக்கு வாரி இறைத்து, தாளத்துக்கொத்து நடனம் செய்யும் விதத்தையும் அவன்தான் அறிந்து சொல்லமுடியும். அன்றியும் யுவதிகள் குடங்களை நீரில் மிதக்கவிட்டு, மந்தமாய் வீசும் வாயுவின் கையில் அவைகளைச் சமர்ப்பித்துவிட்டு

மோவாய்க்கட்டை வரையில் நீரில் முழுகி, கோவைக் கனியைப் பழித்த அதரங்களால் நீரைத் தொடும் பான்மையையும், பிறகு அந்த நீரை வாய்க்குள் அனுப்பி, சூரியனுக்கு எதிர்முகமாய் மறுபடியும் அந்த நீரை வெளிக்கொணர்வதையும், அவ்வாறு நீரானது வெளியே வந்து விழும்போது அதில் உண்டாகும் குமிழிகள்தோறும் பிரதிபலிக்கும் நூற்றுக்கணக்கான சூரியபிம்பங்களை ஜலமானது அவ்விள மங்கையருக்கு வெகுமதியாய் அளிக்கும் வைபவத்தையும் எடுத்துச் சொல்ல அவன் ஒருவனால்தான் முடியும். யுவதியின் கைகால் முதலிய அங்கங்கள் அசையுந்தோறும் நீரானது சருக் சருக்கெனத் தெறித்துக் கூத்தாட, அவளது ஹிருதயமும் அந்நீர்க்குமிழியின் நர்த்தனத்துக் கிசைய அசைந்தாடுகிறது. இவ்விரண்டும் ஸமான தர்மமுடையவை. நீரும் சஞ்சலமானது. பிரபஞ்சத்தை மயக்கி ஆட்டிவைக்கும் ஸ்திரீ களின் ஹிருதயமும் சஞ்சலமானதே. ஜலத்தில் யாதொரு அடையாளமும் நிலைப்பதில்லை. யுவதியின் ஹிருதயத்தில் மாத்திரம் நிலைத்திருக்கிறதா?

பொன்னிறச் சூரியகிரணங்கள் புஷ்கரணியின் கரிய நீரில் கரைந்து போய்விட்டவுடனே, ஒரு நிமிஷத்தில் ஸர்வமும் அந்தகாரமாய்விட்டது. பனைமரங்களின் நுனிமாத்திரம் பொற்கொடிகளைப்போல் பிரகாசித்தன.

ஸுந்தரி:—அடி அக்கா, இரவாகப்போகிறது; இனி கொஞ்சங்கூட இங்கே நாம் தங்கியிருக்கலாகாது; புறப்பட்டுப்போவோம் வா.

சைவலினி:—அடி, இங்கே ஒருவருமில்லை, மெள்ள ஒரு பாட்டு பாடேண்டி.

ஸுந்தரி:—போடி, துஷ்டி, வீட்டுக்குப் போவம் வாடி.

சைவலினி ஒருபாட்டின்பல்லவியையெடுத்துப்பாட ஆரம்பித்தாள்.

“ வீட்டை நோக்கி, ஸகியே, நான் வரமாட்டேனடி.

தமியாள் மனத்தைக் கவர்ந்த மதனமோஹனன் இதோ வருகிறானடி.

ஐயோ, மீண்டும் நான் வருவதில்லையடி, வீட்டைநோக்கியே ’

என்ற கருத்தமைந்த பல்லவியைப் பாடினாள்.

* போகமாட்டேன்! இனி—வீட்டினிற் கன்பே!
மோகவென் மதனன் அதோ! வரல் நோக்கிடாய்!
வீட்டினிற் கேகவோஓ! மாட்டேனேயோ!!

ஸு:—அடி நீ பாழாய்ப்போக! உன் மதனமோஹனன் வீட்டில் இருக்கிறனே. அங்கே நீ என் வரக்கூடாது?

சை:—"உன் மதனமோஹினி, பீமாவின் நீர் குளிர்ச்சியா யிருக்கக் கண்டு அதில் விழுந்து விட்டாள்" என்று அவனுடன் போய்ச் சொல்லடி.

ஸு:—அடி, உன் சமத்தையெல்லாம் அப்படி வைத்துக்கொள். இப்போதே இருட்டாய்விட்டது, இனி காத்திருக்க என்னலாகாது. அத்தோடு, இன்றைக்கு நம் ஊருக்குச் சமீபத்தில் யாரோ ஒரு வெள்ளைக்காரன் கண்ணுக்குத் தென்பட்டிருக்கிறனென்றும் க்ஷேமியின் தாயார் சொல்லியிருக்கிறள்.

சை:—அதிலே நீயாவது நானவது பயப்படவேண்டிய விஷயம் என்ன இருக்கிறது?

ஸு:—ஓகோ, அப்படியா அம்மா? ஜலத்தைவிட்டு வருகிறையா, இல்லாவிட்டால் நான் போகட்டுமா?

சை:—நான் வரப்போகிறதில்லை. நீ மஹாராஜியாய்ப் போகலாம்.

இதைக் கேட்டதும் ஸுந்தரிக்கு எங்குமில்லாத கோபம் உண்டாக, அவள் குடத்தில் நீர் எடுத்துக்கொண்டு கரையேறினள்.

ஸுந்தரி மறுபடியும் ஒருமுறை திரும்பி, "அடியே, இராத்திரி இருட்டில் இந்த வேளையிலே இங்கே ஒண்டியாய்த்தங்கி நிற்கிறதென்று நிச்சயமாய் எண்ணிக்கொண்டிருக்கையோடி?" என்றள்.

சைவலினி அதற்குப் பதில் ஒன்றும் பேசாமல் ஏதோ ஒரு திசையை நோக்கித் தன் விரலைச் சுட்டிக் காட்டினள். அந்த விரல் காட்டிய வழியாய் ஸுந்தரி பார்த்தாள்; புஷ்கரணியின் அக்கரையில் ஒரு பனைமரத்தின் கீழே,—ஐயோ வந்துவிட்டதுமோசம். அப்புறம் அவள் வேறென்றும் பேசாமல் தன் இடையிலிருந்த குடத்தைக் கீழேவிட்டெறிந்து, மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஒரே ஓட்டமாய் ஓடினள்.

---

* இராகம்: செஞ்சுருட்டி

அந்தச் செப்புக்குடம் உருண்டுகொண்டே சென்று தன் கர்ப்பத்தில் இருந்த நீரையெல்லாம் டக்டக் என்ற சத்தத்துடன் கக்கிக்கொண்டு மறுபடியும் ஜலத்திலே விழுந்து மறைந்தது.

ஸுந்தரி பனைமரங்களின் நடுவே ஒரு வெள்ளைக்காரனைக் கண்டு விட்டாள். அதுதான் இவ்வளவு ஆர்ப்பாட்டத்துக்கும் காரணம்.

சைவலினியும் அந்த இங்கிலீஷ்காரனைக் கண்டாள். அவள் நீரை விட்டு அசையவுமில்லை, அதிலிருந்து எழுந்துவரவுமில்லை. அவள் மார்புவரையில் நீரில் மூழ்கி, ஈரச்சேலையால் கொண்டையுடன் சேர்த்துத் தலையைப் பாதி மூடிக்கொண்டு, அன்றலர்ந்த தாமரைபோல் நீரின் நடுவில் பிரகாசித்தாள். ஜலமயமான மேகமத்தியில் அசைவற்ற மின்னற்கொடி மந்தஹாஸம் புரிந்தது போலவும் பீமாவின் கரிய நீரலைகளின் நடுவிலே பொற்கமலம் பூத்தது போலவும் விளங்கினாள்.

ஸுந்தரி ஓடிப்போய்விட்டாள். வேறொருவரு மில்லையென்று கண்டதும், அவ்விங்கிலீஷ்காரன் மெல்ல மெல்லப் பனமரச்சாலையின் ஊடே நடந்து வந்து புஷ்கரணியைச் சேர்ந்தான்.

அவன் பார்வைக்கு யௌவன புருஷனாகவே தோன்றினான். அவனுக்கு மீசையாவது தாடியாவது இன்னும் அரும்பவில்லை. தலைமயிர் சிறிது கரிய நிறமாயிருந்தது. கண்களும் அப்படியே இருந்தன. அவன் ஒழுங்காய் உடுத்திருந்தான். அவன் அணிந்திருந்த கடியாரமும், சங்கிலியும், மோதிரமும், மற்ற பூஷணங்களும் சொகுசாயும் நேர்த்தியாயு மிருந்தன.

அவன் மெல்ல மெல்ல ஸ்நானம் செய்யும் கட்டத்துக்கு வந்து ஜலத்துக்குச் சமீபமாய்ச் சென்று "I come again, fair lady" (மறுபடியும் வந்தேன், அழகிய மானே) என்றான்.

"அந்தக் கல்லெடுப்பு வார்த்தை எனக்கு ஒன்றும் தெரியலை" என்றாள் பங்காளி பாஷையில் சைவலினி.

"Oh! Ay that nasty gibberish! I must speak it, I suppose? ஹம் Again ஆயாஹை" என்றான் இங்கிலீஷ்காரன். [அதாவது,—'அட இழவே, அந்தச் சனியன் பிடித்த பேச்சைப்

பேசி யழவேண்டுமே. என்று இந்துஸ்தானியில்—ஹம் (நான்) மறுபடியும் ஆயாஹை (வந்திருக்கிறேன்) என்ருன்.]

சைவலிநி (பங்காளியில்) :—எண்டா கட்டையிலே போவே, மறலி (எமன்) வீட்டுக்கு இதுதான் வழியோ?

சைவலிநி சொன்னதில் ஒரு சொல்கூட அவனுக்கு விளங்கவில்லை. அவன் (இந்துஸ்தானியில்) 'க்யாபோல்தாஹை'—என்ன சொல்லுகிருய்?—என்று கேட்டான்.

சைவலிநி (பங்காளியில்) "உன்னை மறலி மறந்து விட்டானே என்கிறேன்." என்ருள்.

இங்கிலீஷ்காரன் (இந்துஸ்தானியில்):—மார்லியா? (Morley you mean) மார்லி யூ மீன். ஹம் மார்லி நஹி, ஹம் லாரென்ஸ் (நான் மார்லியல்ல, நான் லாரென்ஸ்).

சைவலிநி (பங்காளியில்):—சரி, ஒரு இங்கிலீஷ் வார்த்தை இன்னிக்குத் தெரிஞ்சுகிண்டேன், லாரென்ஸ் இன்னு, கொரங்கு."

அந்த அந்தி வேளையில் சைவலிநி வாய்கொண்டமட்டும் வழங்கிய வசைமொழி ஆசீர்வாதத்தை லாரென்ஸ் பாஸ்டர் பெற்றுக்கொண்டு தன்னிருப்பிடத்துக்குத் திரும்பினுன். அவன் புஷ்கரணியின் கரையை விட்டிறங்கி, மாமரத்திற் கட்டியிருந்த தன் குதிரையை யவிழ்த்து அதன்மேலேறிக்கொண்டு ஸவாரி போனுன். அப்படிப்போய்க் கொண்டிருக்கையில், தன் ஸ்வதேசமாகிய சீமையிலே டெவியட் ஆற்றங்கரையிலுள்ள பர்வதங்களின் பிரதித்வனியுடன் கூடிய இனிய கீதமொன்று முன்தான் கேட்டிருந்தது இப்பொழுது அவன் ஞாபகத்துக்குப் பாய்ந்து வந்தது. ஒவ்வொரு ஸமயத்தில் அவன் மனத்தில் பழைய ஞாபகம் உண்டாகும்.—அந்தக் குளிர்ச்சி பொருந்திய தேசத்திலே பனிக்கட்டிபோல் வெளுத்த மேரி பாஸ்டர் என்னும் மங்கையின் காதலில் நான் மயங்கியிருந்தது இப்போது சனவுபோல் இருக்கிறது. தேசபேதத்தால் ருசிபேதமும் உண்டாகுமோ? பனிபோல் வெளுத்த வெண்ணிறமேனியாளாகிய மேரியை, இந்த உஷ்ண தேசத்தின் அக்னிசிகையைப்போல் ஜொலிக்கும் சட்

டழகிகளுடன் ஒப்பிடலாமோ? ஒன்றும் சொல்லமுடியவில்லை என்று சிந்தித்துக்கொண்டே சென்றான்.

பாஸ்டர் அந்த விடத்தைவிட்டுப் போனவுடனே, சைவலினி மெல்ல எழுந்து குடத்தில் நீரை நிறைத்து இடுப்பில் வைத்துக் கொண்டு, வஸந்தகாலத்து வாயுவின்மேலேறிச் செல்லும் மேகம்போல், மந்தமாய் நடந்து வீட்டுக்குத் திரும்பிச் சென்றாள். வீட்டுக்கு வந்ததும் குடத்தை வழக்கமாய் வைக்குமிடத்தில் வைத்துவிட்டு அவள் படுக்கை யறைக்குச் சென்றாள்.

அங்கே சைவலினியின் புருஷனாகிய சந்திரசேகரன் கம்பளாஸனத்தில் அமர்ந்து, ஹரிநாமாவளிகளால் சித்திரிக்கப்பெற்ற வஸ்திரத்தால் தன் இடையையும் முழந்தாள்களையும் கட்டிக்கொண்டு, மண்விளக்கின் எதிரில் உட்கார்ந்து, கையால் எழுதிய சுவடிகளை ஆராய்ந்துகொண்டிருந்தார். இக்கதை நடந்த காலம் இன்றைக்குச் சுமார் நூறு வருஷங்களுக்கு முன் என்று சொல்லலாம்.

சந்திரசேகர சர்மாவுக்கு வயது சுமார் நாற்பது இருக்கலாம். அவர் நெடிய உருவமுடையவராயும், அவ்வுருவத்திற்குத் தகுந்த திடகாத்திர சம்பன்னராயுமிருந்தார். அவரது தலை பெருத்தும், நெற்றி அகன்றும் இருந்தன. அவ்வகன்ற நெற்றியில் சந்தனரேகைகள் திகழ்ந்தன.

சைவலினி அந்த அறையில் பிரவேசித்துக்கொண்டே தனக்குள் பின்வருமாறு கருதலானாள். "ஏன் இவ்வளவு நாழிகை ஆயிற்று என்று கேட்டால், நான் என்ன சொல்வது?" ஆனால் அவள் உள்ளே சென்றபொழுது, சந்திரசேகரன் ஒன்றும் பேசவில்லை. அப்போது தான் அவன் பிரம்மசூத்திரத்தில் ஒரு வாக்கியத்தின் வியாக்கியான விஷயமாய் தீர்க்காலோசனை செய்துகொண்டிருந்தான். சைவலினி கொல்லென்று சிரித்தாள்.

சந்திரசேகரன் திரும்பிப்பார்த்து "இன்றைக்கு இவ்வளவு அகாலத்தில் மின்னல் மின்னுவதற்குக் காரணமென்ன?" என்றான்.

சைவலினி:—என்னை ரொம்பவும் கோபித்துக்கொள்வீர்களோ என்னவோ என்று யோசித்துக்கொண்டிருந்தேன்.

சந்திர:—என் உன்மேல் கோபித்துக்கொள்ளவேண்டும்?

சைவலிநி:—இன்றைக்கு நான் குளத்திலிருந்து வரத் தாமஸமா யிற்ருே இல்லையோ? அதற்காகத்தான்.

சந்திர:—சரிதான். ஆகச்சே, இப்போதான் வந்தையா என்ன? என் இத்தனை கால தாமஸம்?

சைவலிநி:—ஒரு வெள்ளைக்காரன் வந்துவிட்டான். சுந்தரி மன்னி கரையிலிருந்தாள், என்னைப் பின் தங்க விட்டுவிட்டு, அவள் ஓடிப் போய்விட்டாள். நான் ஜலத்தில் இருந்தேன். பயத்தினுல் வெளியே வர என்னுல் முடியவில்லை; தொண்டைவரையில் ஜலத்திலேயே அமிழ்ந்திருந்தேன். அவன் போய்விட்டதும், நான் எழுந்து கரையேறி வீட்டுக்கு வந்தேன்."

சந்திரசேகரன் வேறு எதையோ நினைத்துக்கொண்டு, 'இனி அப்படி வரவேண்டாம்' என்று சொல்லிவிட்டு, மறுபடியும் சங்கர பாஷ்யத்திலேயே மனத்தைச் செலுத்தினுன்.

அப்பொழுது ராத்திரி வெகு நேரமாய் விட்டது. அத்தனை நேர மாகியும், சந்திரசேகரன், ப்ரமா, மாயா, ஸ்போடம், அபௌரு ஷேயத்வம் முதலிய சாஸ்திர விஷயங்களைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருந்தான். சைவலிநி வழக்கம்போல் தன் பர்த்தாவுக்கு வேண்டிய அந்நம், வ்யஞ்ஜனம் முதலியவற்றை அவருக்கருகில் ஒரு பக்கமாய் வைத்துவிட்டு, தான் போஜனம் முதலியவை முடித் துக்கொண்டு ஒரு மூலையில் விரித்திருந்த படுக்கையில் சாய்ந்து உடனே நித்திரை போயினள். இந்த விஷயத்தில் அவளுக்குப் புருஷ னுடைய அநுமதி இருந்தது. சந்திரசேகரன் ராத்திரியில் வெகு நேரம்வரையில் படுத்துக்கொண்டிருப்பான். பொழுது போனவுடனே சீக்கிரமாய்ப் போஜனம் செய்துவிட்டுப் படுத்துக்கொள்ளும் வழக்கம் அவருக்கில்லை.

அப்பொழுது திடீரென்று பக்கத்து வீட்டின் கூரைமேலிருந்து ஓர் கோட்டான் கூவும் உரத்த சத்தம் கேட்டது. அப்போதுதான் இரவு வெகு நேரமாய்விட்டதென்று சந்திரசேகரன் தெரிந்து சுவடி களைக் கட்டினுன். அவற்றையெல்லாம் யதாஸ்தானத்தில் வைத்து விட்டு, அவன் எழுந்து சோம்பல் முறித்தான். திறந்திருந்த பல

கணியின் வழியாகச் சந்திரிகையில் சிரித்து விளையாடும் சிருஷ்டியின் அழகைக் கண்ணுற்ருன். சாளரத்தின் வழியாய் வரும் சந்திர கிரணங்கள் துயிலில் அமர்ந்த சுந்தரியாகிய சைவலினியின் முகத்தில் விழுந்தன. சந்திரசேகரன் தனது கிருஹமாகிய சரோவரத்திலே திங்களின் தண்ணொளியில் தாமரை அலர்ந்ததெனக் கண்டு ஆநந்தத்தால் உள்ளம் பூரித்தான். அவன் அவ்வண்ணம் நின்றுகொண்டே இன்பம் தேக்கிய கண்களால் சைவலினியின் மாசற்ற முகமண்டலத்தின் லாவண்யத்தை யருந்திஞன். சித்திரிக்கப்பெற்ற வில்லென வளைந்து கார்போல் கருத்த புருவங்களின் கீழே, அவளது தாமரைக் கண்கள் சுருங்கிய தாமரைமொட்டுகளென மூடியிருந்த எழிலையும், அந்த நீண்ட கடாக்ஷங்களிலே நேருக்குநேர் சமமாய் அமைந்த கோமள ரேகைகளையும் கண்ணுற்ருன். அவள் தன் சின்னஞ்சிறிய தளிர்க்கையை நித்திரைவசத்திஞல் கன்னத்தின்மேல் வைத்துக் கொண்டிருந்ததைப் பார்த்தால், ஒரு புஷ்பராசியின்மேல் இன்னெரு புஷ்பராசி விழுந்ததுபோலிருந்தது. அவள் முகமண்டலத்தில் கையை வைத்துப் படுத்திருந்தபடியால், தாம்பூல ரஸத்தால் செவந்திருந்த அதரங்கள் சிறிது மலர்ந்து, முத்துக்களைப் பழித்த பல்வரிசையைச் சிறிது வெளிக்குத் தெரியும்படி செய்தன. ஒருசமயம் சைவலினி ஏதோ இன்பமான கனவுகண்டு மந்தஹாஸம் செய்பவள்போல் தோன்றியதைக் கண்டால், சந்திரிகையின்மேல் மின்னற்கொடி பாவியது போலிருந்தது. மறுபடியும் அவள் முகமண்டலம் முன்போல் சுஷுப்தியில் அமர்ந்தது. காமவிகாரம் சிறிதுமின்றிச் சுகமாய்த் துயிலும் இருபது வயதுள்ள அம்மங்கையின் மலர்ந்த முகமண்டலத்தைப் பார்த்துச் சந்திரசேகரன் கண்ணீர் சொரிந்தான்.

மெய்ம்மறந்த நித்திரையில் அசைவற்றமர்ந்திருந்த சைவலினியின் முகமண்டலத்தினது சுந்தர காந்தியைக்கண்டு சந்திரசேகரன் கண்ணீர் உகுத்து இவ்வாறு யோசிக்கலாயிஞன்: "ஐயோ! நான் ஏன் இவளை மணந்தேன்? இந்தப் புஷ்பம் ராஜமகுடத்தை யலங்கரிக்கும் பெருமை வாய்ந்ததாயிற்றே. சாஸ்திர விசாரம் செய்யும் பிராமண பண்டிதன் குடிசைக்கு இந்த ரத்னத்தை ஏன் கொண்டுவந்தேன்.

கொண்டு வந்ததால் நான் இன்பமடைகிறேன், சந்தேகமில்லை; ஆனால் சைவலினிக்கு அதினால் என்ன சுகம்? என் வயதை நோக்குமிடத்தில், என்னிடத்தில் அவள் காதல் வைப்பாள் என்றெண்ணுவது அசம்பவம். அன்றி என் காதலினால் அவளது காதல்வேட்கை தணியுமென்று நினைப்பதற்கும் இடமில்லை, மேலும் நான் எப்போதும் கிரந்த விசாரத்திலேயே காலம் போக்குகிறேன். சைவலினியின் சுகத்தை நான் எப்போது கருதுவேன்? என் புஸ்தகங்களை எடுத்துப் படிப்பதால் இவளையொத்த நவ யுவதிகளுக்கு என்ன சுகமுண்டு? நான் எப்போதும் என் சுகத்தையே பெரிதாக எண்ணுகிறவன், அவ்வெண்ணந்தானே இவளை மணக்கும்படி என்னைத் தூண்டினது? இப்பொழுது நான் என்ன செய்யலாம்? இவ்வளவு கஷ்டப்பட்டுச் சேகரித்த கிரந்தங்களையெல்லாம் நீரில் எறிந்துவிட்டு, நாரியின் நளின முகமே நரஜன்ம மெடுத்ததற்குப் பெரிய புருஷார்த்தமெனக் கொள்ளலாமா? சீச்சீ! அப்படி நான் செய்யவேமாட்டேன். அப்படியானால், ஒரு பாவமும் அறியாத இந்தச் சைவலினியோ என் பாபத்துக்கேற்ற பலியாகவேண்டும்? தருந்த காலத்தில் சுகமநுபவியாது தவித்து வேகும் யௌவனத்தின் அக்நிஜ்வாலையிலிட்டுப் பொசுக்கவோ, நான் இவ்வழகிய மலரை அதன் காம்பினின்றும் கிள்ளினேன்?

இவ்விதமான சிந்தையில் ஆழ்ந்திருந்த சந்திரசேகரன் போஜனம் செய்ய மறந்துபோய்விட்டான். அடுத்த நாள் காலையில் நவாபின் * மீர் முனிஷியினிடத்திலிருந்து, சந்திரசேகரன் மூர்ஷிதாபாத்துக்கு வரவேண்டுமென்று உத்தரவு வந்தது. அவனால் நவாபுக்குக் காரியம் ஆகவேண்டியிருந்தது.

---

* மீர் முனிஷி=முக்கிய காரியஸ்தன்.

மூன்ருவது அத்தியாயம்

லாரேன்ஸ் பாஸ்டர்

வேதக்கிராமத்துக்குச் சமீபத்தில் புரந்தரபுரமென்னும் கிராமத்திலே, ஈஸ்ட் இந்தியா கம்பெனிக்குச் சொந்தமான சிறிய பட்டுத் தொழிற் பண்டசாலை ஒன்றிருந்தது. லாரேன்ஸ் பாஸ்டர் அதில் முக்கிய காரியஸ்தன். அவன் அதிபாலியத்திலேயே மேரி பாஸ்டர் என்னும் மங்கைமேல் மோகங்கொண்டு அவளை மணக்க முடியாமல் மோசம்போய் மனமுடைந்து, ஈஸ்ட் இந்தியா கம்பெனியில் ஊழியம் செய்ய ஒப்புக்கொண்டு வங்காளத்துக்குப் புறப்பட்டு வந்துவிட்டான். தற்காலத்திய இங்கிலீஷ்காரருக்கு அவர்கள் இந்தியாவுக்கு வந்தமாத்திரத்தில் பலவித சரீரசம்பந்தமான வியாதிகள் உண்டாவதுபோல் அக்காலத்திய ஆங்கிலேயருக்கும் வங்காளத்தின் காற்ருனது பொருளாசை யென்னும் நோயை உண்டாக்கி வந்தது. சொற்ப காலத்துக்குள் பாஸ்டருக்கும் இந்த நோய் கண்டுவிட்டது. உடனே மேரி பாஸ்டரின் உருவமும் அவன் மனத்தை விட்டகன்று அழிந்துபோய்விட்டது. ஒரு சமயம், அவன் வேதக்கிராமத்துக்குக் காரியவிஷயமாய்ப் போயிருந்தான். அங்கே பீமாபுஷ்கரிணியின் ஜலத்தில் மலர்ந்த தாமரைப்பூ போல் விளங்கிய சைவலினி அவன் கண்ணைக் கவர்ந்தாள். வெள்ளைக் காரனைப் பார்த்தவுடன் சைவலினி ஓடிப்போய்விட்டாள். பாஸ்டரோ அவளையே ஸ்மரணை செய்துகொண்டு தொழிற்சாலைக்குத் திரும்பினான். அவன் வெகுதூரம் யோசித்துக் கடைசியில் நீலநிறமான பூனைக்கண்களைவிடக் கருங்கண்களே அழகு பொருந்தியவை யென்றும், செம்மட்டைமயிரைவிடக் கருங்கூந்தலே சிறந்த தென்றும் தீர்மானித்தான். இந்தச் சம்சாரக்கடலில் ஸ்திரீகள் மரக்கலத்தை யொத்தவர்களென்றும், ஒவ்வொருவரும் அவர்களது ஆசிரயத்தைப் பெறவேண்டுமென்றும் திடீரென்று அவனுக்கு ஒரு ஞாபகம் உண்டாயிற்று. இந்த நாட்டுக்கு வந்த பிறகு தாங்கள் சீமையில் செய்துகொண்ட கல்யாணத்தை மறைத்துப் பாதிரியை ஏமாற்றி

வங்காள மங்கையரைத் தங்கள் சுகத்துக்காக வைத்துக்கொள்ளும் ஆங்கிலேயர் அதிக சொற்பமானவரல்லர். எத்தனையோ வங்காளமாதர் பொருளாசையால் தங்கள் மானத்தை ஆங்கிலேயருக்கு விற்றிருக்கிறார்கள். சைவலிநியும் அவ்வாறு செய்யமாட்டாளோ? பாஸ்டர் தன்னுடன் ஒரு குமாஸ்தாவை அழைத்துக்கொண்டு மறுபடியும் வேதக்கிராமத்துக்குப் போய் ஒரு புதரிற் பதுங்கியிருந்தான். அந்தக் குமாஸ்தா சைவலிநியைப் பார்த்து, அவளைப் பின்தொடர்ந்து சென்று அவள் வீட்டைப் பார்த்துக்கொண்டு போனான்.

பிசாசு என்ற பெயரைக் கேட்டமாத்திரத்தில் எந்தப் பையனும் பயத்தால் நடுங்குவானன்றோ? ஆனால் சிற்சில துஷ்டப்பிள்ளைகள், அந்தப் பிசாசு எப்படி இருக்கிறது பார்ப்போமென்று சொல்வதுமுண்டு. சைவலிநி அப்படிப்பட்டவள். சைவலிநி முதன் முதலில், அக்காலத்திய வழக்கத்தை யநுசரித்து, பாஸ்டரைக் கண்டவுடன், மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க, ஒரே ஓட்டமாய் ஓடி மறைவாள். அப்போது யாராவது ஒருவள் அவளைப் பார்த்து, "இங்கிலீஷ்காரர் ஜனங்களை ஒன்றும் பிடித்துத் தின்றுவிடமாட்டார்கள். அவர்கள் அதிவிசித்திரமான பிராணிகள். அவர்களைத் தான் ஒருதரம் பாரேன்" என்றால், சைவலிநியும் அப்படியே பார்ப்பாள். அந்த இங்கிலீஷ்காரன் தன்மேல் பாய்ந்து தன்னைக் கவ்வித் தின்றுவிடவில்லை யெனக் கண்டு, அதுமுதல் பாஸ்டர் கண்ணில் பட்டவுடனே அவளும் ஓடிப்போவதில்லை. படிப்படியாய் அவனுடன் பேசுவதற்கும் தைரியங் கொண்டுவிட்டாள். அந்த விஷயமும் நம் கதாநேயர்களுக்கு முன்னமே தெரிந்திருக்கிறதல்லவா?

அசுபமானலக்கினத்தில் சைவலிநி இந்தப் பூமியில் பெண்ஜன்மம் எடுத்தாள். அசுபமான லக்கினத்தில் சந்திரசேகரனும் அவளைப் பாணிக்கிரஹணம் செய்துகொண்டான். சைவலிநி எப்படிப்பட்டவளென்பதை இனிப் போகப் போகச் சொல்லுவோம். அவள் சங்கதி எப்படி இருப்பினும், பாஸ்டரின் பிரயத்தனம் நிஷ்பலமாய்விட்டது.

சற்றுக் கழித்து, கல்கத்தாவிலிருந்து திடீரென்று அவனுக்கு ஓர் உத்திரவு வந்தது. அஃது என்னவெனில்:—"புரந்தரபுரத்தொழிற்

சாலைக்கு உன்னுடைய ஸ்தானத்தில் வேருெருவனை நியமனம் செய்திருக்கிறது, நீ உடனே கல்கத்தாவுக்கு வந்து சேரவேண்டியது. உனக்கு வேருெரு விசேஷ வேலைகொடுக்க ஏற்பாடாயிருக்கிறது." அவனுடைய வேலைக்கு நியமிக்கப்பட்டவனும் அந்தவுத்தரவின்பின்னலேயே வந்துசேர்ந்தான். பாஸ்டர் உடனே கல்கத்தாவுக்குப் புறப்பட வேண்டியதாயிற்று.

சைவலினியின் ரூபலாவண்யத்தால் பாஸ்டரின் சித்தம் கட்டுண்டு போய்விட்டது. சைவலினியின்மேல் வைத்திருந்த ஆசையையெல்லாம் விட்டுவிட்டுத் தான் போகவேண்டுமென்று அவனுக்கு வெளிப்படையாய்ப் புலப்பட்டது. அந்தக் காலத்தில் பங்காளத்திலிருந்த ஆங்கிலேயர்களுக்கு இரண்டு காரியங்கள் மாத்திரம் அசாத்தியமாயிருந்தன. ஒன்று, பேராசையை ஒழிக்க மாட்டார்கள், மற்ருென்று, தோல்வியையும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இந்தக் காரியத்தில் இறங்கினுல் நமக்குக் கூடிவராது, ஆகையால் இதில் தலையிடாதிருப்பதே நலம் என்று அவர்கள் உயிர் போனுலும் ஒருகாலும் ஒப்பமாட்டார்கள்; அவ்வாறே, இந்தக் காரியம் செய்வதால் பாபமுண்டாகும், ஆகையால் இதைச் செய்யக்கூடாதென்றும் அவர்கள் ஒருபோதும் ஒப்பமாட்டார்கள். பாரத வருஷத்தில் பிரிட்டிஷ் ராஜ்யத்தை ஆதியில் ஸ்தாபித்த ஆங்கிலேயரைப்போல், ஊக்கமும் விடாமுயற்சியும் சுயேச்சை விருப்பமும் உள்ள மானிட ஜாதியாரை இப்பூமண்டலத்தில் வேறெங்குங் காணமுடியாது.

லாரென்ஸ் பாஸ்டரும் இப்பேர்ப்பட்ட தன்மையுள்ளவனே. அவன் மனத்தில் உண்டான பேராசையை அவன் அடக்கவில்லை. அக்காலத்தில் வங்காளத்தில் இருந்த ஆங்கிலேயருக்குள் புண்ணியம் என்பது முயற்கொம்பாயிருந்தது. அவன் சாத்தியமா அசாத்தியமா என்ற அம்சத்தை விசாரிக்கவே இல்லை. அவன் நினைத்ததெல்லாங் கூடி "now or never" அதாவது, 'ஆனுல் இப்பொழுது, இல்லாவிடில் எப்பொழுதுமில்லை' யென்றே. இவ்வாறு நிச்சயம் பண்ணிக்கொண்டு பாஸ்டர் கல்கத்தாவுக்குப் புறப்பட வேண்டிய தினத்துக்கு முதல்நாள் இராத்திரி இருட்டிய பின், பல்லக்கு, பல்லக்குத் தூக்கி

கள், சில பண்டசாலேச் சேவகர், முதலிய பரிவாரத்தோடு ஆயுதஸகித மாய் வேதக்கிராமத்தை நோக்கிப் புறப்பட்டான்.

அன்றிரவு சந்திரசேகரன் வீட்டில் கொள்ளே நடந்ததென்று வேதக்கிராமத்து ஜனங்கள் கேட்டுத் திடுக்கிட்டார்கள். சந்திரசேக ரன் ஊரில் இல்லே. மூர்ஷிதாபாத்திலிருந்து நவாபின் உத்தியோ கஸ்தனெருவன் ஆதரவுடன் அனுப்பிய நிருபத்தைப்பெற்று அங்கே போனவன் இன்னும் திரும்பிவரவில்லே. அப்பொழுது உண்டான இரைச்சலேயும், கதறுதலேயும், துப்பாக்கி முதலிய ஆயுதங்களின் தொனியையும், அழுகைக்குரலேயும் கேட்டு, கிராமத்திலுள்ளவர் படுக் கையை விட்டு எழுந்து வெளியே வந்து பார்த்தவளவில், திருடர்கள் சந்திரசேகரன் வீட்டில் புகுந்து கொள்ளேயடிப்பதையும், அநேகம் தீவட்டிகள் எரிந்துகொண்டிருப்பதையும் கண்டார்கள். கிட்டப்போவ தற்கு எவரும் முன் வந்தார்களில்லே. அவர்கள் தூரமாய் நின்று கொண்டு, திருடர்கள் கொள்ளேயடித்துவிட்டு ஒவ்வொருவராய் வெளியே போவதைப் பார்த்தார்கள். அன்றியும் அந்த வீட்டிலிருந்து சிலர் ஒரு பல்லக்கைத் தோள்களில் தூக்கிக்கொண்டு வெளியே வரு வதையுங்கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அந்தப் பல்லக்கின் கதவுகள் மூடப்பட்டிருந்தன. அதன் பக்கத்தில் புரந்தரபுரப் பண்டசாலேயின் துரை போய்க்கொண்டிருந்தான். அதைப் பார்த்து ஊரார் பயந்து விலகிப் போய்விட்டார்கள்.

கள்ளர்கள் மறைந்ததும், அண்டையயலார்கள் அவ்வீட்டிற் பிர வேசித்துப் பார்க்கையில், வீட்டுச் சொத்துக்களில் அதிகமாய் ஒன்றும் கொள்ளேபோகவில்லே ; அவையெல்லாம் அநேகமாய்ப் பத்திரமாக வே இருந்தன ; ஆனுல் சைவலினியை மாத்திரம் காணவில்லே. அவள் எங்கேயாவது ஒளித்துக்கொண்டிருப்பள், சற்றுநேரம் கழித்துத் தானே வருவள், என்றூர்கள் சிலர். இனிமேல் அவள் வருவதேது, அப்படி யொருகால் அவள் வந்தபோதிலும், சந்திரசேகரன் அவளே மறுபடியும் சேர்த்துக்கொள்ளமாட்டான் ; நீங்கள் பார்த்த பல்லக்கி லேயே அவளே எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்—என்று அவர்க ளுள் வயதில் முதிர்ந்தவர்கள் மொழிந்தார்கள்.

சைவலிநி திரும்பி வருவள் வருவள் என்று எதிர்பார்த்திருந்தவர்கள் சிறிதுநேரம் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் நின்று நின்று கடைசியில் உட்கார்ந்தார்கள். சிறிது நேரம் உட்கார்ந்திருந்து கண்ணைமூடிக் குறட்டை விட்டார்கள். இப்படிக் கொஞ்சநேரம் குறட்டைவிட்டு உறங்கி உறங்கி வெறுப்படைந்து வீட்டுக்கேகினர். சைவலிநி வரவில்லை.

சுந்தரி யென்னும் ஒரு பெண்ணைப்பற்றி நாம் முன் சொல்லியிருக்கிறோமே. அவள் அனைவருக்கும் பின்னால் எழுந்து போனாள். அவள் சந்திரசேகரனது பக்கத்தகத்துப்பெண். உறவில் தங்கைமுறையாக வேண்டும். சைவலிநிக்கு உயிர்த்தோழி. இவளைப்பற்றி இனிப் போகப்போகப் பேசவேண்டி வருமாதலால், அவளது வரலாற்றை இங்கே எடுத்துச் சொன்னோம்.

சுந்தரி வெகுநேரம் வரையிலும் காத்திருந்து விடியற்காலத்தில் வீட்டுக்குப்போய் அழத்தொடங்கினாள்.

நான்காவது அத்தியாயம்

அம்பட்டச்சி

பாஸ்டர் தானே பல்லக்குடன்கூட தூரத்திலுள்ள பாகீரதி நதி வரையில் நடந்து சென்ருன். அங்கே ஒரு படகு சர்வசித்தமாய்க் காத்துக்கொண்டிருந்தது ; அதில் சைவலினியை யேற்றினுன். படகில் ஹிந்து வேலைக்காரர்களையும் வேலைக்காரிகளையும் காவல்காரர்களை யும் ஏற்படுத்தி வைத்திருந்தான். வெள்ளைக்காரனுடன் வெளியேறி விட்ட சைவலினிக்கு இனி ஹிந்து வேலைக்காரர்களும் வேலைக்காரி களும் எதற்காக? பாஸ்டர் தான் மாத்திரம் வேறே படகில் கல்கத்தா வுக்குப் புறப்பட்டான். அவன் அவசரமாய்ப் போக வேண்டி யிருந்ததால், எதிர்முகமாய் அடிக்கும் காற்றில் பெரிய படகில் ஏறிக் கொண்டு ஒரு வாரத்துக்குள் கல்கத்தா போய்ச் சேர்வது அசாத் தியம். ஆகவே, அவன், ஸ்திரீகள் சௌக்கியமாய்ப் பிரயாணம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் திட்டம் செய்து அந்தப் படகில் அவளை ஏற்றிவிட்டுத் தான் வேறு படகின் மூல மாய்ப் புறப்பட்டான். தான் அவளுடன் கூடப் போகவில்லை யென்ற காரணத்தால் யாராவது படகை வழிமறித்தெதிர்த்துச் சைவ லினியைத் திருப்பி யழைத்துக்கொண்டு போய்விடுவார்களென்ற பயம் அவனுக்கில்லை. இங்கிலீஷ்காரனுடைய கப்பல் என்ருல் எவ ரும் அதன்கிட்ட நெருங்கத் துணியார். சைவலினியைக் கொண்டு போகும் கப்பல் **மாங்கீரில்** போய் இறங்கவேண்டுமென்று அவன் சொல்லிப் போனுன்.

காலையில் வீசும் காற்றினுல் எழுந்த சிற்றலைகளின்மேல் ஆரோ ஹணித்து, அந்த விசாலமான மரக்கலம் வடக்கு முகமாய்ப் புறப் பட்டுச் செல்ல, மிருதுவாய் ஒலிக்கும் அலைகள் சலசலவென்று கப்ப லின் அடித்தலத்தில் மோதின. தந்திரமாய் ஏமாற்றும் கபடவஞ்ச கனை நீங்கள் எவ்வளவு நம்பினுலும் நம்பலாம். ஆனுல் காலையில் வீசும் காற்றைமாத்திரம் ஒருபோதும் நம்பவேண்டாம். காலைக்

காற்று மிகவும் மதுரமானது. அது கள்ளனைப்போல் காலடி யரவம் உண்டாகாமலே மெதுவாய் நடந்து, இங்கே ஒரு தாமரைப் பூவையும், அங்கே ஒரு மல்லிகை மஞ்சரியையும், இன்னோரிடத்தில் நறுமணம் வீசும் மகிழமரக் கிளையையும் கட்டித்தழுவி சரசமாடுகின்றது. அது சிலருக்குச் சுகந்தத்தைக் கொண்டுபோய்க் கொடுக்கின்றது. இரவில் உழைத்து அலுத்துப்போனவர்களின் அங்கதாபத்தைத் தீர்க்கின்றது, சிந்தையால் வருந்துவோரின் நெற்றி வியர்வையை அகற்றிச் சாந்தப்படுத்துகிறது. யுவதிகளின் முன்னெற்றியில் அசையும் சுருண்ட கூந்தலைக் கண்டுவிட்டாலோ, அதன்மேல் மிருதுவாய் மூச்சு விட்டுக்கொண்டே கம்பி நீட்டிவிடுகிறது. நீர் கப்பல் யாத்திரை செய்கிறவரோ ? அப்படியானால் பாரும், இந்த விளையாட்டுத் தனமுள்ள மனோஹரமான காலைக்காற்றானது சிற்றலைகளால் ஆற்றையலங்கரிப்பதை; அது ஆகாசத்திலுள்ள இரண்டொரு கரிய மேகங்களை ஒதுக்கி ஆகாசத்தைப் பரிஷ்கார மாக்குவதையும் பாரும்; அன்றியும் அது கரையிலுள்ள மரங்களுடன் மிருதுவாய் நடனம் செய்வதையும், நீராடும் நாரியருடன் நயமாய்ச் சரசமாடுவதையும், கப்பலில் நுழைந்து உமது செவியில் இன்னிசை பாடுவதையும் பாரீர். இதையெல்லாம் பார்க்கும்போது இந்தக் காற்றானது, நிரம்பப் பெருந்தன்மையுடையதென்றும், மஹா கம்பீர சுபாவமுள்ளதென்றும், ஆடம்பரமென்பது லவலேசமும் இல்லாததென்றும், இவ்வாறிருந்தும் எப்போதும் உற்சாகமாயிருப்பதென்றும் நீர் கருதுவீர். உலகத்தில் யாவரும் இப்படியே நடந்துகொண்டால், அப்பொழுது எதுதான் சாத்தியமாகாது? இனிக் கப்பலின் பாய்மரத்தை விரித்துக் கப்பலை நடத்தும். சூரியோதயமாய்விட்டது. பாலசூரியன் அலைகளில் பளபளவென்று பிரகாசிப்பதைப் பாரீர். அவ்வலைகள் இப்போது முன்னிலும் பெரிதாகிக்கொண்டு வருவதைப் பார்த்தீரா ? அவற்றில் ராஜஹம்ஸ பக்ஷிகள் அழகாய் ஆடுவதைப் பாரீர். உடம்பைத் தேய்த்துக்கொண்டிருக்கிற சுந்தராங்கிகளின் மட்குடங்கள் இருந்தவிடத்தில் நில்லாமல் துள்ளித்துள்ளிக் கூத்தாடிச் செல்வதையும் காணீர். ஒருசமயம் அவ்வலைகள் தூர்த்தத்தனமாய் அவர்கள் தோளின்மேல் ஏறி

யும், அப்புறம் கரையேறிவிட்ட காமினிகளின் காலடிகளில் விழுந்தும், விழுந்து, 'தேஹி பதபல்லவமுதாரம்' (நும் தளிரன்ன திருவடியைத் தாரும்) என்று இரக்கும் பாவனையாய் தலையை அடித்துக்கொள் வதையும், கடைசியில் அம்மான்விழியாரின் மனோஹரமான பாதங் களிலிருந்து வழிந்தோடும் செம்பஞ்சுக்குழம்பைப் பூசிக்கொண்டு பிர காசிப்பதையும் பாரீர். படிப்படியாய்க் காற்றின் சத்தம் அதிகரிப்பதைக் காணீர். இனி அது முன்போல் ஜயதேவகவியின் பாடலைப்போல் உமது காதில் கனிந்து செல்வதில்லை. பைரவி ராகம்போல் காதண்டை வந்து மிருதுவாய் வீணாகானம் செய்வதில்லை. கொஞ்சங்கொஞ்சமாய் அக்காற்றானது முற்றி, ஊழிகாலத்துக் காற்றின் கர்ஜனையுடன் கோஷிக்கத்தலைப்படுகிறது. அலைகளெல்லாம் திடீரெனப் பொங்கித் தலைகளையாட்டிக்கொண்டு விர்ரென வேகமாய் ஓடுகின்றன. எங்கும் ஒரே இருள்மயமாய் விடுகிறது. பிரதிகூலமாய் மோதும் காற்றுகள் வழியை மறித்துக் கப்பலின் முன்பக்கத்தைப் பிடித்து அதை நீருக் கெதிராய் மோதிக் கப்பலைச் சுற்றியும் அடித்துச் சக்கராகாரமாய்ச் சுழன்றுகொண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட கோரமான அவஸ்தை யைக்காணும்போது உமக்கும் தைரியம் குறைந்துபோகிறது. அப்போது நீர் வாயுபகவானை வணங்கிக் கப்பலைக் கரையோரமாய் ஓட்டிக்கொண்டு வருவீரல்லவா ?

சைவலினியின் கப்பலும் அதே மாதிரியான அவஸ்தையில்தான் இப்போது அகப்பட்டுக்கொண்டது. கப்பல் பெரிதாயிருந்தமையால் பிரதிகூலமாய் வீசும் காற்றுக்கெதிர் நோக்கிச்செல்ல முடியவில்லை. கப்பலில் இருந்த காவல்காரர்கள் அதைப் **பத்திரஹட்டி** என்னும் இடத்தில் நங்கூரம் போட்டார்கள்.

சற்று நேரத்துக்கெல்லாம், ஓர் அம்பட்டச்சி அங்கே வந்தாள். அவளுக்குக் கலியாணமாயிருந்தது. அவள் சிறிய செகப்புக்கரை போட்ட சேலை கட்டியிருந்தாள். கையில் செம்பஞ்சு நிறைந்த கூடை ஒன்று இருந்தது. அவள் கப்பலில் கறுப்புத் தாடிகளின் கூட்டத் தைக் கண்டு முக்காட்டை முன்னுக்கு இழுத்துக்கொண்டாள். தாடிக் காரர்கள் மௌனமுற்று அவளை உற்றுப்பார்த்தார்கள்.

அப்பொழுது அடுப்பில் சைவலினிக்குச் சமையல் ஆய்க்கொண்டிருந்தது. அவள் இன்னும் ஹிந்து ஆசாரங்களையே அநுஷ்டித்துக்கொண்டு வந்தபடியால், பிராமணனொருவன் சமையல் செய்துகொண்டிருந்தான். ஒருநாளைக்குள்ளேயே ஒருத்தி துரைசானியாய்ப் போய்விடுவளா? சைவலினி தன்னிடத்தினின்று தப்பித்துக்கொண்டு போகாமலாவது தற்கொலை புரிந்துகொள்ளாமலாவது இருக்கும்பக்ஷத்தில் அவள் என்றைக்காவது ஒருநாள் தன்னுடன் மேஜையின் எதிரில் உட்கார்ந்து மஹமதியர்கள் செய்துவைக்கும் போஜனவகைகளை உருசியாய் உட்கொள்வாள் என்று பாஸ்டர் நம்பியிருந்தான். ஆகையால் இப்போதே என் அவசரப்படவேண்டும்? அவளை அவன் பலாத்காரம் செய்வானாகில் காரியமெல்லாம் கெட்டுப்போய்விடுமன்றோ? அவன் இந்த யோசனையை வைத்துக்கொண்டு, தன் சேவகர்கள் சிலர் சொல்லியபடி, பிராமண சுயம்பாகியை ஏற்படுத்தியிருந்தான். பிராமணன் சமையல் செய்துகொண்டிருக்க, பக்கத்திலிருந்த வேலைக்காரி யொருத்தி அவனுக்கு வேண்டியவைகளை உதவிக்கொண்டிருந்தாள். உள்ளே வந்த அம்பட்டச்சி அந்த வேலைக்காரியினிடம் நேரே சென்று 'அடி, எங்கேயிருந்துடி வாரே' என்று கேட்டாள்.

வேலைக்காரிக்குக் கோபம் வந்து விட்டது.—வெள்ளைக்காரனிடம் சம்பளம் வாங்கிப் பிழைக்கிறவளானபடியால், அவள் அதிக ரோஷத்துடன், "அதைப்பற்றி உனக்கென்னடி, கழுதே? நாங்கள், ஹில்லி, தில்லி, மக்கா,—எங்கே யிருந்தோ வருகிறோம்:" என்றாள்.

இதைக்கேட்டதும் அம்பட்டச்சிக்குத் தலையிறக்கமுண்டாக, அவள் "அதைக் கேக்கலை அடி அம்மா, நான் அம்பட்டச்சி, இந்தக் கப்பலில் பெண்டுகள் யாராவது இருந்தாக்கா, அவகளுக்கு என்னால் ஏதாவது காரியம் ஆகவேண்டியிருக்குமோ என்னு கேட்டேன், வேறே ஒண்ணுமில்லை, கோவிச்சுக்கொள்ளாதேடி அம்மா" என்றாள்.

வேலைக்காரி சற்றுத் தணிந்து "நல்லது, நான் போய் விசாரிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு, சைவலினி காலில் செம்பஞ்சுக்குழம்பு இட்டுக்கொள்ளுகிறாளா என்னவென்று அவளைக் கேட்பதற்காகச் சென்றாள். சைவலினி எந்தவிதமாக மனதை அந்யவிஷயங்களில் செலு

த்தலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தாள். வேலைக்காரி சொன்ன தைக் கேட்டவுடனே, 'சரி இட்டுக்கொள்ளுகிறேன்' என்றாள். அதன் பேரில் வேலைக்காரி காவற்காரர்களின் அநுமதிபெற்று அம்பட்டச்சி யைக் கப்பலுக்குள் அனுப்பிவிட்டுத் தான் முன்போல் சமையல் செய்யும் இடத்தில் வேலையாயிருந்தாள்.

அம்பட்டச்சியானவள் சைவலினியைக் கண்டவுடனே தன் முக் காட்டை இன்னும் அதிகமாய் முன்னே இழுத்துக்கொண்டு, அவள் காலை இழுத்துச் செம்பஞ்சுக்குழம்பு இடத் தொடங்கினாள். சைவலினி அவளைச் சிறிதுநேரம் உற்றுப் பார்த்துவிட்டு, "அம்பட்டச்சி, நீ இருப்பது எவ்விடம்?" என்று கேட்டாள். அம்பட்டச்சி வாயைத் திறக்கவில்லை.

"அம்பட்டச்சி, உன் பெயரென்ன?" என்று மறுபடியும் கேட் டாள் சைவலினி.

அதற்கும் அவள் பதில் சொல்லவில்லை.

"அம்பட்டச்சி, அழுகிறையா என்ன?"

"இல்லை" என்று மெதுவாய்ச் சொன்னாள் அம்பட்டச்சி.

"ஆமாம், நீ அழுகிறாய்" என்று சொல்லிக்கொண்டே சைவலினி அம்பட்டச்சியின் முக்காட்டைப் பின்னால் இழுத்தாள். உண்மையில் அவள் அழுதுகொண்டுதானிருந்தாள். முக்காட்டை எடுத்தவுடன், அவள் சிறிது மந்தஹாஸம் செய்தாள்.

சைவலினி.—நீ உள்ளேவந்தபொழுதே, நீ இன்னாளென்று எனக் குத் தெரிந்துவிட்டது; எனக்கு முன்னும் முக்காடா, அடி அசடே? போகட்டும், இப்போ எங்கே இருந்து வாரே?

இந்த அம்பட்டச்சி வேறொருத்தியுமல்லள். நாம் முன் பிரஸ்தா பித்தசுந்தரிமன்னியே அவள். அவள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "இப்பவே இந்த இடத்தைவிட்டு ஓடிப்போய்விடு, இதோ என் புடவையை அவிழ்த்துத் தருகிறேன், அதைக் கட்டிக்கொள். இந்தச் செம்பஞ்சுக்கூடையையும் எடுத்துக்கொள். மூஞ்சி தெரியாமல் முக் காடு போட்டுக்கொண்டு கப்பலைவிட்டு ஓடிப்போய்விடு" என்றாள்.

சைவலினி அவள் சொன்னதைக் கவனியாமல்,

"நீ எப்படி வந்தாய்?" என்று கேட்டாள்.

"நான் எங்கிருந்து வந்தேன், எப்படி வந்தேன் என்பதை யெல்லாம் சமயம் வரும்போது சொல்'றேன். உன்னைத் தேடிக் கொண்டு இங்கே வந்தேன். கங்கைப்பக்கமாய் பல்லக்குபோயிற் றென்று சொன்னார்கள். நான் காலமே எழுந்திருந்து ஒருவருடனும் ஒன்றும் பேசாமல் நேராய் கங்கைக்கரைக்குப் போனேன். அங்கே ஜனங்கள் சொல்லக் கேட்டேன் கப்பல் வடக்கு முகமாய் பிரயாணப் பட்டதென்று. நான் வெகுதூரம் நடந்திருக்கவேணும். ஆனால், என்கால் நோக ஆரம்பிக்கவே, ஒரு படகு பேசிக்கொண்டு உன் பின்னாலேயே வந்தேன். நீ ஏறிவரும் கப்பல் பெரியதானபடியால் மெதுவாய்ப் போய்க்கொண்டிருந்தது. என்னுடைய படகோ சின்னது. அதனால் தான், உன்னைச் சீக்கிரத்தில் வந்து பிடித்துவிட்டேன்."

"நீ எப்படி ஒண்டியாய் வரலாம்?"

அதைக் கேட்டதும் "அடி வெட்கங்கெட்ட நாரி, நீ எப்படி ஒரு வெள்ளைக்காரனது கப்பலில் ஒண்டியாய் ஏறிக்கொண்டு வரலாம்?" என்று கேட்டுவிட சுந்தரிக்கு நா எழுந்தது. ஆனால் அப் படிக் கேட்பது அந்தச் சமயத்துக்குச் சரியாயிராதென்று தன்னைத் தானே அடக்கிக்கொண்டு இப்படிச் சொன்னாள்:—

"நான் தனியாய் வரவில்லை, என் அகத்துக்காரர்கூட வந்திருக் கிறார். எங்கள் கப்பலைக் கொஞ்சதூரத்தில் நிறுத்தி வைத்துவிட்டு நான் அம்பட்டச்சி வேஷம் போட்டுக்கொண்டு இங்கே வந்தேன்."

"சரி, அப்புறம்."

"அப்புறம், என் புடவையைக் கட்டிக்கொண்டு, இந்தச் செம்பஞ் சுக்கூடையை எடுத்துக்கொண்டு, முக்காட்டால் மூஞ்சி முழுவதும் மூடிக்கொண்டு ஓடிப்போய்விடு. ஒருவருக்கும் உன்னைத் தெரியாது. கங்கைக்கரையோரமே போ. கப்பலில் என் புருஷன் இருப்பதைப் பார்ப்பாய். அவர் உன் அகமுடையானுக்குத் தங்கைப்புருஷனாயிற்றே என்று வெட்கப்படாதே; நேராக கப்பலுக்குள் போ. நீ அங்கே போய் சேரவேண்டியதுதான், அவர் உடனே கப்பலை ஓட்டிக்கொண்டு போய் உன்னை வீட்டில் கொண்டுபோய் சேர்த்து விடுவார்.

சைவலினி சிறிதுநேரம் யோசித்துப் பிறகு "சரி, அப்படியே ஆகட்டும், நீ வருகிற விதம் எப்படி ?" என்று கேட்டாள்.

சுந்தரி.—"எனக்காக நீ கவலைப்படவேண்டாம். சுந்தரியென்னும் பிராமணத்தியைப் படகில் அடைத்து வைக்கும் பராக்ரமம் படைத்த வெள்ளைக்காரன் இன்னும் பங்காளதேசத்தில் அடி வைக்கவில்லை. நாம் பிராமணர்களுக்குப் பிறந்தவர்கள். பிராமணருக்கு மாலையிட்டவர்கள்; நம் மனது மாத்திரம் திடமாயிருந்தால் இந்த உலகத்தில் நமக்கு யாதொரு அபாயமும் கிடையாது. முதலில் நீ போ, நான் இன்று ராத்திரிக்குள் எப்படியாவது வீடு வந்துசேருகிறேன். ஆபத்தைத்தீர்க்கும் அச்சுதனே சரணமென்று நம்பியிருக்கிறேன். இனிக் கொஞ்சமும் தாமஸம் செய்யாதே. உன் அத்திம்பேருக்கு இதுவரையிலும் போஜனமில்லை. இன்று கிடைக்குமோ என்னமோ அதுவும் தெரியவில்லை."

சைவ.—சரி, நான்போகிறேனென்று வைத்துக்கொள். போனால் என்னை வீட்டில் சேர்த்துக்கொள்வார்களோ ?

சுந்தரி.—ஆஹா, சேர்த்துக்கொள்ளாமல் என்ன ? சேர்த்துக் கொள்ளாமல் தள்ளிவிடுவது அவ்வளவு சுலபமாய்ப் போய்விட்டதா என்ன ?

சைவ.—ஆனால் நீ ஒன்று ஞாபகத்தில் வைக்கவேண்டும், என்னை வெள்ளைக்காரன் இழுத்துக்கொண்டு வந்துவிட்டானே, இன்னும் எனக்கு ஜாதி இருக்கிறதோ ?

சுந்தரி ஆச்சரியமடைந்து அவள் முகத்தை உற்றுப்பார்த்தாள். அவள் மனத்தைப் பிளந்து செல்லும்படியான கூரிய பார்வையோடு அவளைப் பார்த்தாள். பச்சிலைப் பிரயோகத்தால் கட்டுண்ட சர்ப்பம் போல் கர்வமுள்ள சைவலினி தலையைத் தொங்கவிட்டாள். அந்தச் சமயத்தில் சுந்தரி கொஞ்சம் கொடூரமாய் "நீ நிஜத்தைச் சொல்வையா ?" என்று கேட்டாள்.

சைவ: "ஆஹா, சொல்கிறேன்."

சுந்த: "இந்தக் கங்கையின்மேல்?"

சைவ: "ஆஹா, தடையில்லாமல்; நீ என்னைக் கேட்க வேண்டியதே இல்லையே, நீ கேளாமலே நான் உனக்குச் சொல்வேனே.

இந்தக்ஷணம் வரையில் நான் வெள்ளைக்காரனைத் தூரத்திலேயே வைத்திருக்கிறேன். என்னைச் சேர்த்துக்கொள்வதினுல் என் புருஷனுக்குச் சிறிதும் ஜாதிபிரஷ்டதோஷம் வராது.''

சுந்தரி.—அப்படியானுல் சந்தேஹம் எதுக்கு ? அவர் தர்மாத்மா, அதர்மமானதொன்றும் செய்யமாட்டார். வீண்வார்த்தையில் என் காலத்தைப் போக்கவேண்டும் ?

சைவலினி கொஞ்சநேரம் சிந்தையில் ஆழ்ந்திருந்தாள். அவள் கண்களில் நீர் ததும்பியது.

சைவலினி கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "நான் போகிறேன் என்று வைத்துக்கொள். என் புருஷனும் என்னைச் சேர்த்துக் கொள்ளுகிருரென்று வைத்துக்கொள். என் அபகீர்த்தி எப்போதாவது நீங்குமோ ?'' என்ருள்.

சுந்தரி அதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை. சைவலினி "அக்கம்பக்கத்திலுள்ள சிறு பெண்களெல்லாம் என்னை விரலாற் சுட்டிக் காட்டி 'இதோ பாரடி, வெள்ளைக்காரனுல் இழுத்துக்கொண்டு போகப் பட்டவளை' என்பார்களே, எனக்குப் பிள்ளை பிறந்தால் அதற்கு அந்நபிராசனம் நடக்கும்போது யார் என்வீட்டிற்குச் சாப்பிட வருவார்கள். அல்லது ஒரு பெண் பிறந்தது. எந்தப் பிராமணுேத்தமன் தன் மகனுக்கு அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொள்வான். இப்போது நான் வீட்டுக்குத் திரும்பிவந்தால், நான் ஜாதி தர்மம் தவருமலிருந்தேன் என்று எப்படி நம்புவார்கள்? என் மூஞ்சியை நான் அங்கே எப்படிக் காட்டுவேன்?''

சுந்தரி.—உன் தலையெழுத்துப்படி நடந்தது. அதைத் தடுக்க முடியாது. நீ இருக்கும் வரையில் வேதனைப்பட்டுத்தான் ஆகவேண்டும். அப்படிக்கிருந்தும், வீட்டிலேயே வாழ்கிறேம் என்ற திருப்தி யாவது இருக்குமோ இல்லையோ ?

சைவலினி.—இருந்து என்ன சுகம் ? என்ன சுகம் உண்டாகப் போகிறதென்று ஆசையுடன் இவ்வளவு கஷ்டங்களையும் அநுபவிப்பதற்காக வீட்டுக்குப் போகவேண்டும்? எனக்குப் பிதா இல்லை, மாதா இல்லை, பந்துவும் இல்லை.

சுந்தரி.—என்? புருஷன் இருக்கிறானே இல்லையோ? இந்தப் பெண்ஜன்மம் அவனைவிட வேறு யார்பொருட்டு?

சைவலிநி.—உனக்கு எல்லாம் தெரிந்திருந்தும்,—

சுந்தரி.–ஆமாம் நன்றாய்த் தெரியும். இந்தப் பூமியிலுள்ள பாபிஷ்டிகளுக்குள் உன்னைப்போன்ற கொடும்பாவி ஒருவருமில்லையென்று எனக்கு நன்றாய்த் தெரியும். இந்த உலகத்தில் பெண்களுக்கு நல்ல கணவன் வாய்ப்பதே துர்லபம். கோடி ஜன்மம் தபஸ்பண்ணினாலும் உன் புருஷனைப்போன்ற புருஷன் கிடைப்பது எவ்வளவோ பாக்கியம். அப்படிப்பட்ட புருஷனுடைய ஆசையில் உன்மனதுக்குத் திருப்தி உண்டாகவில்லை. காரணமென்ன? மண்வீடுகட்டி விளையாடும் குழந்தைகள் மரப்பொம்மைகளைக் கட்டியணைத்து முத்தமிடுவது போல் அவருக்குப் பெண்டாட்டியைக் கொஞ்சிக் குலாவிச் சீராட்டத் தெரியாது; அதற்குக் காரணமென்னவென்றால், ஸ்வாமி அவரை வீண் படாடோபமுள்ள டம்பாச்சாரியாகச் செய்யாமல், ஆண்மகனாக உண்டாக்கியிருப்பதே. உன் புருஷன் தர்மாத்மா, பண்டிதன். நீயோ துஷ்டை, படுபாவி. அவரிடத்தில் உனக்கெப்படி ஆசையிருக்கும்? நீ குருடரிலும் பெருங் குருடி. ஆகையால் தான், உன்னிடத்தில் அவர் வைத்திருக்கிற ஆசை ஸ்திரீ ஜன்மத்தில் கிடைப்பது அருமையென்று உனக்குத் தெரியவில்லை. நீ பூர்வ ஜன்மத்தில் எவ்வளவோ புண்ணியம் செய்ததின் பலமல்லவோ, இப்படிப்பட்ட புருஷனுடைய ஆசை உனக்கு வாய்த்திருக்கிறது? அதெல்லாம் ஒரு பக்கம் போகட்டும். அதைப்பற்றியெல்லாம் பேச இது ஏற்ற சமயமல்ல. உன்னிடத்தில் அவருக்கு ஆசையில்லாவிட்டால் கூட, அவருடைய பாதசேவை செய்துகொண்டு உன் காலத்தைக் கழித்தாலும், உன் ஜன்மம் கடைத்தேறுமே. என் இன்னும் தாமஸம்? என் வயிறு கொதிக்கிறதே.

சைவலிநி.—நான் இப்போ சொல்வதைக் கேள். நான் வீட்டிலிருக்கும்போது என்ன நினைத்துக்கொண்டிருந்தேன் தெரியுமா? தாயார் முறையிலாவது தகப்பன் முறையிலாவது யாராவது பந்துக்கள் இருந்தால், வீட்டைவிட்டு அங்கேபோய் வாழலாம். இல்லா

விட்டால் காசிக்குப்போய் பிச்சையெடுக்கிறது, அதுவும் இல்லா விட்டால் ஜலத்தில் விழுந்து பிராணனை விடுகிறதென்று நினைத்துக்கொள்வேன். இப்போதோ, நான் மாங்கீர் பட்டணத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறேன். போய் அது எப்படிப்பட்ட பட்டணமென்று பார்க்கிறேன். அந்தப் பட்டணத்தில் என் வயிற்றுக்கு வேண்டிய பிச்சை யகப்படாதாவென்று பார்க்கிறேன். சாகும்படி வந்தால், பிராணனை விட்டுவிடுகிறேன். சாவு என் உள்ளங்கையிலேயே இருக்கிறது. இனி மரணத்தைவிட எனக்கு வேறே உபாயம் என்ன இருக்கிறது. ஆனால் செத்தாலும் பிழைத்தாலும் வீட்டுக்குத் திரும்பிவருவதில்லையென்று நிச்சயம் பண்ணிவிட்டேன். எனக்காக நீ இந்தக் கஷ்டமெல்லாம் வீணாகப்பட்டாய். நீ புறப்பட்டுப்போ, நான் வரமாட்டேன். நான் செத்துப்போய் விட்டேன் என்று நினைத்துக்கொள். நான் சாகத்தான் போகிறேன், நிச்சயம், நீ போ.

இதைக்கேட்ட பிறகு, சுந்தரி வேறொன்றும் பேசவில்லை. கண்ணீரை அடக்கிக்கொண்டு, எழுந்துநின்று சொல்லலானாள்.—"நீ சீக்கிரத்தில் செத்துப்போக வேண்டுமென்றே நானும் கோருகிறேன். எனக்குச் சாகத் தைரியம் உண்டாகவேண்டுமென்றும், நீ மாங்கீர் பட்டணம் போவதற்குள்ளாகவே மாண்டுபோகவேண்டுமென்றுந்தான் நான் பயபக்தியாய் தெய்வங்களை வேண்டிக்கொள்கிறேன். காற்று மழையிலோ, கொந்தளித்தெழும் அலைகளிலோ, கவிழ்ந்துபோகும் கப்பலிலோ எந்த விதத்திலாவது நீ மாங்கீர் போய்ச் சேருமுன்னமே மாண்டுபோகாயா என்றே பிரார்த்திக்கிறேன்."

இந்த வார்த்தைகளைச் சொல்லிவிட்டுச் சுந்தரி கப்பலைவிட்டு வெளியே வந்து செம்பஞ்சுக்கூடையை நீரிலே எறிந்துவிட்டுத் தன் புருஷனிடம் திரும்பிப்போனாள்.

ஐந்தாவது அத்தியாயம்

சந்திரசேகரன் திரும்பிவருதல்

சந்திரசேகரன் மூர்ஷிதாபாத்துக்கு நவாபின் காரியமாகப் போனுனென்று முன் அத்தியாயத்தில் சொன்னேமல்லவா? அவன் வருங்கால சம்பவங்களைப்பற்றிக் கணக்கிட்டுப் பார்த்தான். பார்த்து நவாபின் உத்தியோகஸ்தனை நோக்கி, 'ஐயா, நான் ஜோஸ்யம் பார்த்ததில் ஒன்றும் சரியாய்த் தெரியவில்லையென்று தயவுசெய்து நவாபுக்குத் தெரிவியுங்கள்' என்ருன்.

"ஏன் ஐயா" என்று நவாபின் உத்தியோகஸ்தன் கேட்டான்.

சந்திர.—"ஜோஸ்யத்தால் சகலத்தையும் அறிந்து சொல்ல முடியாது. முடியுமானுல், மனிதன் சர்வஜ்ஞனுய் விடமாட்டானு? மேலும் நான் அந்த வித்தையில் அவ்வளவு தேர்ந்தவனல்ல."

நவாபின் உத்தியோகஸ்தன்:—அல்லது, புத்திமான்களாயுள்ளவர் ராஜாவுக்கு அப்பிரியமானவைகளைச் சொல்லாமலிருந்தாலும் இருக்கலாம். எப்படியாயினும், தாங்கள் சொன்னதை நான் ராஜ சமுகத்தில் விண்ணப்பம் செய்வேன்.

சந்திரசேகரன் விடைபெற்றுக்கொண்டான். அவனுக்குப் பயணச்செலவைக் கொடுக்க உத்தியோகஸ்தனுக்குத் தைரியமில்லை. ஏனெனில் சந்திரசேகரன் பிராமணன், அதிலும் பண்டிதன், சாதாரண பிராமணனல்லன். அவன் ஒருவரையும் யாசிக்கும் வழக்கமில்லை. பிறரிடத்திலிருந்து தானம் தக்ஷிணை ஒன்றும் வாங்குவதில்லை.

சந்திரசேகரன் விடைபெற்று வீட்டுக்குத் திரும்பிவருகையில் தூரத்தில் வரும்போதே தன் வீட்டைப் பார்த்தான். பார்த்தமாத்திரத்தில், அவன் மனத்தில் ஆநந்தம் பொங்கிற்று. சந்திரசேகரனே தத்வஜ்ஞானி, எப்போதும் தத்துவ ஆராய்ச்சி செய்வதிலேயே விருப்பமுள்ளவன். அவன் தனக்குள்ளேயே இவ்வாறு ஆலோசிக்கலாயினுன். "என்ன ஆச்சரியம்! வெளியூரிலிருந்து வரும்போது வீட்டைக் கண்டமாத்திரத்தில் இவ்வளவு ஆநந்தம் உண்டாவானேன்? நான்

இத்தனை நாள் ஆஹாரநித்திரைகளின்றிக் கஷ்டப்பட்டேனே? வீட்டுக்குப் போனால் வெளியூரைவிட அதிக சுகம் என்ன அநுபவிக்கப் போகிறேன்? இந்த வயதில் நான் பெருத்த மோஹபந்தத்தில் சிக்கிக்கொண்டேனென்பதற்குச் சந்தேகமில்லை. இதோ தெரிகிற வீட்டில் என் காதற்கிளி இருக்கிறாள் என்ற காரணத்தினால்தான் ஒருவேளை என்மனத்தில் இவ்வானந்தக்களிப்பு உண்டாகிறதோ? இந்தப் பிரபஞ்சம் முழுவதும் பிரம்ம சுவரூபமல்லவா? அப்படியிருக்கச் சிலரிடத்தில் அத்தியந்தப்பிரியமும் சிலரிடத்தில் பகைமையும் ஏன் பாராட்டவேண்டும்? சர்வமும் சச்சிதாநந்த பிரம்ம சுவரூபமாயிருக்க, இதோ என் மூட்டையைக் கஷ்டப்பட்டுச் சுமந்துகொண்டுபோகும் இந்த மனிதன்மேல் எனக்கு ஒருதடவையாவது பட்சம் உண்டாகாமலிருப்பதற்குக் காரணமென்ன? இனி அந்த அலர்ந்த செந்தாமரையை நிகர்த்த என் மனையாளின் முகபத்மத்தைப் பார்க்கவேண்டுமென்றே ஏன் ஆவல்கொள்ளுகிறேன்? பகவத் வாக்கியத்தில் எனக்கு அசிரத்தை இல்லை; ஆனால் நான்கொடிய மோஹபாசத்தில் நிச்சயமாய் சிக்கிக்கொண்டிருக்கிறேன். இந்த மோஹவலையை அறுத்தெறியவும் எனக்கு இச்சையைக்காணோம். நான் அநந்த காலம் ஜீவித்திருந்தாலும், அவ்வளவு காலமும் இந்த மோஹாவர்ணத்தில் இருப்பதற்கே இஷ்டப்படுவேன் போலும். நான் மறுபடியும் சைவலினியை எப்போ காணப்போகிறேன்?

இப்படி யவன் யோசித்துக்கொண்டிருக்கையில், திடீரென்று அவன் மனதில் பெருத்த பயம் உண்டாயிற்று. "வீட்டுக்குப் போனதும் சைவலினி காணமற்போனால் என் செய்வது? அவள் ஏன் காணாமல் போகவேணும்? ஒருவேளை வியாதியாய் படுத்துக்கொண்டிருந்தால்? எல்லாருக்குந்தான் வியாதி வருகிறது. பிறகு சொஸ்தமாகிறது." சந்திரசேகரன் இவ்வாறு யோசித்துத் தனக்குள்ளாகவே மீண்டும் சொல்லிக்கொள்வான்:—"அவள் நோயால்வருந்துகிறாளோ என்ற எண்ணம் உண்டான மாத்திரத்திலேயே எனக்கு இவ்வளவு விசாரம் உண்டாக வேண்டியதேன்? நோயால் வருந்தாதவர் யார்? ஒருவேளை அவள் அபாயமாய்ப் படுத்துக்கொண்டிருந்தால்? சந்திரசேகரன் வேகமாய் நடக்கத் தொடங்கினான். அவளுக்கு வியாதியாயிரு

தால், சுவாமி அவளைச் சொஸ்தப்படுத்துவார். அதற்காக நான் ஸ்வஸ்தி யயனுதிகள் பாராயணம் செய்துவைக்கிறேன். அவ்வளவு செய்தும் தேகம் சொஸ்தமாகாவிட்டாலோ? சந்திரசேகரன் கண்களில் நீர் தளும்பியது. பகவான் இந்த வயதில் எனக்கு இப்பேர்ப்பட்ட ரத்னத்தைக் கொடுத்துமறுபடியும் அதைஎன்னிடத்திலிருந்து அபகரித்துக்கொண்டு போய் விடுவாரோ? அப்படி நடந்தாலும், அதில் ஒன்றும் விசித்திரமில்லை. எனக்குச் சுகத்தைத்தவிர துக்கம் கொஞ்சங்கூட உண்டாகாதிருக்கவென்று பகவான் என் தலையில் எழுதும்படி நான் அவ்வளவு அநுக்ரஹம் பெற்றவனே? இன்னும் எவ்வளவு துக்கம் எனக்கு உண்டாகப்போகிறதோ யாருக்குத் தெரியும்? வீட்டுக்குப் போனதும், சைவலிநியைக் காணுமல் போனுலும், அல்லது கடின வியாதியால் அவள் பிராணனை விட்டுவிட்டாளென்று நான் கேள்வியுற்ருலும்,— அப்புறம் நான் பிராணனை வைத்திரேன்" என்று சிந்தித்துக்கொண்டே சந்திரசேகரன் இன்னும் விரைவாய் நடக்கலானுன். கிராமத்தில் பிரவேசித்தவுடனே, ஊரார் தன்னை வாடின முகத்துடன் நோக்கினதைப் பார்த்து அந்தப் பார்வையின் அர்த்தம் இன்னதென்று அவனுக்குப் புலப்படவில்லை. சிறுவர்களெல்லாரும் அவனைப் பார்த்துத் தங்களுக்குள் சிரித்தார்கள். சிலர் அவனுக்குப் பின் தூரத்தில் வந்து கொண்டிருந்தார்கள். பெரியவர்கள் அவனைப் பார்த்ததும் முகத்தைத் திருப்பிக்கொண்டு போய் விட்டார்கள். இதையெல்லாம் கண்டு சந்திரசேகரனுக்கு ஆச்சரியமும் திகிலும் ஏககாலத்திலுண்டாக, ஒன்றிலும் அவன் மனம் செல்லவில்லை. அவன் எந்தப் பக்கமும் திரும்பிப்பாராமல் நேராகத் தன் வீட்டின் கதவண்டைபோய் நின்ருன். கதவு சாத்தியிருந்தது. அவன் கதவை யிடித்ததைக்கேட்டு, வேலைக்காரன் வந்து கதவைத் திறந்தான். சந்திரசேகரனைக் கண்டதும் அவனுக்கு அழுகை வந்துவிட்டது.

"என்ன சமாசாரம்" என்று சந்திரசேகரன் வினவினுன்.

வேலைக்காரன் அதற்கு ஒன்றும் பதில் பேசாமல் அழுது கொண்டே போய்விட்டான்.

சந்திரசேகரன் உள்ளுக்குள்ளேயே தன் இஷ்டதேவதையை

ஸ்மரித்தான். அவன் சுற்றிலும் பார்த்தான். முற்றமும் தாழ்வார முும் பெருக்கப்படாமலிருந்தன. பூஜை செய்யுமிடத்தில் குப்பை நிறைந்திருந்தது. எங்கு பார்த்தாலும் எரிந்துபோன தீவர்த்திகள் கிடந்தன. இங்குமங்கும் உடைந்துபோன கதவுகள் காணப்பட்டன. அவன் வீட்டின் உள்கட்டிலே போய்ப் பார்த்தான். எல்லாக் கதவு களும் வெளிப்பக்கத்தில் தாழிடப்பட்டிருந்தன. வேலைக்காரி அவன் முகத்தைப் பார்த்தவுடன் ஓடிப்போய் மறைந்தாள். வீட்டுக்குள் ளிருந்து அவள் உரத்த குரலில் கோவென்றலறி அழுவது அவனுக் குக் கேட்டது. அவன் அப்பொழுது முற்றத்தின் நடுவில் நின்று கொண்டு விகாரக் குரலுடன் "சைவலிநி" என்று உரத்துக் கூவினன்.

ஒருவரும் பேசவில்லை. சந்திரசேகரனது விகாரக்குரல் வேலைக் காரியின் அழுகையை அடக்கிவிட்டது.

அவன் மறுபடியும் கூவி யழைத்தான். அவன் கூவியழைத்த சத்தம் வீட்டுக்குள்ளிருந்து பிரதித்வனியாய் வந்ததேயன்றி வேறொரு வரும் பேசவில்லை.

அதற்குள் சைவலிநி ஏறிச்சென்ற சித்திரவர்ணக் கப்பலானது கங்காஜலத்தின் மேல் படிந்துவரும் மந்தமாருதத்தால் அசைந் தாடும் செகப்பு நிறமுள்ள ஆங்கிலேயக்கொடியுடன் திரும்பி வந்தது படகுக்காரர்கள் ஏலப்பாட்டுப் பாடிக்கொண்டிருந்தார்கள்.

சந்திரசேகரன் எல்லாவற்றையும் கேட்டான். அதன்மேல் அவன் தன் கிருஹத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த சாளக் கிராம சிலையை ஜாக்கிரதையாய் எடுத்துக்கொண்டுபோய் சுந்தரி யின் தகப்பனர் வீட்டில் வைத்துவிட்டு வந்தான். பிறகு அக்கம் பக்கத்திலுள்ள ஏழைகளைக் கூப்பிட்டுத் தன் வீட்டிலிருந்த துணி மணி பாத்திரவகைகளைக் கொடுத்துவிட்டான். சாயங்காலமாகும் வரையும் இந்தக் காரியமெல்லாம் பார்த்துக்கொண்டிருந்து, அஸ்த மித்தவுடன் தான் இதுவரையிலும் படித்தவையும், படிப்பதற்காகச் சேர்த்து வைத்திருந்தவையும், தன் பிராணனைப்போல் கருதி யிருந் தவையுமான புஸ்தகங்களை யெல்லாம் ஒவ்வொன்ருய்க் கொண்டுவந்து

வைத்தான். அவற்றை அவன் ஒன்றின்மேல் ஒன்ருய் முற்றத்தில் அடுக்கிவைத்தான். நடுநடுவே ஒவ்வொரு புஸ்தகத்தை எடுத்து அவிழ்த்துப் பார்ப்பான். அதைப் படிக்காமலே மறுபடியும் கட்டி வைத்து விடுவான். இவ்வாறு அவன் எல்லாவற்றையும் பார்த்துக் கடைசியில் ஒரு பெரிய ராசியாக அடுக்கினன். அடுக்கியானதும் அதற்குத் தீவைத்தான்.

தீ மூண்டுகொண்டது. புராணம், இதிகாசம், காவியம், அலங்காரம், வியாகரணம், எல்லாம் ஒவ்வொன்ருய்த் தீப்பற்றிக்கொண்டன. மநு-யாஜ்ஞவல்கிய-பராசராதி ஸ்மிருதிகள், நியாயம், வேதாந்தம், சாங்கியம் முதலான தர்சனங்கள் ; கல்பசூத்திரம், ஆரண்யகம், உபநிஷத்துக்கள்; எல்லாம் ஒவ்வொன்ருய்த் தீப்பற்றிக் கொழுந்துவிட்டெரிந்தன. வெகு பிரயாசைப்பட்டுச் சம்பாதித்து அநேக காலம் வரையில் அத்தியயனம் செய்யப்பெற்ற அருமையான கிரந்தங்களெல்லாம் அக்நிபகவானுக்கிரையாகி நீருய்ப் போய்விட்டன.

இராத்திரி ஒன்பது மணிக்குக் கிரந்த தகனம் முற்றுப்பெற்றதும், சந்திரசேகரன் உத்தரீயம் ஒன்றுமாத்திரம் எடுத்துக்கொண்டு வம்சக்கிரமமாய்வந்த வீட்டைவிட்டுப் புறப்பட்டான். புறப்பட்டு எங்கே போனனே ஒருவருக்கும் தெரியாது. ஒருவரும் விசாரிக்கவுமில்லை.

இரண்டாம் பாகம்

நீ வின

முதலாவது அத்தியாயம்

குல்ஸம்

"இல்லை, அந்த பக்ஷி ஆடாது. உன் சங்கதி என்ன சொல்லு' என்று சொல்லிக்கொண்டே தலனிபேகம் ஆடாமல் முரட்டுத்தனம் செய்த மயிலின் தோகையைப் பிடித்திழுத்தாள். அவள் தன் கையில்' அணிந்திருந்த ரத்நங்களிழைத்த வளையத்தை யெடுத்து மற்றொரு மயிலின் கழுத்தில் போட்டு, ஒரு வாயாடிக் கிளியின் மூக்கிலும் கண்களிலும் பனிநீர்த் துளிகளைத் தெளித்தாள். அந்தக் கிளி அவளைக் 'கழுதை' என்று திட்டியது. இந்தத் திட்டைத் தலனி தான் அதற்குச் சொல்லிக் கொடுத்திருந்தாள்.

பக்கத்தில் ஒரு வேலைக்காரப்பெண் பக்ஷிகளை யாடும்படி செய்து கொண்டிருந்தாள். அவளைப்பார்த்துதான் தலனி 'உன் சங்கதி என்ன சொல்லு' என்றாள்.

அதற்குக் குல்ஸம் பதில்சொல்லத் தொடங்கி, "சங்கதி என்ன, இரண்டு படகுகள் ஆயுதங்களோடு வந்து இறங்கி யிருக்கின்றன. அவற்றோடு ஒரு இங்கிலீஷ்காரனும் வந்திருக்கிறான். இந்தப் படகுகளை நவாப்பின் உத்தியோகஸ்தர்கள் பிடித்து வைத்திருக்கிறார்கள். அவற்றை விட்டுவிட வேண்டுமென்று ஆலி இப்ராஹிம் கான் அபிப்பிராயப்படுகிறார். அவற்றின் போக்கைத் தடுத்து இங்கிலீஷ்காரருடன் சண்டைபோடுவதில் என்ன பிரயோஜனம்? குர்க்கன் கானே—சண்டை நடக்கிறதானால் நடக்கட்டும், நான் மரக்கலங்களை விடமாட்டேன், என்கிறார்" என்றாள்.

"இந்த ஆயுதங்கள் எங்கே போகின்றன?"

"பாட்னாவிலுள்ள கிடங்குக்கு. யுத்தம் நடப்பதா யிருந்தால், அங்கேதான் முதலில் ஆரம்பிக்கவேணும். திடீரென்று அபாயம்

நேரிட்டால் அதைத் தடுக்கும்படி இங்கிலீஷ்காரர் ஆயுதங்களை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சங்கதி கோட்டைக்குள் பிரபலமாயிருக்கிறது."

"ஆனால் குர்க்கன்கான் ஏன் கப்பல்களைப் பிடித்துவைக்கவேண்டுமென்கிறான்?"

"அவர் சொல்லுங் காரணமாவது: இவ்வளவு ஆயுதங்களையும் அங்கே ஒன்று சேரும்படி விட்டால், பிறகு இங்கிலீஷ்காரரைத் தோற்கடிப்பது கஷ்டமாய்விடும். விரோதிகளின் பலம் அதிகமாகும்படி விடக்கூடாது—என்பதே. நாம் என்ன முயன்று செய்தாலும் இங்கிலீஷ்காரரைத் தோற்கடிக்க முடியாதென்று ஆலி இப்ரஹிம் கான் அபிப்பிராயப்படுகிறார். ஆகையால் நாம் யுத்தத்துக்குப் போகாமலிருப்பதே நல்லது. அப்படியிருக்க, ஏன் இந்த மரக்கலங்களைப் பிடித்து வைத்து வலுவில் யுத்தத்தை உண்டாக்கிக் கொள்ளவேணும்? அது என்னவோ மொத்தத்தில் வாஸ்தவம் தான். இங்கிலீஷ்காரர் கையிலிருந்து தப்பித்துக்கொள்ளும் மார்க்கம் இல்லை. நவாபு ஸிராஜுத்தௌலா காலத்தில் நடந்த கூத்து மறுபடியும் நடக்கும்போல் தோன்றுகிறது."

தலனி வெகுநேரம் சிந்தையில் ஆழ்ந்திருந்து கடைசியாகச்சொன்னாள்.—"குல்ஸம், நீ ஏதாவது அபாயமான ஸாஹஸக்காரியாய் ஏற்பட்டிருக்கிறையோ?"

"அதென்ன? நான் * ஹில்ஸா மச்சத்தைத் தின்னவேண்டிவருமோ, அல்லது குளிர்ந்த ஜலத்தில் முழுக வேண்டுமோ?"

"போடி, நான் தமாஷ் பண்ணவில்லை. இந்தச் சங்கதி நவாபின் காதுக்கு எட்டுமாகில் நம் இருவரையும் யானைக்காலின் கீழே தள்ளி மிதிக்க வைப்பார்கள்."

"இது அவர் காதுக்கு எட்டினல் தானே! ஏன், நான் எவ்வளவோ அத்தர், பன்னீர், பொன், வெள்ளி முதலியவை யெல்லாம் அடித்துக்கொண்டு போயிருக்கிறேன். போயிருந்தும் யாராலாவது அதைக் கண்டுபிடிக்க முடிந்ததா? மனிதன் முகத்தில் கண்கள் வெறும்

* 'ஹில்ஸா' என்னும் மச்சம் ஜீர்ணமாவது கஷ்டமாம்.

அலங்காரத்துக்காகவே வைக்கப்பட்டிருக்கிறது. அதைக் கொண்டு அவன் பார்க்க முடியாது. ஏன், மாதரின் மாயச்சூழ்ச்சியைப் புருஷன் எப்போதாவது கண்டுபிடித்த துண்டா? அப்படியிருந்தால், நான் அதைக் கண்டதேயில்லை.”

“சீபோ, நான் கோஜா காவலாளிகளைப் பற்றிப் பேசவில்லை. நவாப் மற்ற மனிதர்களைப்போலல்ல; அவருக்குத் தெரியாமல் எது இருக்க முடியும்?”

“ஆனால் என்னால் மறைக்க முடியாதது என்ன இருக்கிறது? நான் என்ன செய்ய வேண்டுமென்கிறீர்கள்?”

“குர்க்கன்கானுக்கு ஒரு கடிதம் கொண்டுபோக வேண்டும்.”

குல்ஸம் ஆச்சரியத்துடன் ஊமையைப்போல் பேசாதிருந்தாள்.

“அதற்கென்ன சொல்லுகிறாய்?” என்றாள் தலனி.

“கடிதம் யார் அனுப்புகிறது?”

“நான்தான்.”

“உங்களுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா என்ன?”

“அநேகமாய் அப்படித்தான்.”

இருவரும் சிறிது நேரம் மௌனமாய் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் பேசா மடைந்தைகளா யிருப்பதைக்கண்டு இரண்டு மயில்களும் அதனதன் இடத்தில் ஏறிக்கொண்டன. மைனாவானது அசந்தர்ப்பமாய் இரைந்தது. மற்ற பக்ஷிகள் தங்கள் தீனியைக் கொத்தத் தொடங்கின. சற்று நேரம் கழித்துக் குல்ஸம் சொல்லலானாள்: “அந்தக் காரியம் வெகு சாமான்னியம். ஒரு கோஜாவின் கையில் கொஞ்சம் ‘பத்தியம்’ தட்டினால் அவன் உடனே கடிதத்தைக் கொண்டு போவான். ஆனால் அது மிகவும் அபாயகரமானது நவாபுக்குத் தெரியவந்ததோ, நம் இருவருடைய பிராணனும் போய் விடும். ஆனபோதிலும் உங்கள் காரியம் உங்களுக்கு நன்றாய்த் தெரியும். நான் சாமான்னியவேலைக்காரி, கடிதத்தை என்னிடம் கொடுங்கள், அத்துடன் கொஞ்சம் காசும் கொடுங்கள்.”

பிறகு குல்ஸம் கடிதத்தை வாங்கிக்கொண்டு போய்விட்டாள். பகவான் இந்தக் கடிதத்தை நூலாகக்கொண்டு தலனியின் அதிர்ஷ்டத்தையும் சைவலினியின் அதிர்ஷ்டத்தையும் ஒன்றாகச் சேர்த்துத் தைத்துவிட்டார்.

இரண்டாவது அத்தியாயம்

குர்க்கன் கான்

தலனி கொடுத்த கடிதத்தின் விலாசதாரன் குர்க்கன் கான்.

அந்தச் சமயத்தில் பங்காளத்தில் வேலையாயிருந்த சர்க்கார் உத்தியோகஸ்த ரெல்லாரிலும் குர்க்கன் கான் என்பவனே மேலானவனும் சிறப்புற்றவனுயு மிருந்தவன். ஜாதியில் அவன் ஆர்மீனியன். அவன் பிறந்த வூர் இஸ்பஹான். அவன் ஆதியில் ஜவுளி வியாபாரியா யிருந்தானென்று ஒரு வதந்தியுண்டு. ஆனால் அவன் மஹா புத்திசாலி, அபூர்வ சக்தி சாமர்த்திய முள்ளவன். அவன் வேலைக்கு வந்த சொற்பகாலத்துக்குள் பிரதான சேனாதிபதியின் அந்தஸ்துக்கு வந்துவிட்டான். அது மாத்திரமன்று, அவன் சேனாதிபதி ஸ்தானத்துக்கு வந்ததும் வெகு சீக்கிரத்தில் ஒரு பீரங்கிப் பட்டாளம் ஏற்படுத்தி அதை ஐரோப்பிய முறைப்படி பழக்குவித்து யுத்தத்துக்குத் தயாராக வைத்திருந்தான். அவன் சொந்தமாய்ச் செய்த துப்பாக்கிகளும், பீரங்கிகளும் ஐரோப்பாவில் செய்யப்பட்டவைகளைவிட மேலானவையா யிருந்தன. அவனுடைய பீரங்கிப்படையானது சர்வவிதத்திலும் ஐரோப்பிய 'சோல்ஜர்'களுக்குச் சரிசமானமாய் விட்டது. மீர்காசிம் கூட குர்க்கன் கானுடைய சகாயத்தைக்கொண்டு இங்கிலீஷ்காரரை வென்று விடலாம் என்று ஆசை கொண்டிருந்தான். குர்க்கன் கான், மேல் அந்தஸ்துக்கு வர வர, அவனுடைய செல்வாக்கும் அதிகரித்தது. அவனுடைய ஆலோசனை யில்லாமல் மீர்காசிம் எந்தக் காரியத்திலும் பிரவேசிப்பதில்லை. அவன் ஆலோசனைக்கு விரோதமாய் யார் என்ன சொன்னாலும் கேட்கமாட்டான். அதிகமாய்ச் சொல்வானேன்,—குர்க்கான் தானே ஒரு சின்ன நவாபாய் விட்டான். இது முஹம்மதிய உத்தியோகஸ்தர்களுக்குப் பொறாமையை உண்டாக்கி விட்டது.

நடு நிசி; ஆனால் குர்க்கன் கான் இன்னும் படுத்துக்கொள்ளவில்லை. தனிமையாய் விளக்கின் வெளிச்சத்தில் சில கடிதங்களைப்

படித்துக்கொண்டிருந்தான். அவை கல்கத்தாவிலுள்ள ஆர்மினியரிடத்திலிருந்துவந்தவை. அவன் கடிதங்களைப்படித்து முடித்துவிட்டுச் சேவகனைக் கூப்பிட்டான். ஒரு சோப்தார் வந்து நின்றான். குர்க்கன் கான் அவனைப் பார்த்துக் "கதவுகளையெல்லாம் திறந்து வைத்திருக்கிறாயா ?" என்றான்.

"அச்சா, வைத்திருக்கிறேன்." என்றான் சோப்தார்.

"யாராவது என்னைப் பார்க்க வேண்டுமென்று வந்தால், அவரை ஒருவரும் தடுக்கவாவது, அல்லது, நீ யாரென்று கேட்கவாவது, கூடாது. இதையெல்லாம் சேவகர்களுக்குச் சொல்லியிருக்கிறாயா?"

"மெஹர்பான், ஹுக்கும்படியே செய்திருக்கிறேன்."

"பஹுத் அச்சா, நீ போகலாம்."

சோப்தார் போனவுடனே குர்க்கன் கான் கடிதங்களைக் கட்டிச் சரியான விடத்தில் மறைத்து வைத்தான். பிறகு அவன் பின்வருமாறு யோசிக்கலாயினன். "இப்போது எந்த வழியை அநுசரிக்கலாம். இந்த இந்துஸ்தான தேசமானது இப்போது ஒரு சமுத்திரம் போலிருக்கிறது. இதில் யார் எவ்வளவுதூரம் முழுகுகிறார்களோ அவர்கள் அவ்வளவு ரத்னங்களைப் பொறுக்கி எடுக்கலாம். கரையிலிருந்து கொண்டே அலைகள் எத்தனையென்று எண்ணுவதில் என்ன பிரயோஜனம்? இதற்கு என் சங்கதியையே எடுத்துக்கொள்வோம். முதலில் நான் கஜக்கோலால் துணியை அளந்து விற்றுக்கொண்டிருந்தேன். இப்போதோ பதகண்டம் முழுமையும் என் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் நடுங்குகிறது. நானே பங்காளத்துக்குக் கர்த்தா. வாஸ்தவத்தில் நான்தான் பங்காளத்துக்குக் கர்த்தா. நானில்லாவிடில் வேறே யார்? கர்த்தா இங்கிலீஷ்வியாபாரிகள். அவர்களுக்குக் குலாம் மீர்காசிம். நான் மீர்காசிமின் குலாம். ஆகவே நான் கர்த்தாவின் குலாமுக்குக் குலாம். திவ்யமான அந்தஸ்துதான்! நான் ஏன் பங்காளத்துக்குக் கர்த்தாவாயிருக்கக்கூடாது என் பீரங்கிகளுக்குமுன் யார் நிற்பார்கள்? இங்கிலீஷ்காரர் ஒரு தட்வை அவர்கள் என் கையில் அகப்பட்டுக்கொள்ளட்டும்! ஆனால் அவர்களை இந்த நாட்டிலிருந்து ஒழித்தாலன்றி நான் கர்த்தாவாய்

முடியாது. நான் பங்காளத்துக்கு அதிபதியாக வேண்டுமென்றிருக்கிறது. மீர்காசிமைப்பற்றி எனக்கு யோசனையில்லை. என்றைக்கிஷ்டமோ அன்றைக்கு நான் அவனைச் சிங்காசனத்திலிருந்து தள்ளிவிடுவேன். நான் உந்நதஸ்தானம் ஏறுவதற்கு அவன் கேவலம் ஏணி போன்றவன். இப்போது நான் மேல்மாடியில் ஏறிவிட்டபடியால் அவ்வேணியைக் கஷ்டமின்றி உதைத்துத் தள்ளிவிடலாம். இந்த வழியில்முள்ளாயிருப்பவர் துஷ்டப்பையல்களாகிய இங்கிலீஷ்காரரே. அவர்கள் என்னைத் தம் கைக்குள் அடக்கிவைக்கப் பார்க்கிறார்கள். நான் அவர்களை என் கைக்குள் அடக்கிவைக்கப் பார்க்கிறேன். அவர்களோ என் கைக்குள் எப்போதும் அகப்படமாட்டார்கள். ஆகையால் நான் அவர்களைத் துரத்திவிடவேண்டும். தற்காலத்துக்கு மீர்காசிம் சிங்காதனத்தில் இருந்துவரட்டும். அவனுடன் சேர்ந்துகொண்டு நான் பிரிட்டிஷ்நாமத்தைப் பங்காளத்திலிருந்துஒழிக்க வழிதேடுவேன். அந்த எண்ணத்துடன்தான் இந்த யுத்தம் மூளும்படியாகச் சூழ்ச்சி செய்துகொண்டிருக்கிறேன். இவையெல்லாம் முடிந்ததும், மீர்காசிமுக்குச் சலாம் செய்துவிடுவேன். இதுதான் சரியான வழி. ஆனால் இன்றைக்கேன் இவ்வளவு எதிர்பாராத விதமாய் இந்தக் கடிதம் வருகிறது? இந்தப் பெண் என்இப்பேர்ப்பட்ட ஆபத்துக்கிடமான சாஹஸகாரியத்தில் தலையிட்டுக்கொண்டாள்?"

என்றிவ்வாறு யாரைப்பற்றி நினைத்துக்கொண்டிருந்தானே, அவளே அந்த ஸமயத்துக்குச் சரியாக அவன் முன் வந்து நின்றாள். அவள் தலனிபேகம்.

குர்க்கன் கான்.—இத்தனை நாள் கழித்து உன்னைப் பார்த்ததில் எனக்கு நிரம்ப ஸந்தோஷம். நீ நவாப்பின் அந்தப்புரத்தில் போய்ச் சேர்ந்த பிற்பாடு உன்னைப் பார்க்கும் பாக்கியமே எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் நீ யேன் இந்தப் பைத்தியக்காரத்தனமான சாஹஸத்தில் தலையிட்டுக்கொண்டாய்?

தலனி.—எப்படிப் பைத்தியக்காரத்தனம்?

ர்க்கன்.—நவாப்பின் பேகமாகிய நீ ராத்திரி காலத்தில் ரஹஸ்யமாய் என்னிருப்பிடத்திற்குக் கள்ளத்தனமாய் வந்திருக்கிறாய். நவாப்

புக்கு இது தெரியவருமானல் என்னையும் உன்னையும் இருவரையு மன்ரே கொன்றுவிடுவார்.

தலனி.—அப்படி அவருக்குத் தெரியவருமாகில், அப்பொழுது உனக்கும் எனக்குமுள்ள உறவை அவருக்குத் தெரிவித்து விடுகிறேன். அதற்கப்புறம் அதிர்ப்தி கொள்வதற்கு வேறே காரணம் இல்லையே.

குர்க்கன்.—நீ சிறுபெண், ஆகையால் இப்படி நம்புகிருய். இது வரையில் நமக்குள்ள இந்த உறவை நாம் ஒருவருக்கும் வெளியிட வில்லை. என்னை உனக்குத் தெரியுமென்ருவது, உன்னை யெனக்குத் தெரியுமென்ருவது, இதுவரையில் நம்மில் ஒருவரும் வெளியிட்டோ மில்லை. அப்படியிருக்க ஆபத்துக்காலத்தில் அதை நாம் வெளியிடு வோமாகில் அதை யார் நம்புவார்? தப்பித்துக்கொள்வதற்கு இது ஒரு தந்திரமென்றே சொல்வார்கள். நீ இங்கே வந்தது சரியன்று.

தலனி.—அது நவாபுக்கு எப்படித் தெரியப்போகிறது? பாராக் காரர்களெல்லாம் என் கையின் கீழ் இருக்கிருர்கள். அவர்கள் உன் னுடைய அடையாளத்தைப் பார்த்தவுடனே என்னை விட்டுவிட்டார் கள். நான் ஒரே ஒரு பேச்சுதான் கேட்க வந்திருக்கிறேன். இங்கி லீஷ்காரருடன் யுத்தம் நடக்கப்போகிறது வாஸ்தவம்தானு?

குர்க்கன்.—கோட்டைக்குள் அதைப்பற்றிப் பேச நீ கேட்க வில்லையோ?

தலனி.—ஆமாம், கேட்டேன். இங்கிலீஷ்காரருடன் யுத்தம் எப் படியும் நடந்தே தீருமென்றும் அதற்கு மூலகாரணம் நீயே என்றும் சொல்லிக்கொள்ளுகிருர்கள். ஏன் அப்படி?

குர்க்கன்.—நீ கேவலம் சிறு பெண், அது எப்படி உனக்குத் தெரியப்போகிறது?

தலனி.—நான் சிறு பெண்ணைப்போலவா பேசுகிறேன்? அல் லது சிறு பெண்ணைப்போலவா நடந்துகொள்ளுகிறேன்? நீயே என்னை உன்னுடைய ஸ்வயகார்ய விர்த்தியின் பொருட்டு நவாபின் அந் தப்புரத்தில் வைத்திருக்க, இப்போது என்னைச் சிறுபெண் என்று அலக்ஷியம் செய்வதில் என்ன பிரயோஜனம்?

குர்க்கன்.—யுத்தம் நடக்கட்டுமே. இங்கிலீஷ்காரருடன் நடக்கப் போகும் இந்த யுத்தத்தால் உனக்காவது எனக்காவது என்ன நஷ்டம்? யுத்தம் நடக்கவேண்டியதானுல் நடக்கட்டுமே.

தலனி.—ஜயம் உண்டாகுமென்று நம்புகிருயோ?

குர்க்கன்.—அநேகமாய் நமக்கு ஜயம் நிச்சயமே.

தலனி.—இந்த க்ஷணம்வரையில் இங்கிலீஷ்காரரை யாராவது தோற்கடித்திருக்கிருர்களா?

குர்க்கன்.—எத்தனை குர்க்கன் கான்களோடு அவர்கள் சண்டைப் போட்டிருக்கிருர்கள்?

தலனி.—சிராஜுத்தெளலாவும் அப்படித்தான் நினைத்தான். அது எப்படியாவது போகட்டும். நானே ஸ்திரீ. என் மனத்தில் எப்படித் தோன்றுகிறதோ அப்படி நம்புகிறேன். இங்கிலீஷ்காரருடன் சண்டை தொடுத்தால் நமக்கு ஒருபோதும் ஜயம் உண்டாகாதென்றே என் மனதில் தோன்றுகிறது. இந்த யுத்தம் நம்மையே அழித்துவிடும். ஆகையால் தான்—இந்த யுத்தத்தை ஆரம்பிக்கும்படி சொல்ல வேண்டாம்—என்று உன்னை வேண்டிக்கொள்ள வந்தேன்.

குர்க்கன்.—இப்படிப்பட்ட காரியங்களில் மாதர்களின் யோசனையைக் கேட்கக்கூடாது.

தலனி.—"ஐயோ, நான் சொல்வதைக் கேளேன். என்னைக் காப்பாற்று. நான் நாலா பக்கத்திலும் இருள் சூழ்ந்திருக்கவே காண்கிறேன்." என்று சொல்லித் தலனி அழத்தொடங்கினுள்.

குர்க்கன் கான் அதைக்கண்டு ஆச்சரியமடைந்து "என் அழுகிருய். மீர்காசிமுக்குச் சிங்காதனம் போய்விட்டாலும் நான் உன்னை நம் சொந்ததேசத்துக்கு அழைத்துக்கொண்டு போவேன்." என்ருன்.

தலனிக்குக் கோபத்தால் கண்களில் தீப்பொறி பறந்தது. அவள் கோபாவேசத்துடன் "மீர்காசிம் என் புருஷன் என்பதை நீ மறந்துவிட்டையோ?" என்று கத்தினுள்.

குர்க்கன் கான் சிறிது ஆச்சரியமும் மனக்கலக்கமுமடைந்து சொல்லலானுன்: "இல்லை, நான் மறந்து போகவில்லை. ஆனுல்

எல்லாருக்கும் புருஷன் எப்போதும் ஜீவித்திருப்பதில்லையே. முதல் புருஷனுக்குப் பிற்பாடு, இரண்டாம் புருஷன் ஏற்படலாமல்லவா? நீ என்றைக்காவது ஒரு நாள் இந்தப் பரதகண்டத்தில் இன்னொரு *நூர்ஜிஹானாயிருப்பாய்" என்று நான்நிரம்ப ஆசைவைத்திருக்கிறேன்.

தலனி கோபாவேசத்தால் பதபதைத்துக்கொண்டு எழுந்து நின்று நெஞ்சில் வந்தடைக்குங் கண்ணீரை அடக்கிக்கொண்டு கண்களைப் பயங்கரமாய் விழித்துப்பார்த்து, தேகம் நடுநடுங்க, வாயைத் திறந்து பின்வருமாறு ஆரம்பித்தாள்.

"அட நீ பாழாய்ப்போக! அசுபகாலத்தில் நான் உனக்குத் தங்கையாய்ப் பிறந்தேன். அசுபகாலத்தில் நான் உனக்குச் சகாயம் செய்வதாய் பிரதிஞ்ஞை பண்ணினேன். மாதர்களுக்கும் ஸ்நேஹம் தயை தர்மம் உண்டென்பது உன் மண்டையில் ஏறவேயில்லை. நீ இந்த யுத்தத்தைத் தூண்டாமல் விட்டுவிட்டால் க்ஷேமமுண்டு; இல்லாவிட்டால் இன்று முதல் உன்னுடன் எனக்குச் சம்பந்தம் அற்றுப் போய்விட்டது. சம்பந்தம் அற்றுப்போவது மாத்திரமில்லை. இன்று முதல் உன்னை என் விரோதியெனக் கருதுவேன். உன்னை என் பரம சத்துருவெனக் கருதுவேன். நீயும் என்னை உன் பரம சத்துருவென்றே கருதக்கடவாய். உயிர் போமளவும் நான் அந்தப்புரத்தில் உனக்குத் தீர்க்க விரோதியாயிருப்பேன்."

இவ்வாறு சொல்லிக்கொண்டே தலனி அவ்விடத்திலிருந்து வேகமாய் எழுந்து போய்விட்டாள்.

தலனி போய்விட்ட பிறகு குர்க்கன் கான் யோசிக்கலானான்.

தலனி இனித் தன்னுடையவள் அல்லவென்றும் அவள் மீர்காசிமுக்கே உரியவள் என்றும் அவன் அறிந்தான். அவளுக்கு அவனிடத்தில் சகோதர வாஞ்சையிருக்கலாமேயன்றி, மீர்காசிமிடத்தில் அவள் வைத்திருந்த காதல் அந்தச் சகோதர வாஞ்சையையும் மிஞ்சி நின்றது.

---

* நூர்ஜிஹான் (ஜகஜ்ஜோதி) என்பவளின் முதற் புருஷனை ஜிஹான்கீர் என்ற மொகலாய சக்கரவர்த்தி கொன்று அவளைத் தான் மணஞ்செய்து கொண்டான்.

தன் சகோதரன் தன் புருஷனது க்ஷேமத்தைக் கோறுகிறவ னல்லனென்று அவளுக்குத் தெரிந்திருந்தாலும் அல்லது இனித் தெரியவந்தாலும், அவள் தன் புருஷனுடைய க்ஷேமத்துக்காகச் சகோ தரனுக்குத் தீங்கிழைத்தாலும் இழைக்கலாம். ஆகையால் அவளைக் கோட்டைக்குள் மறுபடியும் பிரவேசிக்கும்படிவிடக்கூடாது. இவ்வாறு தீர்மானம் செய்துகொண்டு குர்க்கன் கான் சேவகனைக் கூப்பிட்டான்.

ஆயுதபாணியான சேவகன் ஒருவன் வந்து நின்றான். குர்க்கன் கான் அவன் மூலமாய், பாராக்காரர்கள் ஒருவரும் தலனியைக் கோட் டைக்குள் செல்லவிடக் கூடாதென்று கட்டளை அனுப்பினான்.

அந்தச் சேவகன் குதிரையின்மேல் ஏறிக்கொண்டு முன்னதாகத் துர்க்கத்தின் வாயிலைப்போய்ச் சேர்ந்தான். தலனி பின்னால் வந்தாள். அவளை உட்செல்ல விடக்கூடாதென்று உத்திரவாயிருப்பதாகத் தெரி விக்கப்பட்டது.

இதைக்கேட்டதும் அவள் அறுந்து விழுந்த பூங்கொடிபோல் தரையில் விழுந்தாள். அவள் கண்களினின்று நீர் தாரை தாரை யாய்ப் பெருகியது. அவள் தலைமேல் கையை வைத்துக்கொண்டு "ஐயோ, அடா என்தம்பி! என்னை நிர்க்கதியாய்ப் பண்ணிவிட்டா யோடா!" என்று புலம்பினாள்.

குல்ஸம்.—திரும்பவும் நாம் பிரதான சேனாதிபதி வீட்டுக்கே போகலாம் வாருங்கள்.

தலனி.—உனக்கிஷ்டமிருந்தால் நீ போகலாம். கங்கை யலை களின் மத்தியில் நான் குதித்துவிடுகிறேன்.

அந்த இருண்ட நிசியில் தலனி ராஜமார்க்கத்தில் நின்றுகொண்டு அழுதாள்; தலைக்குநேரே நக்ஷத்திரங்கள் பளிச்சுப்பளிச்சென்று பிர காசித்துக்கொண்டிருந்தன. புதிதாய்ப் பூத்த பூக்களின் சுகந்தம் மரங் களினின்று தவழ்ந்து வந்தது. மந்தமாய் வீசும் மாருதப் பிரவாஹத்தில் இருள்மூடிய இலைகள் சலசலவென்று சப்தித்தன. தலனி அழுது கொண்டே 'குல்ஸம்' என்று மெல்ல அழைத்தாள்.

மூன்றாவது அத்தியாயம்

தலனி என்னவானாள்?

ஒரே ஒரு வேலைக்காரியின் துணையைத் தவிர வேறு சகாயமின்றி, அந்த நிசிவேளையிலே இராஜமஹிஷி பகிரங்கமான இராஜமார்க்கத்தில் நின்று அழுதுகொண்டிருந்தாள்.

அப்போது குல்ஸம் "இப்போ என்ன செய்வீர்கள்" என்று கேட்க, தலனி கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "இப்படி வா அதோ இருக்கும் மரத்தண்டை போய் நிற்போம். உதயமாகட்டும்" என்றாள்.

குல்ஸம்.—உதயமாகும் வரையில் நாம் இங்கே இருந்தால், நாம் அகப்பட்டுக்கொள்வது நிச்சயம்.

தலனி.—அதில் என்ன பயம். நான் அப்படிப் பயப்படும்படி என்ன குற்றம் செய்தேன்?

குல்ஸம்.—நாம் திருடரைப்போல் ஊரைவிட்டு வந்திருக்கிறோம். அப்படி வந்ததற்குக் காரணம் உங்களுக்கல்லவோ நன்றாய்த் தெரியும். ஆனால் ஜனங்களும், நவாபுங்கூட அதைப்பற்றி என்ன நினைப்பார்கள்? யோசித்துப் பாருங்கள்.

தலனி.—நவாப் என்ன வேணுமானாலும் நினைத்துக்கொள்ளட்டும். ஈசுவரன்தான் எனக்கு நியாயாதிபதி, மற்றவர் நியாய விசாரமெல்லாம் எனக்கு அவசியமில்லை. அப்படியில்லாவிட்டால், நான் சாகும்படி தானே வரப்போகிறது? அதில் என்ன கெடுதல்?

குல்ஸம்.—ஆனால் இங்கே நிற்பதால் என்ன காரியம் ஆகப் போகிறது?

தலனி.—நான் அகப்பட்டுக் கொள்வேனோ இல்லையோ? அதற்காகத்தான் இங்கே நிற்கவேண்டுமென்கிறேன். என்னைப் பிடித்துக்கொண்டு போகவேண்டுமென்பதே என் கோரிக்கை. என்னைப் பிடிப்பவன் எங்கே கொண்டுபோவான்?

குல்ஸம்.—வேறெங்கே? நவாப் சமுகத்துக்குத்தான் இருக்கும்.

தலனி.—என் எஜமானரிடத்திலா? அந்த இடத்துக்குத் தானே நான் போகவேண்டுமென்கிறேன். வேறே போகவேண்டிய இடம் எனக்கு எங்கும் இல்லை; அவர் எனக்கு மரணதண்டனை விதித்தாலும், அப்போதும் என் பிராணனை விடும்போது, நான் நிரபராதி என்று சொல்லிக்கொண்டே சாவேன். இனிக் கோட்டை வாசலில் போய் அங்கே உட்கார்ந்திருப்பதே நல்லது. அங்கே நம்மை இன்னும் சீக்கிரமாய்ப் பிடித்துக்கொள்வார்கள்.

அதே சமயத்தில், ஒரு உயரமான மனித உருவம் கங்காநதிப் பக்கமாய் இருட்டில் அசைந்து வருவதை அவ்விருவரும் கண்டு பயந்து ஒரு மரத்தினடியில் போய் அங்கே இருளில் மறைந்திருந்தார்கள் மறுபடியும் அந்த மனிதன் தன் வழியைவிட்டுத் திரும்பி இவர்கள் மறைந்திருந்த விருக்ஷத்தை நோக்கி வருவதைக்கண்டு அச்சங் கொண்டு, அவ்விருவரும் இன்னும் இருள் அடர்ந்திருக்கும் இடத்தில் போய் மறைந்தார்கள்.

அந்த மனிதனும் அவர்கள் சென்ற இடத்திற்கே வந்தான். வந்து "இங்கே யார் நிற்பது?" என்றான். உடனே அவன் "இந்த நிசிவேளையில் என்னைப் போலவே விழித்துக்கொண்டிருக்கும் இந்த நிர்ப்பாக்கிய பிராணி யாராயிருக்கலாம்?" என்று தனக்குத்தானே ஈன சுவரமாய்ச் சொல்லிக்கொண்டார் போலிருந்தது.

அந்த மனிதனது உயரமான உருவம் முதலில் அந்த மாதர்களின் மனத்தில் பயத்தை உண்டாக்கிய தென்றாலும், அவனது குரலின் தொனி அவர்களுக்குத் தைரியமளித்தது. அது அதிமதுரமாயும் இரக்கமும் துயரமும் தோய்ந்ததாயும் இருந்தது.

குல்ஸம்.—நாங்கள் பெண்டுகள். தாங்கள் யார்?

புருஷன்.—'நாங்களா!' நீங்கள் எத்தனை பேர்?

குல்ஸம்.—நாங்கள் இரண்டு பேர்தான்.

புருஷன்.—இராத்திரிகாலத்தில் இந்த வேளையில் நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்?

அப்பொழுது தலனி.—நாங்கள் நிர்ப்பாக்கிய ஸ்திரீகள். எங்கள்

துக்கச்செய்கையைக் கேட்பதால் உங்களுக்கு என்ன பிரயோஜனம்

புருஷன்.—கேவலம் அப்பிரயோஜகனுல் கூட சில சமயங்களில் உபகாரம் உண்டாகும். உங்களுக்குக் கஷ்டம் எதாவதிருந்தால் என்னு லான உபகாரம் செய்ய சித்தமாயிருக்கிறேன்.

தலனி.—எங்களுக்கு உபகாரம் செய்வது அநேகமாய் அசாத்திய மான சங்கதி. தாங்கள் யார்?

புருஷன்.—நான் ஒரு அப்ரயோஜகன், கேவலம் எழை பிராம ணன், சந்நியாசி.

தலனி.—தாங்கள் யாராயிருந்தாலும் தங்கள் பேச்சைக் கேட் டால் நம்பலாம் என்று எண்ணம் உண்டாகிறது. ஜலத்தில் விழுந்து முழுகிப் போகிறவனுக்கு ஆதாரம் கிடைத்தால் அவன் அதன் பலா பலத்தை அப்போது யோசிப்பானு? எங்கள் துக்க விருத்தாந்தத்தை உங்களுக்குக் கேட்கவேண்டுமென்றிருந்தால், இந்த ராஜ மார்க்கத்தை விட்டு ஒரு பக்கமாய் வாருங்கள்; இராத்திரி வேளையில் யார் எங்கே இருந்து ஒட்டுக்கேட்பார்களோ சொல்ல முடியாது. எங்கள் சங்கதி யை இப்படி பஹிரங்கமாய்ப் பேசக்கூடாது" என்று சொல்ல, சந்நி யாஸி 'அப்படியானுல் என் பின்னே வாருங்கள்' என்றார்.

அவர் அவ்விரு மாதர்களையும் தம்முடன் அழைத்துக்கொண்டு, பட்டணத்திற்குள் சென்று ஒரு சிறிய வீட்டுக்கெதிரில் போய், கதவைத்தட்டி 'ராமசரணு' என்றழைத்தார். ராமசரணன் உடனே வந்து கதவைத்திறக்க, சந்நியாஸி அவனை விளக்கேற்றச் சொன்னுர்.

விளக்கை யேற்றியதும் ராமசரணன் சந்நியாஸியின் பாதங்களில் சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கினுன் சந்நியாஸி அவனை யெழுப்பி "இனி நீ போய்த் தூங்கலாம்" என்று சொல்லி அனுப்பிவிட்டார். ராமசரணன் தலனியையும் குல்ஸம் என்பவளையும் ஒரு பார்வை பார்த்துவிட்டுப் போனுன். அதற்கப்புறம் அந்த ராத்திரி அவனுக்குத் தூக்கமே வரவில்லையென்று நாம் சொல்லவேண்டியது அநாவசியம். இராத்திரி அத்தனை நேரங்கழித்து இந்த இரண்டு ஸ்திரீகளையும் சந்நி யாஸி என் அழைத்துக்கொண்டு வந்தார் என்பதே அவன் மனத்தைக் குடையத் தொடங்கியது. அவன் அந்தச் சந்நியாஸியைத் தெய்வ

மெனக் கருதியிருந்தான். அவர் இந்திரிய நிக்கிரஹம் செய்தவரென்றும் அவனுக்குத் தெரியும். அந்த நம்பிக்கைக்கு இதுவரையும் யாதொரு சலனமும் உண்டாகவில்லை. அவன் யோசித்து யோசித்துக் கடைசியில் இவ்வாறு தீர்மானித்தான். “இந்த இரண்டு பெண்டுகளும் ஒரு வேளை சமீபத்தில் கைம்பெண்களாய்ப் போயிருக்கலாம். அவர்களை உடன்கட்டை யேறும்படி உபதேசத்தால் தூண்டுவதற்காக இங்கே அழைத்து வந்திருப்பார். அட இழவே, இந்த அற்ப சங்கதி எனக்கு இத்தனைநேரம் விளங்காமலிருந்ததே” என்று தீர்மானித்தான். சந்நியாஸி நாற்சதுரமான ஒரு கம்பளி ஆசனத்தில் உட்கார, ஸ்திரீகள் தரையில் உட்கார்ந்தார்கள். முதலில் தலனி தன் வரலாற்றை எடுத்துச் சொல்லிப் பிறகு அன்றிரவு நடந்த சங்கதிகளை யெல்லாம் ஒன்று கூட விடாமல் கூச்சமின்றிச் சொன்னாள்.

அவள் சொன்னதைக் கேட்டுச் சந்நியாஸியானவர் தமக்குள்ளேயே “நடக்கவேண்டியதை நிறுத்த யாராலாகும்? விதிப்படி நேர்ந்தேயாகவேணும். என்றாலும் ஒருவரும் புருஷகாரத்தை (மனிதப் பிரயத்தினத்தை) அலக்ஷியம் செய்யக்கூடாது. நான் என் கடமையைச் செய்ய வேண்டும்” என்று சொல்லிக்கொண்டார்.

ஐயோ சந்நியாஸியே! நீ என் உன் கிரந்தங்களை எரித்தாய்? சகல கிரந்தங்களையும் எரித்து நீறாக்கி விடலாம். ஆனால் ஹிருதய கிரந்தத்தை மாத்திரம் அப்படி ஒருபோதும் நீறாக்க முடியாதே.

அவர் தலனியைப் பார்த்து “நான் சொல்லும் புத்திமதி யென்னவென்றால், நீ திடீரென்று நவாபின் சமுகத்தில் போய் நின்று விடக்கூடாது. முதலாவது நீ அவருக்கு எல்லா விவரங்களையும் கடிதமூலமாய்த் தெரிவிக்கவேணும். உன்னிடத்தில் அவருக்கு அன்பிருக்கும் பட்சத்தில் நீ சொல்லியிருக்கும் சங்கதிகளை அவர் நம்புவது நிச்சயம் பிறகு அவருடைய அனுமதி பெற்றுக்கொண்டு, நீ அவர் சமுகம் போகலாம்” என்றார்.

தலனி: கடிதத்தை எடுத்துக்கொண்டு போவார் யார்?

சந்: நான் அனுப்பி வைக்கிறேன்.

அதன்மேல் தலனி கடிதாசியும் இறகும் கொண்டுவரச் சொல்ல,

சந்நியாஸி ராமசரணனை மறுபடியும் எழுப்பினர். அவன் எழுந்து கடிதாசியும் இறகும் மற்ற எழுதுங் கருவிகளும் கொணர்ந்துவைக்க தலனி எழுதத் தொடங்கினள்.

அப்பொழுது சந்நியாஸி பேசத்தொடங்கி, "இந்த வீடு என்னுடையதன்று, ஆனல் நவாபின் உத்திரவு தெரிகிறவரையில் நீங்கள் இங்கே இருக்கலாம். நீங்கள் இருப்பது ஒருவருக்கும் தெரியவராது, ஒருவரும் கேட்கவுமாட்டார்கள்" என்ருர்.

அப்பொழுது இருந்த சந்தர்ப்பம் அவர்களை அதற்கு இணங்கும்படிச் செய்தது. கடிதம் எழுதி முடிந்ததும், தலனி அதைச் சந்நியாஸியினிடம் கொடுத்தாள். அவர் அந்த ஸ்திரீகளை ஜாக்கிரதையாய் விசாரித்துப் பார்த்துக்கொள்ளும்படி ராமசரணனுக்குத் திட்டம் செய்துவிட்டுத் தாம் கடிதத்தை யெடுத்துக்கொண்டு சென்ருர்.

மாங்கீர் பட்டணத்திலுள்ள சகல ஹிந்து மஹம்மதிய உத்தியோகஸ்தர்களுக்கும் அவர் நன்ருய்த் தெரியும். அவர்களனைவரும் அவரைக் கௌரவித்து வந்தார்கள்.

முன்ஷி உத்தியோகத்திலிருந்த ராமகோவிந்த ராயர் அவரிடத்தில் விசேஷ பக்தி சிரத்தையுள்ளவர். உதயமானதும் சந்நியாஸி கோட்டைக்குள் சென்று ராமகோவிந்தரைப் பார்த்துத், தலனியின் கடிதத்தை அவரிடம் கொடுத்து, 'தயவுசெய்து என் பெயரைப் பிரஸ்தாபிக்காமலிருக்கவேணும். யாரோ ஒரு பிராமணன் கொண்டுவந்தான் என்று சொல்லிவிடும்" என்று எச்சரித்துவிட்டுத் திரும்பினர்.

அதை வாங்கிக்கொண்டு முன்ஷி ராயர், "இதற்குப் பதில் தெரிந்துகொண்டு போவதற்காக நாளைக்குத் தயவுசெய்து வாருங்கள்" என்ருர்.

முன்ஷி ராயருக்கு அது இன்னருடைய கடிதமென்று தெரியாது. அதன் பிறகு சந்நியாஸி வீட்டுக்குத் திரும்பிவந்து, தலனியைப்பார்த்து "நாளைக்குப் பதில் வரும் இன்றைக்கு எப்படியாவது ஒருநாள் பல்லைக் கடித்துக்கொண்டிரு" என்ருர்.

பொழுது விடிந்ததும், ராமசரணன் வந்து பார்க்கையில், ஸ்திரீகள் உடன்கட்டை யேறுவதற்கு யாதொரு பிரயத்தனமுங் காணும்.

அவ்வீட்டின் மேல்மாடியில் இன்னொரு புருஷன் தூங்கிக் கொண்டிருந்தான். அவனைப்பற்றிச் சில சங்கதிகள் இங்கே சொல்ல வேண்டியது அவசியமாயிருக்கிறது. சைவலினியின் பாவச்செயல்களை எழுதுவதால் களங்கமுற்றிருக்கும் இந்த என் இறகும் அவனது குணவர்ணனத்தினாலாயினும் புனிதமாகுமென்று நம்புகிறேன்.

நான்காவது அத்தியாயம்

பிரதாபன்

பொறுக்க முடியாத கோபாவேசத்துடன் சுந்தரி சைவலினியின் கப்பலை விட்டுவந்தாள் என்று முன்சொல்லி யிருக்கிறோமல்லவா? அவள் தன் புருஷனுடனே வீடுபோய்ச் சேரும்வரையில் வழி முழுவதும் சைவலினியை வாயார வைதுகொண்டே போனாள். அவள் சைவலினியை, 'மானங்கெட்ட மூதேவி' யென்றும், 'துரதிர்ஷ்டம் பிடித்த தோஷி' யென்றும், 'எரிமூஞ்சி அநாதை' யென்றும், 'அடி உன் தலையில் நெருப்பை வாரிக்கொட்ட' என்றும் இப்படிப்பட்ட இன்னும் அநேக சிங்காரமான பொறுக்கியெடுத்த வசனங்களால் ஆசீர்வதித்துக்கொண்டு போனது அவள் புருஷனுக்கு வேடிக்கையா யிருந்தது. அவள் வீடுவந்து சேர்ந்து வெகுநேரம் வரையில் அழுதாள். பிறகு சந்திரசேகரனும் வந்து ஊரைவிட்டுப் போய்விட்டான். அதற்கப்புறம் அவ்வூரில் சிலநாள் வரையில் ஒன்றுமில்லாமலிருந்தது. சைவலினியைப் பற்றியாவது சந்திரசேகரனைப் பற்றியாவது யாதொரு சமாசாரமும் தெரியவில்லை. அதன்மேல் சுந்தரி ஒருநாள் டக்கா சேலையை உடுத்திக்கொண்டு நகைகளைப் போட்டுக்கொள்ள ஆரம்பித்தாள்.

சுந்தரி யென்பவள் சந்திரசேகரனது அயலகத்தார் மகளென்றும், அவனுக்குத் தங்கை முறையாகவேண்டுமென்றும் முன்சொல்லி யிருக்கிறோம். அவள் பிதா பரமதரித்திரரன்று, அவள் சாதாரணமாய்த் தகப்பனாகத்திலேயே இருந்துவந்தாள். அவளது புருஷனாகிய ஸ்ரீநாதன் கேவலம் வீட்டுமாப்பிள்ளையாய் இல்லாமலிருந்தா

லும், சில சமயங்களில் மாமனூர் வீட்டில் வந்து வெகுநாள் இருப்பது வழக்கம். சைவலிநியின் துக்க சம்பவம் நடந்த சமயத்தில் ஸ்ரீநாதன் வேதக்கிராமத்திலேயே இருந்தானென்றும் சொல்லி யிருக்கிறோம். சுந்தரியின் தாயார் தீராத வியாதிக்கிரஸ்தையா யிருந்தமையால், சுந்தரியே வீட்டுக்கு எஜமானி. சுந்தரிக்கு ரூபசி என்ற தங்கை ஒருத்தி இருந்தாள். அவளுக்குக் கல்யாணமாகி மாமியாரகத்தில் குடித்தனம் செய்துகொண்டிருந்தாள்.

சுந்தரி டக்கா சேலையைக் கட்டிக்கொண்டு சர்வாலங்கார பூஷிதையாய்த் தன் பிதாவினிடம் சென்று 'நான் ரூபசியைப் போய்ப் பார்த்துவிட்டு வரவேணும். அவளைப்பற்றிக் கெட்ட கெட்ட கனுக்கனெல்லாம் கண்டேன்' என்றாள். சுந்தரியின் பிதாவாகிய கிருஷ்ண கமல சக்கரவர்த்தி பெண்ணிடத்தில் அதிக ஆசாபாசம் உள்ளவனுகையால் முதலில் ஏதோ கொஞ்சம் முணுமுணுப்பதுபோல் காட்டினபோதிலும், கடைசியில் 'சரி, நீ போகலாம்' என்று அநுமதி கொடுத்துவிட்டான். சுந்தரி ரூபசியின் மாமியாரகத்துக்குச் சென்றாள். ஸ்ரீநாதனும் தன்னூருக்குப் போகப் புறப்பட்டான்.

ரூபசியின் புருஷன் யார்? நாம் முன்சொன்ன பிரதாபனே. சந்திரசேகரன் சைவலிநியைக் கல்யாணம் செய்து கொண்டது முதல் அடுத்தவீட்டுப் பிள்ளையாகிய பிரதாபனை அடிக்கடிச் சந்தித்து அவனுடைய குணதிசயங்களைக் கண்டு வியக்கலாயினன். சுந்தரியின் தங்கை ரூபசிக்கு விவாகத்துக்குரிய காலம் வந்தபோது, சந்திரசேகரன் அவளைப் பிரதாபனுக்குக் கொடுக்கும்படி முன்வந்து முயன்று விவாகத்தை முடித்துவைத்தான். அத்துடன் நிற்காமல், சந்திரசேகரன் மீர்காசிமுக்கு உபாத்தியாயராயிருந்த காரணத்தால் தனக்கு அவனிடத்திலிருந்த செல்வாக்கைக்கொண்டு பிரதாபனுக்கு நவாப் துரைத்தனத்தில் ஓர் உத்தியோகமும் சம்பாதித்துக் கொடுத்தான். பிரதாபன் கஷ்டப்பட்டு வேலைசெய்து நாளுக்குநாள் மேன்மேலோங்கி உயர்பதவிக்கு வந்தான். இப்பொழுது அவன் ஒரு ஜமீன்தாரனுகிப் பெரிய மாளிகையில் வசித்து எங்கும் பரவிய புகழுடன் விளங்கினுன். சுந்தரியின் பல்லக்கு பிரதாபனது மாளிகைக்கு

வந்தது. ரூபசி அவளைப் பார்த்ததும் நமஸ்காரம் பண்ணி, அன்புடன் வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள். பிரதாபனும் வந்து மைத்துனியை க்ஷேமலாபம் விசாரித்தான்.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் பிரதாபன் சமயோசிதமாய் வேதக்கிராமத்தைப்பற்றி ஸகல சங்கதிகளும் விசாரித்து, இன்னும் மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசினபிறகு, சந்திரசேகரனைப்பற்றி விசாரித்தான்.

அதற்குச் சுந்தரி, "அதைச் சொல்வதற்குத்தான் நான் வந்தேன், சொல்லுகிறேன் கேள்" என்று பீடிகை போட்டுக்கொண்டு, சந்திரசேகரனும் சைவலினியும் ஊரைவிட்டுப் போன சங்கதியைச் சவிஸ்தாரமாய் எடுத்துச் சொன்னாள். அதைக் கேட்டுப் பிரதாபனும் ஆச்சரியமடைந்து ஒன்றும் தோன்றாமல் தியங்கினான். சற்றுப்பொறுத்து அவன் தலையை நிமிர்ந்துகொண்டு கொஞ்சம் மனவருத்தத்தைக் காட்டும் குரலுடன், "இதுவரையில் ஏன் இந்தச் சங்கதியை எனக்குத் தெரிவிக்கவில்லை?" என்று வினவினான்.

சு.—சொல்லி என்ன பிரயோஜனம் ?

பிர.—என்ன பிரயோஜனமென்று கேட்கிறாய் ? நீயோ ஸ்திரீ. உன்னிடத்தில் நான் ஜம்பம் அடித்துக்கொள்ளக்கூடாது. சமயத்தில் எனக்குச் சங்கதியைத் தெரிவித்திருக்கும் பக்ஷத்தில் கொஞ்சம் உபகாரம் செய்திருக்கலாம்.

சு:—உன்னால் உபகாரம் செய்யமுடியுமோ முடியாதோ, அது எனக்கு எப்படித் தெரியும் ?

பிர:—ஏன், உனக்குத் தெரியாதா ? என் பாக்கியமெல்லாம் எனக்குச் சந்திரசேகரனால்தானே கிடைத்தது.

சு.—தெரியும். ஆனால் உலகத்தில் மனுஷ்யாளுக்குச் சம்பத்து வந்து விட்டால் தங்கள் பழைய ஸ்திதி மறந்துபோய் விடுகிறதென்று சொல்லக் கேட்டிருக்கிறேன்.

இதைக் கேட்டதும் பிரதாபனுக்கு உண்டான எரிச்சலுக்கும் கோபத்துக்கும் அளவில்லை. அவன் ஒன்றும் பேசாமல் சரேலென்று எழுந்துபோய்விட்டான். அதைக்கண்ட சுந்தரி மிகவும்சந்தோஷித்தாள்

அடுத்த நாள் பிரதாபன் ஒரு சமையற்காரனையும் ஒரு வேலைக் காரனையும் மாத்திரம் அழைத்துக்கொண்டு மாங்கீர் பட்டணத்துக்குப் புறப்பட்டான். கூடப்போன வேலைக்காரன் ராமசரணன்தான். எங்கே போகிறான் என்ற சங்கதியைப் பிரதாபன் ஒருவருக்குந் தெரிவிக்கவில்லை. ஆனால் அவன் ரூபசியுடன் மாத்திரம் "நான், சந்திரசேகரனையும் சைவலினியையும் தேடப்போகிறேன். அவர் களின் வர்த்தமானம் தெரிகிறவரையில் திரும்பி வரமாட்டேன்" என்று சொல்லிவிட்டுப் போனான்.

மாங்கீர் பட்டணத்தில் எந்த வீட்டில் சந்நியாஸியானவர் தலனி யைக் கொண்டுபோய் விட்டாரோ, அந்த வீட்டிலேயே பிரதாபனும் போய் இறங்கினான்.

பிரதாபன் போனபிறகு, சுந்தரி சிலநாள் தன் தங்கை அகத்தில் இருந்தாள். நாள் தப்பாமல் சைவலினியை ஆசைதீர வாயால் வந்தமட் டும் வைதாள். காலை, பகல், மாலை என்னும் திரிசந்திகளிலும் அவள் சைவலினியைக் காட்டிலும் பாபிஷ்டியும் துரதிர்ஷ்டமுள்ள நாசகாலியு மான பெண் இப்பூதலத்தில் வேறொருத்தி பிறந்ததில்லை என்று ரூபசிக்கெதிரில் பிரமாணம் பண்ணிப் பிரசங்கித்தாள். ரூபசிக்கு இது பொறுக்க முடியாத தலைவேதனையாய்ப் போய்விடவே, அவள் ஒரு நாள் சுந்தரியைப் பார்த்து "அதெல்லாம் சரிதான். நீயேன் அவ ளைப்பற்றித் தொண்டையைக் கிழித்துக்கொண்டு பிராணனை விடு கிறாய்?" என்றதற்கு, சுந்தரி, "அவள் மண்டை கிழிந்து மாளவேண்டு மென்று எனக்கிருக்கிறது; அவளை எமன் வாரிக்கொண்டு போய்விட் டால் என் வயிற்றெரிச்சல் தீரும். என் கையாலே அவள் மூஞ்சியில் கொள்ளிவைக்க மாட்டேனா? அவள் நாசமாய்ப்போக, குலத்தைக் கெடுக்க வந்தகோடாலி" என்றிப்படிப் பலவாறாகச் சரமாரியாய் வசை மொழிகளைப் பெய்யலானாள்.

ரூபசி.—அக்கா, நீ கொஞ்சம் ராக்ஷசியாய்ப் போய்விட்டாய்.

சுந்தரி.—அந்த ராக்ஷசிதான் என்னை அப்படிச் செய்துவிட்டாள்.

ஐந்தாம் அத்தியாயம்

கங்கா தீரத்தில்

நவாபுடன் யுத்தம் செய்ய வேண்டியதென்று கல்கத்தா கவுன்சிலில் தீர்மானம் செய்யப்பட்டது. ஆகவே பாட்னுவிலுள்ள பண்டச்சாலைக்குச் சீக்கிரமாய்ச் சில படைகளை அனுப்புவது அவசியமாயிருந்தது. அதன்பொருட்டு ஆயுதங்கள் நிறைந்த படகு ஒன்று தயார் செய்யப்பட்டது.

பாட்னு பண்டச்சாலையில் ஏஜண்டாயிருந்த மிஸ்டர் எல்லிசுக்கும் சில ரஹஸ்ய சமாசாரங்கள் சொல்லியனுப்ப வேண்டுவது அவசியமாயிற்று. அந்தச் சமயத்தில் மிஸ்டர் அமியட்துரை நவாபுடன் சில விவகாரங்கள் பேசி முடிப்பதற்காக மாங்கீருக்குப் போயிருந்தான். அங்கே மிஸ்டர் அமியட் என்ன செய்து கொண்டிருக்கிறானென்றும் அங்குள்ள விவகாரங்களை எவ்வளவு அறிந்திருக்கிறானென்றும் தெரியாமல் மிஸ்டர் எல்லிசுக்கு எவ்வித திட்டமான சமாசாரங்களும் சொல்லியனுப்ப முடியவில்லை. ஆகையால் சமர்த்தனான ஓர் உத்தியோகஸ்தனை அனுப்பவேண்டுவது ஆவசியகமாயிற்று. அவன் நேராக மிஸ்டர் அமியட்டினிடம் சென்று அவனிடத்திலிருந்து சங்கதிகளைத் தெரிந்துகொண்டு மிஸ்டர் எல்லிசிடம் போய்ப் பிறகு அவனுக்குக் கல்கத்தா கௌன்சிலின் தீர்மானத்தையும் மிஸ்டர் அமியட்டின் அபிப்பிராயங்களையும் அறிவிக்க வேண்டும்.

இந்தச் சகல காரியங்களையும் உத்தேசித்தே கவர்னராகிய வான்சிடார்ட்டு மிஸ்டர் பாஸ்டரைப் புரந்தர புரத்திலிருந்து திரும்பி வரும்படி உத்திரவு அனுப்பியிருந்தார். அவன் ஆயுதக்கப்பலுடன் புறப்பட்டுச் சென்று அமியட்டைப் பார்த்துவிட்டுப் பிறகு பாட்னுவுக்குப் போகவேண்டியிருந்தது. இவைகளைப்பற்றி அவனுக்கு முன்னதாகவே சங்கதி தெரிவிக்கப்பட்டிருந்தமையால், அவன் சைவலினியை முதலில் மாங்கீருக்கு அனுப்பிவிட்டான். அவன் பாட்னுவுக்குப் போகும் வழியில் சைவலினியைச் சந்தித்தான்.

பாஸ்டர் ஆயுதக்கப்பலோடும் சைவலிநியோடும் மாங்கீருக்கு வந்து கரையில் இறங்கினன். அவன் மிஸ்டர் அமியட்டைக் கண்டு பேசி விடைபெற்றுத் திரும்பி வருகையில், குர்க்கன் கான் அவனுடைய கப்பல்களில் ஒன்றைப் பிடித்துக்கொண்டான். அதன்மேல் அமியட்டுக்கும் நவாபுக்கும் வாக்குவாதம் நடந்தது. கடைசியில் பாஸ்டர் தான் போவதற்குள், கப்பலை நவாபு விட்டுவிட்டால் சரி, இல்லாவிட்டால் ஆயுதக்கப்பலையும் அங்கேயே நிறுத்திவிட்டுத் தான்மாத்திரம் பாட்ணுவுக்குப் போகிறதாக அமியட்டுடன் சொன்னன்.

பாஸ்டரின் கப்பல்கள் இரண்டும் ஆற்றின் கரைக்குச் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தன. அவற்றுள் ஒன்று மிகவும் பெரியது, மற்றொன்று சாமானியமானது. பெரிய கப்பலில் நவாபின் சிப்பாய்களிற் சிலர் பாரா கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் சில சிப்பாய்கள் கரையிலும் நிறுத்தப்பட்டிருந்தார்கள். இந்தக் கப்பலில்தான் யுத்த ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஆகவே இதையே குர்க்கன் கான் பிடிக்கவேண்டு மென்றான்.

மற்றொரு கப்பலில் ஆயுதம் ஒன்றுமில்லை. அது முன் சொன்ன கப்பலைவிட்டுச் சுமார் ஐம்பது முழதூரம் விலகியிருந்தது. அதில் நவாபின் பாராக்காரன் ஒருவனுமில்லை. இங்கிலீஷ்கார பட்டாளத்தைச் சேர்ந்த ஒரு தெலுங்கசிப்பாய் மாத்திரம் அதன் மேல்தட்டில் உட்கார்ந்து பாரா கொடுத்துக்கொண்டிருந்தான்.

அப்பொழுது இரவு சுமார் ஒன்றரை மணி. நிலா வெளிச்சமின்றி அந்தகாரமாயிருந்தாலும், ஆகாசம் மப்பு மந்தாரமின்றி நிர்மலமாயிருந்தது. கப்பலிலுள்ள சிப்பாய்கள் எழுந்திருப்பதும் உட்காருவதும் உறங்கிவிழுவதுமா யிருந்தார்கள். ஆற்றங்கரையில் சிறிய நாணற்புதர் ஒன்றிருந்தது. அதன் பின்னல் ஒருவன் நின்று யாரையோ பார்த்துக்கொண்டிருந்தான். அவன் யாரென்றல் பிரதாபனே.

பிரதாபராயன் சிப்பாய் உறங்கிவிழுவதைப் பார்த்து மெள்ள ஜலத்தில் வந்து இறங்கினன். இறங்கவே ஜலத்தில் உண்டான சத்தத்தைச் சிப்பாய் கேட்டு 'யார் அங்கே?' என்று உறங்கிக் கொண்டே உளறினன். பிரதாபராயன் அதற்குப் பதில் பேசவில்லை.

சிப்பாய் முன்போலவே மறுபடியும் உறங்கிவிழத் தொடங்கினன். கப்பலுக்குள்ளே பாஸ்டர் ஜாக்கிரதையாய் விழித்துக்கொண்டிருந்தான். சிப்பாய் உளறினதை அவன் கேட்டுக் கப்பலுக்குள்ளிருந்தே நாலா பக்கத்திலும் சுற்றிப்பார்த்தான். யாரோ ஒருவன் ஸ்நானம் செய்வதற்காக ஜலத்தில் இறங்கி யிருந்ததைக் கண்டான்.

அந்தச் சமயத்தில் நாணல் புதரிலிருந்து துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டது. கப்பலிலிருந்த சிப்பாய் குண்டால் அடிபட்டு ஜலத்துக்குள் விழுந்து விட்டான். பிரதாபன் அப்பொழுது கப்பலின் இருண்ட நிழலிலேயே நடந்துபோய் உதடுவரையில் ஜலத்தில் அமிழ்ந்து நின்றான்.

துப்பாக்கியின் சத்தத்தைக் கேட்டவுடன் மற்றொரு கப்பலில் இருந்த சிப்பாய்கள் 'க்யா ஹை ரே' (என்னடா அது) என்று உரக்கக் கத்தினர்கள். கப்பலிலிருந்த மற்றவர்களும் விழித்துக்கொண்டார்கள். பாஸ்டரும் துப்பாக்கி யொன்றைக் கையில் எடுத்துக்கொண்டு வெளியே வந்தான்.

லாரென்ஸ் பாஸ்டர் நாற்புறமும் பார்வையைச் செலுத்தினன். தெலுங்க சிப்பாயைக் காணேம். அவனுடைய பிணம் ஜலத்தில் விழுந்து மிதப்பதை நக்ஷத்திர வெளிச்சத்தில் கண்டான். நவாபின் சிப்பாய்கள் அந்தத் தெலுங்கனைச் சுட்டிருப்பார்களென்று முதலில் அவன் நினைத்தான். ஆனல் அடுத்த நிமிஷத்தில் நாணற்புதரிலிருந்து சொற்ப புகை கொடிபோல் படர்ந்திருக்கக் கண்டான். இன்னொரு கப்பலிலிருப்பவர்களும் இது என்ன சங்கதி என்று விசாரிக்க வருவதையுங் கண்டான். நக்ஷத்திரங்கள் ஆகாசத்தில் ஜொலித்துக்கொண்டிருந்தன. பட்டணத்தில் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. கங்கைக்கரையோரமாய் நூற்றுக்கணக்கான தோணிகள் நித்திரை செய்து கொண்டிருக்கும் நிசாசரமாதர்களை நிகர்த்து அசைவற்று நின்றன. சலசலவென்றொலித்துக் குமிழியிட்டோடும் நித்யப் பிரவாஹிநியாகிய கங்காநதி பக்கத்தில் ஓடிக்கொண்டிருந்தது. அந்தப் பிரவாஹத்தில் சிப்பாயின் பிணம் மிதந்துகொண்டிருந்தது. பாஸ்டர் இதையெல்லாம் ஒரு நொடியில் கண்டுகொண்டான்.

நாணற்புதரின்மேல் மெல்லிய புகைக்கொடி சூழ்ந்திருப்பதைப் பாஸ்டர் கண்டு தன் கையிலிருந்த துப்பாக்கியைத் தூக்கி அந்தப் புதரின் பக்கமாய் இலக்கு வைக்கத் தொடங்கினுன். புதரின் பின்னுல் பகைவன் பதுங்கி யிருக்கிருனென்று பாஸ்டருக்கு நிச்சயமாய் விட்டது. சிப்பாயை மறைந்திருந்து கொன்ற பகைவன் தன்னையும் அதே க்ஷணத்தில் கொல்லக்கூடுமென்றும் அவனுக்குப் புலப்பட்டது. ஆனுல் பாஸ்டர் ப்ளாஷியுத்தத்துக்குப் பிறகு இந்தியாவுக்கு வந்தவனுனபடியால், சுதேசி யொருவனுக்கு இங்கிலீஷ்காரன்மேல் இலக்கு வைக்குமவ்வளவு தைரியம் உண்டாகக் கூடுமென்பது அவன் மனத்தில் புகவில்லை. அன்றியும் இங்கிலீஷ்காரனுக்கு இந்துதேசப் பகைவனைக் கண்டு பயப்படுவதைவிட மரணமே மேலானதாகும். இந்த எண்ணத்துடன் அவன் அங்கே நின்றுகொண்டு தன் கையிலிருந்த துப்பாக்கியைத் தூக்கினுனே இல்லையோ, உடனே புதரிலிருந்து ஒரு துப்பாக்கி ஜொலித்தது, மறுபடியும் துப்பாக்கி வெடி தீர்ந்தது. பாஸ்டர் தலையில் தாக்குண்டு, தனக்குமுன் சென்ற சிப்பாயைப்போல் தானும் கங்கையின் பிரவாஹத்தில் விழுந்தான். அவன் கையிலிருந்த துப்பாக்கியும் படீரென்று கப்பலில் விழுந்தது. பிரதாபன் அந்தக் கணமே இடுப்பிலிருந்து கத்தியை உருவிக் கப்பலைக் கட்டியிருந்த கயிற்றை அறுத்தெறிந்தான். அந்த இடத்தில் ஜலம் ஆழமில்லாமல் சொற்பமாயும் பிரவாஹம் மந்தமாயுமிருந்தமையால் கப்பலோட்டிகள் அங்கே நங்கூரம் போடவில்லை; அப்படி அவர்கள் போட்டிருந்தாலுங்கூட கைலாகவம் படைத்த பலசாலியான பிரதாபனுக்கு அது ஓர் தடையாயிராது. கயிற்றை யறுத்தெறிந்ததும் பிரதாபன் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து கப்பலில் குதித்தான்.

இதை யெல்லாம் எடுத்துச் சொல்வதற்கு நமக்கு எவ்வளவு நேரம் பிடித்ததோ, அதில் நூற்றிலொருபங்கு நேரத்திற்குள்ளாகவே இவையாவும் நடந்துவிட்டன. சிப்பாய் நீரில் விழுந்ததும், பாஸ்டர் வெளியே வந்ததும், பிறகு அவன் விழுந்ததும், மறுபடியும் பிரதாபன் கப்பலில் பிரவேசித்ததும் ஆகிய இவையெல்லாம் இன்னொரு கப்பலிலிருந்து ஜனங்கள் வருவதற்குக்கூட அவகாசம் இல்லாமறபடி அவ்

வளவு சீக்கிரத்தில் நடந்தன. ஆனால் கடைசியில் அவர்களும் வந்தார்கள்.

அவர்கள் வந்து பிரதாபனது சாமர்த்தியத்தால் கப்பல் கரையை விட்டு விலகி ஜலத்தின் நடுவிலே இருக்கக் கண்டார்கள். அவர்களுள் ஒருவன் நீந்திக்கொண்டுபோய் அதைப் பிடிக்கப் பார்த்தான். ஆனால் பிரதாபன் ஓர் இரும்புக்கம்பியை எடுத்துக்கொண்டு அவன் தலையில் மோதவே, அவன் திரும்பிக்கொண்டு கம்பி நீட்டினான். அதற்கப் புறம் வேறொருவரும் அந்தப் பிரயத்தனம் செய்யவில்லை. உடனே பிரதாபன் அந்தக் கம்பியை ஜலத்தில் விட்டுக் கப்பலை ஓட்ட, கப்ப லானது ஆழ்ந்த பிரவாஹத்தில் திரும்பிக் கிழக்கு முகமாகச் செல்லத் தொடங்கியது.

பிரதாபன் கம்பியும் கையுமாய்த் திரும்பிப்பார்க்க, இன்னொரு தெலுங்க சிப்பாய் கப்பலின் மேல்தட்டில் முழந்தாளை ஊன்றிக் கொண்டு துப்பாக்கியை யெடுத்து இலக்கு வைப்பதைக் கண்டான். பிரதாபன் உடனே இரும்புக்கம்பியை உயரத்தூக்கி அவன் தலையில் அடித்தான். அந்த அடியால் அவன் கைமடிந்து கீழே சாய, அதி லிருந்த துப்பாக்கியும் கீழே விழுந்தது. அதையும், முன்பாஸ்டர்கையி லிருந்து விழுந்திருந்த துப்பாக்கியையும் பிரதாபன் எடுத்துக்கொண்டு கப்பலிலிருந்தவர்களைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலுற்றான்.

“இப்பொழுது நான் சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள். என் பெயர் பிரதாபராயன். என்னைக் கண்டால் நவாபும் நடுங்குகிறான். இந்த இரண்டு துப்பாக்கிகளையும் என் இரும்புக்கம்பியையும் வைத் துக்கொண்டு நான் ஒருவனே உங்களை எமலோகத்துக்கு அனுப்புவதற் குப் போதும். என் வார்த்தையை நீங்கள் கேட்கும் பக்ஷத்தில், உங்க ளில் ஒருவருக்கும் நான் துன்பம் செய்யமாட்டேன். நான் சுக்கா னண்டை போகிறேன். கப்பல் வேலைக்காரர்களெல்லாரும் துடுப்புகளை எடுத்துக்கொள்ளட்டும். மற்றவர்களெல்லோரும் அவர்கள் இருக்கும் இடத்திலேயே இருக்கவேண்டும். அதைவிட்டுக் கொஞ்சமாவது நகர்ந் தீர்களோ, செத்தீர்கள்; இல்லாவிட்டால் யாதொரு பயமுமில்லை.”

இவ்வாறு சொல்லிவிட்டுப் பிரதாபராயன் இரும்புக்கம்பியால் வேலைக்காரர்களை ஒவ்வொருவனுய்க் குத்தி யெழுப்பினான். வேலைக்

காரர்கள் அதைக்கண்டு பயந்து துடுப்புகளைப் பிடித்துக்கொண்டார்கள். பிரதாபன் தானே சுக்காணை எடுத்துக்கொண்டான். அதற்கப்புறம் ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. கப்பல் வேகமாய்ச் சென்றது. இன்னொரு கப்பலிலிருந்து இடையிலேயே இரண்டொரு துப்பாக்கிகள் சுடப்பட்டபோதிலும், அவற்றில் ஒன்றாவது நக்ஷத்திர வெளிச்சத்தில் சரியான இலக்கு நோக்கிச் சுடப்படாமையால், உடனே அவை யாவும் நின்றுபோய் விட்டன.

அப்பொழுது சிறிய கப்பலிலிருந்த சிலர் துப்பாக்கிகளுடன் ஒரு டிங்கியில் இறங்கிப் பெரிய கப்பலைப் பின்தொடர்ந்து துரத்தத் தொடங்கினார்கள். முதலில் பிரதாபன் அவர்களை எதிர்க்கவில்லை. ஆனால் அவர்கள் சமீபத்தில் வந்ததும், இரண்டு துப்பாக்கிகளையும் அவர்களின்மேல் இலக்குவைத்துச் சுட்டான். இரண்டுபேர் காயப்படுத்தப் பெற்றார்கள். மற்றவர்கள் பயந்து டிங்கியைத் திருப்பிக்கொண்டு ஓடிப்போய்விட்டார்கள்.

இதுவரையில் நாணற்புதரில் பதுங்கியிருந்த ராமசரணன், பிரதாபன் அபாயத்துக்குத் தப்பிச் சென்றதையும் சிறு கப்பலிலிருந்த சில சிப்பாய்கள் நாணற்புதரில் தேடும்பொருட்டு அருகே வருவதையும் கண்டு மெல்ல மெல்ல நகர்ந்து கம்பி நீட்டினான்.

ஆறுவது அத்தியாயம்

சைவலினி கண்ட கனவு

அந்த இராத்திரியில் கங்கையில் போய்க்கொண்டிருந்த கப்பலிலே தூக்கத்தினின்று விழித்துக்கொண்டாள் சைவலினி.

அந்தக் கப்பலில் இரண்டு சிற்றறைகள் இருந்தன. ஒன்றில் பாஸ்டர் இருந்தான். மற்றொன்றில் சைவலினியும் அவள் வேலைக்காரியும் இருந்தார்கள். சைவலினி அவ்வளவுக்குள் துரைசானியாய் விடவில்லை. அவள் இன்னும் இடையில் கறுப்புக்கரைச் சேலையும், கையில் காப்பும், காலில் கிங்கிணியுமே அணிந்திருந்தாள். அவளுக்குச் சகாயமாயிருந்தவள் அந்தப் புரந்தரபுரத்து வேலைக்காரியாகிய பார்

வதியே. சைவலினி தூங்கிக்கொண்டிருக்கையில் ஓர் கனவு கண்டாள். அதாவது:—பீமா புஷ்கரிணியின் நாற்புறங்களிலும் நீர்மட்டம்வரையில் வளர்ந்து ஜலத்தைத் தொடுவதுபோல் தொங்கிய மரக்கிளைகளால் அலங்காரமுற்று மனோஹரமாய்த் தோன்றும் தடாக தீரத்தைச் சுற்றிலும் அந்தகாரரேகை அமைந்திருந்ததுபோலிருந்தது. சைவலினி அதில் ஒரு தாமரைபோல் மிதந்துகொண்டிருக்க, சரோவரத்தின் ஓரத்தில் ஒரு சுவர்ண ராஜஹம்ஸம் விளையாடிக் கொண்டிருந்தது போலவும், கரையில் ஒரு வெள்ளைப்பன்றி உலாவிக்கொண்டிருந்தது போலவும் தோன்றின. ராஜஹம்ஸத்தைக் கண்டதும் அதைப் பிடிக்கவேண்டுமென்ற ஆவல் அவளுக்குண்டாயிற்று. ஆனல் அது அவள் கையில் பிடிபடாமல் மற்றொரு பக்கம் போய்விட்டது. பன்றியோ சைவலினியாகிய பத்மத்தைப் பறிப்பதற்காகத் திரும்பித்திரும்பிச் சுற்றிக்கொண்டிருந்தது. ராஜஹம்ஸத்தின் முகத்தைப் பார்க்க முடியவில்லை. பன்றியின் முகம் மாத்திரம் பாஸ்டரின் முகத்தைப்போல் தோன்றியது. சைவலினி ராஜஹம்ஸத்தைப் பிடிக்கப்போனள். ஆனல் அவளுடைய கால் தாமரைத்தண்டாக மாறி நீரில் சிக்கிக்கொள்ள, அவளால் அசைந்துசெல்ல முடியவில்லை. அந்தச் சமயத்தில் பன்றியானது அவளைப் பார்த்து "என்னண்டை வா, நான் உனக்கு ராஜஹம்ஸத்தைப் பிடித்துத் தருகிறேன்" என்று சொல்வதுபோலிருந்தது. இவ்வாறு அவள் கனவு கண்டுகொண்டிருக்கையில், முதல் துப்பாக்கியின் வெடி கேட்டதும், தூக்கம் கலைந்தது. பிறகு சிப்பாய் ஜலத்தில் விழுந்த சத்தம் கேட்டது. நடுத்தூக்கத்தில் நித்திராபங்கமுற்று எழுந்ததால் உண்டான மயக்கத்தினல் சற்றுநேரம் வரையில் அவளுக்கு நினைவு சரியாய் வரவில்லை. அந்த ராஜஹம்ஸமும் அந்தப் பன்றியுமே மாறிமாறி அவள் மனத்தில் தோன்றிக்கொண்டிருந்தன. இரண்டாவது துப்பாக்கி வெடியும் அதனல் உண்டான பெரிய அமளிகுமளியும் அவளை முழுவதும் எழுப்பிவிட்டன. அவள் வெளியே வந்து சுற்றிலும் பார்த்தாள். ஒன்றும் தெரியவில்லை. மறுபடியும் அறைக்குட் சென்ருள். அதில் ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. பார்வதியும் விழித்தெழுந்திருந்தாள். சைவலினி அவளைப் பார்த்து "அங்கே என்ன நடக்கிறது? உனக்குத்

தெரிகிறதா?" என்று கேட்க, அவள் "அதிகமாய் ஒன்றும் தெரிய வில்லை. ஜனங்கள் பேசிக்கொள்வதைப் பார்த்தால், யாரோ திருடர்கள் கப்பலை எதிர்த்ததாகவும், வெள்ளைக்காரன் கொல்லப்பட்டதாகவும் தோன்றுகிறது. இது நம்முடைய தோஷத்தால் வந்த வினையே" என்ருள்.

சை.—வெள்ளைக்காரன் செத்ததற்கு நம்முடைய தோஷம் எப் படிக் காரணமாகும்? அதற்குக் காரணம் அவனுடைய தோஷம்தான்.

பா.—திருடர்கள் எதிர்த்தால் நமக்குத்தானே அபாயம்?

சை.—அபாயமென்ன? இதுவரையில் ஒருவிதக் கள்ளர் கூட்டத் தாரின் வசத்தில் இருந்தோம். இனி இன்னொரு கூட்டத்தாரின் வசத்தில் இருக்கப் போகிருேம். இதுவரையில் வெள்ளைத்திருட்டுக் கூட்டத்தார் வசத்தில் இருந்தோம். இனி கறுப்புத்திருடர்களின் கையில் அகப்பட்டுக்கொள்ளப் போகிருேம். இதில் என்ன கெடுதல்?

இப்படிச் சொல்லிவிட்டு அவள் தன் சிறிய தலையினின்றும் முது கில் தொங்கிக்கொண்டிருந்த ஜடையை அசக்கிக்கொண்டே மந்தஹா ஸத்துடன் மெல்ல நடந்துசென்று தான் படுத்திருந்த சிறிய மஞ்சத்தில் வீற்றிருந்தாள். அதைக்கண்ட பார்வதி "இந்தச் சமயத்தில் நீங்கள் சிரிப்பது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை" என, சைவலினி, "உனக்குப் பிடிக்காவிட்டால், இதோ கங்கை தயாராய்க் காத்துக் கொண்டிருக்கிருள், அதில் நீ மஹாராஜியாய் விழுந்து பிராணனை விடலாம். நான் சிரிக்கவேண்டிய சமயம் வந்துவிட்டது, சிரிக் கிறேன். திருடர்களில் ஒருவனைப் போய்க் கூப்பிடு, கூப்பிடுகிறையா, இல்லையா? நான் ஒரு சங்கதி விசாரிக்க வேண்டி யிருக்கிறது" என்ருள்.

அதைக்கேட்டுப் பார்வதி கோபத்துடன் "அவர்களை ஒருவர் போய்க் கூப்பிட வேண்டியதில்லை. ஒருவரும் கூப்பிடாமலே அவர் கள் வருவார்கள்" என்ருள்.

ஆனல் நாலுமணி நேரமாகியும் ஒரு கள்ளனுவது வந்தானில்லை. அப்பொழுது சைவலினி மிகவும் மனவருத்தமுற்றுப் பார்வதியைப் பார்த்து 'நம் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! கள்ளர்கள் கூட நம்மைக் கவ

னிக்கமாட்டோம் என்கிறுர்களே ” என்றுள். பார்வதியின் பாடு நடுக்கமாய் விட்டது.

அதன் பிறகு வெகுநேரங்கழித்து ஒரு மணல்திட்டிற் போய்க் கப்பல் நின்றது. கப்பல் அங்கே வந்து நின்ற சிறிது நேரத்திற்கெல்லாம் சில வஸ்தாதுகள் ஒரு பல்லக்கைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். அவர்களுக்குத் தலைவன் ராமசரணன்.

பல்லக்கைப் போயிகள் திட்டின்மீது வைத்தார்கள். ராமசரணன் கப்பலுக்குட் பிரவேசித்துப் பிரதாபனிடஞ் சென்று அவனுடைய உத்தரவின்பேரில் 'காமரா' வுக்குள் சென்றுன். சென்றவுடன் முதலில் பார்வதியின் முகம் அவன் கண்ணைக் கவர்ந்தது. பிறகு அவன் சைவலினியைப் பார்த்தான். அவன் சைவலினியைப் பார்த்து "அம்மா, தயவுசெய்து தாங்கள் வெளியில் வரவேண்டும் ” என்றுன்.

சை.—நீ யார்? என்னை எங்கே வரவேண்டுமென்கிறுய்?

ராம.—நான் தங்கள் ஊழியன். தாங்கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டியதில்லை. என்னுடன்கூட வாருங்கள். துரை செத்துப்போய் விட்டான்.

அதைக்கேட்டுச் சைவலினி யாதொன்றும் பேசாமல் எழுந்து ராமசரணன் பின்னே வர, இருவரும் கப்பலைவிட்டு வெளியேவந்தார்கள். பார்வதியும் கூடவே வருவதைக்கண்டு ராமசரணன் அவளை அதட்டி நிறுத்திவிட்டான். அவள் பயத்தினுல் கப்பலிலே தங்கிவிட்டாள். ராமசரணன் சைவலினியைப் பல்லக்கில் ஏறும்படி சொல்ல, அவளும் அப்படியே ஏறினுள். ராமசரணன் பல்லக்கைப் பிரதாபன் இறங்கியிருந்த விடுதிக்குக் கொண்டுபோனுன்.

தலனியும் குல்ஸமும் இன்னம் அந்த வீட்டிலேயே இருந்தார்கள். அவர்களுக்கு நித்திராபங்கம் உண்டாகுமென்றஞ்சி அவர்களிருந்த விடத்துக்குச் சைவலினியை அழைத்துச் செல்லாமல், மேல் மெத்தையில் கொண்டுபோய் விட்டு ஒரு விளக்கேற்றி வைத்து 'இங்கே தூங்குங்கள்' என்று சொல்லிவிட்டு தெண்டனிட்டுக் கதவைத் தன் பின்னுல் சாத்திக்கொண்டு போய்விட்டான்.

அப்படி அவன் போகையில் "இது யாருடைய வீடு?" என்று

சைவலினி கேட்க, ராமசரணன் அதைக் காதில் போட்டுக்கொள்ளா மலே போய்விட்டான்.

பிரதாபனது உத்திரவுக்கு மாருக, ராமசரணன் தன்சொந்த யுக்தி யின்மேல், சைவலினியைப் பிரதாபனுடைய வீட்டுக்கே கொண்டு போய் விட்டான். பல்லக்கை ஜகத்சேட்டின் வீட்டுக்குக் கொண்டு போகும்படி பிரதாபன் திட்டம்பண்ணி யிருந்தான். ராமசரணனே வழியில் பின்வருமாறு யோசிக்கலாயினுன்:—

"ஜகத்சேட்டின் வீடு இராத்திரி இவ்வளவு நேரத்தில் மூடியிருந் தால் என்ன செய்கிறது? வாசல் காக்கும் தர்வான் நம்மை உள்ளே விடுவானே விடமாட்டானே? நீங்கள் யாரென்று கேட்டால் என்ன சொல்வது? வாஸ்தவத்தைச் சொல்லி என் நாசத்தை நானே தேடிக் கொள்ளலாமா? அவ்வளவு கஷ்டமேன்? பேசாமல் நம்முடைய ஜாகைக்கே போவது உத்தமமல்லவா?" என்ருலோசித்து அவன் பல் லக்கைப்பிரதாபன் விடுதிக்குக் கொண்டுபோனுன்.

பல்லக்கு போய்விட்டவுடன் பிரதாபன் கப்பலிலிருந்து இறங்கி ஞன். இதுவரையில் பிரதாபனுடைய கையிலிருந்த துப்பாக்கிகளைக் கண்டு கப்பலிலிருந்தவர்கள் பேசாமலிருந்தார்கள். இப்பொழுது வஸ்தாதுகளும் வந்துவிடவே, அவர்கள் முற்றிலும் அடங்கி விட்டார்கள். கப்பலிலிருந்து இறங்கினதும், பிரதாபன் தான் இறங்கி யிருந்த வீட்டை நோக்கிப் புறப்பட்டு, வீட்டின் வாசலை யடைந்து கதவை இடித்தான். ராமசரணன் வந்து கதவைத் திறந்தான். ராமசர ணன் தன் உத்தரவுக்கு விரோதமாய் நடந்த சங்கதியை வீட்டுக்கு வந்தவுடனே ராமசரணனே சொல்லக்கேட்டு, சிறிது அதிர்ப்தி யடைந்தவனுகி, "இப்போதும் பரவாயில்லை. அவகாசம் இருக்கிறது, அவளை ஜகத்சேட்டின் வீட்டில் கொண்டுபோய் விடலாம். அழைத்துக் கொண்டுவா, போ" என்ருன்.

இக்கதையைப் படிக்கும் நண்பர்களே, ராமசரணன் போய்ப் பார்த்தபொழுது சைவலினி தூங்கிக்கொண்டிருந்தாளென்று கேட்க உங்களுக்கு ஆச்சரிய முண்டாகலாம். அப்படிப்பட்ட அவஸ்தையில் தூக்கமும் வருமோ? வருமோ, வராதோ, அதைச் சொல்ல எம்மா

லாகாது. நடந்ததை நடந்தபடியே நாம் கூறுகின்றோம். சைவலினி தூங்கிக்கொண்டிருப்பதை ராமசரணன் கண்டு அவளை யெழுப்பாமல், பிரதாபனிடம் வந்து "அவள் தூங்குகிறாள், எழுப்பட்டுமா?" என்றான் அதைக்கேட்டுப் பிரதாபன் ஆச்சரியமடைந்து, சாணக்ய பண்டிதன் ஸ்திரீகளின் சுபாவத்தை வர்ணித்தபொழுது "ஸ்திரீயின் நித்திரை புருஷனுடைய நித்திரையைவிடப் பதினறுபங்கு அதிக பலமுள்ளது" என்று சொல்லியுள்ள சுலோகத்தைத் தனக்குள் நினைத்துக்கொண்டு வெளிப்படையாய், "இவ்வளவுடன் நிறுத்துவோம் நீ போய்ப் படுத்துக்கொள். இன்று ராத்திரி நாம் பட்ட சிரமத்துக்கு அளவே இல்லை. நானும் படுத்துக்கொண்டு இளைப்பாற வேண்டும்" என்று சொல்ல, ராமசரணன் படுத்துக்கொள்ளப் போய்விட்டான். அப்பொழுது இராத்திரி முழுவதும் சென்றுவிடவில்லை. அவ்வீட்டிலும், வீட்டுக்கு வெளியே பட்டணத்திலும் எங்கும் நிச்சப்தமும் அந்தகாரமுமாகவே இருந்தன. பிரதாபன் சந்தடி செய்யாமல் தனிமையாய் மெத்தைமேலேறித் தன் படுக்கையறை யண்டைபோய்க் கதவைத் திறந்து பார்க்கையில், சைவலினி பிரதாபனது படுக்கையிற் படுத்துக்கொண்டிருந்தாள். பிரதாபனது படுக்கையறையில் சைவலினியை விட்டு வந்த சங்கதியை அவனுடன் ராமசரணன் சொல்ல மறந்து போனன்.

பிரதாபன் ஜொலித்துக்கொண்டிருக்கும் தீபத்தின் வெளிச்சத்திற் பார்த்தான். தனது வெள்ளைப்படுக்கை விரிப்பின்மேல் அன்றலர்ந்த வெண்மலர்க் குவியலைப் பரப்பியது போலவும், மழைகாலத்தில் கங்காநதியின் அசைவற்ற வெண்ணீர் விரிவின்மேல் மலர்ந்த வெண்டாமரைக் குவியலைத் தூவியதுபோலவும் அவன் கண்களுக்குத் தோற்றியது. என்ன நிச்சலமான மனோஹர சௌந்தரியம்! ஒருதடவை பார்த்துவிட்ட பிரதாபனுக்குத் தன் கண்களை அந்தக் காட்சியினின்றும் பறிக்க முடியவில்லை. அவன் தன் எதிரில் தோன்றும் வடிவழகைக்கண்டு மோஹித்தாவது, அல்லது இந்திரிய சுகாபேக்ஷையால் வெல்லப்பட்டாவது கண்களைப்பறிக்க முடியாமல் நிற்கவில்லை. கேவலம் தன்னையும் அறியாமலே மந்திரத்தாற்

கட்டுண்டவன்போல் அசைவற்று நின்ருன். பல நாளைய ஞாபகம் அவன் மனதில் அச்சமயத்தில் மந்திரத்தால் எழுந்து திரண்டு வருவது போல் வந்து தோன்றின. திடீரென்று அவனது ஞாபகமாகிய கடல் கடையப் பெற்று அலைமேல் அலைவீசி யெறியலாயிற்று.

சைவலினி உண்மையாய் நித்திரை செய்துகொண்டிருக்கவில்லை. அவள் கண்களை மூடிக்கொண்டு, தனக்கு நேர்ந்த அவஸ்தையைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தாள். அவள் கண்மூடியதைக் கண்டு ராமசரணன் அவள் தூங்கிவிட்டாள் என்று நினைத்துக்கொண்டு போய்விட்டான். அவள் சிந்தையில் ஆழ்ந்திருந்தபடியால் பிரதாபன் வந்த காலடியரவமும் அவளுக்குக் கேட்கவில்லை. பிரதாபன் துப் பாக்கியும் கையுமாய் மேலே வந்திருந்தான். வந்ததும் துப்பாக்கியைச் சுவரின்மேல் சாற்றினுன். அவன் சொற்பம் மனத்தடுமாற்றத்தி னுல் துப்பாக்கியை அஜாக்கிரதையாய் வைத்திருந்தமையால் அது நழுவிக் கீழே விழுந்துவிட்டது. அந்தச் சத்தத்தைக் கேட்டுச் சைவ லினி கண்ணைத் திறந்து பார்த்தாள். பிரதாபன் எதிரே நிற்கிருன். அவள் கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்து உரத்த குரலுடன் “ இது என்ன ! நீ யார் ?” என்று கேட்டாள்.

அவள் அப்படிக் கேட்டுவிட்டு அப்படியே படுக்கையில் மூர்ச் சையாகி விழுந்துவிட்டாள். பிரதாபன் கொஞ்சம் நீர் கொண்டுவந்து மூர்ச்சையாயிருந்த சைவலினியின் முகத்திற் றெளித்தான். அப்பொ ழுது அவளது முகமண்டலம் பனிநீராடிய பத்மமெனப் பிரகாசித்தது. முகத்தில் தெளிக்கப்பெற்ற நீரானது அவளது கூந்தலை நனைத்து அவிழ்ந்து தொங்கும்படி செய்து அந்தக் கூந்தலின் நுனியினின்றும் துளித்துளியாய்ச் சொட்டிக்கொண்டிருக்க, அக்கூந்தலானது பத்மத் தைச் சுற்றியிருக்கும் பாசியை நிகர்த்து விளங்கியது.

சீக்கிரத்தில் சைவலினிக்கு ஸ்மரணை உண்டாயிற்று. பிரதாப னும் எழுந்து நின்ருன். அவள் அவனைப் பார்த்து “ நீ யார் ! பிர தாபனு ? அல்லது என்னைச் சோதிப்பதற்காக மனுஷ்யதேகம் தாங்கி வந்த தேவதையா ?” என்று சாந்தமான குரலுடன் கேட்டாள்.

பிரதாபன்.—ஆம். நான் பிரதாபன்தான்.

சை.—கப்பலில் உன் குரல் கேட்டது போல் எனக்கு ஒரு சமயம் தோற்றியது. ஆனல் அது வெறும் சித்தப்பிரமையா யிருக்கலா மென்றும் உடனே தோற்றியது. தூக்கத்தின் நடுவில் நான் எழுந்திருந்தபடியால் அது சித்தப்பிரமையாய் இருக்கலாமென்று பிசகாய் நினைத்தேன்.

இவ்வாறு சொல்லிவிட்டு, சைவலினி ஒரு பெருமூச்செறிந்து மௌனமுற்றிருந்தாள். அவள் முற்றிலும் விழித்துக்கொண்டு விட்டதைக்கண்டு பிரதாபன் மௌனமாய் அவ்விடத்தினின்றும் வெளியே வந்து கொண்டிருக்கையில், சைவலினி அவனைக் கூப்பிட்டு "அதற்குள் போகவேண்டாம்" என்ருள்.

பிரதாபன் வேண்டா வெறுப்பாய்த் திரும்பினன்.

சை.—நீ ஏன் இங்கே வந்தாய்?

பிர.—இது என் ஜாகை.

வாஸ்தவத்தில் சைவலினிக்கு இன்னம் ஞாபகம் சரியாய் வரவில்லை. அவளுக்குள் தீமூண்டு எரிந்துகொண்டிருந்தது. நகம் வரையில் அவள் நடுங்கினுள். தேகமுழுவதும் மயிர்க்குச்செறிந்தது. சிறிது நேரம் அவள் பேச்சற்றுச் சும்மாவிருந்து கொஞ்சம் ஞாபகம் வந்தவுடன் மறுபடியும் பேசத் தொடங்கினுள்.

சை.—"யார் என்னை இங்கே கொண்டுவந்தது?"

பிர.—நாங்கள் தான் கொண்டுவந்தோம்.

சை.—"நாங்களா!" அந்த 'நாங்கள்' யார்?

பிர.—நானும் என் சேவகனும்.

சை.—என்னை ஏன் நீங்கள் இங்கே கொண்டு வந்தீர்கள்? என்னல் உங்களுக்கென்ன ஆகவேண்டியது?

இதைக் கேட்டதும் பிரதாபன் ரோஷங்கொண்டு, "உன்னைப் போன்ற கொடும்பாவியின் மூஞ்சியிலேயே விழிக்கலுமாகாது. உன்னை மிலேச்சனுடைய கையிலிருந்து காப்பாற்றினதற்கோ 'என்னை யேன் இங்குக் கொண்டுவந்தாய்?' என்கிருய்" என்ருன்.

சைவலினி கோபத்துக்குப் பதில் கோபத்தைக் காட்டாமல் கண்ணீரால் தழதழத்த குரலுடன் வினயமாய் வசனிக்கலாயினுள்.

"மிலேச்சனுடைய சகவாசம் எனக்கு அவ்வளவு நாசகரமான தென்று உனக்குத் தோன்றியிருந்தால், அந்த க்ஷணத்தில் அங்கேயே என்னை மாய்த்துவிடுகிறது தானே? துப்பாக்கியும் உன் கையிலிருந்ததே." என்றாள்.

பிரதாபன் இன்னம் அதிக கோபங்கொண்டு "அதைக்கூட செய்துவிட்டிருப்பேன். ஆனால் ஸ்திரீஹத்திதோஷம் வந்து சூழுமே என்றஞ்சி சும்மா இருந்துவிட்டேன். ஆயினும் உனக்கு மரணமே நல்லது." என்றான்.

அதைக்கேட்டுச் சைவலினி அழுதாள். பிறகு அழுகையை அடக்கிக்கொண்டு 'ஆமாம், எனக்குச் செத்துப்போவதுதான் நல்லது. ஆனால் பிறர் என்னை எப்படிச் சொன்னாலும் சொல்லட்டும், நீ அப்படிச் சொல்வது சரியன்று. எனக்கு இப்படிப்பட்ட துன்பம் உண்டானது யாராலே? உன்னால்தானே. என் வாழ்க்கையை இவ்வளவு அந்தகாரமயமாய்ச் செய்தது யார்? நீதானே. யார்பொருட்டு நான் சுகத்தின் ஆசையையெல்லாம் துறந்து நன்மை தீமைகளின் வேற்றுமையையும் அறியாமல் போனேன்? உன்பொருட்டுத் தானே. யார் பொருட்டு நான் இவ்வளவு துயரத்துக்காளாகினேன்? உன் பொருட்டுத்தானே. யாருக்காக நான் சம்சார கிருத்தியங்களில் சித்தத்தைச் செலுத்த முடியாமல் போனேன்? உனக்காகத்தானே. அப்படியிருக்க நீ என்னை வைவது நியாயமா?" என்றாள்.

பிரதாபன்.—"நீ மஹாபாபி. ஆகையால்தான் நான் உன்னை வைகிறேன். அது என் தோஷமா? எந்த விதத்திலும் நான் நிர்த்தோஷி என்பது ஈசுவரனுக்குத் தெரியும். இப்பொழுது சில காலமாக நான் உன்னைக் கண்டால் சர்ப்பத்தைக் காண்பதுபோல் பயந்து, நீ இருக்கும் வழிகூட வரக்கூடாதென்று நான் தீர்மானங்கொண்டிருப்பதும் அந்த ஈசுவரனுக்குத்தான் தெரியும். உன்னுடைய விஷத்துக்கஞ்சியே நான் வேதக்கிராமத்தை விட்டொழிந்தேன். உன்னுடைய மனமே தோஷத்துக்குக் காரணம். உன்னுடைய பிரவர்த்தியே தோஷமுள்ளது. நீ துராத்மா, ஆகையால் என்னையும் தூஷிக்கிறாய். நான் உனக்கென்ன தீங்கு செய்தேன்?

சைவலினி கோபத்தால் கண் சிவந்து கர்ஜித்தெழுந்து கூறலாயி னாள். 'என்ன தீங்கு செய்தேன் என்று கேட்கிறாய்? என் அப்படிப் பட்ட உன் ஒப்பற்ற திவ்ய சுந்தரத் திருமேனியை என் கண்முன் அடிக்கடிக் காட்டினாய்? அரும்பு வெடித்து விம்மிப் புஷ்பிக்கும் என் யௌவன காலத்தில் உனது வடிவழகின் மோகவிளக்கை என்முன் ஏன் ஏற்றி வைத்தாய்? நான் ஒரு முறை மறந்துபோனதை ஏன் மறு படியும் மூட்டிவிட்டாய்? ஐயோ உன்னை நான் ஏன் பார்த்தேன்? பார்த்தேனே, நீ ஏன் கிடைத்திருக்கக்கூடாது? கிடைக்கவில்லையே, நான் ஏன் செத்திருக்கக்கூடாது! உன்னுடைய அழகை நான் நினைத்து நினைத்து என்வீடும் எனக்குக் காடாய்ப்போன சங்கதி உனக்குத் தெரியாதா? எப்படியாவது உன்னை யடையலாம் என்ற திடமற்ற தூரமான ஆசையை வைத்துக்கொண்டே நான் வேதக்கிராமத்தில் உன் சம்பந்தத்தை அகற்றிக்கொண்டு வீட்டையும் துறந்து வந்தே னென்பது உனக்குத் தெரியாதா; இல்லாவிட்டால் இந்தப் பாஸ்டர் எனக்கு எம்மாத்திரம்?"

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பிரதாபன் தலையில் இடிவிழுந் ததுபோலாயிற்று. அவன் தேள் கொட்டுண்டவன் போல் துன்ப முற்று அவ்விடத்தினின்றும் விரைவாய் ஓடினான்.

அந்தச் சமயத்தில் வீட்டுவாசலில் ஒரு பெரிய அமளிகுமளி உண்டாயிற்று.

ஏழாவது அத்தியாயம்

கால்ஸ்டனும் ஜான்ஸனும்

ராமசரணன் சைவலினியை அழைத்துக்கொண்டும் பிரதாபன் கப்பலை விட்டுப் போனபிறகு, பிரதாபனது அடியினால் கையொடி ந்து கப்பலின் மேல்தட்டில் உட்கார்ந்திருந்த தெலுங்க சிப்பாய் மெல்ல எழுந்து கரைக்கு வந்தான். வந்து, சைவலினியின் பல்லக்கு சென்ற வழியே நடந்து சென்றான். வெகுதூரத்தினின்று பல்லக்கைக் குறி வைத்துக்கொண்டே அதன் பின்னால் சென்றான்.

அவன் ஜாதியில் மஹம்மதியன். அவன் பெயர் பஃகாவுல்ல

கான். க்ளைவுடன் முதலில் பங்காளத்துக்குச் சென்ற சிப்பாய்கள் சென்னை ராஜதானியிலுள்ள தெலுங்கதேசத்தைச் சேர்ந்தவர்களா யிருந்தமையால், பங்காளத்தில் அக்காலத்தில் இங்கிலீஷ்காரரிடம் இருந்த சகல சுதேச சிப்பாய்களுக்கும் தெலுங்க சிப்பாய்களென்றே பெயர் வழங்கிவந்தது. அதுமுதல் ஹிந்துஸ்தானத்திலுள்ள அநேக ஹிந்துக்களும் முசல்மான்களும் இங்கிலீஷ் சேனையிற் சேர்ந்திருந் தார்கள். பஃகாவுல்லாவின் சொந்தமான ஊர் காஜிபூருக்குச் சமீ பத்திலிருந்தது.

பஃகாவுல்லா ஒருவருக்கும் தெரியாமல் அந்தப் பல்லக்கைப் பிரதாபன் இருப்பிடம் வரையில் பின்றொடர்ந்து சென்று சைவலினி பிரதாபன் வீட்டில் பிரவேசித்ததைப் பார்த்துக்கொண்டு அவ்விடத்தி னின்றும் அமியட் துரையின் இருப்பிடத்துக்குச் சென்றான்.

அப்பொழுது அங்கே பெரிய அமளிகுமளியாயிருந்தது. கப்ப. லின் சமாசாரம் அவ்வளவும் அமியட்டுக்குத் தெரிந்துவிட்டது அன்றிராத்திரி நடந்த அக்கிரமங்களைச் செய்த குற்றவாளிகளைப் பற்றித் துப்பறிந்து சொல்வோருக்கு ஆயிரம் ரூபாய் வெகுமதி யளிக் கிறேனென்று அமியட் துரை வாக்குத்தத்தம் செய்திருப்பதாகப் பஃகாவுல்லாவுக்குத் தெரியவரவும், அவன் அமியட் துரையினிடம் போய் நடந்த சமாசாரம் முழுவதையும் சொல்லிக் கடைசியில் "அந்தக் கள்ளனுடைய வீட்டையே காட்டுகிறேன்" என்றான். அதைக் கேட்ட தும் அமியட்டின் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. நெறிந்திருந்த புருவம் நிமிர்ந்தது. அவன் நாலு சிப்பாய்களையும் ஒரு 'சார்ஜண்டை' யும் பஃகாவுல்லாவுடன் கூட்டியனுப்பிக் குற்றவாளிகளைப் பிடித்துத் தன்முன் கொண்டுவந்து நிறுத்தவேண்டுமென்று கட்டளையிட்டான். அதற்குப் பஃகாவுல்லா, "அப்படியானால் எங்களுடன் இரண்டு இங்கி லீஷ்காரரை யனுப்பவேண்டும். பிரதாபராயன் சாக்ஷாத் சயிதானைத் தவிர வேறில்லை. அவனைப் பிடிக்க இத்தேசத்தாரால் ஆகாது" என, அமியட்டின் உத்தரவின்பேரில் கால்ஸ்டன், ஜான்ஸன் என்னும் இரண்டு ஆங்கிலேயர் ஆயுதபாணிகளாய்ப் பஃகாவுல்லாவுடன் கூடிச் சென்றார்கள்.

அவர்கள் புறப்பட்டுப் போகும் சமயத்தில், கால்ஸ்டன் பஃகாவுல்லாவை நோக்கி "அந்த வீட்டுக்குள் நீ எப்பொழுதாவது போனதுண்டா?" என, பஃகாவுல்லா 'இல்லை' என்றான்.

அதன்மேல் கால்ஸ்டன் ஜான்ஸனுடன்: "அப்படியானால் சில மெழுகுவர்த்திகளும் தீக்குச்சிகளும் எடுத்துக்கொள். ஹிந்துக்கள் எண்ணெய் செலவழிந்து போய்விடுமென்று விளக்கு வைத்திருக்க மாட்டார்கள்" என, ஜான்ஸன் சில மெழுகுவர்த்திகளும் தீக்குச்சிகளும் ஜேபில் எடுத்து வைத்துக்கொண்டான்.

பிறகு அவர்கள் ஆங்கிலேயப் படையெழுச்சியின் கம்பீரமான அடிவைப்புடன் நடந்து ராஜமார்க்கத்தைக் கடந்து சென்றார்கள். ஒருவராவது ஒரு சொல்லேனும் பேசவில்லை, நாலு சிப்பாய்களும் சார்ஜண்ட்டும் பஃகாவுல்லாவும் பின்னணியாய்ச் சென்றார்கள். நகரக்காவற்காரன் வழியில் அவர்களைப் பார்த்துப் பயந்து அப்புறம் போய்விட்டான். கால்ஸ்டனும் ஜான்ஸனும் சிப்பாய்களுடன் நிச்சப்தமாய்ப் பிரதாபனது வீட்டண்டை போய்க் கதவை மெல்லத் தட்டினார்கள். ராமசரணன் எழுந்து கதவைத் திறக்க வந்தான்.

ராமசரணன் ஒப்புயர்வற்ற சேவகன். கைகால் பிடிப்பதிலும் எண்ணெய் தேய்ப்பதிலும் அவன் தேர்ந்த கை. வேஷ்டியைக் கட்டிக்கொள்வதற்குத் தகுந்தமாதிரி கொசுவிக் கொடுப்பதிலும் அலங்காரம் செய்வதிலும் அவன் மகா சமர்த்தன். வீட்டில் விளக்குகளையும் மற்ற சாமான்களையும் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்வதில் அவனுக்கு இணையே இல்லை. பேரம்பேசுவதில் அவனைப் போன்றவரைக் காண்பது துர்லபம். ஆனால் இவையெல்லாம் அவனுடைய சாமானிய யோக்யதைகளே. கோல் சுழற்றுவதில் மகா கெட்டிக்காரனென்று மூர்ஷிதாபாத்து முழுவதும் அவன் பிரசித்தி பெற்றிருந்தான். ஹிந்துக்களுக்குள்ளும் முசல்மான்களுக்குள்ளும் அவனது புஜபலத்துக்கெதிர் நிற்கமுடியாமல் தரையில் சாய்ந்து விழுந்தவர் அநேகர். துப்பாக்கியை எடுத்துக் குறிதப்பாமல் வேகமாய்ச் சுடுவதில் அவனுக்கு எவ்வளவு சாமர்த்தியம் இருந்ததோ அதற்குக் கங்கா ஜலத்தில் கொல்லப்பட்ட பாஸ்டரின் இரத்தமே சாட்சி.

ஆனால் இவை யெல்லாவற்றையும் விட அவனிடத்தில் சமயத்துக்கு வேண்டிய குணம் ஒன்றிருந்தது. அதாவது தந்திரோபாயமே. அவன் குள்ள நரியைப்போன்ற தந்திரசாலி. ஆயினும் அவன் தன் எஜமானனிடத்தில் ஒப்பற்ற பக்தி விசுவாசம் பாராட்டி வந்தான்.

ராமசரணன் கதவைத் திறப்பதற்காக வந்துகொண்டே " இந்த இராத்திரி வேளையில் கதவை யிடிப்பவர் யாராய் இருக்கலாம்? சந்நியாசியோ? இருந்தாலும் இருக்கலாம். யாராயிருந்தாலும், நாமும் இன்று கொஞ்சம் புனைசுருட்டு செய்திருப்பதால் ராத்திரிவேளையில் அஜாக்ரதையாய்க் கதவைத் திறந்துவிடக் கூடாது" என்று யோசித்து, அவன் ஒன்றும் பேசாமல் சிறிதுநேரம் கதவண்டை வந்து நின்று, வெளியிலிருப்பவர் பேசுவதைக் கவனிக்கலாயினன். யாரோ இருவர் அவனுக்குத் தெரியாத அந்நியபாஷையில் ரஹஸ்யமாய்ப் பேசியது அவனுக்குக் கேட்டதும், ராமசரணன் அந்தப் பாஷைக்கு 'இண்டில் மிண்டில்'என்று பெயர் வைத்தான்.இக்காலத்தியவர் அதை இங்கிலீஷ் என்று சொல்லுகிறார்கள். ராமசரணன் தனக்குள் "கொஞ்சம் பொறு அப்பனே ; கதவைத் திறக்கவேணுமானால் கையில் துப்பாக்கி இருக்க வேணும். இண்டில் மிண்டிலில் நம்பிக்கை வைப்பவன் அம்மாஞ்சியே யல்லவோ? " என்று சொல்லிக்கொண்டு மறுபடியும் "ஒரு துப்பாக்கி போதாதென்று தோன்றுகிறது. எஜமானனை எழுப்பலாம்" என்று நினைத்துப் பிரதாபனை யெழுப்புவதற்காகத் திரும்பிச்சென்றான்.

இதற்குள் இங்கிலீஷ்காரரின் பொறுமை போய்விட்டது. "என் காத்துக் கொண்டிருக்கிறாய்! விடேன் ஒரு உதை. இங்கிலீஷ் உதைக்கு முன்னும் இந்தியக்கதவு நிற்குமோ? " என்றான் ஜான்சன்.

கால்ஸ்டன் ஒரு உதை உதைத்தான். கதவு படபடவென்று சப்தித்தது. அதைக்கேட்டு ராமசரணன் ஓடிவந்தான். அந்தச் சத்தம் பிரதாபன் காதில் பட்டு, அவனும் ஓடிவந்தான். கதவு இன்னம் அசையாமலிருந்தது.

ஜான்சன் இன்னொரு உதை கொடுத்தான். கதவு படீரென்று ஒடிந்து விழுந்தது.

அப்பொழுது அந்த இங்கிலீஷ்காரர் "இப்படியே இந்தியா

முழுவதும் இங்கிலீஷ்காரரால் உதையுண்டு புரண்டு விழட்டும்” என்று சொல்லிக்கொண்டு விஜயகோலாஹலத்துடன் வீட்டினுட் பிரவேசித்தனர். சிப்பாய்கள் அவர்களுக்குப்பின் நுழைந்தனர்.

பிரதாபன் ராமசரணனை மெத்தைப் படிக்கட்டிற் பார்த்தான். அவனுடன் ராமசரணன் ரகசியமாய் “நீங்கள் போய் இருட்டில் ஒளித்துக்கொள்ளுங்கள். இந்த வெள்ளைக்காரர்கள் அம்பட்டன் பண்டசாலையிலிருந்து வந்தவர்கள் போலிருக்கிறது” என்றான். ராமசரணன் அமியட் என்பதை அம்பட்டன் என்று உச்சரிப்பது வழக்கம்.

பிர.—“ஏன் பயப்படவேண்டும் ?”

ராம.—அவர்கள் எட்டுபெயர் வந்திருக்கிறார்கள்.

பிர.—நான் போய் ஒளித்துக்கொண்டு விட்டால் வீட்டில் வந்திருக்கும் பெண்டுகளின் கதி என்னவாகும்? நீ போய் என் துப்பாக்கியைக் கொண்டுவா.

ராமசரணன் ஆங்கிலேயரை நன்றாய் அறிந்திருப்பானாகில், பிரதாபனுக்கு ஒளித்துக்கொள்ளும்படி புத்திசொல்லி யிருக்கமாட்டான். மேற்சொல்லிய சம்பாஷணை நடந்துகொண்டிருக்கும்போதே அந்த வீடு முழுவதும் திடீரென்று பிரகாசத்தால் நிறைந்தது. ஜான்ஸன் மெழுக்குவர்த்தி ஒன்றேற்றி அதை ஒரு சிப்பாயினிடம் கொடுத்தான். அந்த விளக்கின் வெளிச்சத்தில் இரண்டுபேர் மெத்தைப்படிக்கட்டில் நிற்பதை ஆங்கிலேயர் கண்டனர்.

ஜான்ஸன் பஃகாவுல்லாவை நோக்கி “என்ன இவர்கள் தானே?” என்று வினவினான்.

பஃகாவுல்லாவுக்குச் சரியாய்ச் சொல்ல முடியவில்லை. அவன் பிரதாபனையும் ராமசரணனையும் ஓர் இருண்ட இரவு வேளையில் பார்த்திருந்தமையால் அவர்களை இப்பொழுது தெளிவாயறிந்து கூற முடியவில்லை. ஆனால் ஒடிந்துபோன அவனது கையில் நோய்ப் பொறுக்கமுடியவில்லை. அதற்கு யாரையாவது பலிவாங்கி விட வேண்டுமென்று அவன் மனம் துடித்தது. ஆகவே அவன் வேறு யோசனை ஒன்றும் செய்யாமல் “ஆமாம், அவர்கள்தான் ” என்றான்.

உடனே அந்த ஆங்கிலேயர் புலியைப்போல் பாய்ந்து மெத்தைப்

படி வழியாய்ச் சென்றார்கள். ஆங்கிலேயர் தொடர்ந்து வருவதை ராம சரணன் பார்த்துப் பிரதாபனது துப்பாக்கியை எடுத்து வருவதற்காகத் தலைகால் தெரியாமல் மெத்தைப்படியின்மேல் ஏறினான்.

அதை ஜான்ஸன் பார்த்துவிட்டுத் தன்னிடத்திலிருந்த பிஸ்டோலை எடுத்துக் குறிபார்த்துச் சுட்டான். ராமசரணனது காலிற் குண்டுபட்டது. அவன் அதற்கப்புறம் அடியெடுத்து வைக்கவும் சக்தி யற்றவனாகித் தபீலென்று தரையில் விழுந்தான்.

பிரதாபன் நிராயுதனாயிருந்தான். அவனுக்கு ஓடிப்போவது இஷ்டமில்லை, அன்றியும் ஓடிப்போகப் பிரயத்தனப்பட்ட ராமசரண னுக்கு நேர்ந்த கதியையும் பார்த்தான்.

பிரதாபன்.—நீங்கள் யார்? இங்கே வந்த விசேஷமென்ன?

ஜான்ஸன்.—நீ யார்?

பிரதாபன்.—நான் பிரதாபராயன்.

பஃகாவுல்லாவுக்கு அந்தப் பெயர் ஞாபகத்திலிருந்தது. பிரதா பன் கப்பலில் துப்பாக்கியும் கையுமாய் இறுமாப்புடன் நின்றுகொண்டு, "கேளுங்கள், என் பெயர் பிரதாபன்" என்று கர்ஜித்தது அவன் மனத் தில் நன்றாய்ப் பதிந்திருந்தது. உடனே பஃகாவுல்லாவானவன் "எஜ மான்மாரே, அந்த ஆள்தான் கலகக்காரர்களின் தலைவன்" என்று உரத்துக் கத்தினான்.

பிரதாபனுடைய ஒரு கையை ஜான்சனும் மற்றொரு கையைக் கால்ஸ்டனும் பிடித்துக்கொண்டார்கள். இனித் திமிறிக்கொண்டு போகப்பார்ப்பது வீண் என்று பிரதாபனுக்குத் தோன்றியது. ஆகவே அவன் யாதொன்றும் பேசாமல் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண் டான். சார்ஜண்டு தான் கொண்டுவந்திருந்த கைவிலங்கை யெடுத்துப் பிரதாபனது கைகளிற் பூட்டினான். அப்பொழுது கால்ஸ்டன் கீழே விழுந்திருந்த ராமசரணனைச் சுட்டிக்காட்டி "அந்தப பயலை யேன் விட்டு விடுகிறீர்கள்!" என, ஜான்ஸன் அவனைப் பிடித்துக்கொள் ளும்படி இரண்டு சிப்பாய்களுக்குக் கட்டளையிடவே, அவர்கள் ராம சரணனைப் பரபரவென்று பிடித்திழுத்தார்கள்.

இந்தச் சந்தடியைக் கேட்டுத் தலனியும் குல்சமும் தூக்கத்தி

விருந்து திடுக்கிட்டெழுந்தார்கள். தாங்களிருந்த அறையின் கதவைச் சொற்பமாய்த் திறந்து வைத்துக்கொண்டு அதன் மூலமாய் எட்டிப் பார்த்து நடந்ததையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களது படுக்கையறை மெத்தைப்படிக்கு அடுத்திருந்தது.

ஆங்கிலேயர் ராமசரணனைப் பிடித்திழுத்துக்கொண்டு இறங்கியபொழுது சிப்பாயின் கையில் வைத்திருந்த விளக்கின் பிரகாசமானது சொற்பமாய்த் திறந்திருந்த கதவின் வழியாய் நீலமணிபோல் ஒளிரும் தலனியின் கண்களில் தற்செயலாய் விழ, பஃகாவுல்லா அந்தக் கண்களைக் கண்டு உடனே "அதோ பாருங்கள் பாஸ்டர் துரையின் பீபி இருக்கிறாள்" என்றான்.

கால்ஸ்டன்.—பலேபேஷ் : அவள் எங்கே?

பஃகாவுல்லா மேற்சொன்ன கதவைக் காட்டி "அதோ, அந்த அறையில்தான்" என்றான்.

ஜான்ஸனும் கால்ஸ்டனும் அந்த அறைக்குட் பிரவேசித்துத் தலனியையும் குல்ஸமையும் பார்த்து "நீங்கள் என்னுடன் வரவேண்டும்" என்றார்கள்.

தலனியும் குல்ஸமும் பயத்தாலும் திகிலினாலும் அப்படியே என ஒப்புக்கொண்டு அவர்களின் பின் சென்றார்கள்.

அந்த வீட்டில் இப்பொழுது சைவலினி ஒருத்தி மாத்திரமே தனியே இருந்தாள். அவளும் நடந்த வெல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

எட்டாவது அத்தியாயம்

பாபத்தின் விசித்திர கதி

முஹம்மதிய மாதர்கள் சொற்பம் திறந்திருந்த தம் படுக்கையறையின் கதவின் வழியாய் எவ்வாறு எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார்களோ, அவ்வாறே சைவலினியும் தானிருந்த விடத்தில் காரியமாயிருந்தாள். அம்மூவரும் மாதர்கள். ஆகவே ஸ்திரீஜனங்களுக்குச் சகஜமாய் உண்டாகும் ஆவலானது அம்மூவரையும் வருத்தியது.

அத்துடன் ஒரு பெரிய திகிலும் பயமும் அவர்கள் மனத்தைப் பிடித்துக்கொண்டது. ஆனல் பயத்தின் சுபாவமென்ன வென்ன வென்ருல், எது நமக்குப் பயத்தை உண்டாக்குகிறதோ அந்த வஸ்துவையே அது அடிக்கடிப் பார்க்கவேண்டுமென்கிற ஆவலை உண்டாக்குகின்றது, அத்தகைய ஆவலினல் சைவலினியும் தூண்டப்பட்டு ஆதிமுதல் அந்தியம் வரையில் நடந்ததையெல்லாம் பார்த்தாள். எல்லாரும் வீட்டைவிட்டுப் போய்விடவே தான்மாத்திரம் தனிமையாய் இருப்பதைச் சைவலினி கண்டு மஞ்சத்தில் உட்கார்ந்துகொண்டு பின் வருமாறு சிந்திக்கலாயினள்.

"இப்பொழுது என்ன செய்யலாம்? நானே தனிமையாயிருக்கிறேன், ஆனல் அதிலென்ன பயம்? இந்தப் பூமியில் நான் எதைக் கண்டு பயப்படவேண்டும்? மரணத்தைவிட வேறு விபத்து கிடையாதே? மரணம் வரவேண்டுமென்று இரவும் பகலும் தானே வேண்டியழைப்பவள் எதைக்கண்டு பயப்படவேண்டும்? ஐயோ எனக்கேன் அந்த மரணம் வரக்கூடாது? தற்கொலை வெகு சுலபம் போல் தோன்றுகிறது. ஆனல் வாஸ்தவத்தில் அது அவ்வளவு சுலபமா? இத்தனை நாள் ஜலத்திலேயே வாசமாயிருந்தேனே. ஒரு நாளாவது அதில் விழுந்து பிராணனை விடலாமென்று எனக்குத் தைரியமுண்டாகவில்லையே. இராத்திரி வேளையில் எல்லாரும் தூங்கிக்கொண்டிருக்கையில், நான் மெல்ல எழுந்துபோய் ஜலத்தில் விழுந்திருந்தால் யார் வேண்டாமென்று தடுத்திருப்பார்கள்? ஒருவேளை பாராக்காரர்கள் பார்த்துத் தடுத்திருக்கலாம். அதெல்லாம் மெய்தான், நான் பிராணனை விடுவதற்கு யாதொரு பிரயத்தனமும் செய்யவில்லையே. சாக வேண்டுமென்ற இச்சைமாத்திரம் இருந்ததே யொழிய அதற்காகப் பிரயத்தனம் ஒன்றும் செய்யவில்லை. அப்பொழுதும் எனக்குக் கொஞ்சம் ஆசையிருந்தது. ஆசையிருந்தால் சாவதற்கு மனம் வருகிறதா? ஆனல் இன்றைக்கோ? ஆமாம். இன்றுதான் நான் சாவதறகுச் சரியான நாள். ஆனல் பிரதாபனைக் கட்டிக்கொண்டு போய் விட்டார்களே,—அவன் கதி என்ன வாயிறறோ, அது தெரியாமல் நான் எப்படிச் சாவேன்? பிர்தாபனுக்கு என்ன சம்பவிக்குமோ?

என்ன சம்பவித்தாலும் எனக்கென்ன? பிரதாபன் யார் எனக்கு? நான்தான் அவன் கண்ணுக்குக் கொடும்பாவியாய்விட்டேனே, அவன் யார் எனக்கு? யாரோ, எனக்குத் தெரியாது. ஆனல் அவன்தான் சைவலினி என்னும் விட்டிற்பூச்சியை ஆகர்ஷிக்கும் எரிகிற அக்நி. அவன்தான் இந்தச்சம்சார வாழ்க்கையாகிற பாலைவனத்திலே எனக்கு அருங்கோடை காலத்தில் உண்டாகும் முதல் மின்னலொளிபோல் இலங்கினன். அவனே எனக்கு மிருத்யுவுமானன். ஐயோ! நான் ஏன் என் வீட்டைவிட்டு மிலேச்சனுடன் ஓடிவந்தேன்? சுந்தரி வந்து கூப்பிட்டாளே, அப்பொழுதாவது அவளுடன் திரும்பிப் போயிருக்க லாகாதா? இவ்வாறு நினைத்து நினைத்துக்கையால் தலையில் அடித்துக் கொண்டு அழத்தொடங்கினள். அப்பொழுது வேதக்கிராமத்திலுள்ள வீட்டின் ஞாபகம் அவள் மனத்தில் உண்டாயிற்று. அவ்வீட்டின் புறக் கடைச் சுவரோரத்தில் அவள் தானே தன்கைகளால் வைத்துவளர்த்த பாரிஜாதமரமும் அதன் உச்சியிலுள்ள உன்நதமான கிளைகள் இரத்த வர்ணமான புஷ்பங்களுடன் கூடிச் சுவருக்கு மேலாக ஓங்கி நீலநிற மான ஆகாயத்தை அளாவி யசைந்தாடுவதும், அக்கிளைகளில் வண்டு களும் சிறுபறவைகளும் அடிக்கடி வந்து வதிவதும் அவள் மனத்தில் படிந்தன. இன்னும், அங்குள்ள துளசிமாடமும், அதைச்சுற்றிலும் நன் ருய் மெழுகிக் கோலமிடப் பெற்றுப் பிரகாசிக்கும் பூஜைமேடையும், வீட்டில் வளரும் பூனையும், கூட்டில் இருக்கும் பேசும் பறவையும், வீட்டின் பக்கத்தில் உள்ள இனிய கனி தரும் பெரிய மாமரங்களும் இவையெல்லாம் அவள் மனமாகிய சித்திரப்படத்திலே தீட்டப்பட்டு விளங்கின. ஆகா! அவள் மனக்கண்ணின் முன்னே இனிய சுகாநு பவங்களை நினைப்பூட்டும் சித்திரங்கள் வரையப்பெற்ற விசாலமான சித்திரப்படம் விரிக்கப்பட்ட பான்மையை என்னென்று வர்ணிப் போம்!

அவள் எத்தனைதரம் வீட்டுமாடியின் மேலேறி உட்கார்ந்து கொண்டு, மாசற்ற நிலாகாயத்தின் அழகைப் பார்த்தாநந்திப்பாள்? எத்தனை சுகந்தம் வீசும் அலர்ந்த வெண்மலர்களை அவள் தெளிந்த நீரில் கழுவி சந்திரசேகரனுடைய பூஜைக்காகப் பூக்குடலைகளில்

எடுத்து வைத்திருப்பாள்! எத்தனை தரம் பீமா புஷ்கரணியின் கரையிலே சுகமாய் வீசும் சுகந்த மந்த மாருதத்தை அவள் அடிக்கடி அனுபவித்திருப்பாள்! அந்த ஜலத்தில் உண்டாகும் சிற்றலைகள் குமிழி யிட்டுப் பளிங்குபோற் பிரகாசிக்கும் நுரையைமேலே வாரி இறைப் பதையும் அவள் எத்தனைதரம் பார்த்திருப்பாள்! அந்தப் புஷ்கரணி யின் கரைகளிலே குயில் கூவுவதையும் எத்தனைதரம் கேட்டிருப் பாள்!

அவள் மறுபடியும் பெருமூச்செறிந்து சிந்திக்கலாயினாள்: "வீட் டைவிட்டு வெளியே வந்ததும் பிரதாபனைப் பார்க்கவேண்டுமென்று கருதியிருந்தேனல்லவா? என்றைக்காவது ஒருநாள் புரந்தரபுரத்துப் பண்டச்சாலைக்குத் திரும்பிப் போவேன்; பிரதாபனுடைய வீடும் பண்டசாலைக்குச் சமீபத்திலிருப்பதால், பண்டச்சாலையின் ஜன்னலண் டை உட்கார்ந்துகொண்டு என் கடைக்கண் வலையை வீசிப் பிரதாப னாகிய பக்ஷியைப் பிடிக்கலாமென்றிருந்தேனே. சமயம் பார்த்து வெள் ளைக்காரனிடத்திலிருந்து தப்பித்தோடிப்போய்ப் பிரதாபனது பாதார விந்தங்களில் சாஷ்டாங்கமாய் விழலாமென்றிருந்தேனே. ஐயோ! நான் கூட்டில் அகப்பட்ட பக்ஷியைப்போலல்லவோ ஆய்விட்டேன்! பிரபஞ்சத்தின் வழிகளொன்றும் தெரியேனே. மனிதன் ஒன்று நினைத் தால் தெய்வம் ஒன்று செய்யும் என்பது எனக்குத் தெரியவில்லையே. இந்த இங்கிலீஷ் கூடானது இரும்பினால் ஆனதாயிற்றே. அதைப் பிள ந்து கொண்டேக எனக்கு வல்லமை ஏது? வீணுக்காக இந்த அபகீர்த்தி யைச் சம்பாதித்தேன், வியர்த்தமாக ஜாதியை இழந்தேன், வியர்த்த மாகப்பரலோக சுகத்தையும்போக்கடித்துக்கொண்டேன்" என்று பிரலா பித்தாள். பாபமானது மேலோங்கிச் சார்த்தகமாகுமா அல்லது பாழாய்ப் போய்விடுமா, அது பாழாய்ப் போய்விடுவதே க்ஷேமகரமல்லவா— என்று யோசிக்கக்கூட அந்தச் சண்டாள சைவலினிக்குத் தோன்ற வில்லை. ஆனால் என்றைக்காவதொருநாள் அவளுக்கும் அது தெரி யாமற் போகாது. அவளும் ஒருநாள் தன் எலும்புவரையிலுள்ள சகலத்தையும் பலிகொடுத்து இந்தப் பாவங்களுக்கெல்லாம் பிராயச்சித் தம் செய்துகொள்வாள். அவ்வளவு கூட நடக்குமென்ற நிச்சயமான

நம்பிக்கை நமக்கில்லாவிட்டால் இந்தப் பாபஸ்வரூபத்தைப் பிரஸ்தாபமே பண்ணியிருக்க மாட்டோம். அவள் மறுபடியும் சிந்திக்கலாயினுள். "பரலோக சுகமா? என்றைக்குப் பிரதாபன்மேல் பார்வையைச் செலுத்தினேனே அன்றைக்கே அந்தச் சுகம் போய்விட்டது. அன்றையதினமே சர்வஞ்ஞனுகிய பரமாத்மா எனக்கு நரகந்தான் பிராப்தியென்று என் தலையில் எழுதிவிட்டான். இந்த ஜன்மத்திலும் நான் நரகத்தில்தான் இருக்கிறேன். என் மனமே எனக்கு நரகம், இல்லாவிட்டால் நான் ஏன் இவ்வளவு துக்கம் அநுபவிக்கிறேன்? என் இருகண்களுக்கும் காலகோடிவிஷம்போன்ற இந்த வெள்ளைக்காரனுடைய சகவாசத்தில் இவ்வளவு காலம் இருக்கும்படி ஏன் சம்பவித்தது? அது மாத்திரமா? என்னுடைய பிரியத்துக்கு விஷயமாயுள்ளவர்கள்கூட என்னுடைய சம்பந்தத்தால் கெட்டுப் போவார்கள்போலிருக்கிறதே. அதனுல் தானுக்கும் பிரதாபன் இந்த அபாயமான அவஸ்தையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறுன். ஐயோ, என் உயிர் ஏன் மாளவில்லை!"

சைவலினி இவ்வாறு சிந்தித்து மறுபடியும் அழுதாள்; சிறிது நேரங்கழித்துக் கண்களைத் துடைத்துக்கொண்டாள், பின்பு புருவத்தை நெறித்தாள், உதட்டைக் கடித்தாள். அப்பொழுது ஒரு க்ஷணிக நேரம், அன்றலர்ந்த ராஜீவமலரை வெட்கச் செய்யும் அவளது முகமானது சினங்கொண்ட சர்ப்பத்தின் விரித்த படம்போல் பயங்கரமான அழகுடன் கூடி விளங்கிற்று. மீண்டும் அவள் தனக்குள்ளேயே "என் உயிர் ஏன் மாளவில்லை?" என்று சொல்லிக்கொண்டாள். இவ்வாறு சொல்லியவுடனே அவள் திடீரென்று தன்மடியிலிருந்து ஒரு பையை எடுத்தாள். அதில் ஒரு கூரிய கத்தி யிருந்தது. அதை உறையிலிருந்தெடுத்துக் கட்டைவிரலில் வைத்துக்கொண்டு கூர் பார்த்து "இந்தக் கத்தியை நான் வீணுகவா கொண்டு வந்தேன்? இதனுல் ஏன் நான் இந்தப் பாழாய்ப்போன மார்பை இத்தனை காலமாகக் குத்திக்கொள்ளாமலிருந்தேன்? ஏதோ சுகமநுபவிக்கலாமென்ற ஆசையினுல்தானே! இப்பொழுதோ—" என்று சொல்லிக்கொண்டே அந்தக் கத்தியின் முனையைத் தன் மார்பில்

வைத்திருத்தினள். கத்தியானது அதே ஸ்திதியில் சொற்ப நேரம் இருந்தது. மறுபடியும் சிந்திக்கலாயினள்: "அன்றைக்கும் இப்படித் தான் இந்தக் கத்தியைத் தூங்கிக்கொண்டிருந்த பாஸ்டரின் மார்பின் மேல் பிடித்தேன். அவனை அன்று நான் கொல்லவில்லை. கொல் லும்படியான தைரியம் உண்டாகவில்லை. இன்றைக்கும் என்னையே மாய்த்துக்கொள்வதற்கு எனக்குத் தைரியமுண்டாகவில்லை. இந்தக் கத்தியின் பயத்தினுல் அந்தக் கொடிய வெள்ளைக்காரனும் அடங்கிப் போய்விட்டான். தான் மாத்திரம் நானிருக்கும் அறைக்குள் வந்திருப்பானாகில், இந்தக் கத்தியினுல் அவனது உயிராவது என் உயிராவது போய்விட்டிருக்குமென்பது அவனுக்குத் தெரியும். அந்தப் பயத்தினுல் அப்படிப்பட்டவன்கூட அடங்கிப்போயிருக்க, இப்பொழுது ஏன் என் கிராதக நெஞ்சம் இதைக்கண்டு அஞ்சாம லிருக்கிறது! நான் சாவேனு? இல்லை, இன்றைக்கில்லை. அப்படி நான் ஒருகால் சாவதாயிருந்தால், முதலில் வேதக்கிராமத்துக்குப் போய்ப் பிறகுதான் சாவேன். அங்கே போய் சுந்தரியுடன், என் ஜாதியை இழந்தேன், குலத்தின் பெயரைக் கெடுத்தேன், ஆனல் என் கற்பு மாத்திரம் அழியவில்லை யென்று சொல்லிவிட்டுச் சாவேன். ஆனுல் அவர் இருக்கிறுரே என் பர்த்தா, அவருக்கு என்ன சொல்லிவிட்டு உயிரை விடுவேன்? இன்னதென்று எனக்கு ஒன்றும் புலப்படவில்லை யே. அதைப்பற்றி நினைக்கும்பொழுதே ஆயிரம் தேள் ஏககாலத்தில் கொட்டினுல் எப்படி நரம்புக்கு நரம்பு சுரீலென்றெரியுமோ அப் படி எரிகிறதே, நான் அவருக்குத் தகுந்த ஸ்திரீயல்ல. அதனுல்தான் அவரை விட்டு வந்துவிட்டேன். அப்படி வந்துவிட்டது அவருக்கு நிரம்ப வருத்தத்தைக் கொடுத்ததோ? அதற்காக அவர் வருத்தப்படு கிறுரோ? இராது, நான் அவருக்கு எவ்வளவு? ஒன்றுமேயில்லை. அவ ருடைய புஸ்தகங்களே அவருக்குச் சகலமும். எனக்காக அவர் துக்கப் படமாட்டார். ஐயோ அவர் இப்பொழுது எப்படி யிருக்கிறுரோ, என்ன செய்கிறுரோ, அதை யாராவது வந்து எனக்குச் சொல்லமாட் டார்களா? அவரை நான் எப்பொழுதும் காதலித்ததில்லை, இனி காத லிக்கவும் போகிறதில்லை. ஆயினும் நான் எவ்விதத்திலாவது அவ

ருக்கு மனவருத்தத்தை உண்டாக்கியிருந்தால், என்னுடைய பாவச் சுமை இன்னும் பாரியாய்விடும். இன்னொரு சமாசாரமும் அவருக்குச் சொல்லவேண்டு மென்றிருக்கிறது, அதற்குப் பாஸ்டரோ இறந்துபோய்விட்டான், எனக்கு யார் சாக்ஷி சொல்வார்கள்? நான் சொன்னாலும் யார் நம்புவார்கள்?"

இவ்வாறு சிந்தித்துக்கொண்டே சைவலினி படுத்துக்கொண்டாள், உதயகாலத்தில் அவளுக்கு நித்திரை வந்தது. அந்த நித்திரையில் அவள் பலவகைக் கெட்ட கனவுகள் கண்டாள். அவள் தூங்கி எழுந்தபொழுது வெகு நேரமாய் விட்டது. திறந்திருந்த ஜன்னலின் வழியாய் சூரிய கிரணங்கள் பிரவஹித்தன. அவள் கண்ணைத் திறந்தாள். கண்ணைத் திறந்து பார்த்த காலையில் அவள் கண்ட காட்சியால் ஆச்சரியமடைந்து பயந்து ஸ்தம்பித்துப் போய்விட்டாள். அவள் சந்திரசேகரரைப் பார்த்துவிட்டாள்.

மூன்றும் பாகம்

புண்ய ஸ்பர்சம்

முதலாவது அத்தியாயம்

ரமாநந்த ஸ்வாமி

மாங்கீரிலுள்ள ஒரு மடத்திலே ஒரு பரமஹம்ஸர் சில தினங்களாக வசித்து வந்தார். அவரது பெயர் ரமாநந்த ஸ்வாமி. ஏற்கெனவே நாம் பிரஸ்தாபித்துள்ள சந்நியாஸி அவருடன் மிகுந்த பயபக்தி விநயத்துடன் பேசிக்கொண்டிருந்தார். அவர் ஸித்த புருஷரென்று அநேகர் நம்பியிருந்தனர். ஞானத்தில் அவர் அத்விதீயர் என்பதற்குக் கிஞ்சித்தும் சம்சயமில்லை. பரத கண்டத்தில் நஷ்டமாய்ப் போன ஞானசாஸ்திரங்களும் விஞ்ஞானசாஸ்திரங்களும் அவருக்குஉள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரியும் என்ற வதந்தியும் உண்டாயிருந்தது. அவர் சிஷ்யனைப் பார்த்துப் பின்வருமாறு பிரசங்கிக்கலுற்றார்.

"கேளப்பா, சந்திரசேகரா! உனக்கு இப்பொழுது கிடைத்துள்ள ஞானத்தை யெல்லாம் நீ ஜாக்கிரதையாய் உபயோகிக்கக் கடவாய். துக்கத்துக்கு ஒருபோதும் உன் மனதில் இடங்கொடாதே. ஏனெனில் உண்மையில் துக்கமென்று தனியாய் ஒரு பொருள் இல்லவே இல்லை. சுகமும் துக்கமும் சமமே. சாமானிய மனிதர்களுக்கு அப்படித் தோன்றுவிடினும் ஞானிகள் அவை இரண்டும் ஒன்றே எனக் கருதுகின்றனர். அப்படிக்கின்றி அவற்றுக்குப் பேதம் உண்டென நீ கருதுவையேல், புண்யாத்மாக்களென்றும் சுகாநுபவிகளென்றும் பெயர் பெற்ற பெரியோர் அனைவரும் நித்ய துக்கிகளே யென்று சொல்லவேண்டிவரும்."

இவ்வாறு ரமாநந்தர் பிரசங்கித்துவிட்டு, அதற்குத் திருஷ்டாந்தமாக முதலில் யயாதி, ஹரிச்சந்திரன், தசரதன் முதலிய பிராசீன ராஜாக்களின் கதைகளைச் சுருக்கமாய் எடுத்துச்சொல்லிப் பிறகு ஸ்ரீராமசந்திரன், யுதிஷ்டிரன், நளன் முதலியவைகளைப்பற்றி சூக்ஷ்மமாய்ப்

பிரஸ்தாபித்தார். மகா புண்யாத்மாக்களாயுள்ள சார்வபௌமர்கள் கூடத் தங்கள் வாழ்நாள் முழுவதும் துக்கமே அநுபவித்தார்களென்றும் அவர்கள் சுகமநுபவித்தது கதாசித்தே (சிறிது காலந்தான்) என்றும் எடுத்துக் காட்டினர். பிறகு வசிஷ்டர், விசுவாமித்திரர் முதலிய மஹர்ஷிகளைப்பற்றி இலகுவாய் உபந்யஸித்து,அவர்கள்கூடத்துக்கமேயநுபவித்தார்களென்று காட்டினர். அசுரர்களால் பீடிக்கப்பெற்றுச் சாபத்திற்குள்ளான இந்திராதி தேவதைகளை உதாரணமாய் எடுத்துச் சொல்லிச் சுவர்க்கலோகங்கூடத் துக்கம்நிறைந்ததென்று நிரூபித்தார். முடிவில் அவர் மனத்தை மோஹிக்கச் செய்யத்தக்கதான தமது அருள் வாக்கைத் திறந்து, அநந்தமாயும் அபரிஜ்ஞேயமாயுமுள்ள எம்பெருமானின் ஹ்ருதய ரஹஸ்யங்களை விள்ளப் புகுந்து புங்காநுபுங்கமாய்ப் பிரசங்கமாரி பொழியத் தொடங்கினர். ஸர்வஜ்ஞனன ஈசுவரன் இவ்வளவில்லா பிரபஞ்சத்தின் முடிவில்லா துக்கங்களுக்காக என்றும் அநுதாபத்துடன் கூடியிருக்கவேண்டியது அவனது கடமையென்றுகாட்டினர். ஸர்வ ஜீவதயாபரனுள்ளவன் இவ்வளவு துக்க ராசியைக் கண்டு அநுதபிக்காமல் இருக்க முடியுமோ ? முடியுமாயின், அவன் எங்ஙனம் சர்வ தயாபரன் ? தயா குணத்துக்கும் துக்கத்துக்கும் நித்ய சம்பந்த முண்டன்றே ? துக்கமில்லாவிடில் தயைக்குப் பிரவிர்த்தியேது ? எவன் அநந்த தயாபரிபூர்ண சுவரூபியோ, அவன் இவ்வளவிறந்த பிரபஞ்சத்தின் அபரிமிதமான துக்கத்தைக் கண்டு எக்காலமும் அநுதபிக்க வேண்டுமல்லவா ? அன்றேல், அவன் சர்வ தயாபரனுதல் யாங்ஙனம்? கடவுள் நிர்விகாரியானமையின், அவருக்குத் துக்கமேது ? என்பையேல், கூறுதும் கேண்மின்:—கடவுள் நிர்விகாரியாயின் அவர் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களில் சம்பந்த மற்றவராகிறார்; அஃதாக, அவரை உலக கர்த்தாவென்றும் நியந்தாவென்றும் கூறுவதற்கியலாது. கர்த்தாவும் நியந்தாவுமான ஒருவர் உளரேல் அவர் நிர்விகாரராயிருக்க முடியாது. துக்க ஸ்வரூபியாகவே இருத்தல்வேண்டும். ஆனல் அதுவும் அஸங்கதம், கடவுள் நித்யாநந்த ஸ்வரூபியானமையாலென்க. ஆகையால் துக்கமென்பதே கிடையாதென்று சித்தாந்தமாயிற்று.

“ துக்கமென்பதொன்று உளதென்று ஒப்புக்கொள்ளுமிடத்து,

இந்தச் சர்வ வியாபகமாயுள்ள துக்கத்தின் நிவாரணத்துக்கு உபாய மொன்றும் இல்லையோ? இல்லவேயில்லை. ஆனால் ஒவ்வொருவரும் பரஸ்பர துக்கத்தை நிவர்த்திக்க முயல்வரேல், அது நிச்சயமாகவே நிவர்த்தியாகும். பகவானே பிரபஞ்சத்திலுள்ள பிராணிகளின் துக்க நிவர்த்திக்காக அல்லும் பகலும் வேலையாயிருப்பதைப் பார். இந்த ஸம்ஸார துக்க நிவர்த்தியினாலே ஈசுவரனது சோகத்துக்கும் நிவர்த்தியுண்டாகின்றது. ஜீவப்பிராணிகளின் துக்க நிவாரணமே தேவர்களின் முக்கியமான தொழில்; அதில்தான் அவர்களது தெய்வ சுகமெல்லாம் இருக்கிறது. இல்லாவிடில் இந்திரியாதி விகார சூன்யர்களாயுள்ள தேவர்களுக்கு வேறு சுகமே கிடையாதென்க" என்று பிரசங்கித்துப் பின்னர் மஹர்ஷிகளின் பரோபகார சீலத்தைப் புகழ்ந்து பீஷ்மன் முதலிய மஹாவீரர்களின் உதார குணத்தை வர்ணித்துக் கொண்டாடினர். யார் பரோபகாரிகளோ அவர்களே சுகிகளென்றும், ஏனையோர் எல்லாம் சுகிகளல்லரென் றும் விளக்கிக் கூறினர். அதன் பின்னர் ரமானந்த ஸ்வாமிகள் லோகோபகாரத்தின் பெருமையைப் பலவாற்றாலும் வியந்து கூறத் தொடங்கினர். சுருதி ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களையும் மற்று முள்ள சாஸ்திரங்களையும் கடைந்து புங்காநுபுங்கமாய் பிரமாணங்களை யெடுத்துக்காட்டி ஜஞ்ஞாமாருதமாய்ப் பிரசங்கித்தார். சப்த சாஸ் திரக்கடலைக் கடைந்து ஆழ்ந்த கருத்துக்கள் நிரம்பிக் கர்ணாமிருதமா யுள்ள பல நூறு வாக்கிய பரம்பரைகளைக் கோர்த்து மாலையாகக் கட்டலாயினர். அவர் கல்விக் களஞ்சியத்தையெல்லாம் கொள்ளை கொண்டு, சொன்னயம் பொருணயம் நிரம்பி மனோஹரமான அலங் காரங்கள் செறிந்து சரச மதுரமாயுள்ள சுலோகத்திரள்களை ஒன் றொன்றாய் வாரி வாரிப் பிரயோகித்தார். கடைசியாக அவற்றைச் சுற்றித் தமது ஒப்பற்ற அருள் விலாசப் பேரொளியுடன் திகழும் ஞானபரிவேஷத்தை விரித்தார். அவரது மதுரமான கண்டத்தினின் றும் ஸ்பஷ்டோச்சாரணத்துடன் வெளிவந்த அவ்வபூர்வ வாக்கியங் கள் சந்திரசேகரனுடைய செவிகளில் தூரியநாதம்போல் தொனித் தன. அவ்வாக்கியங்கள் ஒரு க்ஷணம் மேக கர்ஜ்ஜனம்போல் கம்பீரமா

யும் அடுத்த க்ஷணம் வீணுகானம் போல் லலிதமாயும் சப்தித்தன சந்திரசேகரன் விம்மிதமுற்று தன்னை மறந்து நின்றான். அவனது சரீரம் முழுதும் மயிர்க்குச்செறிந்தது. அவன் எழுந்து ராமாநந்த ஸ்வாமிகளின் பாததூளியைப் பக்தியுடன் சென்னிமேற்கொண்டு "என்னை ஆட்கொள்ள வந்த ஐயனே, இன்றுமுதல் அடியேன் தேவரீரிடத்தில் இந்த மந்திரத்தில் தீக்ஷை பெறுவேன்" என்றான்.

ரமாநந்த ஸ்வாமிகள் சந்திரசேகரனை ஆலிங்கனம் செய்து கொண்டார்.

இரண்டாவது அத்தியாயம்

நூதன பரிசயம்

முன் சந்நியாஸி எடுத்துக்கொண்டுபோன கடிதம் இதற்குள் நவாபின் சந்நிதானத்தில் கிரமமாய்ப் போய்ச் சேர்ந்தது. தலனி இருக்கும் இடம் நவாபுக்குத்தெரிந்தது. அவளையும் குல்ஸமையும்போய் அழைத்துவரும் பொருட்டுப் பிரதாபராயன் வீட்டுக்குப் பல்லக்குகள் அனுப்பப்பட்டன.

அப்பொழுது சூரியோதயமாகி அதிக நேரமாய்விட்டது. சைவலினியைத் தவிர்த்து வீட்டில் வேறொருவருமில்லை. அவளைப் பார்த்ததும் நவாபின் அநுசரர்கள் இவள்தான் பேகம் என்று கருதினர்.

அவர்கள் சைவலினியுடன் 'நீங்கள் எங்களுடன் கூடக் கோட்டைக்கு வரவேண்டும்' என்றார்கள். உடனே அவளுக்குத் திடீரென்று ஒரு துரெண்ணம் உண்டாயிற்று. ஆசையின் பெருமைகளைப் பிரசங்கிப்பதில் கவிகள் பித்துப் பிடித்தவர்போல் அளவுக்கு மிஞ்சி வர்ணிக்கிறார்களன்றோ? ஆசையானது ஸம்சாரத்தில் அநேக சுகங்களுக்குக் காரணபூதமாயிருப்பது உண்மையேயாயினும், ஆசைதான் துக்கத்துக்கும் மூலம். எத்தனை பாவங்கள் செய்யப்படினும் அவையெல்லாம் இலாபத்தின் ஆசையினாலேயே செய்யப்படுகின்றன. சற்கருமங்கள் மாத்திரமேதான் அத்தகைய உத்தேசத்துடன் செய்யப்படுகின்றனவில்லை. எவர்கள் சுவர்க்கம் கிடைக்கவேண்டுமென்ற

ஆசையுடன் கருமங்கள் புரிகின்றனரோ, அவர்களது கருமங்கள் சற் கருமங்கள் ஆகா. இப்பொழுது சைவலிநியும் அத்தகைய ஆசையினு லேயே மயங்கி, யாதொரு ஆக்ஷேபமும் சொல்லாமல் பல்லக்கில் ஏறினுள்.

அவளை ஒரு கோஜா முதலில் கோட்டைக்குள் அழைத்துக் கொண்டு போய்ப் பிறகு அந்தப்புரத்தில் நவாபினிடம் அழைத்துச் சென்ருள். நவாபு அவளைப் பார்த்தான்; தலனி யல்லள்; தலனி கூட அவ்வளவு அற்புதமான அழகுள்ளவளல்லளென்று நவாபு கண் டான். அதுவுமன்றி அவளைப்போன்ற புவன மோஹினியான சர்வாங்க சுந்தரி தன் அந்தப்புரத்தில் எங்கும் இல்லையென்றும் கண்டான்.

நவாப் அவளை "நீ யார்?" என்று கேட்டான்.

சை.—நான் பிராமண ஸ்திரீ.

ந.—நீ யேன் இங்கே வந்தாய்?

சை.—ராஜ சந்நிதானத்தின் சேவகர்கள் என்னை இங்கே அழை த்து வந்தார்கள்.

ந.—உன்னைப் பேகமென்று நினைத்து அழைத்து வந்து விட்டார் கள், பேகம் என் வரவில்லை?

சை.—அவள் அங்கே இல்லை.

ந.—பின் எங்கே அவள்?

கால்ஸ்டனும் ஜான்ஸனும் தலனியையும் குல்ஸமையும் பிரதாப னது வீட்டிலிருந்து பிடித்துக்கொண்டு போனபொழுது சைவலிநி அதைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவர்கள் யாரென்பது அவளுக் குத் தெரியாது. வேலைக்காரிகளாகவாவது, வேசையராயாவது இருக் கலாமென்று நினைத்தாள். ஆனுல் நவாபின் சேவகர்கள் அந்த வீட்டில் தலனி இருக்கிருளென்றும், அவர்கள் சைவலிநிதான் அந்தப் பேகம் என்று நினைத்து நவாபு அழைத்துவரச் சொன்னதாகவும் தெரிவித்த பொழுதுதான், பேகத்தை வெள்ளைக்காரர்கள் பிடித்துக்கொண்டுபோய் விட்டார்களென்று சைவலிநிக்குப் புலப்பட்டது. இப்பொழுது நவாபு இப்படிப்பட்ட கேள்விகள் கேட்கத்தொடங்கவே அவள்பாடு யோசனை யில் விழுந்துவிட்டது.

அவள் பதில் பேசாமல் மௌனமுற்றிருப்பதை நவாபு கண்டு "அவளை நீ பார்த்ததுண்டா?" என்றான்.

சை.—ஆகா பார்த்ததுண்டு.

ந.—எங்கே பார்த்தாய்?

சை.—நேற்றிராத்திரி நாங்கள் இருந்த இடத்தில்.

ந.—அது எங்கே? பிரதாபராயன் வீட்டிலா?

சை.—ஆமாம், மஹாராஜா.

ந.—அங்கேயிருந்து பேகம் எங்கே போனாள் தெரியுமா?

சை.—இரண்டு வெள்ளைக்காரர்கள் அவளைப் பிடித்துக்கொண்டு போனார்கள்.

ந.—என்ன சொன்னாய்?

சைவலினி முன் சொன்னதையே மீண்டும் சொன்னாள். நவாபு மௌனமுற்றான். உதட்டைக் கடித்துத் தாடியைப் பிய்த்துக்கொண்டு குர்க்கன் கானை அழைத்து வருமாறு கட்டளையிட்டான். மறுபடியும் சைவலினியுடன் சம்பாஷிக்கத் தொடங்கி, "வெள்ளைக்காரர்கள் பேகத்தை என் பிடித்துக்கொண்டு போனார்கள், உனக்குத் தெரியுமா?" என்றான்.

சை.—தெரியாது.

ந.—அப்பொழுது பிரதாபன் எங்கே இருந்தான்?

சை.—அவனையும் அவர்கள் கூடவே பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள்.

ந.—அந்த வீட்டில் இன்னும் யாராவது இருந்தார்களா?

சை.—சேவகன் ஒருவனிருந்தான். அவனைக்கூடப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள்.

ந.—அவர்களை யேன் பிடித்துக்கொண்டு போனார்கள் தெரியுமா?

இதுவரையில் சைவலினி உண்மையே பேசிவந்தாள். இப்பொழுது பொய் சொல்லத் தொடங்கி 'இல்லை, எனக்குத் தெரியாது' என்றாள்.

ந.—பிரதாபன் என்பவன் யார்? அவன் ஊர் எது?

சைவலினி அவனைப்பற்றி உண்மையான வரலாற்றைச் சொன்னாள்.

ந.—அவன் இங்கே எதற்காக வந்தான்?

சை.—சர்க்காரில் உத்தியோகம் சம்பாதிக்கலாமென்று.

ந.—அவன் உனக்கு என்ன வேண்டும்?

சை.—அவன் என்னுடைய பர்த்தா.

ந.—உன் பெயரென்ன?

சை.—ரூபவதி.

அநாயாஸமாய் சைவலினி இந்த விடை பகர்ந்தாள். அந்த எண்ணத்துடன்தான் அந்த மஹாபாபி அங்கே வந்தாள்.

ந.—நல்லது: நீ இனி வீட்டுக்குப் போகலாம்.

சை.—எனக்கு வீடேது? எங்கே போவேன்?

நவாபு ஒரு க்ஷணநேரம் ஒன்றும் தோன்றாமல் சிந்தையிலாழ்ந்திருந்து அடுத்த க்ஷணத்தில் அவளைப் பார்த்து "ஆனால் எங்கே போக வேணுமென்கிறாய்" என்றான்.

சை.—என் புருஷனிடம். தயவுசெய்து அவரிடத்துக்கு என்னை அனுப்பிவிடுங்கள். தாங்கள் ராஜாவாகையால் என் குறையைத் தங்கள் சமுகத்தில் விண்ணப்பம் செய்கிறேன். என் புருஷனை வெள்ளைக்காரர்கள் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். அவரையாவது விடுவியுங்கள். அல்லது, என்னையாவது அவரிடத்துக்கு அனுப்பிவிடுங்கள். தாங்கள் என் முறையைக் காதில் போட்டுக்கொள்ளாது எனக்கு வழி சொல்லாமல் போவீர்களானால் இந்த இடத்திலேயே தங்கள் சந்நிதானத்திலே என் பிராணனை விடுவேன், நான் இங்கே வந்ததின் உத்தேசம் இதுதான்.

அப்பொழுது குர்க்கன் கான் வந்திருக்கின்றானென்று சமாசாரம் வரவே, நவாபு "நல்லது, நீ இங்கேயே இரு. நான் போய் மறுபடியும் வருகிறேன்" என்று சொல்லிச் சைவலினியை விட்டுவிட்டுப் போனான்.

மூன்ருவது அத்தியாயம்

நூதன சித்தப்பிரமை

நவாபு குர்க்கன் கானை நானுவித சங்கதிகளைப்பற்றி விசாரித்து விட்டுப் பிறகு, "இங்கிலீஷ்காரருடன் சண்டைக்குப் போவதுதான் சரியான வழியென்று புலப்படுகிறது. அமியட்டு எனக்குப் பரமசத்துரு வானதால், சண்டை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே அவனைப் பிடித்துவிட வேண்டுமென்று எனக்குத் தோற்றுகிறது. நீ என்ன சொல்லுகிருய்?" என்ருன்.

குர்.—நான் எப்பொழுதும் சண்டைக்குத் தயாரா யிருக்கிறேன். ஆனல் தூதனுக்கு ஒருபோதும் தீங்கு செய்யலாகாது. அவனுக்கு நாம் ஏதேனும் கெடுதி செய்தோமோ, நம்பிக்கை துரோகம் செய்தோமென்ற பழிக்காளாவோம். அதுவுமன்றி—

நவாப்.—நேற்றிராத்திரி அமியட்டு இந்தப் பட்டணத்தில் ஒருவனுடைய வீட்டிற் போய்ப் புகுந்து அங்கிருந்தவர்களைப் பலாத்காரமாய்ப் பிடித்துக்கொண்டு போனுன். என்னுடைய அதிகாரத்துக்குட்பட்ட விடத்திலேயே அக்கிரமம் செய்யும் மனிதனை, அவன் தூதனுயிருந்தாலுங் கூட, நான் ஏன் தண்டிக்கக்கூடாது?

குர்.—அப்படி அவன் செய்திருப்பானுகில், அவனைத் தண்டிக்க வேண்டியது நியாயமே, ஆனல் நான் அவனை எப்படிப் போய்ப் பிடிப்பேன்?

நவாப்.—இப்போதே அவனிருப்பிடத்துக்குச் சில சிப்பாய்களையும் துப்பாக்கிகளையும் அனுப்பி, அவனையும் அவனைச் சேர்ந்தவரெல்லாரையும் ஏன் பிடித்துக்கொண்டு வரக்கூடாது?

குர்.—அவர்கள் இந்தப் பட்டணத்தில் இல்லையே. இன்றைக்கு மத்தியானமே புறப்பட்டுப் போய்விட்டார்களே.

நவாப்.—அதேன் அப்படி? ஒருசமாசாரமும் தெரிவிக்காமலேயா?

குர்.—சமாசாரம் சொல்லுவதற்காக ஹே என்னும் ஒருவனை நிறுத்திவிட்டுப் போயிருக்கிருர்கள்.

நவாப்.—இப்படித் திடீரென்று, நம்முடைய உத்தரவுகூட இல்லாமல், ஓடிப்போவதற்குக் காரணமென்ன? இது சந்தேகமின்றி நமக்கு ஓர் அபசாரமே. இதை வேண்டுமென்றே அவர்கள் செய்திருக்க வேணும்.

குர்.—அவர்களுடைய ஆயுதக்கப்பலைக் காத்துக்கொண்டிருந்த இங்கிலீஷ் உத்தியோகஸ்தனை நேற்றிராத்திரி யாரோ கொன்று விட்டார்களாம். அந்தக் கொலை செய்தது நம்மவர்தானென்று அமியட்டு சொல்லுகிறான். ஆகையால்தான் அவன் கோபித்துக் கொண்டுபோய் விட்டான். இங்கே இருந்தால் உயிருக்கே அபாயம் என்று சொல்லு கிறானும்.

நவாப்.—அந்தக் கொலை செய்தது யார் உனக்குத் தெரியுமோ?

குர்.—பிரதாப ராயன் என்பவன்.

நவாப்.—பஹுத் அச்சா. அவனை நான் காணும்போது நல்ல வெகுமானம் கொடுப்பேன். பிரதாபராய் எங்கே?

குர்.—அவர்களனைவரையும் பிடித்துக்கொண்டு போய்விட்டார் கள்; அவர்கள் இங்கிலீஷ்காரருடன் கூடவே போனார்களோ, அல்லது பாட்னாவுக்கு அனுப்பப்பட்டார்களோ, அது எனக்கு நிச்சயமாய்த் தெரியாது.

நவாப்.—இந்தச் சங்கதிகளையெல்லாம் எனக்கு இதுவரையில் நீ ஏன் தெரிவிக்கவில்லை?

குர்.—நான் இப்பொழுதுதான் கேள்விப்பட்டேன்.

இது பொய். குர்க்கன் கானுக்கு முதலிலிருந்து கடைசிவரையில் நடந்த சங்கதிகளெல்லாம் அப்போதைக்கப்போது தெரிந்துகொண்டே இருந்தன. அவனுடைய அநுமதியின்றி அமியட்டு ஒருகாலும் மாங்கீரைவிட்டுப் போயிருக்கமுடியாது. ஆனால் குர்க்கன் கானுக்கு இரண்டு உத்தேசங்கள் இருந்தன. முதலாவது, தலனி மாங்கீருக்கு வெளியி லிருப்பதே நல்லதென்பது; இரண்டாவது, அமியட்டைக் கொஞ்சம் கைக்குள் வைத்துக்கொண்டிருப்பதே நல்லது, பின்னால் அவனால் உபகாரம் பெற வேண்டிவரும் என்பதாம்.

நவாப் குர்க்கன் கானுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டான்

குர்க்கன் கான் போகையில், நவாபு அவன்மேல் கோணலான கள்ளப் பார்வை செலுத்தி " இந்த யுத்தம் முடிகிறவரையில் உன்னுடன் நான் யாதொன்றும் ஆலோசிக்கப் போகிறதில்லை. இந்த யுத்தத்தில் நீதான் எனக்குப் பிரதானமான ஆயுதம். அது முடிந்ததோ இல்லை யோ, அப்புறம் பார் பயலே, நீ தலனிக்குச் செய்த சதிக்கடனை உன் இரத்தத்தாலேயே தீர்க்கிறேன்" என்று சொல்பவன் போல் காணப் பட்டான்.

அதன்பிறகு நவாபு மீர் முனிஷியை அழைத்துவரச் சொல்லிப் பின்வருமாறு கட்டளையிட்டான் :—

மூர்ஷிதாபாத்திலுள்ள முகம்மத் தக்கிகானுக்கு நீர் உத்திரவு செய்யவேண்டியது யாதெனில்—அமியட்டின் கப்பல் மூர்ஷிதாபாத் தைச் சேர்ந்தவுடன் அமியட்டைப் பிடித்துக் கைதியாக்கி அவன் வசத் தில் கைதியாயுள்ளவர்களை மீட்டு நவாபு சமுகத்துக்கு அனுப்ப வேண்டும். இந்தக் காரியத்தை உபாயத்தால் சாமர்த்தியமாகச் சாதிக்க வேண்டுமேயல்லாது பஹிரங்கமான யுத்தத்தாற் கூடாதென்பதைக் கவனிக்கவும். இந்த உத்தரவைத் தரை வழியாய் ஒரு தூதன் கையிற் கொடுத்தனுப்ப வேணும். அப்பொழுதுதான் அது முன்னதாகப் போய்ச் சேரும்.

நவாபு மேற்கண்டவாறு உத்தரவு செய்துவிட்டு அந்தப்புரஞ் சென்று சைவலினியை அழைத்துவரச் சொன்னான். அவள் வந்த தும் " இப்பொழுது உன் புருஷனை மீட்பது அசாத்தியமாயிருக் கிறது. வெள்ளைக்காரர்கள் அவனைக் கல்கத்தாவுக்குக் கொண்டுபோய் விட்டார்கள். நான் மூர்ஷிதாபாத்துக்கு உத்தரவு அனுப்பியிருக் கிறேன். அங்கே அவர்களைப் பிடித்து விடுவார்கள். நீ இப்பொழுது—" என்று சொல்லி நவாபு முடிப்பதற்குள் சைவலினி கைகளைக் கூப்பிக் கொண்டு நவாப்பைப் பார்த்து " ஸ்திரீயின் வாசாலத்தனத்தைத் தாங் கள் மன்னிக்க வேண்டும். இப்பொழுது ஆட்களை யனுப்பினால், அவர் களைப் பிடித்துவிடக் கூடாதா ? " என்றாள்.

நவாபு.—இங்கிலீஷ்காரரைப் பிடிப்பதற்குச் சொற்ப ஆட்களை அனுப்பினால் போதாது. அதிக ஆட்களை ஆயுத சகிதமாய் அனுப்ப

4099

வேண்டுமானால் பெரிய கப்பல் வேண்டும். நாம் போய்ப் பிடிப்ப தற்குள் இங்கிலீஷ்காரர் மூர்ஷிதாபாத்து போய்ச் சேர்ந்து விடு வார்கள். தவிரவும் கோரயுத்தத்திற்காகப் பிரயத்தனங்கள் நடப் பதைக் கண்டு, இங்கிலீஷ்காரர்கள் தம்மிடத்துள்ள கைதிகளைக் கொன்றுவிட்டால் என்செய்வது? ஆகவே, மூர்ஷிதாபாத்தில் கெட் டிக்காரரான உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்தக் காரியத்தைச் சாமர்த்தியமாய்ச் செய்து முடிப்பார்கள்.

சைவலினி தன் அழகிய முகத்தால் தனக்கு அநேக உபகாரங்கள் உண்டாயிருப்பதை நன்றாய் அறிந்தவள். அவளது சுந்தரமுக விலா சத்தைப் பார்த்துத் தானே நவாபும் அவள் சொல்லிய வார்த்தைகளை நம்பி அவளிடத்தில் விசேஷபட்சம் காட்டினான். இல்லாவிட்டால் நவாபு இவ்வளவு தூரம் அவளுக்கு இந்தச் சங்கதிகளை ஏன் தெளி வாய் எடுத்துரைக்கவேண்டும்? இவற்றையெல்லாம் சைவலினி ஆலோ சித்துத் தைரியமடைந்து கைகளைக் கூப்பிக்கொண்டு பின்வருமாறு மொழியலானாள். "இந்த அநாதையின்பேரில் சமுகத்துக்கு அவ்வளவு கருணை உண்டாயிருக்கும் பட்சத்தில், இவள் செய்யும் இன்னொரு பிரார்த்தனையையும் தயவுசெய்து கேட்கவேண்டும். என் புருஷனுடைய மீட்சி வெகு சுலபம். அவர் மகா தைரியசாலி, அவரிடத்தில் ஆயுதம் மாத்திரம் இருந்திருக்கும் பட்சத்தில், அவரை இங்கிலீஷ்காரர் பிடித் திருக்கவே முடிந்திராது. இப்பொழுதுகூட அவருக்கு ஆயுதங்கள் கிடைக்கும் பட்சத்தில் அவரை அடைத்துவைக்க ஒருவராலும் ஆகாது. அவருக்கு யாராவது ஆயுதங்களை யெடுத்துக்கொண்டுபோய்க் கொடுக் கும்பட்சத்தில் அவர் தாம் தப்பித்துக் கொள்வதுடன் தம்முடன் இருப்பவரையும் தப்பவைப்பார்."

நவாபு (புன் சிரிப்புடன்)—நீயோ கேவலம் வாலிபப்பெண். இங்கிலீஷ்காரரின் சுபாவம் உனக்குத் தெரியாது. இங்கிலீஷ்காரரின் கப்பலில் ஆயுதங்களைக் கொண்டுபோய் அவனுக்குக் கொடுக்கும் தைரி யம் யாருக்குண்டு.

சைவலினி தரையை நோக்கிய பார்வையுடன் தாழ்ந்த குரலில், "தங்கள் அநுமதியுண்டானால் நானே போவேன்" என்றாள்.

இதைக் கேட்டதும் உண்டான சிரிப்பை யடக்க முடியாமல் நவாபு கொல்லெனச் சிரித்தான். அந்தச் சிரிப்பின் சத்தத்தைக் கேட்டுச் சைவலினி புருவத்தை நெறித்துக்கொண்டு "பிரபோ, என் காரியம் சித்தியாகாவிட்டால், என் உயிர் போகப்போகிறது; அதனுல் வேறொருவருக்கும் கெடுதலில்லையே. ஆனல் என் காரியம் கைகூடிவிட்டாலோ நம்மிருவருடைய காரியமும் சித்தியாகுமன்றோ?" என்றாள்.

ரௌத்திராகாரமாய் விளங்கிய சைவலினியின் அழகைக்கண்ட நவாபுக்கு அவள் சாதாரண ஸ்திரீ யல்லவென்று புலப்பட்டது. அவன் தனக்குள் "அவளுக்கிஷ்டமானுல் பிராணனை விடட்டுமே. அவள் கருத்து நிறைவேறினுல், நல்லது. இல்லாவிட்டால், இருக்கவே இருக்கிறான் மஹம்மத் தகி. அவன் மூர்ஷிதாபாத்தில் காரியத்தைச் சாதித்து விடுவான்" என்று சொல்லிக்கொண்டு, வெளிப்படையாய், சைவலினியைப் பார்த்து "நீ தனியே போக முடியுமா?" என்று வினவினான்.

சை.—நானோ பெண். தனியாய்ச் செல்ல என்னுலாகாது. தங்களுக்கு அவ்வளவு பட்சம் இருக்குமானுல், என்னுடன் கூடவரும்படி ஒரு வேலைக்காரப் பெண்ணையும் ஒரு ஜவானையும் உத்தரவு செய்யுங்கள்.

நவாபு சிறிது நேரம் யோசித்துப் பிறகு பலசாலியும் தைரியசாலியுமான மசிபுத்தின் என்கிற நம்பிக்கையுள்ள கோஜா ஒருவனை அழைத்து வரும்படிச்சொல்ல, அந்தக் கோஜாவும் வந்து சலாம்செய்து நின்றான். நவாபு அவனைப்பார்த்து "ஒரு ஹிந்து வேலைக்காரியை அழைத்துக்கொண்டு இந்த அம்மாளுடன் கூடப்போ. அந்த அம்மாள் வேணுமென்கிற ஆயுதங்களை எடுத்துக்கொள். கப்பல் தலைவனிடம் போய் சீக்கிரமாய்ப் போகத்தக்க படவு ஒன்றைப் பேசி ஏற்பாடு செய்துகொண்டு உடனே மூர்ஷிதாபாத்துக்குப் புறப்படு" என்றான்.

மசிபுத்தின்.—என்னுல் ஆகவேண்டிய விசேஷமான வேலை ஏதாவதுண்டோ?

நவாபு.—இந்த அம்மாள் என்ன செய்யச் சொன்னுலும் நீ செய்ய

வேணும். அவளை ஒரு பேகம் (ராஜஸ்திரீ) போல் நினைத்து நீ மரியாதையாய் நடந்துகொள்ளவேண்டும். தலனிபேகத்தைப் பார்த்தால்கூட அழைத்துக்கொண்டுவா.

பிறகு அவ்விருவரும் நவாபுக்கு வழக்கப்படி சலாம்செய்து விடைபெற்றுக் கொண்டார்கள். கோஜா எப்படிச் சலாம் செய்தாஞே அப்படியே சைவலினியும் செய்வதற்காகத் தரையைக் கையால் தொட்டுப் பின்பக்கமாய் அடிவைத்துக்கொண்டு நடந்து செல்வதை நவாபு கண்டு நகைத்தான்.

சைவலினி விடைபெற்றுக்கொண்டு போகையில், நவாபு அவளைப் பார்த்து 'அம்மா, ஞாபகமிருக்கட்டும். எப்பொழுதாவது உமக்குச் சங்கடம் உண்டாகுமாஞல், மீர்காசிமிடம் வாரும்' என்ருன்.

சைவலினி மறுபடியும் சலாம் செய்து, தனக்குள் "அவசியம் வருகிறேன்", வந்தால் ரூபசியையும் அழைத்துக்கொண்டு, எங்களில் எவள் பிரதாபனைப் புருஷஞக வைத்துக்கொள்வதென்னும் வழக்கைத் தீர்க்கும்படி வேண்டிக்கொள்வதற்குத்தான் வரவேண்டும்" என்று சொல்லிக்கொண்டாள்.

மசிபுத்தின் வேலைக்காரியையும் படவையும் தயார்படுத்திக்கொண்டு, சைவலினி சொல்லியபடி, துப்பாக்கி, குண்டு, மருந்து, பிஸ்தோல், கத்தி, பிச்சுவா, முதலிய ஆயுதவகைகளை எடுத்துக்கொண்டான். இவற்றையெல்லாம் எதற்காக எடுத்துக் கொள்ளச் சொல்லுகிருள் என்று கேட்கத் தைரியமில்லாதவஞய் 'இவள் இரண்டாம் * சந்த் சுல்தாஞவாய் இருக்கவேண்டும்' என்று நினைத்துக்கொண்டாள். அன்று ராத்திரியே அவர்கள் படவிலேறிப் புறப்பட்டார்கள்.

---

* சந்த் சுல்தாஞ என்பவள் ஆமத் நகரில் ஆண்ட மகா வீர சூர பல பராக்கிரமமுடைய முகம்மதிய ராணி. மொகலாயப்படைகள் ராஜதானியை எதிர்த்தபோது வெகு தைரியமாய் நின்று அதைக் காத்தாள். தேக முழுவதும் கவசமணிந்து கத்தியெடுத்து மொகலாயப் படைகளுடன் போரிட்டு யுத்தத்திலேயே உயிரைவிட்டாள். மெடோஸ் டேலர் என்ற ஆங்கில நூலாசிரியர் இயற்றிய 'A Noble Queen' "ஓர் உத்தம ராணி" என்ற நாவலில் இவளுடைய சரித்திரம் விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

நான்காவது அத்தியாயம்

அழுகை

சந்திரன் உதயமாகித் தன் அமிருத மயமான கிரணங்களைப் பரப்பிப் பிரகாசித்துக்கொண்டிருந்தான். கங்கையாற்றின் இரு பாரிசத்திலும் வெகுதூரம்வரையிற் பரந்த மணல் வெளிகள் விளங்கின. வெண்ணிலா வெளிச்சத்தில் மணற்குன்றுகள் முன்னிலும் அதிகமான வெண்ணிற வொளியுடன் விளங்க, கங்காஜலமானது இன்னும் அதிக நீலவர்ணமுள்ளதாய்த் திகழ்ந்தது. கங்காஜலம் கனத்த நீல நிறமாயும், கரைகளில் வரிசை வரிசையாயிருந்த தருக்கள் கனத்த பசுமைநிறமாகவும், மேலேயுள்ள ஆகாயமண்டலம் இரத்தினங்களிழைத்த நீலத்தகடுபோலவும் விளங்கின. அப்படிப்பட்ட சமயத்தில் எங்குப் பார்த்தாலும் பரந்து விளங்கும் விஸ்தாரத்தைக் கண்டு சித்தம் சஞ்சலமடைகின்றது. நதியோ அநந்தம், எவ்வளவு தூரம் பார்த்தாலும் அதன் முடிவு தெரியவேயில்லை. அது மனிதரின் விதிபோல் மங்கலாய்த் தோன்றும் தன்மையதாய் இன்னதென்று விளங்காத எங்கேயோ போய்க் கலந்தது. கீழே ஓடும் நதியின் பரப்போ அகண்டம்; பாரிசங்களிலுள்ள மணற்குன்றுகளோ அதனினும் அகண்டம்; தீரத்திலுள்ள தருக்கூட்டமோ கணக்கிலடங்காதது; மேலே ஆகாயமும் அகண்டம்; அதன்கண்ணே ஒளிரும் தாராகணங்களுக்கோ கணக்கே இல்லை. இவற்றையெல்லாம் பார்த்து இத்தகைய விசேஷ சமயத்தில் எந்த மனிதன்தான் தன்னை ஒரு எண்ணிக்கையில் வைப்பான்? இந்த நதீ தீரத்தின் ஓரமாய் அத்தனை தோணிகள் வரிசையாய்க் கட்டப்பட்டு நிற்கின்றனவே, அங்குள்ள மணற்றுளிகளைவிட மனிதன் எந்தவிதத்தில் உயர்ந்தவன்?

அந்தத் தோணிக்கூட்டத்தின் நடுவே பெரிய படகு ஒன்று காணப்பட்டது. அதன்மேல் சிப்பாய்களின் பாரா. இரண்டு சிப்பாய்கள் தோளில் துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு சித்திரப் பதுமைகளைப்போல் அசைவற்று நின்றனர். படகினுள்ளே பலவகை

விலையுயர்ந்த ரத்நகம்பளங்கள், படுக்கைகள், படங்கள், பிரதிமைகள் முதலியவை பளிங்கு விளக்குகளின் வெளிச்சத்தில் சோபித்துக் கொண்டிருந்தன. உள்ளே சில இங்கிலீஷ்காரர் இருந்தனர். அவர்களுள் இருவர் சதுரங்கம் ஆடிக்கொண்டிருக்க, மற்றொருவன் பளிங்குப் பாத்திரத்தினின்றும் சுராபானம் பண்ணிக்கொண்டே படித்துக் கொண்டிருந்தான். இன்னொருவன் வாத்தியம் வாசித்துக்கொண்டிருந்தான்.

திடீரென்று எல்லாரும் திடுக்கிட்டெழுந்தனர். இருந்தாற்போலிருந்து அந்த ராத்திரியின் சாந்தமான மௌனத்தைப் பிளந்து வருவதுபோல் ஒரு விகாரமான அழுகைக்குரல் கேட்டது.

அப்பொழுது அமியட்டு ஒரு வெட்டாட்டம் ஆடி, ஜான்ஸனைப் பார்த்து 'அதென்ன' என்று கேட்க, ஜான்ஸன் அதைக் கவனிக்காமல் வேறெதையோ நினைத்துக்கொண்டு, "யாருடைய ஆட்டம் ஷாஹா வைக்கட்டினது ? என்னுடையதா உன்னுடையதா" என்றுகேட்டான்.

அழுகைக்குரல் முன்னிலும் அதிகமாயிற்று. அந்தக் குரலில் விகாரத்தன்மை யொன்றுமில்லையாயினும், அந்த நீர்ப்பரப்பான பூமியிலே இந்தநிசி வேளையிலுண்டான கூக்குரல் பயங்கரமாயிருந்தது.

அமியட்டு விளையாட்டைவிட்டு எழுந்திருந்தான். எழுந்து நாற்புறமும் சுற்றிப் பார்த்தான். ஒருவரும் தென்படவில்லை. சமீபத்தில் எங்கும் சுடுகாடும் கிடையாது. மணல் வெளியானவிடத்தின் நடுவேயிருந்து அச்சத்தம் உண்டாயிற்று.

அமியட்டு படகினின்றும் இறங்கிச் சத்தம் உண்டான இடத்தை நோக்கிச் சென்றான். சொற்பதூரம் சென்றதும் அந்த மணல் வெளியில் யாரோ தனிமையாய் உட்கார்ந்திருப்பதைக் கண்டான்.

அமியட்டு சமீபத்திற்சென்று பார்க்கையில் ஒரு ஸ்திரீ ஓவென்றலறி யழுதுகொண்டிருந்தாள்.

அமியட்டுக்கு ஹிந்துஸ்தானி நன்றாய்த் தெரியாது. அவன் அந்த ஸ்திரீயைப்பார்த்து "நீ யார் ? என் அழுகிறாய் ?" என்றுகேட்டான்.

அவன் பேசின ஹிந்துஸ்தானி அவளுக்கொன்றும் புரியவில்லை. இன்னும் அதிகமாய்த் தேம்பித்தேம்பி அழத்தொடங்கினாள்.

அமியட்டு எத்தனைதரம் கேட்டும் அவள் ஒன்றும் பேசாமலிருக்கவே, அவளைத் தன்பின்னே வரும்படி கைகை காட்டினான். அவள் கூடவருவதற்காக எழுந்தாள். அமியட்டு வழிகாட்டிக்கொண்டு முன்னே செல்ல, அவள் அழுதுகொண்டு பின்னே சென்றாள். அவள் வேறொருத்தியுமல்லள்,—மகா பாதகியான சைவலினியே.

ஐந்தாம் அத்தியாயம்

சிரிப்பு

படகுக்குத்திரும்பி வந்தவுடன் அமியட்டு கால்ஸ்டனைப்பார்த்து "இவள் மணலில் தனியே உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தாள். நான் சொல்வது அவளுக்குத் தெரியவில்லை. அவள் சொல்லுவது எனக்குத் தெரியவில்லை, நீ அவளைக் கேள்" என்றான்.

கால்ஸ்டனும் அமியட்டைப்போன்ற பண்டிதன்தான். ஆயினும் இங்கிலீஷ்காரருக்குள் அவன் ஹிந்துஸ்தானியில் வல்லவன் எனப் பெயர் பெற்றிருந்தான். அவன் சைவலினியைப் பார்த்து 'நீ யார்?' என்று கேட்க, சைவலினி யாதொன்றும் விடைகூறாமல் அழுதவண்ணமாகவே யிருந்தாள்.

கால்.—என் அழுகிறாய்?

அதற்கும் சைவலினி ஒன்றும் பேசவில்லை. அழுதுகொண்டேயிருந்தாள்.

கால்.—உன் வீடு எங்கே?

சைவலினி முன்போலவே மௌனமாயிருந்தாள்.

கால்.—நீ என் இங்கே வந்தாய்?

சைவலினி பழையபடியே பதில் சொல்லாமல் இருந்தாள்.

கால்ஸ்டன் தான் தோல்வியடைந்து விட்டதாகக் கருதினான். எந்தவிதமாகக் கேட்டாலும் அவள் பதிலுரையாமல் இருப்பதைக்கண்டு இங்கிலீஷ்காரர்கள் அவளைப் புறப்பட்டுப்போகச் சொன்னார்கள். அது

வும் அவளுக்குத் தெரியவில்லை. அந்தவிடத்தை விட்டசையாமல் நின்று கொண்டிருந்தாள்.

அதைப்பார்த்து அமியட்டு 'நாம் சொல்வது அவளுக்குத் தெரியவில்லை. அவள் சொல்வது நமக்கு விளங்கவில்லை. அவள் புடவை கட்டியிருக்கிற மாதிரியைப்பார்த்தால் பங்காள ஸ்திரீயைப்போல் காணப்படுகிறாள். பங்காளி யாராவதிருந்தால் கூப்பிட்டு அவளை விசாரிக்கச் சொல்' என்றான்.

இங்கிலீஷ்காரரின் சேவகர்கள் பெரும்பாலும் பங்காளி முகம்மதியர்களே. அமியட்டு அச்சேவகருள் ஒருவனை அழைத்து அவள் சமாசாரத்தை விசாரிக்கச் சொன்னான்.

அந்தச் சேவகன் அவளை 'நீ ஏன் அழுகிறாய்?' என்று கேட்க, சைவலினி ஒரு பைத்தியச் சிரிப்பு சிரித்தாள். அவளுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதென்று சேவகன் இங்கிலீஷ்காரருடன் சொன்னான்.

அதன்மேல் இங்கிலீஷ்காரர் "அவளுக்கு என்ன வேண்டுமென்று கேள்" என, சேவகனும் அவ்வாறே கேட்டான்.

அதற்குச் சைவலினி 'எனக்குப் பசியாயிருக்கிறது' என்று சொல்ல, அதைச் சேவகன் இங்கிலீஷ்காரருக்குச் சொன்னான்.

"அப்படியானால் அவளுக்குச் சாப்பிட ஏதாவது கொடு" என்றான் அமியட்டு.

சேவகன் இதைக் கேட்டவுடன் அளவுகடந்த சந்தோஷத்துடன், சமையல் செய்வதற்கெனப் பிரத்தியேகமாய் ஏற்படுத்தியிருந்த தோணிக்கு அவளை யழைத்துச் சென்றான். அவனுக்குண்டான சந்தோஷத்துக்குக் காரணம், சைவலினியின் சிறந்த வடிவழகேயாம். அவளோ தனக்கு ஒன்றும் வேண்டியதில்லை யென்றாள். "தயவு செய்து கொஞ்சம் உண்ணுங்கள்" என்று சேவகன் பலவந்தம் செய்ய, அவள், "நான் பிராமணத்தியாயிற்றே. நீங்கள் தொட்ட அன்னத்தை நான் எப்படிச் சாப்பிடுவேன்?" என்றாள்.

அதைக் கேட்டுக்கொண்டு சேவகன் போய் இங்கிலீஷ்காரருடன் சங்கதியைச் சொன்னான்.

"அந்தத் தோணிகளில் எதிலும் பிராமணன் எவனும் இல்லையா?" என்றான் அமியட்டு.

அதற்குச் சேவகன்.—'பாப்பாரச் சிப்பாய் ஒருவன் இருக்கிறான். பாப்பாரக் கைதியும் ஒருவன் இருக்கிறான்" என்றான்.

"அவர்களில் எவனிடத்திலாவது சமைத்த சாதம் இருந்தால் இவளுக்குக் கொஞ்சம் கொடுக்கச்சொல்" என்றனர் இங்கிலீஷ்காரர்.

சேவகன் அவளை முதலில் சிப்பாயினிடம் அழைத்துச் சென்றான். அந்தச் சிப்பாயினிடத்தில் ஒன்றுமில்லை. பிறகு சேவகன் அவளைப் பிராமணக் கைதி வைக்கப்பட்டிருந்த படகுக்கு அழைத்துச் சென்றான்.

அந்தக் கைதி யாரெனில் பிரதாபராயனே. ஒரு சிறு தோணியில் பிரதாபராயன் தனியாய் இருந்தான். காவற்காரர் முன்னும் பின்னும் பக்கத்திலும் பாராக்கொடுத்துக்கொண்டிருந்தனர். உள்ளே இருள் மயமாயிருந்தது.

'ஏ பாப்பான்! இருக்கிறாயா' என்று கூவினான் சேவகன்.

"என்ன வேண்டும்?" என்றான் பிரதாபன்.

"உன் சட்டியில் ஏதாவது சோறு மிகுந்திருக்கிறதா?"

"ஏன்?"

"ஒரு பாப்பாத்தி பட்டினியாயிருக்கிறாள். அவளுக்குக் கொஞ்சம் சோறு போடுகிறாயா?"

பிரதாபனிடத்திலும் சாதம் மிகவில்லை. ஆனால் அவன் அதை ஒப்புக்கொள்ளாமல் "ஆகா, போடுகிறேன், யாரைக்கொண்டாவது என் கைவிலங்கை எடுத்துவிடச்சொல்" என்றான். சேவகன் பாரா கொடுக்கும் காவற்காரனொருவனைப் பார்த்து அந்த விலங்கை எடுத்துவிடும்படிச் சொல்ல, அவன் உத்தரவில்லாமல் விலங்கை எடுக்கமாட்டேனென்றான்.

எனவே உத்தரவு வாங்கிவரும்பொருட்டுச் சேவகன் உடனே விரைந்தோடினான். இன்னொருவருக்காக இவ்வளவு கஷ்டம் யார் படுவார்கள்? அதிலும் இந்தப்பீர்பக்ஷ் துரையின் சேவகன். அவன் ஒருகாலும் மனப்பூர்வமாய்ப் பரோபகாரம் செய்யவே மாட்டான். இந்தப்

பூமண்டலத்தில் வசிக்கும் நானாவித மனித ஜாதிகளுக்குள்ளே இங்கிலீஷ்காரரின் கீழ் ஊழியம் செய்யும் சேவகர்களைப் போன்ற அற்ப ஜனங்கள் கிடையவே கிடையார். ஆனால் இந்தச் சமயம் பீர் பக்ஷுக்கு ஓர் உத்தேசம் இருந்தது. இந்த ஸ்திரீ சாப்பிட்டானவுடன் இவளைச் சேவகர்கள் ஜாகைக்குக் கூட்டிக்கொண்டு போகலாமென் றெண்ணியிருந்தான். அவளுக்குப் போஜன சவுகரியங்களெல்லாம் சரிவர நடக்குமாறு ஏற்பாடுகள் செய்து அவளது தயவைச் சம்பாதிப்பதில் மிக்க ஆவலுள்ளவனாயிருந்தான்.

சைவலினி பிரதாபனது படகின் வெளிப்புறத்தில் நின்றுகொண்டிருந்தாள்—சேவகன் உத்தரவு வாங்கிவரும்பொருட்டு அமியட்டு துரையினிடம் சென்றான். சைவலினி முக்காட்டினால் முகத்தை மூடிக்கொண்டு நின்றிருந்தாள்.

சுந்தர முகத்துக்குச் சகலமும் வசமாகும். அதிலும் அந்தச் சுந்தர முகம் ஒரு யவ்வன மங்கையின் முகமாயிருந்துவிடும் பக்ஷத்தில், அது அமோகமான அஸ்திரமாய் விடுகின்றது. இந்த ஸ்திரீயானவள் ஒப்புயர்வில்லா அழகுடையவள் என்று அமியட்டு கண்டான். அஃது ஒருபுறமிருந்தாலும், அவளுக்குப் பைத்தியமென்று தெரிந்தபொழுது அவளிடத்தில் சிறிது இரக்கமும் கொண்டான்.

ஆகையால் அவன் பிரதாபனது கைவிலங்கை வாங்கி விடும்படிக்கும் படகுக்குள் சைவலினியைப் போக விடும்படிக்கும் 'பாரா' கொடுக்கும் சேவகர்களுக்கு உத்திரவு அனுப்பினான்.

சேவகன் அதைக் கேட்டுக்கொண்டு ஒரு விளக்கு கொண்டு வந்தான். பாராக்காரன் பிரதாபன் விலங்கை எடுத்து விட்டான். பாராக்காரன் துலுக்கனானபடியால், பிரதாபன் அவனைப் படகுக்குள் வராதிருக்கும்படி எச்சரித்துவிட்டு, விளக்கை எடுத்துக்கொண்டு சாதத்தைத் தட்டில் கொட்டுகிறமாதிரி பாசாங்கு பண்ணினான். அவ்விடத்தினின்று தப்பித்துக்கொண்டு ஓடிவிட வேண்டுமென்பது அவன் கருத்து.

சைவலினி உள்ளே சென்றபொழுது சேவகர்கள் வெளியே பாரா கொடுத்துக் கொண்டிருந்தபடியால், உள்ளே நடப்பதை அவர்கள்

பார்க்க முடியவில்லை. அவள் உள்ளே நுழைந்ததும் பிரதாபனண்டை போய் தன் முகத்தை மூடியிருந்த வஸ்திரத்தை நீக்கிவிட்டு அவன் பக்கத்திலே உட்கார்ந்தாள்.

அப்படி அவளைத் திடீரென்று அங்கே கண்டதால் பிரதாபனுக்குண்டான வியப்பும் நடுக்கமும் நின்றவுடன், அவன் சைவலினியை நோக்கியபோது, அவள் தன் கீழுதட்டைக் கடித்துக்கொள்வதைக் கவனித்தான். அவளது முகம் இன்பத்தால் சிறிது மலர்ந்தும், அவளது வதன மண்டலம் ஏதோ ஸ்திரமான பிரதிஞ்ஞையின் அடையாளத்துடன் அமைந்தும் விளங்கின. அவளைப் பார்த்தவுடன் உள்ளபடியே இவள் ஆண்புலிக்குத் தகுந்த பெண்புலிதான் என்று பிரதாபன் எண்ணிக்கொண்டான்.

சைவலினி மிகவும் தாழ்ந்த குரலில் 'கையைக் கழுவிக்கொள். சோற்றுக்கேங்கின பிச்சைக்காரி என்றே என்னை எண்ணினையோ?" என்று பிரதாபன் காதில் சொன்னாள்.

அவள் சொன்னபடியே பிரதாபன் கையைக் கழுவிக்கொண்டிருக்கையில், சைவலினி அவனைப் பார்த்து, "இதுதான் சமயம், ஓடிப்போய்விடு. இப்படியே போய் மூலைப்பக்கமாய் திரும்பு, அங்கே ஒரு படகு இருக்கிறது. அதில் ஏறிக்கொண்டு போய்விடு" என்றாள்.

அதற்குப் பிரதாபன் "நீ முன்னே போகவேண்டும், இல்லாவிட்டால் ஆபத்தில் சிக்கிக்கொள்வாய்" என்றான்.

சை.—ஓடிவிடு, சீக்கிரம். கைமேல் விலங்கேறிவிட்டால் பிறகு தப்பியோட முடியாது. இப்பொழுதே தண்ணீரில் குதி. ஜாலம் செய்யாதே, நான் சொல்வதை இன்றைக்கு ஒரு நாளாயினும் கேள். நான் பைத்தியக்காரியென்று அவர்களுக்கு நம்பிக்கை உண்டாயிருக்கிறது. முதலில் நான் ஜலத்தில் குதிக்கிறேன், என்னை எடுப்பதற்காக நீயும் குதித்துவிடு.

அவள் இவ்வாறு சொல்லி உரக்கச் சிரித்துக்கொண்டு "அந்தச் சோறு எனக்கு வேண்டாம்" என்று சொல்லி யெழுந்தாள். அடுத்த நிமிஷம் அவள் அழுதுகொண்டே வெளியே வந்து "ஐயோ என்னைத் துலுக்கன் சோற்றைத் தின்னச்செய்து விட்டார்களே. ஓ கங்கைத்

தாயே! என்னை உன்னிடத்தில் சேர்த்துக்கொள்" என வீறிட்டு வெள்ளத்தில் குதித்தாள்.

அப்பொழுது "என்ன அது? என்ன அது?" என்று கத்திக் கொண்டு பிரதாபன் வெளியே வந்து பார்த்தான். பாராச்சேவகன் அவனெதிர் சென்று அவனைத் தடுக்க முயன்றான். அப்பொழுது பிரதாபன், "போக்கிரிப்பயலே! ஒரு பெண்பிள்ளை தண்ணீரில் விழுந்து முழுகிப்போகிறாள், நீ சும்மா பார்த்துக்கொண்டிருக்கிறாயா?" என்று சொல்லி அவனை ஒரு உதை உதைக்க, அவன் எட்டுக் குட்டிக்கரணம் போட்டுக்கொண்டு படகிலிருந்து கீழே விழுந்தான். அதற்குள் பிரதாபன் 'ஸ்திரீ ஜாதியைக் காப்பாற்றுங்கள்' என்று கத்திக் கொண்டே நீரில் குதித்தான். நீந்துவதில் நிபுணையான சைவலினி முன்னே நீந்திக்கொண்டு செல்ல, பிரதாபன் பின் சென்றான்.

பிறகு பாராச்சேவகன் "கைதி ஓடிவிட்டான்" என்று இரைந்து துப்பாக்கியைத் தூக்கிப் பிரதாபன்மேல் குறிவைத்தான். அப்பொழுது பிரதாபன் நீந்தத் தொடங்கினான்.

பிரதாபன் திரும்பிப் பார்த்து "நீ அஞ்சவேண்டாம். நான் ஒன்றும் தப்பியோடிவிடப் போகிறதில்லை. இந்த ஸ்திரீயை இழுத்துப் போட வேண்டுமென்பது தான் என் கருத்து. என் கண் முன்பாகவே ஒரு ஸ்திரீ தற்கொலை புரிந்து கொள்வதை நான் எப்படிக் கண்டு சகிப்பேன்? அப்பா, நீயும் ஹிந்துதானே. வேண்டுமென்று ஏன் பிரம்ம ஹத்தி செய்கிறாய்?" என்று சொல்ல, சிப்பாய் துப்பாக்கியைத் தாழ்த்தினான்.

அப்பொழுது சைவலினி எல்லாவற்றிற்கும் கடைசியிலுள்ள படகின் சமீபத்தில் நீந்திக்கொண்டு சென்றாள். அந்தப் படகில் அவள் பார்வை சென்றபொழுது, அவள் திகைத்து நின்றுபோனாள். ஏனெனில் அதே படகில்தான் அவள் இதற்குமுன் சிலகாலம் பாஸ்டருடன் கூடியிருந்தாள்.

சிறிது நேரம் வரைக்கும் அவள் சரீரம் நடுநடுங்க அதைக் கண் கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் அந்த நிலவிலே ஒரு ஆங்கிலேயன் படகின் மேல்தட்டில் ஒரு சிறிய படுக்கையில் பாதி

சாய்ந்தவண்ணமாய்ப் படுத்திருப்பதைக் கண்டாள். சந்திர கிரணங் கள் அவன் முகத்திலே விழுந்தன. அவன் லாரென்ஸ் பாஸ்டர் என்று சைவலினி அறிந்துகொண்டு கோவென்றலறினுள்.

அப்பொழுது பாஸ்டரும் நீந்திக்கொண்டிருந்த ஸ்திரீயைப் பார்த்து அவள் சைவலினியேயென்றறிந்துகொண்டான். அவன் உடனே, "பக்ளோ, பிடியவளை, பிடியவளை, அவள்தான் என் லேடி" என்ருன். பாஸ்டர் இப்பொழுது நோயால் மெலிந்து, வலி குன்றி, படுத்த படுக்கையாய் இருந்தபடியால் இப்புறம் அப்புறம் அசையவும் அவனுல் முடியவில்லை.

அவன் குரலைக் கேட்டவுடன் சைவலினியைப் பிடிப்பதற்காக நாலஞ்சு பேர் நீரில் குதித்தார்கள். அப்பொழுது பிரதாபன் அவர்களுக்கு முன்னே வெகுதூரம் போயிருந்தான். அவர்கள் அவனை நோக்கி "அவளைப்பிடி, அவளைப்பிடி, பாஸ்டர் துரை உனக்கு வெகுமதி அளிப்பார்" என்று கூவினுர்கள். அதைக்கேட்டுப் பிரதாபன் தனக்குள்ளேயே "நானும் பாஸ்டருக்கு முன்ளெரு தடவை வெகுமதி அளித்திருக்கிறேன், இன்னெரு தடவையும் அவனுக்கு வெகுமதி யளிக்கவேண்டுமென்று எனக்கிஷ்டமிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டு, அவர்களைத் திரும்பிப்பார்த்து "நான் அவளைப் பிடித்துவிடுகிறேன். நீங்கள் போகலாம்" என்ருன்.

அவர்களெல்லாரும் அவன் பேச்சை நம்பித் திரும்பிவிட்டனா. எதிரில் நீந்திக்கொண்டு செல்லும் மனிதன் பிரதாபன் என்று பாஸ்டருக்குத் தெரியவில்லை. சமீபத்தில் உண்டான நோயினுல் அவனுக்கு இன்னும் சித்தசுவாதீனமில்லை.

ஆரும் அத்தியாயம்

ஆழமான ஜலத்தில் நீந்தல்

இருவரும் நீந்திக்கொண்டு வெகுதூரம் போய்விட்டார்கள். ஆஹா! என்ன மனோகரமான காட்சி! என்ன சுகமான ஆநந்த சாகரத்தில் அவர்கள் நீந்திக்கொண்டிருந்தனர்! இத்தகைய அகண்ட

வியாபக முள்ளதும், விசால ஹிருதயமுள்ளதும், சிற்றலை வரிசையால் வனப்புற்றதும், நீல நிறமுள்ளதுமான அவ்வாற்றின் மார்பில் மிதந்துகொண்டு சந்திரிகையாகிய சாகரத்தில் மூழ்கிய பிரதாபனது கண்கள் மேலே விளங்கும் ஆகாசமாகிய அநந்த நீலார்ணவத்தை நோக்குதலும், அவன் பின் வருமாறு சிந்திக்கலாயினன். "இந்தக் கடலில் நீந்தும் பாக்கியம் மனிதனுக்கேன் உண்டாகவில்லை? இவ்வம்புதங்களாகிய அலைகளைப் பிளந்து செல்லும் அதிகாரம் அவனுக்கு ஏன் கிடைக்கவில்லை? என்ன பூர்வ புண்ணியம் செய்திருந்தால் இந்த ஆகாசக்கடலை நீந்தும் வாழ்வு எனக்கு வரும்? நீந்துவதா? இந்த மண்ணுலகத்து நதியில் நீந்துவது எவ்வளவு நிஷ்ப்பலமானது? நான் பிறந்தது முதல் இந்தக் கடத்தற்கரிய கால சமுத்திரத்தில் நீந்திக்கொண்டேயிருக்கிறேன். அலைமேல் அலைமோதிக் கொந்தளிக்கும் இந்தக் கடலில் நான் ஒரு திருணம் போல் அவ்வலைகளின் இடையிலகப்பட்டு மிதந்துழல்கின்றேன். இன்னும் என்ன நீந்தல் வேண்டியிருக்கிறது?" அப்போது சைவலிநியின் மனத்தில் நிகழ்ந்த எண்ணமோ—இந்த நீருக்கும் அடித்தலமிருக்கும், நானோ ஆழங்காண முடியாத நீரில் மிதந்து கொண்டிருக்கிறேன்—என்று கருதினள்.

நீ கண்டு களித்தாலும் களியாவிடினும் பிரகிருதியானது தன்வழியைவிட்டு மாறுகிறதே யில்லை. அதன் அழகை மறைக்க ஒருகாலும் முடியாது. நீ எந்தச் சமுத்திரத்தில் நீந்தின போதிலும், அதன் நீல ஜலத்தின் காம்பீர்யம் குறைவதில்லை. அலைகளின் வரிசையும் உடைவதில்லை, தாராகணங்களும் காலமுள்ள வளவும் மின்னிக்கொண்டே தானிருக்கும். கரையிலுள்ள மரங்களும் வழக்கப்படி அசைந்தாடிக் கொண்டுதானிருக்கும். சந்திரக்கிரணங்களும்எப்பொழுதும்போல்ஜலத்திற் படிந்து விளையாடிக்கொண்டே யிருக்கும். ஆஹா, இயற்கை தேவியின் கொடுங்கோன்மை யென்னே! அன்புள்ள தாயைப்போல் உன்னைச் செல்வமாய்ச் சீராட்ட அவள் எப்பொழுதும் சித்தமாயிருக்கிறாள்.

இப்படிப்பட்ட எண்ணங்களெல்லாம் பிரதாபனது மனத்தில் நிகழ்ந்தனவேயன்றி, அவை சைவலிநியின் மனத்தில் தினையளவும் உண்டாகவில்லை. படகில் நோயால் வருந்தி மெலிந்துகிடந்த வெள்

ளேக்காரனுடைய முகத்தைக் கண்ட பிறகு அந்த முகமே அடிக்கடி யும் தோன்றி அவள் மனத்தை வாட்டத் தொடங்கியது. உணர்வற்ற மரப்பாவைபோல் அவள் நீந்திக்கொண்டிருந்தாள். அவளுக்கு மனச் சமாதானமே இல்லை. நீந்துவதில் பிரதாபனும் சைவலினியும் நிபுணரே. ஆயினும் அந்த நீந்துதலில் பிரதாபன் விஷயத்தில் ஆநந்த சாகரம் பொங்கித் ததும்பிற்று.

பிரதாபன்: "சைவலினி—சை!" என்றழைத்தான். சைவலினி திகைத்தெழுந்தாள். அவள் நெஞ்சம் தத்தளித்தது. அவள் குழந்தை யாயிருக்குங்காலத்தில் அவளைப் பிரதாபன் 'சை' யென்று அழைப்ப துண்டு. மறுபடியும் அந்தச் செல்வப் பெயராலேயே இப்பொழுது அழைத்தான். ஆஹா, எவ்வளவு காலம் கழிந்துபோய்விட்டது! வரு ஷத்தைக்கொண்டு காலத்தை அளத்தல் முடியுமோ? முடியாது. ஒவ் வொரு க்ஷண விசேஷத்திலும் உண்டாகும் எண்ணத்தின் இயல்பை யொட்டியே காலத்தின் உண்மையளவு ஏற்படுகின்றது. அந்தச் செல் வச்சொல்லைக் காதில் கேளாத அந்தச் சில வருஷங்களும் சைவலினிக்கு ஒரு மகாயுகம்போல் தோன்றின. இப்பொழுது அந்தச் சத்தத்தைக் கேட்டதும் அவள் அவ்வளவிடக்கூடா ஜலராசியின் நடுவில் கண்களை மூடிக்கொண்டாள். அவள் மனத்தில் சந்திரனையும் நக்ஷத்திரகணங்களை யும் சாக்ஷியாக வைத்துக் கண்களை மூடிய வண்ணமாய்ச் சொல்லலுற் ருள். "பிரதாப, இன்றைக்கும் இவ்வாழமில்லா நதிப்பிரவாஹத்தில் இந்தச் சந்திர பிரகாசம் ஏன் உண்டாகவேண்டும்?" * என்ருள்.

பிரதாபன்.—"சந்திரனு? அல்லவே, சூரியோதயமாய்விட்டதே. சை! இனி நமக்குப் பயமில்லை. நம்மை ஒருவரும் பின்தொடர்ந்து வரக்காணேம்."

"அப்படியானல் கரையேறலாம் வா."

---

* "உலர்ந்துபோயிருக்கும் என் நெஞ்சத்திலே குழந்தைப்பருவத் தின் இனிய நினைவுகளை இப்பொழுதேன் கிளறுகிருய்?" என்பது சைவலினியின் தாற்பரியம். ஆனல் அப்போது உதித்துவரும் சூரி யனைச் சந்திரனுக எண்ணிச் சைவலினி தவருய்ச் சொன்னளென்று பிரதாபன் நினைத்துக்கொண்டான். ஆகையால்தான் "சந்திரனு?" என்று விடை யுரைத்தான்.

"சை!"

"ஏன்?"

"ஞாபகமிருக்கிறதா?"

"என்ன?"

"முன்னொரு நாள் நாம் இந்தப் பிரகாரமே நீந்தினோமே."

சைவலினி அதற்கொன்றும் விடை பகரவில்லை. ஒரு பெரிய மரக்கட்டை பக்கத்தில் மிதந்து வந்தது. சைவலினி அதைக்கைப்பற்றிப் பிரதாபனை நோக்கி, "இதைப் பிடித்துக்கொள், இது உன் பளுவைத் தாங்கும்" என்ருள். பிரதாபன் அதைப் பிடித்துக்கொண்டு சொன்னான்.—

"நீ முழுகமாட்டாமற் போனதும் நான் முழுகிப்போன வகையும் உனக்கு ஞாபகமிருக்கிறதா?"

"ஆஹா, ஞாபகமிருக்கிறது. நீ மறுபடியும் அந்தப் பெயரால் என்னை இன்றிராத்திரி கூப்பிடாதிருந்திருப்பாயானல், நான் அதற்குத் தக்கபடி நடந்துகொண்டிருப்பேன். ஐயோ, என்னை ஏன் அந்தப் பெயரிட்டழைத்தாய்?"

"ஆகவே நான் இஷ்டப்பட்டால் நீரில் விழுந்து முழுகிப்போய் விடுவேன் என்பது உனக்கு நன்ருய்த் தெரியுமே."

சைவலினி பயத்துடன் "பிரதாபா, நீ ஏன் நீரில் முழுகிப்போக வேண்டும்? இந்தக் கரையில் ஏறுவோம் வா" என்ருள்.

"நான் அப்படிச் செய்யப் போகிறதில்லை. இன்றைக்கு என் உயிரை விட்டுவிடத் தீர்மானித்து விட்டேன்" என்று பிரதாபன் சொல்லித் தன் கையில் பிடித்திருந்த மரத்தைத் தளரவிட்டான்.

"ஏன், பிரதாபா?"

"இது விளையாட்டன்று. வாஸ்தவத்திலேயே நான் பிராணனை விடப்போகிறேன். எல்லாம் உன்னைப் பொறுத்திருக்கிறது."

"என்ன வேண்டும், பிரதாபா, சொல்லேன், நீ என்ன செய்யச் சொன்னலும் செய்கிறேன்."

"முதலில் ஒரு சபதம் செய்துகொடு, அப்புறம் வெளியே வருகிறேன்."

" என்ன சபதம், பிரதாபா ? "

சைவலினியும் தான் பிடித்திருந்த மரத்தைத் தளரவிட்டாள். அப்போது அவளது கண்களுக்கு நக்ஷத்திரங்கள் மறைய, சந்திரன் மங்கலான ஒளியுடன் ஒதுங்கி நிற்க, கங்காநதியின் நீலஜலம் நீலநிறமுள்ள நெருப்பென எரியத் தொடங்க, பாஸ்டரென்பவன் உருவின கத்தியுடன் அவள் முன் வந்து நிற்பதுபோலிருந்தது. அவள் மூச்சுத் திணற, " என்ன சபதம், பிரதாபா ? " என்று மறுபடியும் கேட்டாள்.

இருவரும் மரக்கட்டையை விட்டுவிட்டு ஒருவர் பக்கத்தில் ஒருவராய் நீந்திக்கொண்டு சென்றார்கள். கல கல, சல சலவென்று குமிழியிட்டு நீரைக் கிழித்துக்கொண்டு இரைந்து செல்லும் கங்கா நதியின் மத்தியிலே இந்தச் சம்பாஷணை நடந்தது. நாற்புறத்திலும் தெளிக்கப்பட்ட நுரைத்திவலைகளின் நடுவே சந்திரன் மந்தஹாசம் செய்தான். ஆ ! இயற்கையின் கொடுங்கோன்மை யென்னே !

"என்ன சபதம் பிரதாபா?" என்றுமீண்டும் வினவினாள் சைவலினி.

" இந்தக் கங்காஜலம் சாக்ஷியாக—"

" எனக்கு கங்காஜலம் என்ன லக்ஷ்யம் ?"

" ஆனால் உன் மதத்தின் சாக்ஷியாக—"

" எனக்கு என்ன மதம் இருக்கிறது ?"

" ஆனால் என்மேல் ஆணையிட்டுச் சபதம் செய் "

" கிட்டவா, உன் கையை இப்படிக் காட்டு. "

பிரதாபன் கிட்ட நெருங்கினான். வெகு காலம் கழித்துச் சைவலினியின் கையைத் தன்கையில் பிடித்துக்கொண்டான். வெகுநேரம் அவ்வாறு நீரில் மிதந்துகொண்டே செல்வது அவர்களுக்குக் கஷ்டமாய் விட்டது. மறுபடியும் அந்த மரக்கட்டையைப் பிடித்துக்கொண்டார்கள்.

சைவலினி.—" இப்பொழுது என்னவானாலும் கேள். நீ என்ன சபதம் செய்யச் சொன்னாலும் செய்யத் தயாரா யிருக்கின்றேன். ஆஹா ! எத்தனை காலத்துக்கப்புறம், பிரதாபா ? "

" என்மேல் ஆணை வைத்துச் சபதம் செய்; இல்லாவிட்டால் பிராணத்தியாகம் செய்துகொள்ளுகிறேன். எதற்காக இந்தப் பிராணன் இருக்கவேண்டும் ? இந்தப் பாவ வாழ்க்கைச்சுமையைத் தாங்க யாருக்கு

வேண்டியிருக்கிறது? இந்தப் பிராணபாரத்தை இப்படிப்பட்ட சந்திரிகையிலே இந்த ஸ்திரமான கங்காஜலத்திலே இறக்கிவிடும்படி சம்பவித்தால், அதைவிட வேறுசுகம் என்ன இருக்கிறது?"

தலைக்கு நேரே சந்திரன் புன்னகை புரிந்து கொண்டிருந்தான்.

சைவலினி.—"உன்மேல் ஆணையிட்டுச் சபதம்செய்கிறேன். என்ன வேண்டும் சொல்."

"சபதம் செய். என்னைத்தொட்டுச் சபதஞ்செய். என்னுடைய வாழ்வுக்கும் மரணத்துக்கும், என் சுகத்துக்கும் துக்கத்துக்கும் நீயே உத்தரவாதி யென்று சபதஞ்செய்."

"உன்மேல் ஆணையாய் நான் சபதம் செய்கிறேன். நீ சொல்லுகிறபடி இனி என் ஆயுள் உள்ள பரியந்தம் நடப்பது நிச்சயம்."

அப்பொழுது பிரதாபன் அவளை அதிபயங்கரமானதொரு சபதம் செய்து கொடுக்கும்படிக் கேட்டான். அது சைவலினிக்கு மகா கடினமான சபதம், மிகவும் கஷ்டமானது, நிறைவேற்ற முடியாதது, பிராணாந்தகரமானது. அந்தச் சபதம் செய்ய சைவலினியால் முடியவில்லை. அவள் பிரதாபனை நோக்கி, "பிரதாபா, இந்த உலகத்தில் என்னைப்போல் துர்ப்பாக்கியமுள்ளவர் யாராவதுண்டோ?" என்ருள்.

"என், நானிருக்கிறேனே."

"உனக்குச் சம்பத்து இருக்கிறது, பலமிருக்கிறது, புகழ் இருக்கிறது, பந்து மித்திரர்கள் இருக்கிருர்கள். நற்கால நம்பிக்கை யிருக்கிறது, ரூபசியும் இருக்கிருள். எனக்கென்ன இருக்கிறது, பிரதாபா?"

"ஒன்றுமில்லை, ஆகையால் இருவரும் முழுகிப்போய் விடுவோம் வா."

சைவலினி சிறிது நேரம் சிந்திக்கலாயினுள். அதன் முடிவு என்னவெனில், அவளது வாழ்க்கையாகிய வெள்ளத்திலே அப்பொழுது தான் முதல் முதலாகப் பிரதிகூலமான அலைகள் மோதின. "நான் செத்தால் என்ன கேடு? ஆனால் எனக்காகப் பிரதாபனும் ஏன் சாக வேண்டும்?" என அவள் நினைத்து, வெளிப்படையாய், "கரையேறிப் போவோம் வா" என்ருள்.

பிரதாபன் மரக்கட்டையின் ஆதாரத்தை விட்டுவிடவே நீரில்

ஆழ்ந்தான். அப்பொழுதும் அவனது கை சைவலினியின் கரத்தையே பற்றியிருந்தது. சைவலினி ஒரு இழுப்பு இழுக்கவே, பிரதாபன் மேலுக்கு வந்தான். சைவலினி: "அப்படியே சபதம் செய்கிறேன். ஆனால் ஒன்று மாத்திரம் யோசித்துப்பார். எனக்குள்ளதையெல்லாம் போக்கடித்துக்கொள்ளச் செய்கிறாயே. நீ என்னவோ எனக்கு வேண்டியதில்லை. ஆனால் உன்னுடைய ஞாபகங்கூட எனக்கேன் இல்லாமற் போய்விடவேண்டும்?"

பிரதாபன் தன் கையைச் சிவுக்கென்று வாங்கிக்கொண்டான். சைவலினி மறுபடியும் அதை எடுத்துத் தன் கையில் வைத்துக்கொண்டு கண்ணீரால் தழதழத்த குரலுடன் அதிகம்பீரமாகவும் ஸ்பஷ்டமாகவும் பேசலுற்றாள்.

"பிரதாபா, என் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள். நான் சொல்வதை உற்றுக்கேள். பிரதாபா, உன்னைத் தொட்டுச் சபதம் செய்கிறேன்.—உன் வாழ்வுக்கும், சாவுக்கும், உன் சுகத்துக்கும், துக்கத்துக்கும் நானே உத்தரவாதி. இன்னும் கேள் பிரதாபா, உன்மேல் ஆணையிட்டுச் சபதம் செய்கிறேன். இன்று முதல் நான் உன்னை மறந்துவிடக்கடவேன், இன்று முதல் எல்லாவித சுகத்துக்கும் நான் செலவு கொடுத்துவிடுகிறேன், இன்று முதல் என் மனத்தை அடக்கக்கடவேன், இன்றே சைவலினி சாகிறாள்."

சைவலினி தன் கையை இழுத்துக்கொண்டு கட்டை மரத்தை விட்டுவிட்டாள்.

பிரதாபன் தழதழத்த குரலுடன் சொன்னான்: "வா, கரைமேல் ஏறிக்கொள்வோம்."

இருவரும் கரை யேறினார்கள்.

அவர்கள் காலால் நடந்து சிறிது தூரம் செல்லும்போது ஒரு தோணி தென்பட்டது. இருவரும் அதில் இறங்கி அதை வலித்துக்கொண்டு சென்றார்கள். ரமாநந்த ஸ்வாமி அவர்களைக் கண்கொட்டாமல் கவனித்துக்கொண்டிருந்த சங்கதி அவ்விருவரில் ஒருவருக்கும் தெரியாது.

ஆங்கிலேய படவிலிருந்தவர்கள் கைதி தப்பி யோடிவிட்டா

னெனக் கருதினர். அவர்கள் பின்தொடர்ந்து சென்றும், தோணி யானது சீக்கிரத்தில் மறைந்துவிட்டது.

ரூபவதியைப்பற்றின வழக்கு தாக்கலாவதற்கு முன் சைவலினி யின் வியாஜ்யம் தோல்வியடைந்து விட்டது.

ஏழாவது அத்தியாயம்

ராமசரணன் மீட்சி

பிரதாபன் தப்பித்துக்கொண்ட பிறகு, ராமசரணன் மீட்சி சுலப மாய்விட்டது. அவன் ஆங்கிலேய படகில் கைதியாய் இருக்கவில்லை. அவனது குண்டு பாஸ்டரைக் காயப்படுத்திப் பாராச் சேவகனுடைய உயிரை மாய்த்த சங்கதி ஒருவருக்குந் தெரியாது. அவன் யாரோ ஒரு சாமானிய வேலையாள் என நினைத்து, அமியட்டுதுரை மாங்கீருக்குப் பிரயாணமாகும்போது 'நீயும் போகலாம்' என்று அவனுக்கு உத்தரவு கொடுத்துவிட்டு "உன் எஜமான் பெரும் போக்கிரி. அவனைத் தக்க படி தண்டிக்கப்போகிறோம். ஆனால் உன்னைப் பற்றி எமக்கு யாதொரு கவலையும் இல்லை. உனக்கிஷ்டமான இடத்திற்கு நீ செல்லலாம்" என்றான். அதற்கு ராமசரணன் மிகுந்த வணக்கத்துடன் அவனுக்குச் சலாம் செய்து "நான் ஒரு பட்டிக்காட்டு இடையன். எனக்குப் பேச வேண்டிய விதமே தெரியாது. ஆகையால் என்னை மன்னிக்கவேண்டும். எனக்கும் உங்களுக்கும் எந்த விதத்திலாவது பாத்தியமுண்டோ சொல்லுங்கள்" என்றான்.

அவன் சொன்னதின் கருத்தைக் கிட்டவிருந்த ஒருவன் இங்கி லீஷில் எடுத்துச் சொல்ல, அதைக்கேட்ட அமியட்டு "ஏன் அப்படிக் கேட்கிறாய்?" என்றான்.

"இல்லாவிட்டால், என்னுடன் ஏன் நீர் பரிகாசம் செய்ய வேண்டும்?"

"என்ன பரிகாசம் காணும்?"

"நீரே என்காலை ஒடித்துவிட்டு, எனக்கிஷ்டமான விடத்திற்குப்

போகலாமென்கிறீரே,—இதனால் நீர் எனக்கு ‘மச்சான்’* என்றேற் படவில்லையா? நானோ இடையர் குலம். நான் ஒரு வெள்ளைக்காரன் தங் கச்சியைக் கட்டிக்கொண்டால், என்னைக் குலத்தில் சேர்ப்பார்களா?”

இதனுடைய அர்த்தத்தைத் துவிபாஷியார் எவ்வளவு விளக்கி யும், அமியட்டுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஹிந்துக்களுக்குள் வழங் கும் முகஸ்துதி வாசகங்களில் இதுவும் ஒன்றென அவன் எண்ணி னான். இங்கிலீஷ்காரரை மகிழ்விப்பதற்காக ஹிந்துக்கள் அவர்களைத் தாயென்றும், தகப்பனென்றும், தம்பியென்றும் இன்னும் மற்றுமுள்ள உறவு முறைகள் கொண்டாடுவதுபோல், ராமசரணனும் தன்னை ‘மச் சான்’ என்று கௌரவமாய் அழைத்தான் என்றெண்ணிக்கொண்டான். ஆகவே அமியட்டு அதிக அதிர்ப்தி யடையாதவனாய் “உனக்கென்ன வேணும்?” என்று கேட்டான்.

“என் காலைச் சொஸ்தப்படுத்த உத்தரவு பண்ணவேணும்.”

அமியட்டு (புன் சிரிப்புடன்) “நல்லது. சிலகாலம் நீ எங்க ளோடுகூடவே இரு. உன்னைப் பார்த்துக்கொள்ளச் சொல்லுகிறேன்.”

அந்த வார்த்தையை அவனிடத்தில் வாங்கவேண்டு மென்பது தான் ராமசரணனது கோரிக்கை. பிரதாபன் கைதியாய்ப் போய்க் கொண்டிருந்தபடியால், ராமசரணனும் அவனுடன் செல்ல விரும்பி னான். இந்தத் தந்திரத்தால் ராமசரணன் கைதியாகாமல் தன்னிஷ்டப் பிரகாரமே அமியட்டுடன் செல்வதற்கு வழி செய்துகொண்டான்.

பிரதாபன் தப்பியோடின ராத்திரியிலேயே ராமசரணனும் ஒருவருக்கும் தெரியாமல் படகைவிட்டகன்று மெதுவாய்க் கம்பி நீட்டி னான். அவன் போகும்வழியில் அந்த இந்தில் மிந்திலின் (இங்கி லீஷ்காரரின்) தாய் தந்தைகளையும் தங்கை தமக்கைகளையும் தன் வாயில் வந்தபடி வைதுகொண்டே சென்றான். அவனது கால் சொஸ்தமாகிவிட்டது.

---

* ‘மச்சான்’ (=மைத்துனன்; பெங்காலியில் ‘சாலா’ என்பர்) என்பது வங்காளிகளுக்குள்ளும் ஹிந்துஸ்தானிகளுக்குள்ளும் வழங் கும் ஒரு பரிகாசமான ‘வசவு.’ தென்னாட்டிலுள்ள ஹிந்துஸ்தானி பேசும் முகம்மதியருக்குள்ளும் இந்த ‘வசவு’ வழங்குகிறது.

எட்டாம் அத்தியாயம்

மலையின் மேல்

இன்றிரவு ஆகாசத்தில் அம்புலி கண்ணுக்குப் புலப்படவில்லை. கார்மேகங்கள் திரண்டு வந்து, சந்திரனையும், நக்ஷத்திரங்களையும், சாயாபதத்தையும் (Milky way), நீலாகாசத்தையும் கவிந்துகொண்டன. அம்மேகங்கள் இடைவெளியின்றி அடர்ந்து, எங்கும் பரந்து, நீர் நிறைந்த கரும்புகை நிறத்துடன் விளங்கின. கீழே எங்குப் பார்த்தாலும் எல்லையற்ற ஒரே அந்தகாரமயமா யிருந்தது. ஆற்றையும், மணற்பரப்பையும், ஆற்றங் கரையையும், கரையிலுள்ள மலைத்தொடரையும் எங்கும் நிறைந்த அந்தக் காடாந்தகாரம் கவிந்துகொண்டது. அத்தகைய அந்தகாரத்திலே ஒரு குன்றின் பள்ளத்தாக்கிலே சைவலினி தனிமையாயிருந்தாள்.

இரவு குறுகக்குறுக, சைவலினி ஏறியிருந்த தோணியானது பின் தொடர்ந்துவரும் இங்கிலீஷ் படகைப் பின் தங்கவிட்டு, கரையோரமாய் வந்தொதுங்கிற்று. மஹாநதிகளின் தீரங்களில் நிர்மானுஷ்யமான பிரதேசங்களுக்குக் குறைவே இல்லை. அப்படிப்பட்ட பிரதேசமொன்றின்கண் அந்தத் தோணி வந்து சேர்ந்தது. அந்தத் தோணி வந்து நின்றதும், சைவலினி அதினின்றும் மெல்ல நழுவி விட்டாள். இப்பொழுது அவளுக்குத் தூர் எண்ணம் ஒன்றும் கிடையாது. தீப்பற்றி யெரியும் காட்டினின்றும் எவ்வித பயத்தினால் ஒரு காட்டு மிருகம் தப்பியோடுமோ, அவ்வித பயத்தினாலேயே சைவலினியும் பிரதாபனை விட்டுப் பிரிந்தோடினாள். பிராண பயத்தாலல்லவோ, அவள் இன்பம், அழகு, அன்பு முதலிய வாழ்க்கைச் சுகங்கள் நிறைந்த இச்சம்சாரத்தை விட்டோடினாள். இன்பம், அழகு, அன்பு, பிரதாபன்—இவற்றில் அவளுக்கு இனி யாதொரு அதிகாரமேனும் ஆசையேனும் கிடையாது. வெறும் இச்சையைக் கூட ஒழிக்கவேண்டுமென்று சபதம் செய்தாயிற்று. அன்பிற்குரிய வஸ்து சமீபத்திலிருக்கும்பொழுது அதன்மேல் இச்சையை யொழித்

திருக்க யாரால் முடியும்? தாகத்தால் தத்தளித்துப் பாலைவனத்திற் செல்லும் எந்தப்பிரயாணி குளிர்ந்து தெளிந்து வாசம் பொருந்திய நீரைக்கண்டு அள்ளிக்குடியாமற் செல்வான்? 'விக்டர் ஹ்யூகோ' என்னும் ஆங்கில நூலாசிரியர் கடலின் அடித்தலத்தில் வாழும் ராக்ஷச சுபாவமுள்ள பயங்கரமான மீன்வகை யொன்றை வர்ணித்திருக்கிறார். அப்படிப்பட்ட ஜந்துக்களுக்கு அவா அல்லது பேராசை யென்பது ஜன்மத்துடன் பிறந்த முக்கிய சுபாவகுணமெனத் தோற்றுகின்றது. அது ஸ்படிகம்போல் தெளிந்த ஜலத்தில் வாசஞ் செய்கிறது. அது குடியிருக்கும் மாளிகையின் அடித்தரையின் மேல் மெல்லிய ஒளி வீசும் அழகிய காவிக்கல் முதலிய கிரி தாதுக்கள் பளபளவென்று மின்னுகின்றன. எத்தனையோ விலையுயர்ந்த முத்துக்களும் பவளங்களும் தம் ஒளியை அதனுள்ளே பரப்புகின்றன. ஆனால் அது உறிஞ்சுவது மாத்திரம் மனித ரத்தத்தையேயாம். அதன் மாளிகையின் அழகைக்கண்டு எவனாவது மோகித்து அதை அணுகிவிட்டால், இந்தச் சதபாஹுவான ராக்ஷஸ மீன் உடனே தன் நூறு கைகளையும் ஒவ்வொன்றாய் நீட்டி அவனைப்பிடித்துக் கொள்கிறது. ஒருதடவை அதனிடம் அகப்பட்டு விட்டால், பிறகு தப்பித்துக்கொள்வது அந்த ஜன்மத்தில் இல்லை. அது தன் நூறு கரங்களாலும் ஆயிரம் கிரந்திகளாலும் அவனைச் சுற்றிக் கட்டி, பிறகு உதிரத்தை உறிஞ்சும் தன் ஆயிர நாக்குகளாலும் அந்த நிர்ப்பாக்கியனது அங்கத்திலிருந்து இரத்தத்தை எல்லாம் உறிஞ்சு விடுகின்றது.

சைவலினியானவள் இனி நேர் நின்று சமாளிக்கத் தன்னால் முடியாதென்று யோசித்து, அவ்விடத்தினின்றும் விலகினாள். தான் தப்பியோடிய சங்கதி பிரதாபனுக்குத் தெரிய வந்தால் அவன் எங்கே தன்னைத் தேடிக் கண்டுபிடித்து விடுகிறானோ வென்றஞ்சினாள். அந்தக் காரணத்திற்காகவே, அவள் சமீபமான யாதொரு பிரதேசத்திலும் தங்கி நிற்காமல், காலில் சக்தியுள்ளவரையும் நடந்துகொண்டே சென்றாள். பாரதவர்ஷத்தை மேகலை (அரைக்கச்சை) போல் சூழ்ந்திருக்கும் மலைத்தொடரொன்று அருகிலிருப்பதைக் கண்டாள். பகலில்

மலைமேல் ஏறினல் யாருக்காவது தெரிந்து விடுமென்றஞ்சிப் பகல் முழுவதும் அங்குள்ள காட்டில் மறைந்திருந்தாள். அன்று பகல் முழுவதும் அவளுக்கு அன்ன ஆகாரமில்லை. மாலையும் கழிந்து விட்டது. இதோ இருட்டிவிடப் போகிறது. அப்புறம் நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்ருய்த் தென்படும். இருட்டினவுடன் அவள் மலைமேல் ஏறத்துடங்கினள். இருட்டில் கல்லும் முள்ளும் அவள் காலில் பட்டுக் காய முண்டாக்கின. அங்குள்ள கொடிகளிலும் புதர்களிலும் நடுவே வழிதுறை ஒன்றும் தெரியவில்லை. முட்களாலும், ஒடிந்த கிளைகளின் நுனிகளாலும், வேர்களாலும் கிழியுண்ட அவளது கை கால்களினின்றும் இரத்தம் பீறிட்டது. சைவலினியின் பிராயச்சித்தம் ஆரம்பமாய் விட்டது.

ஆனல் சைவலினி அதற்காகத் துயரப்படவில்லை. அவள் சுயேச்சையாகவே இந்தப் பிராயச்சித்தத்தில் பிரவர்த்தித்தாள். தன் சுயேச்சையைக் கொண்டே அவள் சுகமயமான சம்சாரத்தை விட்டு, கோரமான முட் புதர்களும், துஷ்ட மிருகங்களும் நிறைந்த இம் மலைக்காட்டிற் பிரவேசித்தாள். இதுவரையில் அவள் மகா கோரமான பாபச் சேற்றில் அழுந்தியிருந்தாள், இப்பொழுது அவள் படும் துக்கங்கள் அந்தப் பாபத்துக்கு எவ்விதத்திலேனும் பிராயச்சித்தமாகுமோ ?

ஆகவே, காயமுண்ட காலோடும் இரத்தம் வழியும் அங்கங்களோடும் பசியாலும் தாகத்தாலும் துன்பமுற்றுச் சைவலினி மலைமேல் ஏறத் தொடங்கினள். வழிதுறை ஒன்றும் விளங்கவில்லை. கல்லும் முள்ளும் கொடியும் புதரும் நிறைந்த அந்தக் காட்டில் பகலிலேயே வழி தெரிவது கஷ்டம். இப்பொழுதோ இருட்டு. ஆகையால் சைவலினி அதிக கஷ்டப்பட்டு அற்பதூரம் மாத்திரம் ஏறினள்.

இந்தச் சமயத்தில் மேகங்கள் பலமாய்த் திரண்டு கோரமாய்க் கர்ஜித்து ஆடம்பரம் செய்தன. இடைவெளியின்றி எங்கும் அடர்ந்து கனத்துப் பரந்த கரியமேகக் கூட்டங்கள் ஆகாயத்தின் முகத்தை மூடி முத்திரையிட்டு விட்டன. இருளின்மேல் இருள் படிந்து சூழ வீருந்தமலைத்தொடர்களையும், கீழுள்ள கானகங்களையும் தூரத்

திலுள்ள நதியையும் கவிந்து கொண்டது. பிரபஞ்சமெல்லாம் ஒரே யந்தகாரமயமாய் விட்டது. இவ்வுலகத்தில், கல்லும், புதரும், இருளும் தவிர வேறொன்றும் இல்லைபோலும் என்று சைவலினிக்குத் தோற்றியது. இனி மலைமேல் ஏற முயலுதல் வீணே. சைவலினி இதை யெல்லாங்கண்டு நிராசையால் எக்கங்கொண்டு ஒரு முட் செடிப்புதரின்மேற் சாய்ந்தாள்.

ஆகாச மத்தியிலிருந்து அடி வானத்தின் ஓரம் வரையிலும், அவ்வோரத்தினின்றும் மீண்டும் நடுமையம் வரையிலும்மின்னல் மின்னிற்று. அது அதிபயங்கரமாயிருந்தது. அதி கம்பீரமான மேகக் கர்ஜனைகள் ஏககாலத்தில் உண்டாயின. சீக்கிரத்தில் ஒரு பயங்கரமான கோடைப்புயல் அம்மலையடிவாரத்தில் அடிக்கலாம் என்று சைவலினிக்குத் தோற்றியது. அப்படி அடித்தாலும் அதனால் என்ன கெடுதியென்று அவள் நினைத்தாள்.

அப்படிப்பட்ட புயற்காற்று அடிக்குமாயின் அந்த மலைப்பிரதேசத்திலுள்ள பலவகையான மரம், கிளை, இலை, பூ முதலியவை தத்தம் இடங்களிலிருந்து தள்ளுண்டு அழிந்து போகுமே. சைவலினிக்கும் அந்தப் பாக்கியம் கிட்டக்கூடாதா?

அச்சமயத்தில் அவள் தேகமுழுவதும் குளிர்ந்து கூசுவதற்குக் காரணமென்ன? ஒருதுளி மழையே. சொட்டு, சொட்டு, சொட்டு!— அதன்பிறகு திக்குத் திகந்தங்களையெல்லாம் செவிடுபடுத்தும் கர்ஜனை. அந்தக் கர்ஜனையானது காற்றும், மழையும்,மேகமும் ஒன்றுகூடிச் செய்யும் முழக்கமே. அதனுடன் கூட ஒடிந்த மரக்கிளைகளின் ஓசையும், அச்சமுற்ற மிருகங்களின் அரவமும், இடத்தைவிட்டுப் பெயர்ந்த பாறைக்கற்கள் மலையிலிருந்து உருளும்பொழுது உண்டாகும் பெருஞ் சத்தமும், தூரத்திலுள்ள கங்கையில் புரண்டு மோதும் தரங்க மாலைகளின் கோலாஹலமும் சேர்ந்துகொண்டன.

சைவலினி தலையைத் தொங்க விட்டுக்கொண்டு ஒரு மலைக்கல்லின்மேல் உட்கார்ந்திருந்தாள். அவள்மேல் குளிர்காற்றும் மழையும் விடாமல் மோதின. மரக்கிளைகளும், கொடிகளும், புதர்களும் காற்றால் அடிபட்டு அவள் அங்கத்தின்மேல் மோத, மலையுச்சியினின்

றும் பயங்கரமான பெருவேகத்துடன் பெருகிவந்த பிரவாகமும் அவளை இடை வரையிலும் அமிழ்த்தி நனைத்துவிட்டு ஓடிச்சென்றது.

ஹே ஜடப்பிரகிருதியே! உனக்கு அநந்தகோடி நமஸ்காரம்! உனக்கு ஈவு, இரக்கம், தயை, தாக்ஷண்யம் ஒன்றுமில்லை. ஜீவகோடிகள் அழிவதைக்கண்டும் உன்மனம் கனியவில்லை. நீ (அசேஷக்லேச ஜநநி) முடிவில்லாத துயரங்களுக்குத் தாய். அப்படியிருந்தும் உன்னிடத்திலிருந்தே சகல சுகங்களும் உண்டாகின்றன. நீ ஆநந்த நிலையை, நீ சர்வமங்கள மயீ, சர்வார்த்த சாதிகை, சர்வாங்க சுந்தரி. மஹா பயங்கரீ, நாநாரூப தாரிணீ. நேற்று நீ நெற்றியில் திங்களையணிந்து, சென்னியில் நக்ஷத்திர கிரீடந்தரித்து, உனது புவன மோஹனமான மந்தஹாஸத்தால் அகில பிரபஞ்சத்தையும் மோஹிக்கச் செய்தாய். கங்காநதியில் உண்டாகும் சிற்றலைகளை மலர்மாலையாய்க் கட்டி ஒவ்வொரு மலரிலும் ஒரு சந்திரபிம்பம் தொங்கும்படி மாட்டி வைத்தாய். மணற்குன்றுகளின் மேல் எத்தனையோ கோடி வைரக்கற்களை ஜ்வலிக்கச் செய்தாய். கங்காநதியின் ஹிருதயத்தில் நீல நிறப்பொடியைக் கரைத்து அந்த நீல ஜலத்தில் எத்தனையோ யௌவன ஸ்திரீபுருஷர்களைச் சுகமான ஜலக்கிரீடை புரியச் செய்தாய். சீராட்டுவதில் கைதேர்ந்தவள் போல் நீ ஜீவகோடிகளைச் சீராட்டினாய். இன்றைக்கோ எல்லாம் மாறிவிட்டதே. நீ விசுவாஸ காதகையான நாசகாலி. ஜீவகோடிகளுடன் நீ இவ்வாறு என் விளையாடுகிறையோ எனக்கு விளங்கவில்லை. உனக்குப் புத்தியுமில்லை, ஞானமுமில்லை, சைதந்யமுமில்லை. ஆனால் நீ எங்கும் நிறைந்தவள், எல்லாம் ஆக்குபவள், எல்லாம் அழிப்பவள், எல்லாம் வல்லவள். நீயே ஈசுவர மாயை, ஈசுவர மஹிமாவிபூதி, நீ வெல்லுதற்கரியவள். உனக்குப் பலகோடி நமஸ்காரம்!

வெகுநேரம் கழித்து மழை நின்றது. புயலோ நிற்கவேயில்லை. அதன் வேகம் மாத்திரம் அடங்கிற்று. இருள் வரவர அதிகமாகிக் காடாந்தகாரமாயிற்று. மழைபெய்து ஈரத்தால் வழுக்கலாயுள்ள மலையின்மேல் ஏறுவதாவது இறங்குவதாவது கஷ்ட சாத்தியமென்று சைவலினிக்குத் தோற்றியது. அவள் இருந்த விடத்திலேயே இருந்து

கொண்டு குளிரால் நடுங்கினுள். வேதகிராமத்திலே சம்சார சுகம் நிறைந்த அவளது புருஷனகம் அப்போது அவள் ஞாபகத்துக்கு வந்தது. "என் பிராணன் போகுமுன் ஒரு தடவையாவது அந்த ஆநந்த நிலயத்தைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தால், அப்பொழுதுதான் என் உயிர் அநாயாசமாய்ப் போகும். ஆனுல் இது வீண் மனோரதமே. மறுபடியும் சூரியோதயத்தை நான் பார்க்கக் கொடுத்து வைத்திருக்கிறேனென்று எனக்குத் தோன்றவில்லை. இது வரையில் நான் அடிக்கடிப் பிரார்த்தித்துக் கொண்டிருந்த மிருத்யுவும் இப்பொழுது அருகில் வந்து விட்டான்," என்றவள் தனக்குள் சொல்லிக்கொண்டாள். அந்தச் சமயத்தில் அந்த நிர்மாநுஷ்யமான மலைப்பிரதேசத்தில், ஒருவரும் பிரவேசிக்கக்கூடாத அந்த வனத்தின் மத்தியில், அந்த மகாகோரமான அந்தகாரத்திலே யாரோ ஒருவனுடைய கரஸ்பர்சம் சைவலினியின் அங்கத்திற்கு உண்டாயிற்று. அது யாராயிருக்கக் கூடும்?

இது ஏதோ காட்டில் சஞ்சரிக்கும் மிருகமாயிருக்கலாமென்று சைவலினி முதலில் எண்ணி மற்றொரு பக்கம் நகர்ந்துபோய் உட்கார்ந்தாள். மறுபடியும் அந்தக் கை அவளைத் தொட்டது. ஸ்பஷ்டமாய் அது மநுஷ்ய கரஸ்பர்சமென்றே ஏற்பட்டது. ஆனுல் இருட்டில் ஒன்றும் தெரியவில்லை. சைவலினி பயத்தால் விகாரமுற்ற குரலுடன் "நீ யார், தேவதையா மநுஷ்யனு?" என்று கேட்டாள். மநுஷ்யனைப் பற்றி அவளுக்குப் பயமில்லை. தேவதைகளைப்பற்றி மாத்திரம் அவளுக்குப் பயம் உண்டாயிருந்தது. ஏனெனில் தேவதைகள் துஷ்ட நிக்ரஹம் சிஷ்ட பரிபாலனம் புரிகின்றனரல்லவா?

அவள் கேட்ட கேள்விக்கு யாதொரு விடையும் பிறக்கவில்லை. ஆனுல் சைவலினிக்கு ஒன்று மாத்திரம் நிச்சயமாய்ப்பட்டது. அவன் தேவதையோ, மநுஷ்யனோ, இருகையாலும் அவளைப் பிடித்துக் கொண்டிருந்தான். அவனது வெப்பமுள்ள மூச்சுக்காற்றின் ஸ்பரிசத்தை அவள் தன் தோள்களின் மேல் உணர்ந்தாள். ஒரு கை அவளது முதுகின்மேல் வைக்கப்படுவதையும் மற்றொரு கை அவளது இரண்டு கால்களையும் ஒன்ருய்ச் சேர்த்துத் தூக்குவதையும் அவள்

உணர்ந்தாள். உடனே சைவலினி ஒரு சீத்காரம் செய்தாள். அவன் நரனே, சுரனே அவன் கைகளால் தன்னை எங்கோ தூக்கிக்கொண்டு போகிறான் என்று மாத்திரம் அவளுக்கு விளங்கிற்று. அவன் அவளைத் தூக்கிக்கொண்டு மலையின்மேல் சாவதானமாய் ஏறிப்போய்க் கொண்டிருந்தானென்று சற்று நேரங்கழித்து அவளுக்குப் புலப்பட்டது. இவன் யாராயிருப்பினும் எவ்விதத்திலும் லாரன்ஸ் பாஸ்டரல்லவென்று அவள் நிச்சயமாய் எண்ணினாள்.

நான்காம் பாகம்

பிராயச் சித்தம்

முதலாவது அத்தியாயம்

பிரதாபனது செயல்கள்

பிரதாபன் ஒரு ஜமீன்தாரன். அது மாத்திரமல்ல, பிரதாபன் கள்ளனுமாய் இருந்தான். நமது கதை நடந்த காலத்திலே, ஜமீன்தாரருள் பெரும்பான்மையோர் இந்த மரபைச் சேர்ந்தவர் களே. மனிதன் வானரத்துக்குக் கொள்பேரனென்று தார்வின் பண்டிதர் கூறுகின்றார். அதைப்பற்றி ஒருவருக்கும் மனவருத்தம் உண்டாவதில்லையாயின், ஜமீன்தாரர்களும் தங்கள் முன்னோர் களைப்பற்றி யாம் இழிவாய்க் கூறினேமென மனவருத்தங் கொள் ளார். கடைசியாய்ப் பார்க்கப்போனால், அப்படிப்பட்ட வம்சத்தில் உற்பவிப்பதும் அகௌரவமெனப் புலப்படவில்லை. ஏனெனில் மற்ற தேசங்களிற் பார்த்தாலும் கள்ளர் குலத்துக்குக் கனமான கௌரவ முண்டாயிருப்பதாகவே தெரியவரும். பேர்போன கொள் ளைக்காரனாகிய தைமூரின் வம்சஸ்தர்கள் இவ்வுலகத்தில் நற்குலச் சிறப்பில் தலைமையானவரெனப் பெயர் பெற்று விளங்க வில்லையா? இங்கிலாந்திலே உயர்ந்த வம்சத்தில் பிறந்தோமெனப் பெருமை பாராட்டுகிறவர்கள் தாங்கள் 'நார்மன்' அல்லது 'ஸ்காந்தி நேவிய' க் கடற்கள்ளரின் வம்சோத்பவர்களெனச் சொல்லிக் கொள்ளுகிறார்களல்லவா? பிராசீன பாரத வர்ஷத்தில் கௌர வர்களுக்கு விசேஷ மரியாதை உண்டாயிருந்தது; அவர்களோ பசு சோரர்களென்பது பிரசித்தம். விராட ராஜனது உத்தரகோ கிருஹத்திலிருந்து பசுக்களைத் திருடிச் சென்றார்கள். இரண்டொரு வங்கநாட்டு ஜமீன்தாரருக்கும் இத்தகைய வம்சமர்யாதை கொஞ்ச முண்டு. ஆனால் பிரதாபனது கள்ளத் தொழிலுக்கும் மற் றைப் பண்டைக்காலத்து ஜமீந்தாரின் கள்ளத்தொழிழிலுக்கும் விசேஷ

பேதமிருந்தது. அவன் தன் உடைமையைக் காப்பாற்றிக் கொள்வதற் கேனும் செருக்குற்ற பலமான சத்துருவின் கொட்டத்தை யடக்கு வதற்கேனும் கள்ளர்களின் ஒத்தாசையைத் தேடுவானே யன்றி, வேண்டுமென்று பிறர் பொருளை யபஹரிப்பதற்கும் பரஹிம்சை செய் வதற்கும் அவன் ஒருகாலும் பிரவர்த்திப்பவனல்லன். துர்ப்பலர்களை யும் பிறரால் பீடிக்கப்படுகிறவர்களையும் காப்பாற்ற வேண்டுமென்னும் பரோபகார சிந்தையினால், அடிக்கடி அவன் இந்தக் கள்ளத்தொழிலிற் பிரவேசிப்பதுண்டு. இப்பொழுது மீண்டும் அந்த வழியை அநுசரிப்ப தற்கு அவன் ஆயத்தமாயிருந்தான்.

தோணியை விட்டுச் சைவலினி யோடிப்போன பின்னர், பொழுது புலர்ந்ததும் பிரதாபன் துயிலை விட்டெழுந்து, ராமசரணன் வந்து சேர்ந்ததைப்பார்த்துச் சந்தோஷித்தான். ஆனால் அவன் சைவலினி செய்ததை நினைத்து வருந்தினான். அவள் வருவாளென்று கருதி அவளுக்காகச் சிறிது நேரம் காத்திருந்தான். அவள் வராமற் போகவே அவளைத் தேடத்தொடங்கினான். ஆற்றங்கரை வழியே அவளைத் தேடினான். அவளோ அகப்பட்டாளில்லை. அந்த வேளைக்குச் சூரியோதயமாகி வெகு நேரமாய்விட்டது. அவளைத் தேடித் தேடிப் பார்த்தும் காணாது பிரதாபன் நிராசை கொண்டு, சைவலினி நீரில் மூழ்கி மரித்துப்போயிருக்க வேண்டுமென்று நிச்சயம் செய்து கொண்டான். அவளுக்கு அப்பொழுதிருந்த சித்தவிருத்தியில் அவள் அவ்வாறு மரித்திருக்கக்கூடியது அசம்பாவித மன்றெனக்கருதி னான். இனிப் பிரதாபன் இவ்வாறு சிந்திக்கலாயினான். "சைவலினி யின் சாவுக்கு நானே காரணம்" என்று முதலில் யோசித்தான். "அதற்கு என்மேல் எப்படித் தோஷம் ஏற்படும்? நான் ஒருகாலும் தர்மத்தைவிட்டு அதர்ம மார்க்கத்தில் போனேனில்லை. அவளுடைய மிருத்யுவுக்குக் காரணம் யாதாயிருப்பினும், அதைத் தடுக்க என்னால் சாத்தியமாயிருந்திராது" என்று பின்னும் கருதினான். ஆகையால் பிரதாபனுக்குத் தன்மேல் கோபங்கொள்ள யாதொரு காரணமும் ஏற்படவில்லை. சந்திரசேகரன்மீது கொஞ்சம் அதிர்ப்தி யடைந் தான்.—அவன் ஏன் சைவலினியை மணம் செய்து கொண்டான்? ரூப

லியைப்பற்றிச் சொற்பம் வருத்தப்பட்டான்.—தனக்கேன் அவள் மணம் செய்யப்பட்டாள்? சைவலினியுடன் ஏன் தனக்குக் கல்யாண மாயிருக்கக்கூடாது? சுந்தரியைக் கடிந்துகொண்டான்.—அவள் தன்னை இந்தக் காரியார்த்தமாய் வெளியேறும்படி செய்திராவிட்டால் சைவலினியோடு கங்கையில் நீந்தும்படி வந்திராதே? சைவலினியும் செத்திருக்கமாட்டாளே? ஆனால் எல்லாரையும்விட லாரென்ஸ் பாஸ்டரின்மேல் அவன் கோபம் அதிகமாய்ப் பொங்கிற்று. அவன் சைவலினியை அவன் வீட்டினின்றும் அபஹரித்துக்கொண்டு போயிராவிட்டால், இந்த விபரீதங்கள் ஒன்றும் நடந்திராதே. ஆனால் இங்கிலீஷ்காரரே பங்காளத்தில் வந்து தோன்றி இராவிட்டால், சைவலினி ஒருகாலும் லாரென்ஸ் பாஸ்டரின் கைக்குள் விழுந்திருக்க மாட்டாளே? ஆகையால், இங்கிலீஷ்காரர்மேல் பிரதாபனுக்கு அடக்க முடியாத கோபம் உண்டாய்விட்டது. பாஸ்டரை மீண்டும் பிடித்துக் கொல்லவேண்டு மென்று பிரதாபன் தீர்மானித்தான். ஆனால் அவனைத் தகனம் செய்துவிட ஏற்பாடு செய்யவேண்டும், இல்லாவிட்டால் அவன் மறுபடியும் பிழைத்துக்கொண்டு விடலாம்—கல்லறையிலிருந்து பலாத்காரமாய் வெளிவரக்கூடும்—என்று யோசித்தான். இது ஒரு தீர்மானம். இன்னொரு தீர்மானம் என்னவெனில், இங்கிலீஷ்காரருள் பாஸ்டரைப் போன்ற பாதகர்கள் பலர் இருக்கின்றமையால், அவர்களையும் வங்காளத்தினின்று வேருடன் ஒழித்துவிட வேண்டுமென்பதே.

இவ்வாறு யோசித்துக்கொண்டே பிரதாபன் அதே தோணியில் மாங்கீர் வந்து சேர்ந்தான்.

அவன் கோட்டைக்குப் போய்ப் பார்த்தபொழுது நவாபு இங்கிலீஷ்காரருடன் போர் புரியப்போவதாயும் அதற்காக வேண்டிய ஸந்நாஹங்களெல்லாம் நடப்பதாயும் தெரியவந்தன.

பிரதாபனுக்குச் சந்தோஷமாய் விட்டது. "நவாபு இந்தப்பாதகர்களைப் பங்காளத்தினின்றும் துரத்திவிடமாட்டானா? பாஸ்டர் அகப்பட்டுக் கொள்ளமாட்டானா?" என்று தனக்குள்ளேயே பேசிக்கொண்டான்.

"இந்தக் காரியத்தில் ஒவ்வொருவனும் தன்னாலான உதவியை நவாபுக்குச் செய்யவேண்டும். அணிலும் அணை கட்டுவதற்கு உதவி செய்யவில்லையா?" என்று தர்மசாஸ்திர விசாரம் செய்தான்.

"என்னால் ஏதாவது சகாயம் செய்ய முடியுமா? நான் என்ன செய்யக்கூடும்" என்று அதன்பிறகு தனக்குத்தானே கேட்டுக் கொண்டான்.

"என்னிடத்தில் யுத்த வித்தையில் தேர்ந்த சைநியம் கிடையாது. லாட்டி வாலாக்கள்தான் இருக்கிறார்கள்; அவர்களோ கள்ளத்தடியன்கள். அவர்களால் என்ன சகாயம் செய்ய முடியும்?" என்று மறுபடியும் சிந்தித்தான்.

"வேறொன்றும் செய்ய முடியாவிட்டாலும், கொள்ளையடிப்பதாவது சாத்தியமா யிருக்கிறதல்லவா? இங்கிலீஷ்காரருக்கு உதவி புரியும் கிராமங்களை நான் கொள்ளையடிப்பேன். இங்கிலீஷ்காரருக்கு வரும் ஆஹார பதார்த்தங்களை எங்கெங்கே காண்கிறேனோ அங்கங்கே அவைகளை மறித்துக் கொள்ளையடிப்பேன். இங்கிலீஷ் சாமான்களைக் கண்டவிடங்களிலெல்லாம் சூறையாடுவேன். இவ்வளவுமாத்திரம் நான் செய்தால், நவாபுக்கு விசேஷ சகாயம் செய்தவனாவேன். நேரான யுத்தத்தில் வெற்றி பெறுவதானது எதிரியை யழிப்பதற்குப் பயன்படும் சாமான்ய உபாயமேயாகும். எதிரியைப் பின் பக்கத்திலிருந்து வருத்துதலும் அன்ன ஆஹாராதி பதார்த்தங்களை இல்லாமற் செய்து விடுதலுமே பிரதான உபாயங்களாம். ஆகவே இதை என்னால் இயன்றமட்டும் நான் செய்வேன்" என்று தீர்மானித்தான்.

"இவ்வளவெல்லாம் நான் என் செய்யவேண்டும்?" என்று கடைசியாகத் தனக்குத்தானே ஆக்ஷேபித்துக்கொண்டு, "ஆம், நான் செய்துதான் தீருவேன். அதற்கு அநேக காரணங்களிருக்கின்றன முதலாவது, இங்கிலீஷ்காரர் சந்திரசேகரன் குடியைக் கெடுத்து விட்டார்கள். இரண்டாவது, சைவலினி இறந்து போய்விட்டாள். மூன்றாவது, அவர்கள் என்னைக் கைதியாய் வைத்தார்கள். நான்காவது, இப்படிப்பட்ட தீங்கை மற்றவர்களுக்கும் அவர்கள் செய்திருக்கிறார்கள், மறுபடியும் செய்யக்கூடியவர்கள். கடைசியாக, நான் இந்த

உதவிபுரியும் பக்ஷத்தில் நான் பட்ட கஷ்டத்துக்காக நவாபு எனக்குச் சில பெரிய ஜில்லாக்களை வெகுமதி யளிப்பார். ஆகவே நான் இதைச் செய்துதான் தீரவேண்டும்" என்று சித்தாந்தஞ் செய்தான்.

அதற்கப்புறம் பிரதாபன் மந்திரிகளின் தயவைச் சம்பாதித்து நவாபை நேரில் போய்க் கண்டான். நவாபுடன் அவன் என்ன பேசினுனே அது ஒன்றும் வெளியாகவில்லை. நவாபைப் பார்த்தானவுடன் அவன் தன் சொந்தவூரை நோக்கிப் புறப்பட்டான்.

அநேக நாள் கழித்துப் பிரதாபன் ஊர்வந்து சேரவே, ரூபவிக்கிருந்த பெரிய மனக்கவலை தொலைந்தது. ஆனல் சைவலிநியின் மரண சமாசாரத்தைக் கேட்டதும் அவள் துயரமுற்ருள். பிரதாபன் வந்தானென்ற சங்கதியைக்கேட்டு சுந்தரியும் அவனைப் பார்ப்பதற்காக வந்து சேர்ந்தாள். சைவலிநி மரித்த சமாசாரத்தைக் கேட்டு அவள் மிக்க துயரமடைந்து சொல்லலுற்ருள், "எப்படி நடக்கவேண்டுமோ, அப்படி நடந்துவிட்டது. ஆனல் சைவலிநியின் கஷ்டம் தொலைந்தது. அவள் சுகப்பட்டாள். அவள் பிழைத்திருந்த காலத்தில் அனுபவித்த சுகத்தைவிட மரித்தபிறகு அதிக சுகம் அனுபவிப்பாளென்று மாத்திரம் சொல்ல ஒரு விதத்தாலும் என்னல் முடியவில்லை."

ரூபவியையும் சுந்தரியையும் பார்த்துவிட்டு, பிரதாபன் மறுபடியும் வீட்டைவிட்டுப் புறப்பட்டான். உடனே காட்வா முதல் மாங்கீர் வரையிலுள்ள எல்லாக் கள்ளர்களும் லாட்டி வாலாக்களும் கூட்டமாய்க் கூடுகிருர்களென்றும் அவர்களைப் பிரதாபராயன் சேர்த்துக் கொண்டிருக்கிருனென்றும் பேச்சு நாடெங்கும் பரவியது.

இதைக்கேட்டுக் குர்க்கன் கான் சஞ்சலமடைந்தான்.

இரண்டாவது அத்தியாயம்

சைவலிநியின் செய்கை

மஹா அந்தகாரமயமான பர்வத குகையில் உடம்பைக் குத்தி வருத்தும் கூரிய கற்படுக்கையில் சைவலிநி சயனித்துக் கொண்டி

ருந்தாள். அவளைத் தூக்கிவந்த மஹா புருஷன் அவளை அங்கே விட்டு விட்டுப் போய்விட்டான். காற்றும் மழையும் நின்று விட்டன. ஆனால் குகையின் உட்பக்கம் அந்தகாரமயமா யிருந்தது. வெறும் அந்தகாரத்தைத் தவிர வேறொன்றுமில்லை. அந்த அந்தகாரத்திலே கோரமான நிச்சப்தம். கண்ணை மூடினாலும் அந்தகாரம், கண்ணைத் திறந்தாலும் அந்தகாரமே. எங்குபார்த்தாலும் ஒரே நிச்சப்தம்! இங்கு மங்கும் மாத்திரம் ஒவ்வொரு சமயம் மலையின் பிளவைகளினின்று வெளிப்படும் நீர்த்துளிகள் குகையின் கரைமேலுள்ள கற்களின் மேல் சொட்டு சொட்டென்று விழுந்தன. அந்தக் குஹைக்குள்ளே யாதோ ஒரு பிராணி—மனிதனோ, மிருகமோ யாருக்குத் தெரியும்?—மூச்சு விடுவதுபோலிருந்தது.

சைவலினி யிப்பொழுது பயத்துக்கு இரையா யிருந்தாள். பயமா?—அப்படியுஞ் சொல்வதற்கில்லை. மனிதரது ஸ்திரபுத்திக்கு ஒரு எல்லையுண்டு. சைவலினி அந்த எல்லையைக் கடந்துபோய் விட்டாள். சைவலினிக்கு யாதொரு பயமுமில்லை. ஏனெனில் பிராணன் அவளுக்குப் பொறுக்கமுடியாமற் போய்விட்டது, தாங்கமுடியாத சுமையாய்விட்டது. அதைக் கீழே தள்ளிவிட்டால் அதுவே அவளுக்குப் பரமசுகம். போனதுபோகப் பாக்கியிருந்த கொஞ்ச நஞ்சம் சுகம், தர்மம், ஜாதி, குலம், மானம், சகலமும் போய்விட்டது. இனி போக வேண்டியதென்ன இருந்தது? அவளுக்குள்ள பயமென்ன?

ஆனால் சைவலினி குழந்தைப் பருவமுதல் வெகு காலமாகத் தன் இருதயத்தில் ஜாக்கிரதையாயும் இரகசியமாயும் வளர்த்துவந்த ஆசைக்கொடியை அந்த நாள்—அல்லது அதற்கும் முன்னரே—அவள் பிடுங்கி எறிந்துவிட்டாள். எவன்பொருட்டு அவள் சகலத்தையும் துறந்தாளோ, அவனையும் இப்பொழுது பரித்தியாகம் செய்து விட்டாள். அவளது சித்தம் மிகவும் நொந்து உடைந்துபோய் விட்டது

அஃதொரு புறமிருக்க, சென்ற இரண்டு நாளாக அவளுக்கு அந்ந ஆகாரமே கிடையாது. அதிலும் வழி நடந்த களைப்பு, மலைமேலேறிய சிரமம், காற்றாலும் மழையாலும் நேர்ந்த துன்பம்—இவை முதலியவற்றால் அவளது நரம்புகள் ஜிவ் ஜிவ்வென்று வலிக்க,

அவள் தேகம் துர்ப்பலமாய் விட்டது. இவையெல்லாம் போதா தென்று இந்தத் தெய்விகமான சம்பவமும்—சைவலினி அதைத் தெய் விகமென்றே கருதினுள்—ஒன்று நேர்ந்துவிட்டது. மனித சித்தம் இன்னும் எவ்வளவு காலந்தான் ஸ்திரமா யிருக்கமுடியும். அவ ளது தேகம் சுவாதீனமற்றுப் போய்விட்டது, சித்தமும் சுவாதீன மற்றுப் போய்விட்டது. அவள் சித்தப்பிரமை யடைந்து பாதி நித் திராவஸ்தையிலும் பாதி ஜாக்கிராவஸ்தையிலுமா யிருந்தாள். அவ ளது முதுகைக் குகையிலுள்ள பாறகற்கள் குத்திவருத்தின.

அவளுக்கு உணர்வு முற்றும் போய்விட்டதும், அவள் ஒரு தர் சனம் கண்டாள். அவள் கண்களுக்கு முன்பாக ஒரு முடிவற்ற விசாலமான நதி தென்பட்டது. ஆனல் அதில் ஜலம் கிடையாது. இருகரையும் புரண்டு இரத்தப்பிரவாஹம் பெருகிற்று. அந்த வெள் ளத்தில் எலும்புகளும், அழுகிப்போன பிணங்களும், மனிதர் மண்டை யோடுகளும், எலும்புக்கூடுகளும் மிதந்து சென்றன. முதலைகளை யொத்த ஜந்துக்கள், தோலாவது தசையாவதின்றி, கேவலம் எலும்பு களுடனும், பெருத்துப் பயங்கரமாய்ப் பளபளவென்று மின்னும் கண்களுடனும் மாத்திரம் கூடியவைகளாய் இங்குமங்கும் தோன்றி மறைந்தும் மறைந்து தோன்றியும் அவ்வழுகிய பிணங்களைப் பக்ஷித்தன. சைவலினியை மலைப்பிரதேசத்திலிருந்து தூக்கிக் கொண்டு சென்ற அந்த மஹா புருஷனே இந்த நதீ தீரத்திலும் தூக்கிக்கொண்டு வந்து விட்டதாக அவளுக்குத் தோன்றியது. அந்தப் பிரதேசத்திலே சூரியப்பிரகாசமும் இல்லை, சந்திரிகையு மில்லை. நக்ஷத்திரங்களுமில்லை, மேகங்களுமில்லை. வெளிச்சமென் பதே இல்லை, இருளுமில்லை. எல்லா வஸ்துக்களும் கண்ணுக்குப் புலப் பட்டன. ஆனல் அவை ஒன்றும் தெளிவாய்த் தெரியவில்லை. இரத்த நதியும், அழுகிய பிணங்களும், வெள்ளத்தில் அடித்துக் கொண்டு வந்த எலும்புக் கூடுகளும், எலும்பு மயமான முதலைகளும் யாவும் அந்தப் பயங்கரமான அந்தகாரத்திலே தென்பட்டன. கரையில் மணல் இல்லை. அதற்குப் பதிலாக மேல் நோக்கிய கூரிய முனை யடன் கூடிய இருப்பூசிகள் இருந்தன. அந்த மஹா புருஷன்

சைவலினியை அங்கே கொண்டுவந்துவிட்டு அந்த நதியைத் தாண்டும்படி ஏவினுன். தாண்டுவதற்கு வேண்டிய சாதனங்களொன்றுமில்லை.—படகுமில்லை, பாலமுமில்லை. அந்த மஹா புருஷன் அவளைப் பார்த்து " நீந்திக்கொண்டுபோய்த் தாண்டு. உனக்குத்தான் நீந்தத் தெரியுமே. எத்தனையோ தடவை பிரதாபனுடன் நீ கங்கையில் நீந்தியிருக்கிருயே" என்ருன். ஆனல் சைவலினி அந்த இரத்த நதியில் எவ்வாறு நீந்துவள்? அப்பொழுது அந்த மஹா புருஷன் அவளை அடிக்கும் பொருட்டுத் தன் கையிலிருந்த பிரம்பை உயர தூக்கினுன். தூக்கவே, அந்தப் பிரம்பு பழுக்கக்காய்ச்சின இரும்பினல் செய்யப்பட்டதென்று சைவலினி பயத்துடன் கண்டாள். அவள் காலதாமதம் செய்வதைக்கண்டு அவன் அவள் முதுகின்மேல் பிரம்பால் அடிக்கத் தொடங்கினுன். அந்த அடிகளால் அவள் உடம்பில் எரிச்சல் உண்டாகத் தொடங்கியது. அவ்வடிகளைப் பொறுக்கமாட்டாமல் அவள் அந்த இரத்த நதியில் குதித்தாள். உடனே எலும்புமயமான முதலைகள் அவள்மேல் பாணம்போல் பாய்ந்து வந்தன; ஆனல் அவளை ஹிம்ஸிக்காமல் விட்டுவிட்டன. சைவலினி நீந்திக்கொண்டே போனுள். இரத்தப் பிரவாஹம் அவள் வாயில் கிரிச்சலிட்டுக்கொண்டு நுழைந்தது. அந்த மஹா புருஷனும் அந்த உதிரவெள்ளத்தின்மேல் அவளுடன் கூட நடந்து சென்ருன்—நீரில் ஆழ்ந்துபோகவில்லை. அடிக்கடி அழுகிப்போன பிணங்கள் அவள்மேல் அடித்துக்கொண்டு வந்தன. இந்தப்படி சைவலினி எதிர்க்கரை போய்ச் சேர்ந்தாள். அவள் அக்கரையில் போய் நின்று சுற்றுமுற்றிலும் திரும்பிப்பார்த்து " காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள்" என்று கதறினுள். அவளுக்கெதிரில் தோன்றிய காட்சிக்கு எல்லையில்லை, உருவமுமில்லை, நிறமுமில்லை, பெயருமில்லை. அங்கே யிருந்த வெளிச்சம் மிகவும் மங்கலாயிருந்தது. ஆனல் அதன் வெப்பம் மாத்திரம் எவ்வளவு அதிகமாயிருந்ததென்ருல், அது சைவலினியின் கண்களில் விழுந்த மாத்திரத்தில், விஷம் விழுந்தாற்போல், அக்கண்கள் பொங்கி எரியத்தொடங்கின. அவள் நாசித்துவாரங்களில் பயங்கரமான பிணங்களின் பொறுக்கமுடியாத துர்க்கந்தம் பிரவேசித்து, அவள் மூக்கு வஸ்திரத்தால் மறைக்கப்பட்டிருந்த

போதிலும், அவளைப் பைத்தியம் பிடித்தவளைப்போற்செய்துவிட்டது. கடோரமும், பயங்காரமும் விகாரமுமான சத்தங்கள் ஏககாலத்தில் அவள் செவியிற் புகுந்தன. நெஞ்சத்தைப் பிளக்கும் புலம்பல்களும் பிசாசுச்சிரிப்பும், பயங்கரமான ஹுங்காரமும், பாறைக் கற்களின் வெடிப்புச் சத்தங்களும், இடிமுழக்கமும், நீர்க்கொந்தளிப்பும், அக்கினி கர்ஜனையும், குற்றுயிராயுள்ளவர்களின் அபயக் குரலும் எல்லாம் ஒன்று சேர்ந்து சைவலினியின் செவியை ஏககாலத்தில் துளைக்கத் தொடங்கின.

அவளுக்கெதிரிலோ, பிரதி க்ஷணமும் பயங்கரமான பிரசண்ட மாருதம் கோரமான பேரிரைச்சலுடன் மோதி, ஒரு சமயம் அக்கினி யைப்போல் அவளைத் தஹித்தும், அடுத்த சமையம் பொறுக்கமுடியாத குளிர்ச்சியால் அவள் அங்கத்தை நூறுயிரம் ஊசிகொண்டு குத்தினற் போல் குத்தியும் ஆர்ப்பரித்தது. சைவலினி 'ஐயோ, பிராணன் போகிறதே, காப்பாற்றுவாரில்லையா ?' என்று ஓலமிட்டாள். அப் பொழுது பொறுக்கமுடியாத துர்க்கந்தத்துடன் கூடிய ஒரு பெரிய விகாரமான பூச்சி அவள் வாயிற் புகத் தலைப்பட்டது. சைவலினியோ 'ஐயோ, என்னைக் காப்பாற்றுங்களேன். இது நரகமாயிற்றே. இவ் விடத்தினின்றும் தப்பித்துக்கொள்ளும் மார்க்கம் ஒன்றுமில்லையா ?' என்று கதறினள்.

"ஆகா, இருக்கிறது" என்று அம்மஹாபுருஷன் கூறினன். ஸ்வப்னவஸ்தையில் சைவலினி போட்ட கூச்சல்களாலேயே அவள் மோஹநித்திரைக்குப் பங்கம் உண்டாய்விட்டது. ஆனல் இன்னும் மயக்கம் தெளியவில்லை. பறற்கற்கள் முதுகைக் குத்தின. அவள் விழித்துக்கொண்ட போதிலும் இன்னும் மயக்கத்துடனேயே சொல்ல லுற்றாள்.

"என் கதி என்னவாகுமோ ? என்னைக் காப்பாற்றும் வழி ஒன்று மில்லையா?"

"ஆஹா, இருக்கிறது" என்ற கம்பீரமான சொற்கள் குகையி னின்றும் உண்டாயின.

இஃதென்ன ? சைவலினி உண்மையாகவே நரகத்தில் இருந்

தாளா? சைவலினி மனங்குழம்பி மருள்கொண்டு, மதிமயங்கி, பயமடைந்து "என்ன உபாயம் அது?" என்று கேட்டாள்.

"துவாதச வார்ஷிக விரத மொன்றிருக்கிறது. அதை யநுஷ்டானம் செய்" என்று அந்தக் குகையினின்று மீண்டும் விடையுண்டாயிற்று.

இஃதென்ன அசரீரீவாக்கோ? சைவலினி அச்சமுற்று மறுபடியும், "அந்த விரதமாவது என்ன? எனக்கு யார் அதை உபதேசிப்பார்கள்?" என்றாள்.

விடை.—"நான் உபதேசிக்கிறேன்."

சை.—"நீங்கள் யார்?"

விடை.—"விரதத்தைச் செய்துகொள்."

சை.—"நான் என்ன செய்யவேண்டும்?"

விடை.—"நீ கட்டிக்கொண்டிருக்கும் பட்டுப் புடவையை எடுத்துவிடு. நான் கொடுக்கும் வஸ்திரத்தை வாங்கிக்கொள். கையை நீட்டு."

சைவலினி அப்படியே கையை நீட்டினாள். அதில் ஒரு துண்டு வஸ்திரம் வைக்கப்பட்டது. அவள் பழைய வஸ்திரத்தைக் களைந்துவிட்டுப் புதிய வஸ்திரத்தை யணிந்து,

"இன்னும் என்ன செய்யவேண்டும்?" என்றாள்.

விடை.—"உன் புக்ககம் எங்கே?"

சை.—"வேதக்கிராமத்திலே. நான் அங்கே போகவேண்டுமோ?"

விடை.—"ஆமாம்; போய்க் கிராமத்தின் கோடியில் ஒரு குடிசை கட்டிக்கொள்.

சை.—"அப்புறம்?"

விடை.—"நீ தரையில் சயனிக்கக் கடவாய்."

சை.—"அப்புறம்?"

விடை.—"இலை, காய், கிழங்கு தவிர வேறொன்றும் புசிக்கப்படாது. அதுவும் ஒரு வேளை தான் புசிக்கவேண்டும்."

சை.—"இன்னும் என்ன?"

விடை:—"உன் தலைமயிரை ஜடையாக வளர்க்கவேண்டும்."

சை.—“ அதற்கப்புறம்? ”

விடை.—“ ஒரு நாளைக்கு ஒருதரம்தான் நீ வெளிக்கிளம்பிக் கிராமத்தில் பிச்சையெடுக்கப் போகவேண்டும். பிச்சை யெடுக்கையில் கிராமந்தோறும் நீ உன் பாபத்தை யெடுத்து எல்லாரும் அறியச் சொல்லவேண்டும்.”

சை.—“ என் பாவச்செயல்களைச் சொல்லி முடியாதே,வேறொரு பிராயச்சித்தமும் இல்லையோ? ”

விடை.—இருக்கிறது.

சை.—அதென்ன ?

விடை.—மரணம்.

சை.—நான் விரதத்தையே அநுஷ்டானம் செய்கிறேன். தேவரீர் யார்?

சைவலிநியின் கேள்விக்கு விடை கிடைக்கவில்லை. அவள் மறுபடியும் தீனஸ்வரத்துடன் “ தேவரீர் யாராயிருப்பினும், அதை யறிய வேண்டுமென்ற கவலை எனக்கில்லை. பர்வததேவர்களில் தேவரீர் ஒருவராயிருக்கலாமென்று நினைத்து நான் தேவரீரை நமஸ்கரிக்கிறேன். தயவுசெய்து இன்னும் ஒரு சங்கதி மாத்திரம் எனக்குச் சொல்லிவிடுங்கள். என் பர்த்தா எங்கே இருக்கிறார்? ” என்றாள்.

“ ஏன் ? ”

“ அவரது தரிசனம் எனக்கு இனி யொருதரம் கிடைக்காதா? ”

“ உன் பிராயச்சித்தம் சமாப்தியானால் கிடைக்கும். ”

“ பன்னிரண்டு வருஷம் கழித்தா? ”

“ ஆம், பன்னிரண்டு வருஷத்துக்குப் பின்.”

“ இந்த விரதத்தை எடுத்துக்கொண்ட பிற்பாடு நான் எவ்வளவு காலம் பிழைத்திருக்கப் போகிறேன்? மத்தியில் நான் இறந்துபோய் விட்டால்? ”

“ அப்போது மாணகாலத்தில் அவரது தர்சனம் உனக்குக் கிடைக்கும். ”

“ அதற்கு முன்னாலேயே அவரைத் தரிசிப்பதற்கு யாதொரு

உபாயமுமில்லையா? தாங்கள் தேவதையாயிற்றே, தங்களுக்குத் தெரிந்திருக்குமே."

"அவரை நீ இப்பொழுது தரிசிக்க வேண்டுமாளுல், நீ இந்தக் குகையிலே ஒருவார காலம் இரவும் பகலும் தனிமையாய் வசிக்கவேண்டும். அந்த வாரத்திலே நீ அஹோராத்ரமும் உன் பர்த்தாவையே மனதில் தியானம் செய்யவேண்டும். வேறெரு எண்ணத்துக்கும் உன் மனதில் இடங்கொடுக்கக்கூடாது. இந்த ஏழுநாளிலும் நீ நாள் ஒன்றுக்கு ஒரு தரந்தான் சந்தியாகாலத்தில் வெளியே போய்க் காய் கிழங்குகள் சேகரித்துக்கொள்ளலாம். அவற்றைக் கொண்டுவந்தும் நீ வயிறுநிறைய புசிக்கக்கூடாது. ஏனெனில் உன் பசி ஆருமலிருக்கவேண்டும். நீ யாதொரு மனிதனண்டையும் போகக்கூடாது. யாரையாவது பார்த்தாலும் சம்பாஷிக்கலாகாது. நீ இவ்வாறு இந்த இருண்ட குகையில் ஒருவார காலம் வசித்து, உன் பர்த்தாவை அநந்ய மனஸுடன் பக்தி சிரத்தையாய் அநவரதமும் தியானிப்பாயாகில், அவரது சாக்ஷாத்கார தர்சனம் உனக்குக் கிடைப்பது நிச்சயம்."

மூன்ருவது அத்தியாயம்

காற்று எழுந்தது

சைவலினி அப்படியே செய்தாள். ஏழுநாள் வரையிலும் அவள் குகையைவிட்டு வெளியே வரவில்லை. ஒவ்வொரு நாளும் ஒரே தடவை சாயங்காலத்தில் காய் கிழங்குகளைத் தேடிக் கொணர்வதற்காக வெளியே செல்வாள். ஏழுநாள் வரையிலும் யாதொரு மனிதருடனும் அவள் பேசவேயில்லை. பெரும்பாலும் பட்டினியாகவே யிருந்து அவள் அந்தப் பயங்கரமான அந்தகாரத்தில் இந்திரிய விர்த்திகளையெல்லாம் அடக்கித் தன் பர்த்தாவையே தியானித்துக் கொண்டிருந்தாள். ஒன்றையும் பார்க்கமுடியவில்லை, ஒன்றையும் கேட்க முடியவில்லை, ஒன்றையும் தொட முடியவில்லை. இந்திரியங்கள் அடைக்கப்பட்டன, மனம் ஒடுங்கி விட்டது. எங்கு பார்த்தாலும்

கணவன் உருவமே அவளுக்குத் தோன்றியது. அவளுடைய சித்த விர்த்திகளெல்லாம் அந்தக் கணவனென்னும் கேந்திரஸ்தானமொன்றையே சூழ்ந்து நின்றன. அந்த ஏழுநாளிலும் அஹோராத்ரமும் அவள் அந்த அந்தகாரத்திலே தன் கணவனுடைய முகமண்டலத்தைத் தவிர்த்து வேறொன்றையும் பார்த்தாளில்லை. அந்தப் பயங்கரமான நிச்சப்தத்திலே ஞானமும் அன்பும் நிறைந்த அவனது மதுர பாஷணத்தையன்றி வேறொன்றையும் அவள் கேட்டாளில்லை. அவளது மூக்கானது அவனது புஷ்பகும்பத்தினின்றெழும் மலர்களின் நறுமணத்தை யல்லாது வேறொன்றையும் முகர்ந்ததில்லை. அவளது அங்கம் சந்திரசேகரனது ஆசை நிறைந்த செல்வச் சீராட்டுதலை யன்றி வேறொன்றையும் அநுபவித்தறியாது.

அவளுக்கு வேறெவ்வித ஆசையுமில்லை, வேறெதனிலும் ஆசை இல்லை. கணவனைத் தரிசிக்க வேண்டுமென்னும் ஆவல் ஒன்று மாத்திரமே தலைமையாய் நின்றது. அவளது ஞாபகமோ அழகிய தாடியோடும் அகன்ற நெற்றியோடுங் கூடிய அவனது வதனமண்டலத்தையே வட்டமிட்டிருந்தது. முட்களால் குத்தப்பட்ட இறக்கைகளையுடைய பெண் வண்டானது அபூர்வமான சுகந்திபுஷ்ப விருக்ஷத்தின் அடியைச்சுற்றி வட்டமிட்டலைவதுபோல் அவளது மனமும் கணவனை யெண்ணி யெண்ணி யலைந்தது. இந்த விரதத்தை யநுஷ்டிக்கச் சொன்னது யாராயிருப்பினும், அவன் மநுஷ்ய சித்தத்தின் ஸர்வ ரஹஸ்யங்களையும் நன்கறிந்தவனென்பதில் சிறிதும் சம்சயமில்லை. நிர்ஜனமும் நிச்சப்தமுமான அந்தகாரம்; மனித தர்சனமற்றது; அதனோடு சரீரம் பட்டினியால் வாடியிருந்தது, மனம் ஒரே சிந்தையில் ஆழ்ந்திருந்தது. அப்படிப்பட்ட சமயத்திலே எந்த விஷயத்தில் சித்தமானது ஸ்திரமாய் நிற்கின்றதோ, அதையே ஜபம் செய்து செய்து தன்மயமாய் விடுகின்றது. இந்த நிலைமையில் மெலிந்த சரீரத்துடனும் மனத்துடனும் அவள் ஏகாக்ர சித்தமாய்ப் பர்த்தாவையே தியானித்து தியானித்துப் பிரஞ்ஞையை யிழந்துவிட்டாள்.

அஃது உண்மையிலேயே பிரஞ்ஞையின் அபாவமேயோ? அல்லது திவ்ய ஞானோதயமோ? அவள் திவ்ய சக்ஷுவால் (ஞானக்

கண்ணுல்) அந்தராத்மாவினுள்ளே அந்தர்முகமாய்ப் பார்த்தாள். ஆஹா என்ன திவ்ய மங்கள விக்கிரஹம்! சால (ஆச்சா) மரத்தைப் பழித்த நெடிய உருவமும், அழகாயமைந்த தோள்களும், வீரமும் வனப்பும் பொருந்திய அங்கங்களும்,—ஆஹா என்ன செளந்தரிய சிகரம். அகன்று பரந்து சந்தன ரேகைகளால் அலங்காரமுற்று விசாரத்தை வெளிப்படுத்தும் மடிப்புகளுடன் கூடி விளங்கிய அந்த நெற்றியைப் பார்த்தால், இது கலைமகள் அமரும் பாயலோ, சதமகன் (இந்திரனுடைய) சமர்க்களமோ, மதனவேளின் இன்ப வீடோ, திருமகளின் சிம்மாசனமோ,—இதற்கு முன் பிரதாபன் எம்மாத்திரம்? சீச்சீ! சமுத்திரத்துடனும் கங்கையை ஒப்பிடுவதா? அந்த நேத்திரங்கள்—ஜொலித்துக்கொண்டும், சிரித்துக்கொண்டும், சலித்துக்கொண்டும், துள்ளிக்கொண்டும், தீர்க்கமாயும், விசாலமாயும், கூர்மையாயிருந்தும் ஸ்திரமாயும், ஸ்நேஹமயமாயும், கருணமயமாயும், சிறிது ஹாஸ்யரஸம் தோய்ந்தும், சதா தத்துவ விசாரசீலமாயும் விளங்கும் அந்த நேத்திரங்களோடு பிரதாபனது கண்களோ— ஒப்புமை கூறத்தக்கன! ஐயோ, நான் என் துர்மார்க்கத்தில் இழுக்கப்பெற்றேன்? என் துர்மார்க்கத்திற்கு இணங்கினேன்? என் கெட்டுப்போனேன்? ஆஹா இந்தச் சுந்தர சுகுமார பலிஷ்ட சரீரம்—இளந்தளிர் பொலிந்த சாலதருவோ—மாதவிக்கொடி தழுவிய தேவதாருவோ—மலர்கள் நிறைந்த மலையரசோ—ஒரு பாதி செளந்தர்யம், ஒரு பாதி சக்தி—பாதி சந்திரன், பாதி பாஸ்கரன்—பாதி கெளரி, பாதி சங்கரன்—பாதி ராதை, பாதி மாதவன்—பாதி ஆசை, பாதி அச்சம்—பாதி ஒளி, பாதி இருள்— பாதி அனல், பாதிப் புகை—இந்த அற்புத திவ்ய ரூபத்திற்கு முன் பிரதாபன் எங்கே? ஐயோ, இதையேன் நான் முன்னையே பார்க்கவில்லை? ஏனோ தோஷத்திற்குள்ளானேன்—ஏனோ கெட்டேன்! ஆஹா அவருடைய அந்த வசனுமிர்தத்தின் சுகமென்னே! சுத்தமாயும், ஸ்பஷ்டமாயும், புன்னகையால் பிரதீப்தமாயும், நகைச்சுவை தோய்ந்ததாயும், கருணைவாரி ததும்பி வழிவதாயும், மிருதுவாயும், மதுரமாயும், தெளிவாயும் விளங்கும் அந்தச் செம்மொழியின் முன் பிரதாபனது பிதற்றல் எம்மாத்

திரம்? ஐயோ நான் ஏனே மதிகெட்டேன்—ஏனே தோஷி யானேன்—ஏனே என் மானத்தைப் பறிகொடுத்தேன்? ஆஹா அந்தப் புன்னகை—இதோ இருக்கும் புஷ்பக் கும்பத்திலுள்ள மல்லிகா ராசியை நிகர்த்தும், மேகமண்டலத்தில் மிளிரும் மின்னற் பிழம் பைப் பழித்தும், துர்ப்பிக்ஷமான வருஷத்தில் வரும் துர்க்கோத் ஸவத்தை நிகர்த்தும், என்னுள்ளத்தில் எழும் சுக ஸ்வப்னத்தை யொப்பவும் விளங்குகின்றதே—ஐயோ இதையேன் நான் முன்னமே பார்க்கவில்லை? ஏனே நான் அறியாமல் ஏமாந்தேன்! ஆஹா அந்த அன்போ—கடலை நிகர்த்துக் கடத்தற்கரியதாய், அளக்கக் கூடாததாய், பாதாளம் வரை ஆழமுள்ளதாய், பிரசாந்தமாய், ஸ்திர மாய், கம்பீரமாய், மாதுர்யமயமாய், வேகத்தாற் கொந்தளித்து இருகரையும் புரண்டு வழிவதாய், மோதும் அலைகளால் அச் சுறுத்துவதாய், செல்லக்கூடாததாய், வெல்லற்கரியதாய், பயங்கர மாய் விளங்கும் அவ்வன்பை நான் ஏனே அறிந்துகொள்ளவில்லை? அதை யேனே என் இருதயத்தில் ஏற்று வாஞ்சையோடு வளர்த்தே னில்லை, எனக்குள்ளதை யெல்லாம் துறந்து ஏனே என் பிராணனை விட்டேனில்லை! நான் யார்? அவருக்குத் தகுதியானவளா? ஒன்றுந் தெரியாத, எழுத்தறியாத பாவியான பேதையல்லவோ நான்? அவருடைய பெருமையை அறியவும் என்னலாகுமோ? அவரிடத் தில் இருக்க நான் எவ்வளவு? நான் கேவலம் கடலிலுள்ள நத்தை, பூவிலுள்ள புழு, சந்திரனிடத்திலுள்ள களங்கம், பாதத்தில் படியும் தூசி! அவரிடத்தில் நான் எவ்வளவு?—வாழ்க்கையில் உண்டாகும் கெட்ட கனு, மனத்தில் ஞாபகமறதி, சுகத்தில் பிரதிபந்தம், நம்பிக்கை யில் சம்சயம்.—என்றிப்படியல்லவோ இருக்கிறது என் நிலைமை! அவரிடத்தில் நான் எவ்வளவு?—குளத்திற் சேறு, தாமரைத்தண்டி லுள்ள முள்ளு, காற்றில் பறக்கும் தூசி, அனலிடைப்பட்ட பூச்சி! ஐயோ ஏனே கெட்டுப்போனேன், ஏனே என் பிராணனை விட்டே னில்லை!

இவ்வாறுகத் தன் பர்த்தாவைப்பற்றி தியானிக்குமாறு அவ ளுக்கு யார் உபதேசம் பண்ணினரோ, அவர் மானிட ஹிருதயமாகிய

எல்லையற்ற சாகரத்தில் கப்பலை நடத்துவதில் கைதேர்ந்த கப்ப லோட்டி என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவருக்குத் தெரியாத தொன்றுமில்லை. வெகு காலமாய்ப் பிரவஹித்துவரும் நதியின் கதியை மாற்றி அதை இந்த அற்புத மந்திரத்தின் மகிமையால் புதிய வாய்க்காலாகத் திருப்பலாமென்றும், இந்த வஜ்ராயுதத்தின் தாக்கு தலினுல் பாறைகளும் பிளந்து போகுமென்றும், இந்த அநாவிருஷ்டி யால் கடலும் வற்றிப்போய் விடுமென்றும், இப்படிப்பட்ட மந்திரத் தால் காற்றும் ஸ்தம்பித்துப்போய் விடுமென்றும் அவருக்குத் தெரிந் திருந்தது. அப்படியே, சைவலினியின் இதயத்தில் வெகு காலமாய்ப் பிரவஹித்த நதியும் திரும்பிற்று, பாறையும் பிளந்து போயிற்று, கடலும் வற்றிப்போயிற்று, காற்றும் ஸ்தம்பித்துப் போய் விட்டது. சைவலினி பிரதாபனை மறந்து சந்திரசேகரனைக் காதலிக்கத் தொடங்கினுள்.

மனிதனது புலன்வழிகளையெல்லாம் அடைத்துவிட்டு, அப்புலன் களைப் பூர்த்தியாய் ஒடுக்கி, மனத்தையும் அதன் வியாபாரங்களையும் அடக்கிவிட்டு, பிறகு எல்லா மார்க்கங்களையும் மூடிவிட்டு மனத்தை ஒரே வழியில் செலுத்தினுல்,—அப்படிப்பட்ட ஸ்திதியில் மன மானது யாது செய்யக்கூடும்? அது ஒரே வழியில் சென்று அதி லேயே ஸ்திரமாகி அதையே உறுதியாய்ப் பற்றிக்கொள்ளும். ஐந் தாம் நாளிலே சைவலினி தான் கொண்டுவந்த காய் கிழங்குகளைத் தொடவில்லை. ஆறுநாளில் அவற்றைக் கொண்டு வருவதற்கும் அவள் வெளியே செல்லவில்லை. ஏழாநாள் காலையில் அவள் தனக் குள்ளேயே "பர்த்தாவின் தரிசனம் கிடைத்தாலும் சரி, கிடைக்கா விட்டாலும் சரி, இன்று நான் பிராணனை நிச்சயமாய் விட்டுவிடு கிறேன்" என்று சொல்லிக்கொண்டாள். ஏழாநாளிரவில் அவளது ஹிருதயத்தில் ஒரு கமலம் பூத்ததுபோலவும், அதன்கண் சந்திர சேகரன் யோகாஸனத்தில அமர்ந்திருந்தது போலவும், சைவலினி வண்டாக மாறி அவனது பாதபத்மத்தில் ரீங்காரம் செய்துகொண் டிருந்தது போலவும் அவளுக்குத் தோற்றியது.

ஏழாநாளிரவு நிச்சப்தமான அந்தகாரமயமாயிருந்தது. பறற்

கற்கள் நிறைந்த அந்தக் குகையிலே, சைவலினி தனியேயிருந்து பர்த்தாவையே அனவரதமும் தியானம் செய்து செய்து புலனறிவை இழந்து விட்டாள். பற்பல கனுக் கண்டாள். ஒரு சமயம் பயங்கரமான நரகத்தில் தான் விழுந்து விட்டதாகவும், நூறுமுழ நீளமுள்ள கணக்கற்ற சர்ப்பங்கள் தமது பதினுயிரம் பணுமுடிகளையும் விரித்துத் தன்னைச் சுற்றிக்கொண்டதாகவும் கண்டாள். அந்தச் சர்ப்பங்கள் தம் பதினுயிரம் பல்வரிசைகளையும் திறந்துகொண்டு அவளை விழுங்க வந்தன. அப்பாம்புகளின் திரண்ட மூச்சுக்காற்ருனது கொடிய புயற்காற்றைப்போற் கோஷித்தது. அப்பொழுது சந்திரசேகரன் வந்து ஒரு பெரிய சர்ப்பத்தின் படத்தின்மேல் தன் காலை வைத்து நின்ருன். உடனே பாம்புகளெல்லாம் வெள்ளத்தின் பின்வரும் ஜலம் போல் நகர்ந்து நழுவிப்போய்விட்டன. இன்னெரு சமயம், ஆழங் காணமுடியாத ஒரு பள்ளத்தில் பர்வதாகாரமான நெருப்பு ஆகாசம் வரைக்கும் கொழுந்து விட்டெரிவதாகவும் அதில் தான் விழுந்து எரிந்து போவதாகவும் கண்டாள். அந்தச் சமயத்தில் சந்திரசேகரன் அங்கே வந்து அந்த அக்நிபர்வதத்தின்மேல் சேரங்கை ஜலம் புரோக்ஷிக்க, உடனே நெருப்பு அணைந்துவிட்டது. அப்பொழுது குளிர்ந்த காற்று வீச, அந்தப் பள்ளத்தினின்றும் தெள்ளிய புனலோடு குமிழியிட்டோடும் நீரூற்று உற்பத்தியாயிற்று. அதன் கரையிலே பலவித புஷ்பங்கள் மலர்ந்தன. நீரில் பெரிய நளின மலர்கள் புஷ்பித்தன. அவற்றின்மேல் சந்திரசேகரன் நின்றுகொண்டே செல்வாஞயினுன். மற்ருெரு சமயம் ஒரு பெரும்புலி வந்து தன்னை வாயில் கவ்விக்கொண்டு ஒரு மலைமேலேறிப் போவதுபோல் கண்டாள். அப்பொழுது சந்திரசேகரன் வந்து தன் பூஜைப்புஷ்ப பாத்திரத்தினின்று ஒரு பூவையெடுத்து அந்தப் புலியின்மேல் போட, உடனே அதன் தலை அறுந்து கீழே விழுதலும் புலி பிராணனை விட்டது. அதன் முகம் பாஸ்டரின் முகம்போல் இருந்ததாகச் சைவலினிக்குத் தோற்றியது.

விடியற்காலத்தில் சைவலினிக்குத் தான் இறந்துபோய் விட்டதாகவும், ஆயினும் ஞாபகம் மாத்திரம் இருப்பதுபோலவும் தோன்றி

யது. அப்பொழுது பூதகணங்கள் வந்து அவள் தேகத்தை யெடுத்துக்கொண்டு இருண்ட ஆகாய மார்க்கத்திற் பறந்து சென்றன. அவைகள் அவளைத் தலைமயிரிற் கைபோட்டுப் பிடித்திழுத்துக்கொண்டு எத்தனையோ இருண்ட மேகங்களும் மின்னல் தீயும் நிறைந்த விசாலமான பிரதேசங்களைத் தாண்டிச்சென்றன. அப்பொழுது எத்தனையோ ஆகாச வாசிகளான அப்ஸரஸ் ஸ்திரீகளும் கின்னரமாதரும் மேகதரங்க மத்தியிலிருந்து அவளை யெட்டிப்பார்த்துச் சிரித்தனர். தேஜோமயமாய் ஆகாய வீதியில் சஞ்சரிக்கும் எத்தனையோ தேவமாதர்கள் பொன் மேகங்களில் ஆரோஹணித்துத் தங்கள் பொன்நிறமுள்ள மேனியை மின்னல் மாலைகளால் அலங்கரித்துக்கொண்டு, கரிய கூந்தல் தொங்கும் தங்கள் நெற்றிகளைச்சுற்றி நக்ஷத்திரமாலைகளை யணிந்து உல்லாசமாய் உலாவினர். சைவலினியின் பாபமயமான தேஹ ஸ்பரிசத்தால் அங்குள்ள காற்றும் அசுத்தமாகி அதனால் அத்தேவமங்கையரின் திவ்ய ஜோதியும் மங்கலடைந்தது. எத்தனையோ ஆகாயவாசிகளான பயங்கர ரூபமுள்ள பேய்கள், இருளெனக் கருத்த தங்கள் சரீரங்களைப் பிரம்மாண்டமான இருண்ட மேகங்களின்மேல் சாயவைத்துக்கொண்டு, பயங்கரமான புயற்காற்றில் விழுந்து விளையாடிக்கொண்டிருக்கையில், சைவலினியின் துர்க்கந்தம் வீசும் சவத்தைக் கண்ட மாத்திரத்தில் நாவில் நீரூற, அந்தப் பேய்கள் ஹா என்று வாயைத் திறந்துகொண்டு அச்சவத்தை விழுங்க வேகமாய் ஓடிவந்தன. இன்னும், அநேக தேவ தேவிகளின் விமானங்களினது கருமையற்ற பளபளப்புள்ள நிழலானது மேகங்களின் மேல் விழ, பாவியாகிய சைவலினியின் தேகச்சாயையானது பரிசுத்தமான விமானங்களின் நிழலின்மேல் விழுமாகில், எங்கே அவளுக்குப் பாபக்ஷயம் உண்டாகி அந்தப் பாபம் தங்களைச் சுற்றிக்கொள்ளுமோ வென்றஞ்சி, அவர்கள் தம் விமானங்களை வேறு மார்க்கத்திற் செலுத்துவாராயினர். நக்ஷத்திர மாதர்கள் நீலாம்பரத்திலிருந்து தம் சின்னஞ்சிறிய முகங்களை வெளியே நீட்டித் தம் கதிர் வீசும் கைவிரல்களால் சைவலினியின் சவத்தை யொருவருக் கொருவர் காட்டி, ஒருவருடன் ஒருவர், "அடி அக்கா, பாரடி, இந்த மனிதப் புழுக்களுக்குள்ளும் அவிசாரித்தனம் இருக்கிறது" என்று பேசிக்

கொண்டனர். ஒரு நக்ஷத்திரம் நடுநடுங்கி கண்ணை மூடிக்கொண்டது. இன்னொரு நக்ஷத்திரம் வெட்கத்தால் முகத்தை மேகத்தில் மறைத்துக்கொண்டது. மற்றொரு நக்ஷத்திரம் அவிசாரி என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில், அதன் ஒளி மழுங்கிப்போயிற்று, பூதங்கள் சைவலினியைத் தூக்கிக்கொண்டு வெகு உயரத்திற் பறந்து அதற்கு மேலும் மேலும் இன்னுமுள்ள மேக மண்டலத்தையும் நக்ஷத்திர மண்டலத்தையும் கடந்து இன்னும் அதிக உயரத்திற் சென்றன. மிகவும் உன்னதமானதொரு ஸ்தானத்திற்குப்போய் அவ்விடத்தினின்றும் சைவலினியை நரகக்குழியில் தள்ளவேண்டுமென்னும் கருத்துடன் அவைகள் அவ்வளவு உயரம் சென்றன. அவை கடைசியாகப் போய்ச்சேர்ந்த அந்த விடத்திலே இருளும் குளிருமே மிகுந்திருந்தன—மேகமில்லை, நக்ஷத்திரமில்லை, வெளிச்சமில்லை, காற்றில்லை, சத்தமில்லை, அங்கே எவ்வித சத்தமுமில்லாமலே இருந்தது; ஆனால் திடீரென்று வெகு தூரத்தில் கீழேயிருந்து அதி பயங்கரமான கடகடவென்ற ஹாஹாகார சப்தம் கேட்டது. அதைப் பார்த்தால், கீழே வெகு தூரத்தில் ஒரு நூறாயிரம் சமுத்திரங்கள் ஏககாலத்தில் குமுறி கோஷித்தாற் போலிருந்தது.

அப்பொழுது அந்தப் பூதங்கள் "இதுதான் நரகத்தின் கோலாஹலகோஷம், இதில் இந்தப் பிணத்தைக் கிடத்தி விடுவோம் என்று பேசிக்கொண்டு சைவலினியின் தலையை ஒரு உதை உதைத்துத் தள்ளின. சைவலினி உருண்டுருண்டு, உருண்டுருண்டு விழுந்துகொண்டே சென்றாள். உருண்டு செல்லும் ஆழம் அதிகரிக்க அதிகரிக்க, உருளும் வேகமும் அதிகமாகிக் கடைசியில் அந்தப் பிணம் குயவனது சக்கரம்போல் வேகமாய்ச் சுழன்று வாயாலும் மூக்காலும் இரத்தத்தைக் கக்கிக்கொண்டு விழத்தொடங்கிற்று. வர வர நரக கர்ஜனை சமீபத்திற் கேட்கத் தொடங்கிற்று. பிண நாற்றம் அதிகரித்தது. உயிர்ப்பிணமாயுள்ள சைவலினி திடீரென்று தூரத்தில் நரகத்தைக் கண்டாள். உடனே அவள் கண்கள் பார்வை யிழந்தன செவிகள் செவிடுபட்டன. அப்பொழுது அவள் சந்திரசேகரரைத் தியானித்து அவரை மானஸிகமாய் நோக்கிப் பின்வருமாறு பே

னுற்ருள்:—" என்—பிராண வல்லபா, நீ எங்கிருக்கிருய்? என் பிரபுவே, நீ எங்கே இருக்கிருய்? அபலைக்குற்ற அடைக்கலமே, நான் கும்பிடும் தெய்வமே, என் பாக்கியமே, எனக்குச் சர்வ மங்களப் பிரதாயகனே, சந்திரசேகரா, நீ எங்கிருக்கிருய்? நினது சரணுரவிந்தங்களுக்கு ஸஹஸ்ர ஸஹஸ்ர ஸஹஸ்ர ஸஹஸ்ர நமஸ்காரம். என்னைக் காப்பாற்று. நின் விஷயத்தில் நான் செய்த அபராதத்தால் இந்த நரகக்குழியில் விழுந்து கொண்டிருக்கிறேன். நீ என்னை ரக்ஷிக்காவிட்டால் வேருெரு தெய்வத்தாலும் என்னை ரக்ஷிக்க முடியாது. ஆகையால் என்னைக் காப்பாற்று. எனக்குப் பிரத்யக்ஷமாகி என்னை ரக்ஷி. பிரசன்னமாகிய திருமுகமண்டலத்துடன் இங்கே எழுந்தருளி நினது திருவடிப்பொடியை அடியாளது சென்னிமேல் கடாக்ஷிப்பாய். அப்படிச் செய்தால்தான் இந்த நரகத்தினின்றும் நான் மீள்வேன்."

அப்பொழுது பார்வையிழந்து, செவிடாகி, மரித்திருந்த சைவலினிக்கு உணர்ச்சி யுண்டானது போலவும் யாரோ ஒருவர்—நாற்புறமும் சூழ்ந்து கமழும் நறுமணந்தங்கிய அங்கமுடையவராய் அவளைத் தம் மடியில் எடுத்து வைத்துக்கொண்டிருப்பது போலவும் அவளுக்குத் தோன்றியது. அந்தக் கோரமான நரகதோஷம் திடீரென்று அடங்கவும், பிணநாற்றம் வீசிக்கொண்டிருந்த விடத்தில் புஷ்பங்களின் திவ்யகந்தம் கமழ்ந்தது. திடீரென்று அவளது செவிடு வாசியாகி, கண்கள் முன்போல் பார்வை பெற்றன. உடனே, இது மரணமன்று, புதுவாழ்வென்றும், பயங்கரமான கனுவென்றும், சந்தோஷகரமான உண்மைக் காட்சியென்றும் அவளுக்குப் புலப்பட்டது.

அவள் கண்ணைத்திறந்து பார்த்தாள், குகையில் அற்ப வெளிச்சம் நுழைந்தது. வெளியே பக்ஷிகளின் காலைநேரத்துக் கூவுதல் கேட்டது. ஆனல் இஃதென்ன? யாருடைய மடியில் அவளது தலை சாய்ந்திருந்தது? யாருடைய முகமண்டலம் அவளது மஸ்தகத்தின் மேல் கவிந்துகொண்டு, ஆகாசத்தில் உதித்த பூர்ணசந்திரன்போல் அந்த வைகறை யிருளின்மேல் கதிர் விரித்துப் பிரகாசித்தது? சைவலினிக்குத் தெரிந்துவிட்டது.—அவர்தான் சந்திரசேகரர்,—ஸந்நியாஸி வேஷத்துடன் விளங்கும் **சந்திரசேகரர்!**

நான்காவது அத்தியாயம்

படகு முழுகினது

"சைவலினி!" என்று கூவினார் சந்திரசேகரர்.

சைவலினி எழுந்து உட்கார்ந்துகொண்டு சந்திரசேகரனை எறிட்டுப் பார்த்தாள். அவள் தலை கிருகிருவென்று சுழலமிட்டது. அவள் கீழே விழுந்தாள். அவளது முகம் சந்திரசேகரரது காலடியில் பட்டது. சந்திரசேகரர் அவளைத் தூக்கி யெடுத்துத் தன் மடிமேல் உட்கார வைத்துக்கொண்டார்.

சைவலினி அழத்தொடங்கினாள். அவள் தேம்பித்தேம்பி யழுது கொண்டு சந்திரசேகரரது சரணங்களில் மறுபடியும் விழுந்து, "இப்பொழுது என் கதியென்ன சொல்லும்" என்றாள்.

"என்னையேன் பார்க்க விரும்பினாய்?" என்று கேட்டார் சந்திரசேகரர். சைவலினி கண்களைத் துடைத்து அழுகையை அடக்கிக் கொண்டு, "இனி நான் இருக்கப்போகிறது வெகு சொற்ப நாள் தான் என்று தோன்றுகிறது" என்று சாவதானமாய்ச் சொன்னாள். அவளது சரீரம் சிலிர்த்தது. கனவில் கண்டவைகள் யாவும் ஞாபகத்துக்கு வந்தன.

அவள் தலையில் கையை வைத்துக்கொண்டு ஒரு க்ஷணநேரம் மௌனமாயிருந்து, மறுபடியும் சொல்லலானாள். "இனி நான் வெகு நாள் பிழைத்திருக்கப்போவதில்லை. இது நிச்சயம். பிராணன் போவதற்குமுன் மறுபடியும் ஒருதரம் உங்களைப் பார்க்கவேண்டுமென்று ஆவலுண்டாயிற்று. ஆனால் அதை யார் நம்புவார்கள்? என் நம்புவார்கள்? பர்த்தாவைவிட்டு வெளியே போய்விட்ட பிரஷ்டைக்கு அந்தப் பர்த்தாவைப் பார்க்க வேண்டுமென்று மறுபடியும் எவ்வாறு ஆவல் உண்டாகும்?" என்று சொல்லி அதிகமான சங்கடத்தைக் காட்டும் துக்கச்சிரிப்பு சிரித்தாள்.

சந்திர.—உன் வார்த்தையில் எனக்கு அவநம்பிக்கையில்லை. உன்னைப் பலாத்காரமாய்க் கொண்டு போனது எனக்குத் தெரியும்.

சை.—அது நிஜமன்று. என் சொந்த இஷ்டத்தின் பேரிலேயே நான் பாஸ்டருடன் ஓடிவந்து விட்டேன். பாஸ்டர் நம் வீட்டைக் கொள்ளையடிப்பதற்கு முன்னதாகவே எனக்குச் சமாசாரம் சொல்லி யனுப்பியிருந்தான்.

சந்திரசேகரர் வெட்கத்தால் தலைகுனிந்து கொண்டார். அவர் அவளை மெதுவாய்க் கீழே விட்டுவிட்டு, மெல்ல எழுந்து திரும் பிப்போகையில், இனிமையான தாழ்ந்த குரலில் "சைவலினி, பன் னிரண்டு வருஷம் இந்தப் பிராயச்சித்தத்தைச் செய், அது முடிந்த பிறகு, நாம் இருவரும் பிழைத்திருந்தால், மறுபடியும் சந்திப்போம் இப்போதைக்கு இவ்வளவுமட்டும் போதும்" என்றார்.

சைவலினி கைகுவித்து வேண்டிக்கொண்டாள். "இன்னும் ஒரு தரம் உட்காருங்கள், பிராயச்சித்தத்தைச் செய்து முடிப்பதற்கு நான் கொடுத்து வைக்கவில்லை யென்று தோன்றுகிறது" என்று சொல்லிக் கொண்டிருக்கையிலேயே கனவில் கண்ட காட்சிகள் வந்து புத்தியை மயக்க, அவள் மறுபடியும் சொல்லலுற்றாள். "தயவு செய்து உட்கா ருங்களேன்—ஒரு க்ஷணகாலம் உங்களைப் பார்க்கிறேன்" என்றாள்.

சந்திரசேகரர் திரும்பி வந்து உட்கார்ந்தார்.

"தற்கொலை செய்து கொள்வதில் பாபமுண்டா?" என்று சைவ லினி கேட்டாள். அவள் சந்திரசேகரனைக் கண் கொட்டாமல் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளது மலர்ந்த செந்தாமரைக் கண்களில் நீர் ததும்பிற்று.

சந்திர.—உண்டு, என் பிராணனை விடவேண்டு மென்கிறாய்?

சைவலினி மறுபடியும் நடுநடுங்கி "என்னால் சாகமுடியாது; செத் தால் அந்த நரகத்திலன்றோ போய் விழுவேன்?" என்றாள்.

சந்திர.—இந்தப் பிராயச்சித்தத்தைச் செய்துகொண்டால் நர கத்துக்குப் போகாமல் தப்பலாம்.

சைவ.—அது சரிதான். இந்த மனோ நரகத்திலிருந்து தப்பு வதற்குப் பிராயச்சித்தமென்ன?

சந்திர.—நீ சொல்வது எனக்கொன்றும் விளங்கவில்லையே?

சைவ.—இந்த மலைக்குத் தேவதைகள் அடிக்கடி வந்துகொண்

டிருக்கிறுர்கள். அவர்கள் எனக்கு என்ன செய்து விட்டார்களோ தெரியவில்லை. இரவும் பகலும் நரகக்கனுவே கண்டு கொண்டிருக் கிறேன்.

சந்திரசேகரர் அவளை உற்றுப் பார்த்தார். அவள் தூரத்திலுள்ள ஏதோ ஒன்றைப் பார்ப்பவள்போல், அந்தக் குகையின் கோடியை நோக்கி ஏறிட்டுப் பார்த்த வண்ணமாயிருந்தாள்.

அவளது மெலிந்த முகமண்டலம் உலர்ந்துபோய்விட்டது. கண் கள் அகன்று இமைகொட்டாது அசைவற்றிருந்தன. நாசித்துவாரங் கள் மாறிமாறிச் சுருங்குவதும் விரிவதுமாயிருந்தன. மெய் சிலிர்த்தது. அவள் நடுநடுங்கினுள்.

சந்திரசேகரர்.—என்ன பார்த்துக்கொண்டிருக்கிறுய்?

சைவலினி யொன்றும் பேசாது முன்போலவே பார்த்துக்கொண்டி ருந்தாள்.

“நீயேன் பயப்பட்டிருக்கிறுய்?” என்று மறுபடியும் கேட்டார் சந்திரசேகரர்.

சைவலினி கல்போல் அசைவற்றிருந்தாள். சந்திரசேகரர் ஆச் சரியமுற்று அநேகக்ஷணம்வரையில் அவள் முகத்தை மௌனமாய் உற்றுப்பார்த்தார்.

அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. திடீரென்று சைவலினி கோவென் றலறிக்கொண்டு “பிரபூ! என்னைக் காப்பாற்றுங்கள். நீங்கள் எனக்குப் பர்த்தா. நீங்கள் என்னை ரக்ஷிக்காவிட்டால், வேறு யார் ரக்ஷிப்பார்” என்று சொல்லி மூர்ச்சையடைந்து தரையில் விழுந்தாள்.

சந்திரசேகரர் சமீபத்திலுள்ள சுனையிலிருந்து ஜலம் கொண்டு வந்து அவள் முகத்தில் தெளித்துத் தம் உத்தரீயத்தால் விசிறினுர். சற்று நேரத்திற்கெல்லாம் சைவலினிக்கு மூர்ச்சை தெளிந்தது. அவள் எழுந்து உட்கார்ந்து ஒன்றும் பேசாமல் அழத்தொடங்கினுள்.

“நீ எதைப் பார்த்துக்கொண்டிருந்தாய்?” என்று வினவினுர் சந் திரசேகரர்.

“அந்த நரகத்தைத்தான்” என்றுள் சைவலினி.

4099

சைவலினி உயிருடனிருக்கையிலேயே அவளுக்கு நரகாநுபவம் ஆரம்பமாய் விட்டதென்று சந்திரசேகாருக்குப் புலப்பட்டது.

சைவலினி சிறிதுநேரம் சும்மாவிருந்து, பிறகு "நான் சாகமாட்டேன். அந்தக் கோரமான நரகத்தைப் பார்க்கும்போதே எனக்குப் பயமாயிருக்கிறது. நான் செத்தால் நரகத்துக்குத்தான் போகவேண்டும். ஆகையால்தான் நான் பிழைத்திருக்க வேண்டுமென்கிறேன். ஆனால் பன்னிரண்டு வருஷகாலம் நான் எப்படி ஏகாங்கியாய் உயிரை வைத்துக்கொண்டிருப்பேன்? நினைவிலும் கனவிலும் கேவலம் நரகத்தையே பார்த்துக்கொண்டிருக்கிறேனே" என்றாள்.

சந்திர.—விசாரப்படவேண்டாம். உபவாசமும் மனக்கிலேசமுமே இப்பொழுது உனக்கு நேர்ந்துள்ள அவஸ்தைக்குக் காரணம். இதை வைத்தியர்கள் வாயுரோக மென்பார்கள். நீ வேதக்கிராமத்துக்குப் போய் ஊரோரத்தில் ஒரு குடிசை கட்டிக்கொள். அவ்விடத்துக்குச் சுந்தரி வந்து உனக்கு வேண்டியதை உபசரித்து உன்னைத் தகுந்த வைத்தியனுக்குக் காட்டுவாள்.

திடீரென்று சைவலினி கண்ணை மூடிக்கொண்டாள். குகையின் கோடியில் சுந்தரி சிலைவடிவமாய்த் தோன்றி விரலை நீட்டிக்கொண்டு நிற்பதுபோல் அவளுக்குத் தென்பட்டது. சுந்தரி அதிக உயரமாய் வளர்ந்திருப்பதாகவும், வரவர பனைமரத்துக்குச் சரியாய் உயர்ந்துவிட்டதாகவும், வெகு பயங்கரமாயும் அவள் கண்களுக்குத் தோற்றினாள்.

திடீரென்று அங்கே ஒரு நரகம் உண்டாயிற்று. மறுபடியும் அதே பிணநாற்றமும், அதே பயங்கரமான அக்னி கர்ஜனையும், அதே வெப்பமும், குளிர்ச்சியும், அதே பாம்புக்காடும், விகாரமான புழுக்கூட்டமும், அதே இருண்ட ஆகாசமும் தென்பட்டன. அந்த நரகத்திலே பூதகணங்கள் முட்கயிறுகளும் தேள்-பிரம்புகளும் கையிற்கொண்டு இறங்கி, சைவலினியைக் கயிற்றால் கட்டித் தேள் பிரம்பால் ஓயாது அடித்துக்கொண்டே இழுத்துச் சென்றன. பனைமரம்போல் உயர்ந்த சிலாமயமான சுந்தரி தன் கையைத் தூக்கி அப்பூதங்களைப் பின்வருமாறு உற்சாகப்படுத்தினாள்:—"போடுங்கள் பூரா

டுங்கள். நான் அப்பொழுதே அவளைத் தடுத்தேன். அவளைத் திருப்பும்பொருட்டு அவளிருந்த படகுக்குச் சென்றேன். அவள் கேட்கவில்லை. அடியுங்கள், அடியுங்கள் உங்களாலானவரையிலும் அடியுங்கள். இவள் பாபத்துக்கு நான் சாக்ஷி! மொத்துங்கள், மொத்துங்கள், மொத்துங்கள் !" அப்பொழுது சைவலினி அவர்கள் தன்னை அடிப்பதை நிறுத்தும்படி, குவித்த கரத்துடனும், நிமிர்ந்த முகத்துடனும், நீர்ததும்பும் கண்ணுடனும் வேண்டிக்கொண்டும், சுந்தரி சிறிதும் இரக்கமில்லாது "அடியுங்கள், அடியுங்கள், இந்த அவிசாரியையடியுங்கள், நான் பட்னி, இவள் அவிசாரி, புடையுங்கள்! புடையுங்கள்!" என்று கத்தினள்.

மறுபடியும் சைவலினியின் முகம் உலர்ந்துபோயிற்று. கண்கள் அகன்று இமைகொட்டாமல் ஏறிட்டுப் பார்த்தன. சைவலினி மந்திரத்தால் கட்டுண்டவள் போலானுள். சந்திரசேகரர் சிந்தாகுலராகி, இந்தச் சேஷ்டைகள் ஒன்றும் மனதுக்குச் சரியாயில்லையென்றறிந்து, அவளைப் பார்த்து "சைவலினி, என்னுடன் கூடவா" என்றழைத்தார். முதலில் அவர் சொன்னது அவளுக்குக் கேட்கவில்லை. பிறகு சந்திரசேகரர் அவள்மேல் கைவைத்து இரண்டுமூன்று தடவை அசக்கிக்கொடுத்து "என்னுடன் வா" என்ருர்.

திடீரென்று சைவலினி எழுந்து நின்று பயந்த குரலுடன் கத்தலானுள். "நட, நட, நட, சீக்கிரம், சீக்கிரம், இந்தக்ஷணமே நாம் இந்த இடத்தைவிட்டு நடக்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு அவளே விரைவாய்க் குகையின் வாயிலை நோக்கிச் சென்ருள். அவள் சந்திரசேகரருக்காகக் காத்திராமல் வேகமாய் அடிவைத்து நடந்து சென்ருள். மங்கலான வெளிச்சத்தில் வேகமாய்ச் செல்லுகையில், குகையிலுள்ள சிகிமுகிக்கற்கள் அவள் காலைப் பொத்தின. சற்று நேரத்துக்கெல்லாம் அவள் கால்நழுவித் தரையில் விழுந்தாள். அவள் பேச்சற்றிருப்பதைக் கண்டு, இவள் மறுபடியும் மூர்ச்சையடைந்துவிட்டாள் என்று சந்திரசேகரர் அறிந்தார்.

அப்பொழுது சந்திரசேகரர் அவளைத் தோள்மேல் தூக்கிக்கொண்டு குகையைவிட்டு வெளியே வந்து, அந்த மலைப்பக்கத்தி

னின்று நிச்சப்தமாய் சுரந்துவரும் சிற்றருவியுடன் கூடி விளங்கும் ஓரிடத்துக்கு வந்து சேர்ந்தார்.

முகத்தில் தெளித்த நீராலும், திறந்த வெளியில் வீசிய சுத்தமான காற்றாலும் அவள் மூர்ச்சை தெளிந்தெழுந்து கண்திறந்து "நான் எங்கே இருக்கிறேன்?" என்று கேட்டாள்.

"உன்னைக் குகையினின்றும் வெளியே கொண்டுவந்துவிட்டேன்" என்றார் சந்திரசேகரர்.

அதைக்கேட்டு சைவலினி நடுநடுங்கி மறுபடியும் பயந்தவளாகி "நீ யார்?" என்று கேட்டாள்.

சந்திரசேகரரும் அச்சமடைந்து "ஏன் இந்தமாதிரி பேசுகிறாய்? நான் உன் புருஷனென்பது உனக்குத் தெரியவில்லையா?" என்றார்.

சைவலினி ஹா ஹா வென்று சிரித்துப் பின்வருமாறு பாடலானாள்.

* எனது நாயகனோர் இனியபொன் வண்டு
மலர்தொறும் மலர்தொறும் அலைந்தவர் திரிந்திடும்.
அறியாமல் வழிதவறி யென்னன்பன்
செறிந்த † முட்புதரிடை சிக்கிக்கொண்டாண்டீ.

என்று பாடிவிட்டு "நீ லாரென்ஸ் பாஸ்டரா?" என்றாள்.

மனித சரீரத்துக்கு ஜீவகளை யளிக்கும் தேவாம்சம் சைவலினியை விட்டகன்றதென்று சந்திரசேகருக்குத் தெரிந்தது. அவளது சுவர்ண தேகத்தைப் பயங்கரமான உன்மத்தம் பிடித்துக்கொண்டது. அதைக் காணச் சந்திரசேகருக்கு அழுகை வந்துவிட்டது. அவர் மிகவும் மிருதுவான குரலில் அத்தியந்தம் ஆதரவுடன் "சைவலினி" என்று மீண்டும் அழைத்தார்.

சைவலினி மறுபடியும் கலகலவென்று சிரித்து "சைவலினி யென்பவள் யார்? இரு, இரு. ஒரு சிறு பெண் இருந்தாள். அவள் பெயர் சைவலினி. ஒரு சிறுவன் இருந்தான். அவன் பெயர் பிரதாபன் ஒரு நாளிராத்திரி அந்தச் சிறுவன் சர்ப்பமாக மாறி காட்டுக்குச் சென்

* இராகம் மோகனம் † செறிந்த—நெருங்கிய.

ருன். அந்தப் பெண் தவளையாகிப் பின்தொடர, அதை அந்தப் பாம்பு விழுங்கி விட்டது. இதை என் கண்ணுல் நான் நேராகக் கண்டேன். ஏ துரையே, நீ லாரன்ஸ் பாஸ்டரா ?" என்ருள்.

அப்பொழுது சந்திரசேகரர் துக்கத்தால் தழதழத்த குரலில் "ஆ என் குருநாதா ! இது என்ன விபரீதம் ? ஏன் இவ்வாறு செய்தீர் ?" என்று பரிதபித்துக் கதறினுர்.

சைவலினி மறுபடியும்.—

* என் செய்தாயென தின்னுயிர்த் தோழீஇ !
என்னுளங் கவர்ந்தவன் றனைக்கவர்ந்திட்டு ?
இன்ப வெள்ளந்தன் வரம்பு கடந்து ;
எதிரது வின்றிக் கரை பெருகிற்றே !

என்று பாடி " இந்த உளங்கவர்ந்தவன் யார் ? சந்திரசேகரன்தான் ; யார் கவரப்பட்டது—சந்திரசேகரன். வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகப்பட்டது யார் ? சந்திரசேகரன். நதியின் இருகரைகள் எவை ?—எனக்குச் சொல்லத் தெரியாது" என்று பிதற்றி சந்திரசேகரரின் பக்கமாய்த் திரும்பி " உனக்குச் சந்திரசேகரன் தெரியுமா ?" என்று கேட்டாள்.

" நான்தான் சந்திரசேகரன்" என்று சந்திரசேகரர் பதிலுரைத்ததுதான் தாமசம், உடனே அவள் பெண்புலிபோல் ஒரே தாவாய்த் தாவி அவர் கழுத்தைக் கட்டிக்கொண்டு யாதொன்றும் பேசாமல் அழத் தொடங்கினுள். ஆ ! அவள் எவ்வளவு நேரம் அழுதாள் ! சந்திரசேகரது முதுகும் கழுத்தும், மார்பும், வஸ்திரமும், கைகளும் எல்லாம் அக்கண்ணீர் வெள்ளத்தில் அமிழ்ந்துவிட்டன. சந்திரசேகரரும் அழுதார்.

சைவலினி அழுதுகொண்டே " நான் உன்னுடன் கூடவே வருவேன்" என,

" அப்படியானுல் வா" என்ருர் சந்திரசேகரர்.

---

* இராகம் சங்கராபரணம்.

"என்னை அடியாமல் இருப்பாயா ?" என்று சைவலினி கேட்க, சந்திரசேகரர் "இல்லை" யென்று சொல்லி பெருமூச்செறிந்து எழுந்து நின்ருர். சைவலினியும் எழுந்தாள். துயரம் தேக்கிய முகத்துடன் சந்திரசேகரர் முன்னே செல்ல, பைத்தியக்காரியும் பின்தொடர்ந்தாள். அவள் தன் மனம் போனபடியெல்லாம் சிரித்துக்கொண்டும் அழுது கொண்டும் பாடிக்கொண்டும் சென்ருள்.

ஐந்தாம் பாகம்

திரை மறைவில்

முதலாவது அத்தியாயம்

அமியட்டின் முடிவு

இங்கிலீஷ்ப்படகுகள் மூர்ஷிதாபாத்துக்குக் கிரமமாய் வந்து சேர்ந்தன. அமியட்டு துரையின் வரவு மீர்காசிமின் பிரதிநிதியாகிய முகம்மது தக்கிகானுக்கு எட்டியது. உடனே அவன் விசேஷ ஆடம்பரத்தோடும் வைபவத்தோடும் அமியட்டை வந்து பார்த்தான். அப்படி அவன் தன்னைப் பார்த்ததில் அமியட்டுக்கு நிரம்ப திருப்தியாயிற்று. தக்கிகான் விடைபெற்றுக்கொண்டு போகும்போது அமியட்டைத் தன்வீட்டுக்கு விருந்துக்கு வரும்படி யழைத்தான். அமியட்டும் அப்படியே வருகிறேனென்று மரியாதைக்காக ஒத்துக்கொண்டான். ஆனால் அவனுக்கு மனப்பூர்த்தியாய்ப் போகவேண்டுமென்று எண்ணங் கிடையாது. இது நிற்க, இக்கிலீஷ்ப் ட குகள் கள்ளத்தனமாய்ப் போய்விடாதபடி பார்த்துக் கொள்ளும்பொருட்டு, மஹம்மது தக்கிகான் இரகசியமாய் ஆட்களை ஏற்படுத்தி யிருந்தான்.

முகம்மது தக்கி புறப்பட்டுப்போனதும், விருந்துக்குப் போகலாமா வேண்டாமா என்பதைப்பற்றி அவ்வாங்கிலேயர் தமக்குள் ஆலோசித்தார்கள். இங்கிலீஷ்காரருக்குப் பயமென்பதே கிடையாதென்றும், அவர்களுக்குப் பயம் இருக்கக்கூடாதென்றும், ஆகையால் இந்த விருந்துக்குத் தாங்கள் அவசியம் போகவேண்டுமென்றும் கால்ஸ்டனும் ஜான்ஸனும் அபிப்பிராயப்பட்டார்கள். அமியட்டின் அபிப்பிராயமோ இதற்கு விரோதமாயிருந்தது. அவன் சொன்னதாவது:—எப்பொழுது இருதிறத்தாருக்கும் யுத்தம் நடக்கப்போகிறதென்று தீர்மானமாய் விட்டதோ, எப்பொழுது இருதிறத்தாருக்கும் பரஸ்பரம் மனஸ்தாபங்களும் மிதமிஞ்சிப்போய் விட்டதோ, இனி, எதிரிகளிடம்

நான் லௌகிக மரியாதைகளை என் பாராட்ட வேண்டும்? ஆகையால் இந்த விருந்துக்குப்போவதில்லை" யென்று தீர்மானித்தான்.

ஆங்கிலேயரை விருந்துக்கழைத்த சமாசாரம் தலனியும் குல்சமும் கைதியாய் வைக்கப்பட்டிருந்த படகுக்கு அதற்குள் எட்டிவிட்டது. தலனியும் குல்சமும் தமக்குள் குசுகுசுவென்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

தலனி.—குல்சம்! கேட்டையாடி, நமது விடுதலை சமீபத்திலிருக்கிறதுபோல் தெரிகிறதே.

குல்.—எப்படி?

தலனி.—உனக்கு ஒன்றும் தெரிவதில்லை போலிருக்கிறதே. நவாபின் பேகத்தைச் சிறையிலிட்டவர்கள் இவ்வளவு ஆதரவுடன் விருந்துக்கழைக்கப்படுகிறதைப் பார்த்தால், இதில் ஏதோ மர்மம் இருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. இன்றைக்கு இங்கிலீஷ்காரர் உயிரைவிட்டு விடுவார்களென்று நான் சங்கிக்கின்றேன்.

குல்.—அதைப்பற்றித் தாங்கள் சந்தோஷப்படுகிறீர்களா?

தலனி.—சந்தோஷிக்காமல் என்ன? கூடுமானால் துளி இரத்தமும் சிந்தாமலே காரியசித்தியாவதாயிருந்தால் நலமே. ஆனால் நம்மை இங்கே யனாவசியமாய்க் கொண்டுவந்தவர்களுடைய மரணத்தாலேயே நமக்கு விடுதலையாவதாயிருந்தால், அதற்காக நான் விசனப்படுவதற்குப் பதிலாகச் சந்தோஷமே படுவேன்.

குல்.—ஆனால் தங்கள் விடுதலையைப்பற்றித் தாங்கள் என் அவ்வளவு கவலைப்பட வேண்டும்? நம்மை அடைத்து வைப்பதை விட வேறெவ்விதக்கருத்தும் அவர்களுக்கு இருக்க முடியாது. அவர்கள் நம்மை எவ்விதத்திலும் துன்பப்படுத்துகின்றார்களில்லை. இந்த அடைத்து வைப்பு ஒன்றுதான். ஆனால் நாம் ஸ்திரீகள்தானே. நாம் எங்குபோனாலும், இந்த அடைத்துவைப்பு இருக்கவே இருக்கிறது.

தலனி மிகவும் கோபமடைந்து, "என் சொந்த வீட்டில் நான் அடைபட்டிருந்தபோதிலும், நான் தலனிபேகம் என்ற கௌரவம் எனக்குண்டு. இந்த இங்கிலீஷ்காரன் படகில் நான் வெறுங்கைதியைத் தவிர வேறில்லையே. இனி உன்னுடன் பேச எனக்கு இஷ்டமே இல்லை

நாம் அடைப்பட்டிருப்பதற்குக் காரணம் உனக்குத் தெரியுமா?" என்ருள்.

குல்சம்.—"ஆஹா! அவர்கள் ஒன்றும் அதை இரகசியமாய் வைத்திருக்க வில்லையே. எப்படியாஞல் மாங்கீரில் ஹே துரை இங்கிலீஷ்காரரது நன்னடைக்கைக்கு ஜாமீஞக அடைத்துவைக்கப்பட்டிருக்கிருஞே, அப்படியே நாமும் இங்கே நவாபுக்கு ஜாமீஞக அடைத்து வைக்கப்பட்டிருக்கிருேம். ஹே துரையை விடுதலை செய்து விட்டால், நம்மையும் விடுதலை செய்துவிடத் தடையிராது. ஹேதுரைக்கு ஏதாவது கெடுதி நடந்தால் நமக்கும் அப்படிப்பட்ட துர்க்கதி சம்பவிக்கும். இல்லாவிட்டால் ஒரு பயமுமில்லை."

தலனிக்கு இன்னும் கோபம் அதிகமாய்விட்டது.

தலனி.—உன் ஹே துரை எனக்கு ஒன்றும் தெரியாது. இங்கிலீஷ்காரரைப்பற்றி நீ கொண்டாடுவதைக் கேட்கவும் எனக்குப் பிரியமில்லை. விடுதலையான பிறகு கூட இவ்விடத்தை விட்டுப் போக உனக்கு இஷ்டமிராதென்று தோன்றுகிறதே.

குல்ஸத்துக்குக் கோபம் வரவில்லை. அவள் சிரித்துக்கொண்டே "நான் வரவில்லையென்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது என்னை நீங்கள் பின் தங்கவிட்டுப் போய்விடுவீர்களோ?" என்ருள்.

தலனி பின்னும் அதிக கோபமடைந்து "அதற்காகவும் நீ கவலை கொண்டிருக்கிருயோ?" என்று கேட்க, "தலையெழுத்து எப்படியிருக்கிறதோ, யார் பார்த்தார்கள்?" என்ருள் குல்ஸம் கம்பீரமாய்.

தலனிக்கு ரௌத்திராகாரமாய்க் கோபம் வந்துவிட்டது. அவள் புருவத்தை நெறித்துக்கொண்டு குல்ஸத்தை ஒரு குத்து குத்துவதற்காகக் கையை முஷ்டியாய்க் குவித்துக்கொண்டு வெகு 'ஜோராய்' அதை மேலுக்குத் தூக்கிஞள். ஆஞல் அதை இப்பொழுது பிரயோகிக்காமல் இருப்பில் வைத்துக்கொண்டாள். அப்பொழுது, கருங்கூந்தல் விழுந்து படிதலால் வண்டு மொய்க்கும் அலர்ந்த மலரென வொளிர்ந்த தன் காதண்டை தாமரை மொட்டென விளங்குமாறு அந்த முஷ்டியாய்க் குவித்த கையை வைத்துக்கொண்டு, குல்ஸத்தைப் பயமுறுத்தும் பார்வையுடன் பார்த்து "அடி, உன்னை

இரண்டு நாளைக்கு முன் அமியட்டு அழைத்து வரச்சொன்னேன். எதற்காக? நிஜத்தைச் சொல்லு” என்றாள்.

“நிஜத்தைத்தான் உங்களுக்கு நான் முன்னமே சொல்லிவிட்டேனே. உங்களுக்கு இங்கே யாதொரு கஷ்டமுமில்லாதிருக்கிறதாவென்று விசாரிக்கவேண்டியே கூப்பிட்டான். அவர்களுடைய அபிப்பிராயமென்னவென்றால், நாம் அவர்களிடம் எத்தனை நாள் இருக்கிறோமோ, அதுவரையில் சுகமாய் இருக்கவேண்டுமென்பதே. ஆகையால் அவர்கள் நம்மை விடுதலை செய்யாதிருக்கும்படி கடவுள் கிருபை செய்யவேண்டும்.”

தலனி அதைக்கேட்டு முஷ்டியை இன்னும் உயரமாய் ஓங்கிக்கொண்டு “அடி உன்னை வாரிக்கொண்டு போக” எனத் திட்டினாள்.

குல்.—இந்த இங்கிலீஷ்காரர் நம்மை விடுதலை செய்துவிட்டால், நாம் நவாபின் கையில் அகப்பட்டுக்கொள்வது நிச்சயம். அவருக்கிஷ்டமிருந்தால் உங்களை மன்னிக்கக்கூடும். என்னையோ ஒருகாலும் மன்னிக்கமாட்டாரென்பது நிச்சயம். எனக்குப் போக்கிடம் வேறே கிடைக்குமானால், அவரிடம் போக எனக்கிஷ்டமேயில்லை.

தலனி கோபத்தை விட்டுவிட்டு “எனக்கு வேறு வழி ஒன்றும் இல்லை. நான் மரிப்பதாயிருந்தால், அவருடைய திருவடிகளில்தான் என் உயிரை விடவேண்டும்.” என்று தழதழத்துச் சொன்னாள்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில், அமியட்டு தன் அதிகாரத்திற்குட்பட்ட சிப்பாய்களைப் புறப்படத் தயாராயிருக்கும்படிக் கட்டளையிட்டனன்.

அப்பொழுது ஜான்ஸன் “நமக்கு அவ்வளவு பலம் இங்கே இல்லையே. ரெஸிடென்ஸிக்கு ஸமீபமாய்ப் படகுகளிற் போய் ஏறுவது நல்லதல்லவா?” என,

அமியட்டு.—“என்றைக்கு இங்கிலீஷ்காரனொருவன் சுதேசிகளுக்குப் பயந்தோடுகிறானோ, அன்றையதினமே பாரத வருஷத்தில் பிரிட்டிஷ் ராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்ற நம்பிக்கையும் போய்விடும். நாம் இவ்விடத்தினின்று படகுகளை ஓட்டிக்கொண்டு போனால், நாம் பயந்தோடிவிட்டோம் என்று முகம்மதியர்கள் நினைப்

யார்கள். இங்கிருந்துகொண்டே மரணம் வந்தாலும் முன் நிற்கவேண்டுமே யல்லாது, பயத்தால் ஒருபோதும் ஓடக்கூடாது. ஆனல் பாஸ்டர் வியாதியஸ்தனுயிருப்பதால் அவன் சண்டை போட்டுக்கொண்டு சாக முடியாது, ஆகையால், அவன் ரெஸிடென்ஸிக்குப் போகட்டும் பேகத்தையும் அவளது தோழியையும் அவர்களுக்குச் சகாயத்துக்காகச் சிப்பாய்கள் இருவரையும் சேர்த்துப் பாஸ்டரின் படகில் ஏற்றிவிடுங்கள். இவ்வாபத்தான விடத்தில் அவர்கள்| இருப்பது நியாயமன்று" என்ருன்.

சிப்பாய்கள் சித்தமான பொழுது, ஒவ்வொருவரும் அமியட்டின் கட்டளைப்படி படகின் மத்தியில் மறைவாய் உட்கார்ந்தனர் படகை மூடியிருக்கும் மரப்பலகைகளில் துவாரங்கள் அகப்படுவது சுலபமானபடியால், ஒவ்வொரு சிப்பாயும் ஒரு துவாரத்தண்டை துப்பாக்கியுடன் போய் உட்கார்ந்தான். தலனியும் குல்சமும் அமியட்டின் கட்டளைப்படி பாஸ்டரின் படகில் போய் ஏறிக்கொண்டார்கள். பாஸ்டரும் சிப்பாய்க ளிருவருடன் படகைச் செலுத்திக் கொண்டு சென்ருன். மஹம்மது தக்கியின் தூதர்கள் இதைப்பார்த்துக்கொண்டிருந்து உடனே அவனுக்குத் தெரிவிக்கச் சென்ருர்கள்.

இந்தச் சமாசாரத்தை மஹம்மது தக்கி கேட்டுக்கொண்டு, அதற்குள் விருந்துக்கு இங்கிலீஷ்காரர் வந்து சேரவேண்டிய காலம் சென்று விட்டபடியால், அவர்களைத் தன் இருப்பிடத்திற்கு அழைத்து வரும்படி ஒரு தூதனை யனுப்பினுன். அதற்கு அமியட்டு சில காரணங்களால் படகைவிட்டுவரத் தனக்கிஷ்டமில்லை யென்று விடை சொல்லித் தூதனை அனுப்பிவிட்டான்.

தூதன் படகை விட்டுச் சிறிது தூரம் சென்று குண்டில்லாத துப்பாக்கி ஒன்றை வெடி தீர்த்தான். அந்த வெடியுடன் பத்துப்பன்னிரண்டு துப்பாக்கிகள் ஆற்றங்கரையிலிருந்து முழங்கின. குண்டுகள் படகில் பொழிவதையும் சிற்சிலவிடங்களில் படகுக்குள் நுழைந்து செல்வதையும் அமியட்டு பார்த்தான். ஆங்கிலேய சிப்பாய்களும் அதற்குப் பதில் வெடி தீர்த்தார்கள். இருதிறத்தாரிலும் ஒருவர்மேல் ஒருவர் பொழிந்த குண்டுகள் கோரமான சத்தத்தை யெழுப்பி ஆர்ப்

பரித்தன. இருதிறத்தாரும் மறைவாயிருந்தே போர்புரிந்தனர். முகம் மதியர்கள் நகரையிலுள்ள வீடுகள் முதலிய ஸ்தானங்களின் பின் மறைந்திருந்தனர். இங்கிலீஷ்காரரும் அவர்கள் சிப்பாய்களும் தம் படகுகளில் மறைந்திருந்தனர். அப்படிப்பட்ட சண்டையில் மருந் தும் குண்டும் செலவாவதையன்றிச் சீக்கிரத்தில் முடிவு தெரியக்கூடிய மார்க்கம் எதுவும் புலப்படவில்லை.

கடைசியில் முகம்மதியர்கள் தாம் மறைந்திருந்த ஸ்தானங்களை விட்டு, வாளும் ஈட்டியும் ஏந்தி பெருங்கோஷத்துடன் அமியட்டின் படகின்மேற் பாய்ந்தனர். அதைக்கண்ட நெஞ்சுரம் படைத்த ஆங்கி லேயர் சிறிதும் கலங்கினரில்லை.

அமியட்டும், கால்ஸ்டனும், ஜான்ஸனும் தத்தம் துப்பாக்கிகளை எடுத்து, வேகமாய் இறங்கிவரும் முகம்மதியர்களின் மேல் படகின் மத்தியினின்று அஞ்சா நெஞ்சுடன் இலட்சியம் வைத்து ஒன்றேனும் குறிதப்பாமல் வெடி தீர்த்து, ஒவ்வொருவனும் ஒவ்வொரு முகம் மதியனை ஒவ்வொரு குண்டால் மணலில் சாய்ந்து விழும்படிச் செய்தனர்.

அதற்குள் அலைமேல் அலைமோதுவது போல், திரள் திரளாய் முகம்மதியர் இறங்கி வரத்தொடங்கினர். அப்பொழுது அமியட்டு தம்மவரை நோக்கி “இனி நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கு யா தோர் உபாயமுமில்லை. வாருங்கள், நமது எதிர்மதவாதிகளை அழித்து நாமும் பிராணனை விடுவோம், வாருங்கள்” என்றான்.

அதற்குள் எதிரிகள் அமியட்டின் படகில் நுழைந்து விடவும், அவ்வாங்கிலேயர் மூவரும் ஒன்றுசேர்ந்து ஏககாலத்தில் அக்கினிமழை யெனக் குண்டுகளைச்சொரியவே, படகில் நுழைந்த முகம்மதியர்கள் திரிசூலத்தால் குத்துண்டவரெனச் சின்னபின்னமாய்ச்சிதறி நீரில் விழுந்தனர்.

இன்னும் முகம்மதியர்கள் மேலும் மேலும் அதிகமாய் வந்து எதிற்பாராகிச் சிலர் பெருந்தடிகளைக் கொண்டு படகின் அடித்தலத் திற் பலமாய் மோதப் படகின் அடியொடிதலும் நீரானது படிப்படி யாய்ப் படகில் நுழைந்து நிறைந்தது.

அப்பொழுது அமியட்டு தன் பரிவாரத்தைப் பார்த்து "ஆடுமாடு களைப்போல் நாம் என் நீரில் மூழ்கிச் சாகவேண்டும்? வெளியே வாருங்கள், வீரனைப்போல் கத்தியும் கையுமாய்ச் சாவோம்" என்றான்.

உடனே அஞ்சா நெஞ்சமுள்ள அவ்வாங்கிலேயர் மூவரும் கையில் வாளேந்தி வெளிப்பட்டு, அவ்வெண்ணிறந்த முகம்மதிய ரின் முன்வந்து நின்றனர். அப்பொழுது ஒரு முகம்மதியன் அமியட் டுக்குச் சலாம் செய்து "ஏன் சாகவேண்டும்? எங்களுக்குக் கீழ்ப்படிந் தால் எங்களுடனே வரலாமே" என,

அதற்கு அமியட்டு "நாங்கள் உயிரை விடவே தீர்மானித்திருக் கிறோம். நாங்கள் இன்றைக்கு இங்கே உயிரை விடுவோமானால், அதனால் ஜொலிக்கப்போகும் தீக்கொழுந்து இந்த முகம்மதிய ராஜ் யத்தை நிர்மூலமாய் எரித்து விடப்போகிறது. எங்கள் இரத்தமா னது இந்தப் பூமியில் சிந்தி ஊறுமாயின், மூன்றாம் ஜ்யார்ஜ் அரசனது விஜயத்துவஜத்தை அதில் நாட்டுவது இன்னும் சுலபமாயிருக்கும்" என்றான்.

"ஆனால் சா" என்று சொல்லி அந்தப் பட்டாணித் துருக்கன் கத்தியை ஒரே வீசாய் வீசி அமியட்டின் தலையைத் துணித்தான். அதைக்கண்டு கால்ஸ்டன் வேகமாய்க் கையை ஓங்கி அந்தப் பட்டாணி யின் தலையையும் அவன் கழுத்தினின்றும் வெட்டித் தள்ளினான்.

அப்பொழுது பத்துப்பன்னிரண்டு முகம்மதியர்கள் கால்ஸ்ட னைச் சூழ்ந்துகொண்டு அவனைப்பொத்தத் தொடங்கினர். அத்தனை பேருடைய குத்துகளையும் பொறுக்கமாட்டாது, கால்ஸ்டனும் ஜான்ஸ னும் ஓய்ந்துபோய் உயிரைவிட்டுப் படகில் சாய்ந்தனர், அதற்கு முன் னமே பாஸ்டர் படகேறிப்போய் விட்டான்.

இண்டாவது அத்தியாயம்.

மறுபடியும் அவரே

இராமசரணனது குண்டால் அடிபட்ட பாஸ்டர் கங்காஜலத் விழுதலும், பிரதாபன் படகை யவிழ்த்து விட்டான். அப்பொ

ழுது, தோணியிலிருந்த ஜனங்கள் நீரில் குதித்து நதியில் மிதந்து கொண்டிருக்கும் பாஸ்டரைத் தேடினர்கள். அவர்கள் அவனைக் கண்டெடுத்துத் தங்கள் படகில் ஏற்றிக்கொண்டு அமியட்டுக்குச் சமாசாரம் சொல்லியனுப்பினர். அமியட்டு வந்து பார்த்தபொழுது பாஸ்டர் பிரஞ்ஞையற்றுப் படுத்திருந்தான். ஆனல் பிராணன் போகவில்லை. அவன் தலையிற்பட்ட காயத்தால் பிரஞ்ஞையற்றிருந்தான். அவன் அநேகமாய் மரித்து விடுவனென்று தோன்றியபோதிலும், ஒரு வேளை பிழைத்தாலும் பிழைக்கலாமென்றும் நினைக்கக்கூடியதாயிருந்தது. அமியட்டுக்கு வைத்திய சாஸ்திரம் தெரிந்திருந்தபடியால், பாஸ்டருக்கு அக்கறையாய் வைத்தியம் செய்யத் தொடங்கினன். பகாவுல்லாவால் கிடைத்த சங்கதிகளைச் சகாயமாய் வைத்துக்கொண்டு அவன் பாஸ்டரின் படகைக்கண்டுபிடித்துஅதைத் துறைமுகத்துக்குக்கொண்டு வந்து சேர்த்தான். பிறகு அமியட்டு மாங்கீரைவிட்டுப் புறப்பட்டபொழுது குற்றுயிராய்ச் சாகக்கிடந்த பாஸ்டரை அந்தப் படகில் அழைத்துச் சென்றான்.

பாஸ்டர் இன்னும் இந்த வுலகத்தில் சிலகாலம் பிழைத்திருக்க வேண்டியிருந்தபடியால், அமியட்டு செய்த சிகிச்சையால் அவன் பிழைத்துவிட்டான். அவனுக்குப் பிராணன் கெட்டியாயிருந்தபடியால் இந்தத் தடவையும் அவன் மூர்ஷிதாபாத்தில் முகம்மதியர் கைக்குத் தப்பினன். ஆனல் இப்போது அவன் நோயாளியாகிப் பலவீனனய் விட்டான். முன்னிருந்த தேக திடனும் சாகசமும் போய்விட்டன. பிராண பயத்தால், உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடுவானயினன். தலையிற்பட்ட காயத்தால் அவன் புத்தியும் இப்பொழுது குலைந்து போய்விட்டது.

முகம்மதியர்கள் தொருத்திக்கொண்டு வருவார்களென்ற சந்தேகத்தினல் அவன் படகை வெகுவேகமாய்ச் செலுத்திக்கொண்டு சென்றான். அவன் முதலில் காசிம்பஜார் ரெசிடென்சியில் போயிருக்கலாமென்று யோசித்தான். ஆனல் அந்த ஸ்தானத்தையும் அவர்கள் எங்கே எதிர்ப்பார்களோவெனப் பயந்து அந்த யோசனையையும் விட்டு விட்டான். பாஸ்டர் இவ்விஷயத்தில் கொண்ட அநுமானம்

யதார்த்தமாகவே முடிந்தது. ஏனெனில் சீக்கிரத்திலேயே முகம்மதியர்கள் காசிம்பஜாருக்குச் சென்று ரெசிடென்சியை எதிர்த்துக் கொள்ளை யிட்டார்கள்.

பாஸ்டரோ காசிம்பஜார், பராஸ்டாங்கா, சைதாபாத், ராங்காமாடி என்னும் ஸ்தானங்களை வெகுவேகமாய்க் கடந்து சென்றான். ஆனால் அவனுக்கு இன்னும் பயம் ஒழியவில்லை. ஏதாவதொரு மரக்கலம் பின்னே வருமாயின், அதுமுகம்மதியர் படகென்றே உடனே எண்ணி விடுவான். சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு படகு அவனை விடாமற் பின்றொடர்ந்து வருவதாய்த் தென்பட்டது.

அப்பொழுது பாஸ்டர் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் உபாயத்தைச் சிந்திக்கலாயினான். அவனது பிரமையடைந்த புத்திக்குப் பற்பல யோசனைகள் உண்டாயின. "படகை விட்டுவிட்டுக் கரையேறி ஓடிப்போய் விடலாமா?" என்று ஒருதரம் எண்ணினான். "அப்படி ஓட என்னாலாகாதே, அதற்கு வேண்டிய பலம் எனக்கேது" என்று அடுத்த நிமிஷம் நினைத்தான். "நான் ஏன் நீரில் விழுந்து முழுகிப்போகக்கூடாது?" என்றொரு யோசனை உண்டாக, "நீரில் விழுந்து முழுகிப்போனால், பிறகு பிழைப்பதெப்படி" என்று உடனே அவன் மனதிற்பட்டது. "இந்த இரண்டு ஸ்திரீகளையும் ஜலத்தில் எடுத்தெறிந்து விட்டால், படகு லேசாகி இன்னும் வேகமாய்ச் செல்லுமல்லவா?" என்று கடைசியாய் யோசித்தான்.

திடீரென்று அவனுக்கு ஒரு துர்ப்புத்தி தோன்றியது. இந்த ஸ்திரீகளுக்காகத்தான் முகம்மதியர்கள் தன்னைப் பின்தொடர்ந்து வருகிறார்களென்பது அவனது உறுதியான நம்பிக்கை. தலனி நவாபின் பேகமென்று அவன் ஏற்கெனவே கேள்வியுற்றிருந்தமையால், அவளுக்காகத்தான் முகம்மதியர்கள் ஆங்கிலேய படகுகளை எதிர்த்தார்களென நினைத்தான். ஆகையால் பேகத்தை விடுதலைசெய்து விடும்பக்ஷத்தில் இனி யாதொரு கஷ்டமும் இராது. ஆகவே தலனியைக் கரையில் இறக்கி விட்டுச் செல்லவேண்டும் என்று தீர்மானித்தான்.

இந்த யோசனையுடன் பாஸ்டர் அந்தப் படகைத் தலனிக்குக்

காட்டி "இதோ நம் பின்னுல் வருகிற சிறிய படகு உனக்குத் தெரி கிறதா?" என்று குளறினன்.

"ஆம், தெரிகிறது" என்று தலனி விடைபகர,

"அது உம்மவருடைய படகு. உன்னை விடுவித்துக்கொண்டு போக வருகிறது" என்ருன் பாஸ்டர்.

பாஸ்டர் இவ்வாறு நினைப்பதற்குக் காரணமென்ன? யாதொன்று மில்லை, அவனது மதிமயக்கந்தான் அதற்குக் காரணம். அவன் கயிற்றைப் பாம்பெனக்கொண்டு மயங்கினன். இந்த விஷயத்தைப் பற்றித் தலனி ஆழ்ந்து யோசித்திருப்பாளாயின், அவளுக்கு இதில் உடனே சம்சயம் உண்டாயிருக்கும்.

ஆனல் ஆசைப்பட்ட பொருளின் பெயரைச் சொன்ன வளவிலேயே புத்தியும் மயங்கி விடுகின்றது. குருட்டாசையால் மதிமோசமுண்டாகிறது. தலனியும் அப்படிப்பட்ட ஆசையால் மதிமோசம் போய் உடனே பாஸ்டரின் பேச்சை நம்பி "அப்படியானல் எங்களை யேன் அந்தப் படகில் ஏற்றிவிடக் கூடாது? உனக்கு வேண்டிய பணம் தருகிருேம்" என்ருள்.

பாஸ்டர்.—அப்படிச் செய்ய என்னுலாகாது, அவர்கள் என் படகை ஒருதரம் பிடித்துவிட்டால், அப்புறம் என்னைக் கொல்லாமல் விடார்கள்.

தலனி.—நான் அவர்களைத் தடுக்கிறேன்.

பாஸ்டர்.—நீ சொல்வதை அவர்கள் கேளார்கள். உங்கள் தேசத்தாருக்கு ஸ்திரீஜாதிகளின் பிரார்த்தனையைக் கவுரவிக்கும் வழக்கமில்லை.

தலனிக்கிருந்த ஆவலில் அறிவு போய்விட்டது. அவள் இப்படிச் செய்தால் அதனல் வரும் சாதக பாதகங்களைப்பற்றி சிந்திக்கவேயில்லை. அந்தப் படகு தான் எண்ணியபடி இராவிட்டால் என்செய்வதென்பதைப்பற்றி அவள் யோசித்தவளே யல்லள். அது நவாபின் இராஜாங்கப் படகாயிராம விருக்கலாம் என்ற எண்ணமே அவள் புத்தியில் தோன்றவில்லை. அவளுக்கிருந்த ஆத்திரமானது அவளை ஆபத்தில் விழும்படிப் பிடித்துத்தள்ள, அவள் பாஸ்டரைப்பார்த்து

"அப்படியானால் எங்களைக் கரையில் விட்டுவிட்டு நீ புறப்பட்டுப் போகலாம்" என்றாள்.

பாஸ்டர் அந்த யோசனைக்குச் சந்தோஷமாய்ச் சம்மதித்துப் படகைக் கரையோரமாய் ஓட்டும்படி உத்திரவு பண்ணினான்.

அப்பொழுது குல்சம்—"நான் இறங்கப் போவதில்லை. நவாபின் கையில் நான் அகப்பட்டுக்கொண்டால், அப்புறம் நான் என்னென்ன அநுபவிக்கும்படி என் தலையில் எழுதியிருக்கிறதோ யார் கண்டார்கள்? இங்கிலீஷ்காரருடன் கல்கத்தாவுக்குப் போகிறதென்று நான் தீர்மானம் செய்து விட்டேன். அங்கே எனக்குத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள்" என்றாள்.

தலனி.—நீ அஞ்சவேண்டியதில்லை. நான் பிழைத்திருந்தால் நீயும் பிழைத்திருப்பாய்.

குல்சம்.—நீங்கள் பிழைத்திருந்தால் தானே!

என்ன சொல்லியும் குல்சம் படகினின்று இறங்க சம்மதிக்கவில்லை. தலனி அவளை யெவ்வளவோ கெஞ்சிக்கேட்டுக் கொண்டாள். குல்சம் இறங்க மாட்டேனென்று ஒரே பிடிவாதம் பிடித்தாள்.

அப்பொழுது பாஸ்டர் குல்சத்தைப் பார்த்து "உனக்காக அந்தப்படகு எங்களைப் பின் தொடர்ந்து வந்தால் என்ன செய்வது? ஆகவே நீயும் இறங்கிவிடு" என்று சொல்ல,

குல்சம்.—"என்னை இந்தப் படகை விட்டு இறங்கவேண்டுமென்று நீ நிர்ப்பந்தம் செய்வாயானால், நான் அந்தப் படகுக்குப் போய் அதிலுள்ளவர்களை யேவி உன்னை விட்டு விடாதபடி பார்த்துக் கொள்ள எனக்கு நன்றாய்த் தெரியும்" என்றாள்.

பாஸ்டர் அதைக் கேட்டுப் பயந்து அதற்குமேல் ஒன்றும் பேசினானில்லை. தலனியோ குல்சத்தைப்பற்றிக் கண்ணீர் விட்டுக்கொண்டே படகை விட்டிறங்கினாள். பாஸ்டர் படகைச் செலுத்திக்கொண்டு போனான். சற்று நேரத்துக்கெல்லாம் சூரியனும் அஸ்தமித்தான்.

பாஸ்டரின் படகு படிப்படியாய்ப் பார்வையை விட்டகன்றது. நவாபின் இராஜாங்கப் படகென்று எந்தச் சிறு தோணியை பாஸ்டரானவன் பிசகாய் நினைத்துத் தலனியைக் கரையில் இறக்கிச் சென்

முனே, அந்தத் தோணியும் சமீபத்தில் வந்து கொண்டிருந்தது. அது தன்னை யழைத்துக்கொண்டு செல்லக் கரையை நோக்கி வருமென்று தலனி பிரதி நிமிஷமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் அது வாராமற் போகவே, அதிலுள்ளவர்கள் தன்னை ஒரு வேளை பாராமல் இருந்திருக்கக்கூடுமென்று சம்சயித்து, அவள் தன் வஸ்திரத்தின் தலைப்பை உயரத்தூக்கி அசைத்துக்காட்டினாள். அப்பொழுதும் அந்தப் படகு கரைப்பக்கமாய்த் திரும்பாமல் இவளைக் கடந்து நேரே சென்றது. உடனே அவள் மனத்தில் மின்னல் புளிச்சிட்டாற்போல் ஓர் எண்ணம் உண்டாயிற்று. "இந்தப் படகு நவாபின் ராஜாங்கத்தைச் சேர்ந்ததென்று நான் எப்படி நிச்சயம் கொள்ளலாம்? வேறு யாருடையதாயாவது இருந்தாலும் இருக்கலாம்" என்று நினைத்து, அவள் திகிலடைந்து உரத்த குரலில் படவிற் செல்வோரைக் கூவி யழைத்தாள். அவர்கள் "இந்தப்படகில் இடமில்லை, என்ன பண்ணுவோம்?" என்று சொல்லிப் போய்விட்டார்கள்.

தலனிக்கு அப்பொழுது தலையில் இடிவிழுந்தது போலாயிற்று. அதற்குள் பாஸ்டரின் படகும் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து போய்விட்டது. ஆயினும் அதைப் போய்ப் பிடித்துவிடலாமென்ற ஆசையினால் அவள் கரை வழியே ஓடலானாள். அவள் வெகு தூரம் ஓடியும் அவள் எண்ணம் நிறைவேறவில்லை. அதற்கு முன்னமே இரவும் வந்து விட்டது. இப்போது எங்கும் இருளாய் விட்டது. கங்காஜலத்தின்மேல் ஒன்றுமே கண்ணுக்குத் தெரியவில்லை. சமீபத்தில் பெய்த மழையினால் வந்த புது வெள்ளத்தின் இரைச்சல் மாத்திரம் செவியிற் பட்டது. அப்பொழுது தலனி எக்கமுற்று வேரற்ற மரம்போல் தரையில் சாய்ந்தாள்.

சற்று நேரங்கழித்துத் தலனி, இனி கங்காநதியின் நடுவே யிருப்பதில் யாதொரு பயனுமில்லை யென்றறிந்து அவ்விடத்தினின்றும் எழுந்து மெல்லமெல்லக் கரையேறிச் சென்றாள். இருட்டில் வழி துறை யொன்றுந் தெரியவில்லை. இரண்டொரு தடவை இடறி விழுந்து மெல்லமெல்லக் கரைசேர்ந்தாள். மங்கலான நக்ஷத்திர வெளிச்சத்தில் நாற்புறமும் சுற்றிப்பார்த்தாள். எந்தத் திக்கிலும் எவ்வி

கிராமத்தின் அடையாளமும் தோன்றவில்லை. எல்லையற்ற மைதானமும் கலகலவென்றொலித்தேகும் நதியுந்தான் எத்திசையிலும் விளங்கின. எந்தப் பக்கத்திலும் மனிதனென்ற பேச்சே கிடையாது. எந்தத் திக்கிலும் வெளிச்சமென்பதே காணப்படவில்லை. ஊரையும் காணோம், மரத்தையும் காணோம், மார்க்கத்தையும் காணோம், குள்ள நரியையும் நாயையுந் தவிர்த்து வேறு விலங்குகளொன்றையும் காணோம். ஆற்று வெள்ளத்தில் நக்ஷத்திரங்கள் பிரதிபிம்பித்து நடனமாடுவது தான் காணப்பட்டது. தலனி இதையெல்லாம் நோக்கித் தனக்கு மரணம் நிச்சயமென உறுதி செய்துகொண்டாள்.

அதன்மேல், அந்த மைதானத்தின் மத்தியில் ஆற்றுக்கு வெகு தூரமல்லாததோரிடத்தில் தலனி உட்கார்ந்தாள். பக்கத்தில் மின்மினி சுற்றிச்சுற்றிப் பறந்துகொண்டிருந்தது. குள்ள நரி ஊளையிட்டது. கொஞ்சங் கொஞ்சமாய் இரவு வளர்ந்தது. இருள் பயங்கரமாயிற்று. அர்த்தராத்திரியில் தலனி, ஒரு நெடிய மனிதன் அந்த மைதானத்தில் தனியே உலாவுவதைக் கண்டு பயமடைந்தாள். அந்த மனிதன் யாதொன்றும் பேசாமல் அவள் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான்.

அதே நெடிய மனிதன்தான் மறுபடியும்! இந்த மகாபுருஷன் தான் முன் சைவலினியைத் தூக்கிக்கொண்டு மெல்ல மெல்ல இருளில் மலையேறிச் சென்றது.

மூன்றாவது அத்தியாயம்

ஆடல் பாடல்

மாங்கீரில் ஒரு விசாலமான மாளிகையில் ஸ்வரூப்சந்து ஜகத்சேட், மஹதாப் சந்து ஜகத்சேட் என்ற சகோதரர் இருவர் வசித்து வந்தனர். அம்மாளிகையில் ஒரு நாள் இரவு வேளையில் நூற்றுக்கணக்கான விளக்குகள் ஜாஜ்வல்யமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அதில் வெள்ளை சலவைக் கல்லால் அமைந்ததோர் குளிர்ந்த மண்டபத்தின் மத்தியில் நின்றிருந்த நாட்டியப் பெண்களின் இரத்தினாபா

ணங்களினின்று அவ்வெண்ணிறந்த தீபவரிசைகள் பிரதிபலித்துத் திகழ்ந்தன. நீரில் நீர் வந்து கலப்பதுபோல் ஒளியுடனும் ஒளி வந்து கலக்கின்றது. அங்கே கண்ணைப் பறிக்கத்தக்க ஒளிபொருந்திய சலவைக்கல் தூண்களிலும், தங்கமும் முத்தும் இழைக்கப்பெற்ற கந்தபாத்திரங்களிலும், சேட்டுகளின் கழுத்தில் இலங்கிய பிரகாசம் பொருந்திய பருத்த முத்துமாலைகளிலும், நாட்டியப்பெண்களின்முன் கை கழுத்து கூந்தல் காதுகள் இவைகளில் ஒளிர்ந்த ஆபரணங்களிலும் விளக்குச்சுடர் ஒளிவீச, அதனுடன் இனிய கீதநாதமும் எழுந்து ஒளியை இனிமையிற் கலந்து கண்ணுக்கும் செவிக்கும் இன்பமளித்தது. ஒளியானது இனிமையிற் கலந்து திகழ்வதாவது எங்கனம் ? இரவில் நீலாகாயத்தில் சந்திரன் உதயமாகும்போது இனிமையுடன் ஒளி கலக்கின்றது. சுந்தராங்கிகளின் சோர்ந்த நயனங்கள் நீரில்தோய்ந்த நீலோற்ப முகிழ்களை நிகர்த்திருப்ப, அவைகளினின்று மின்னற்கொடிபோல் பளிச்சிடும் கடைக்கண் பார்வை கூரிய அம்புபோல் பாய்ந்து வந்தால், அப்பொழுதும் இனிமையுடன் ஒளி கலக்கின்றது. இதழ்விட்டுவரும் கமல மஞ்சரிகள் நிர்மலமான நீலஸரோவர ஜலத்தில் அமர்ந்திருக்கையில் உதயமாகிவரும் பாலசூரியனுடைய பொன்னிறக்கதிர்கள் அங்கே ஊடுறுவிச் சென்றால் அப்போதும் இனிமையுடன் ஒளி கலக்கின்றது. நீல ஜலத்திலுண்டாகும் சிற்றலைகளின்மேல் ஞாயிற்றின் நெடுங்கதிர்கள் சாய்ந்து செந்தாமரையிலைகளின் மேலுள்ள நீர்த்துளிகளை ஜொலிக்கச்செய்து, நீர்ப்பறவைகளை இனிமையாய்ப் பாடும்படி யெழுப்பி, ஆம்பல் மலர்களின் அதரங்களைத் திறந்து அதற்குள் எட்டிப் பார்த்தால், அப்போதும் இனிமையுடன் ஒளி கலக்கின்றது. அன்றியும் உன் கண்மணியாகிய காதலியின் கமலத்தாள்களில் விளங்கும் வைரமிழைத்த சிலம்புகளில் சூரியன் மதிமயங்கி இடறி விழுந்தால், அப்போதும் இனிமையுடன் ஒளி கலக்கின்றது. இன்னும், அந்திவேளையில் ஆகாய மண்டலத்தில் நீல மேகங்கள் தமக்குப் பிடிகொடாமல் திமிறிச் செல்லும் அஸ்தமன சூரியனைத் துரத்திக்கொண்டு பின்றொடர்ந்தால், அப்போதும் இனிமையில் ஒளியானது கலக்கின்றது. பின்னும் உன்

காமினியானவள் காதில் கம்மலணி இலங்க, உன்னை யேசும்பொருட்டு நாக்கைத் தீட்டிக்கொண்டு உன் பின்னே தீவிரமாய்ப் பாய்ந்து வந்தால் அப்போதும் இனிமையில் ஒளி கலக்கின்றது. கங்காஜலத்தின் மேல் வெண்ணிலா வீசுகையில் மந்தமாருதத்தால் அசைந்தெழும் சிற்றலை களின் நுரைச்செண்டுகள் அவ்வெணிலவில் பல பிரகாசித்தால், அப் போதும் இனிமையில் ஒளிவந்து கலக்கின்றது. அன்றியும் பளபள வென்று பிரகாசித்கும் (ஸ்பார்க்லிங் ஷாம்பேன்) என்னும் திராக்ஷ ரசமானது ஸ்படிக கலசத்தில் நுரைத்தெழுந்து தளதளவென்று திகழும்போதும் இனிமையில் ஒளி கலக்கின்றது. நக்ஷத்திரங்கள் ஒளிரும் இரவுவேளையில் மந்தமான தென்றல்காற்று வீசும் போதும் ஒரு பிராமணனுக்காகச் செய்யும் விருந்தில் அறுசுவை யுண்டியும் லாடு ஹல்வா சர்க்கரைப் பொங்கல் முதலிய மதுரமான பக்ஷணவகை களும் பரிமாறியுள்ள இலையின் ஓரத்தில் சொர்ணபுஷ்ப தக்ஷிணை சமர்பிக்கப்படும்போதும், இனிமையில் ஒளிவந்து கலக்கின்றது. பால சூரியனைக்கண்ட வசந்தகோகிலம் ஆநந்தக்களிப்புடன் பாடிப் பறந் தேகும்போதும், இரத்தினபரணங்க ளணிந்த இரமணியானவள் ஒளிமயமான மணிதீப வரிசையின் வெளிச்சத்திலே இன்னிசைபாடும் போதும் இனிமையில் ஒளி கலக்கின்றது:

இவ்வாறு இனிமையில் ஒளி கலந்து திகழ்ந்தது. ஆனால் அதில் ஒரு சிறிதேனும் அந்தச் சேட்டுமார்களின் உள்ளத்திற் கலக்க வில்லை. அவர்களின் உள்ளத்திற் கலந்து நின்றது குர்க்கன்கானே.

இப்பொழுது வங்காளநாடு முழுவதிலும் போர்த்தீயின் ஜ்வாலை மூண்டுகொண்டது. கல்கத்தாவிலிருந்து யாதொரு கட்டளைக்கும் காத்திராமலே பாட்னாவிலிருந்த எல்லிஸ் துரை அவ்வூர்க்கோட்டை யைத் தாக்கினான். முதலில் அக்கோட்டை அவன் கைவசமாய் விட்ட போதிலும், மாங்கீரிலிருந்து அனுப்பப்பட்ட மகம்மதிய படைகள் பாட்னாவிலுள்ள மகம்மதிய சேனையுடன் சேர்ந்து சீக்கிரத்தில் அதை மீண்டும் கைப்பற்றி நவாபின் வசமாக்கின. அவர்கள் கை யில் அகப்பட்டுக்கொண்ட எல்லிஸ் முதலிய இங்கிலீஷ்காரர் மாங் கீருக்குக் கைதிகளாகக் கொண்டுபோகப் பட்டார்கள். இருதிறத்

தாரும் இப்பொழுது வெகு அக்கரையுடன் யுத்தசந்நாஹங்கள் செய்து கொண்டிருந்தார்கள். இந்த விஷயத்தைப் பற்றித்தான் குர்க்கன் கான் இப்போது சேட்டுகளுடன் பேசிக் கொண்டிருந்தான். கண்டோர் கண்களில்மிளகாய்ப்பொடியைத் தூவும்பொருட்டுஇவ்வாடலும் பாடலும் கேவலம் வியாஜமாக வைக்கப்பட்டனவே யன்றி—ஜகத் சேட்டுகளாவது குர்க்கன்கானாவது அதைக் கொஞ்சமேனும் கவனிக்க வேயில்லை. இவ்விஷயத்தில் எல்லோரும் வழக்கமாய்ச் செய்வது போலவே அவர்களும் செய்தார்கள் அவ்வளவேயன்றிச் சங்கீதசுகத்தை யனுபவிப்பதற்கென்றே யார்தான் சங்கீதக் கச்சேரி வைத்தவர்கள் ?

குர்க்கன்கானுடைய மனோரதம் நிறைவேறியது. இருதிறத் தாரும் போரிட்டுப் பலவீனர்களான பின் அவர்களைத் தான் வென்று வங்கநாட்டுச் சிங்காதனத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று அவன் சங்கற்பித்திருந்தான். ஆனால் அந்த மனோரதம் நிறைவேறுவதற்கு முதலில் சைனியமெல்லாம் அவன் அதிகாரத்துக்குள் இருக்க வேண்டும். சைனியமோ பொருளின்றிக் கைவசமாகாது. அப்பொருள் இலக்ஷாதிகாரிகளான சேட்டுகளின் சகாயமின்றிக் கைகூடாது. ஆகையால் சேட்டுகளுடன் கலந்து பேசுவது குர்க்கன்கானுக்கு இன்றி யமையாத ஆவசியகமாயிற்று.

இது நிற்க, எந்தப் பக்ஷத்தாருக்கு இந்தக் குபேரர்களின் கடாக்ஷம் கிடைக்கிறதோ அவர்களின் காரியம்தான் ஜெயிக்குமென்று மீர்காசிமும் நன்றாய் அறிந்திருந்தான். அன்றியும், தான் அந்தச் சேட்டுகளைக் கவுரவமாய் நடத்தாதிருந்தமையால், தன்னிடத்தில் அவர்கள் பகைமை பாராட்டி வந்தார்களென்றும் அவன் அறிந்தான். ஆகையால் அவர்களின்மேல் சந்தேகங்கொண்டு, அவர்களை மாங்கீரில் கைதிகளைப்போல் ஜாக்கிரதையாய்க் கவனித்து வரும்படி ஏற்பாடு செய்திருந்தான். தக்க சமயம் வாய்த்தால் அவர்கள் சத்துரு பக்ஷத்திற் சேர்வார்களென்று நவாபு நிச்சயமாய் நம்பினபடியால், அவர்களைக் கோட்டைக்குள் அடைக்க முயன்றுகொண்டிருந்தான். ஆனால் சேட்டுகளுக்கு இந்தச் சமாசாரம் எட்டிவிட்டது. இதுவரையில் அவர்கள் நவாபுக் கஞ்சினவர்களாய் அவனுக்கு வெளிப்படையாய் யாதொரு

பிரதி கூலமும் செய்யாதிருந்தனர்; இப்பொழுதோ, தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேறு வழியொன்றும் காணுதவர்களாய் குர்க்கன் கானுடன் சேர்ந்தனர். மீர்காசிமின் நாசமே இவ்விருவருடைய உத்தேசமும்.

ஆனுல் யாதொரு காரணமுமின்றிக் குர்க்கன்கானை வரவழைத்தால் நவாபுக்குச் சந்தேகமுண்டாகுமென்று கருதி, ஜகத்சேட்டுகள் இந்தச் சங்கீத கச்சேரியென்னும் பிரமேயமொன்றைக் கற்பித்து அதற்குக் குர்க்கன்கானையும் மற்ற மந்திரிகளையும் வரவழைத்தார்கள்.

குர்க்கன்கான் நவாபின் அனுமதிபெற்று வந்து மற்ற மந்திரிகளினின்றும் விலகி உட்கார்ந்திருந்தான். ஜகத்சேட்டுகள் கச்சேரிக்கு வந்திருந்தவர்களை உபசரிக்கும் விஷயத்தில், மற்ற விருந்தினருடன் எவ்வளவு நேரம் நின்று பேசினரோ, அவ்வளவு நேரமே குர்க்கன் கானுடனும் நின்று பேசினரேயன்றி யதிகமொன்றுமில்லை.

ஆனுல் குர்க்கன்கானுடன் நடந்த சம்பாஷணை, மற்றவர்க்குக் கேட்காதிருக்கும்படி தாழ்ந்த குரலில் நடந்தது. அது பின்வருமாறு.

குர்.—உங்களுடன் சேர்ந்து ஒரு தொழிற்சாலை வைக்கவேண்டுமென்று எனக்கு இஷ்டமிருக்கிறது.

மஹதப் சந்து.—அப்படி வைப்பதில் உங்கள் உத்தேசமென்ன?

குர்.—மாங்கீரிலுள்ள நவாபின் தொழிற்சாலையைத் தலையெடுக்கவொட்டாது தடுப்பதுதான் உத்தேசம்.

மஹ.—அது எங்களுக்கும் சம்மதமே. இம்மாதிரி ஒரு நூதன காரியத்தை ஆரம்பிக்காவிட்டால், நம் எண்ணம் நிறைவேற வேறு உபாயம் ஒன்றுமில்லை.

குர்.—நீங்கள் சம்மதிக்கும் பக்ஷத்தில், வர்த்தகத்துக்கு வேண்டிய முதலை நீங்களே வைக்கவேண்டும். நான் உழைப்புக் கூட்டாளியாயிருக்கிறேன்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் நடனம் பண்ணிக்கொண்டிருந்த வேசைப்பெண் அங்கே வந்து "நன்ருய்க் கற்றீர் நீர் இந்த மோசம்" என்று பதம்பாடினுள். அதைக் கேட்டு மஹதாப் புன்சிரிப்புடன் யாரைப்பற்றி இது?" என்று கேட்டுவிட்டு மறு

படியும் குர்க்கன்கானுடன் சம்பாஷிக்கத் தொடங்கி "சரி எங்களுக்குச் சம்மதமே, எங்கள் முதலும் வட்டியும் பத்திரமாயிருந்தால் எங்களுக்குத் திருப்திதான். எவ்வித சங்கடத்திலும் அகப்படாமலிருப்பதே எங்கள் கோரிக்கை" என்றுன்.

இவ்வாறுக, ஒருபக்கம் வேசையானவள் தோடி, பைரவி, கல்யாணி, கேதாரம், தில்லாஞ, டப்பா, கியால் முதலிய ராகங்கள் பாடிக்கொண்டிருக்க, இன்னெருபக்கம், குர்க்கன்கானும் ஜகத்சேட்டுகளும், ரூபாய், முதல், வட்டி, லாபம், நஷ்டம், என்னும் பரிபாஷைகளுடன் தம் வர்த்தக நிபந்தனைகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். எல்லாம் பேசி முடிந்தானதும், குர்க்கன்கான் சொன்னுன்:—

"புதிய வர்த்தகன் ஒருவன் தொழிற்சாலை வைக்கப்போகிருனுமே, உங்களுக்குத் தெரியுமா?

"எங்களுக்குத் தெரியாது. யாரவன்? வெள்ளைக்காரனு? சுதேசியா?

"சுதேசிதான்."

"எவ்விடத்தில்?"

"மாங்கீர் முதல் மூர்ஷிதாபாத் வரையில் எல்லா விடங்களிலும் எங்கெங்கே, மலை, காடு, வெளி இவை இருக்கிறதோ, அங்கங்கே அந்தத் தொழிற்சாலைக்கொரு கிளை இருக்குமாம்."

"அவன் எப்படிப்பட்ட முதலாளி?"

"அவன் பணக்காரனுன முதலாளியல்ல. ஆனல் என்ன நடக்குமோ சொல்லமுடியாது?"

"அவனுக்கு யாருடன் லேவாதேவி?"

"மாங்கீரிலுள்ள ராஜாங்கத் தொழிற்சாலையுடன்."

"அவன் முசல்மானு, ஹிந்துவா?"

"ஹிந்து."

"அவன் பெயரென்ன?"

"பிரதாபராயன்."

"அவன் ஊர் எது?"

"மூர்ஷிதாபாத்துக்குச் சமீபத்தில்."

"நான் அவன் பெயரைக் கேட்டிருக்கிறேன். அவன் சாமான்ய மனிதன்தான்."

"அவன் அசாத்தியன், பொல்லாத பெயர்வழி."

"இந்தத் தண்டாவில் அவன் இவ்வளவு தடாலென்று தலையிட்டுக் கொண்டதில் என்ன உத்தேசமோ?"

"கல்கத்தாவிலுள்ள கும்பேனியாரின் தொழிற்சாலையை ஓங்கவொட்டாமல் செய்வதே அவன் உத்தேசம்."

"அப்படிப்பட்டவனை நாம் கையில் போட்டுக்கொள்ள வேண்டும். அவன் எதற்கு வசமாவான்?

"இந்தக் காரியத்தில் அவன் என்ன காரணத்தினால் தலையிட்டுக் கொண்டிக்கிறானோ அதை இன்னதென்று அறியாமல் உங்கள் கேள்விக்கும் பதில் சொல்வது கஷ்டம். அவன் பொருளாசையால் சம்பளத்துக்காகவே இந்த வேலையை ஆரம்பித்திருக்கும்பக்ஷத்தில், அவனை ஒரு க்ஷணத்தில் விலைக்கு வாங்கிவிடலாம், பலவித பூஸ்திதிகளையும் அவனுக்கு நாம் கொடுக்கலாம். ஆனால் அவன் உத்தேசம் வேறு எவ்விதமாயாவது இருக்கும் பக்ஷத்தில், என்ன செய்யலாம்?

"வேறென்ன இருக்கப்போகிறது? இந்த க்காரியத்தில் தலையிட்டுக்கொள்ள வேறென்ன உத்தேசம் இருக்கமுடியும்?"

அந்தச் சமயத்தில் தேவடியாள்,

"சுந்தர முகந்தன்னில் சொகுசான மூக்குத்தி மினுக்குதே." என்று பாடினாள்.

அதைக்கேட்டு மஹாதாப்சந்து "அப்படியா? யார் அந்தச் சுந்தரமுகி? தயவுசெய்து சொல்லு" என்றான்.

நான்காவது அத்தியாயம்

தலனி செய்த செய்கை

முன் அத்தியாயத்தில் நாம் சொன்ன மஹாபுருஷன் நிச்சப்தமாய் வந்து தலனியின் பக்கத்தில் உட்கார்ந்தான்.

தலனி அழுது கொண்டிருந்தாள். ஆனால் பயத்தால் அவள்

அழுகை அடங்கிப்போகவே, அவள் அசைவற்றிருந்தாள். புதிதாய் வந்தவனும் மௌனமாய் இருந்தான்.

இவையெல்லாம் இங்கே நடந்துகொண்டிருக்கையில் இன்னொரு மகாகஷ்டம் தலனிக்கு வேறோரிடத்தில் உண்டாய்க் கொண்டிருந்தது.

தலனியை இங்கிலீஷ்காரரிடத்தினின்றும் விடுவித்த பிறகு, அவளை மாங்கீருக்கு அனுப்பவேண்டுமென்று மகம்மது தக்கிகானுக்கு இரகசியமான உத்தரவு அனுப்பப்பட்டிருந்தது. தக்கியோ இங்கிலீஷ்காரர் பிடிக்கப்பட்டாலும் அல்லது கொல்லப்பட்டாலும், உடனே தலனிபேகம் சகஜமாய்த் தன் கைவசமாய் விடுவளாகையால், அவளைப்பற்றித் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு யாதொரு திட்டமாவது செய்ய வேண்டியது அவசியமென்று நினைத்தானில்லை. ஆனால் கொல்லப்பட்ட இங்கிலீஷ்காரரின் படகில் பேகம் இல்லையென்ற சங்கதி அவனுக்குப் பின்னால் தெரியவந்தபொழுது, தனக்குப் பெரிய ஆபத்து வந்துவிட்டதென்றெண்ணினான். இந்த அஜாக்கிரதைக்காகவும் உத்தரவுப்படி நடக்கத் தவறினதற்காகவும் நவாபுக்குக் கோபமுண்டாகிற பட்சத்திலே என்னென்ன உத்பாதங்கள் சம்பவிக்குமோ சொல்ல முடியாது. இந்த ஆசங்கையால் அவன் பயந்து நவாபை வஞ்சிக்கத் தைரியமாய் ஒரு சூழ்ச்சி பண்ணினான். யுத்த மாரம்பித்தவுடன் இங்கிலீஷ்காரர் மீர்ஜாபரைச் சிறையிலிருந்து மீட்டு சிங்காசனத்தில் மீண்டும் வைப்பார்களென்று ஜனங்களுக்குள் ஒரு வதந்தி பரவியிருந்தது. இங்கிலீஷ்காரர் வெற்றியடையும் பக்ஷத்தில், அப்புறம் மீர்காசிமுக்கு இந்த வஞ்சனை தெரியவந்தாலும் யாதொரு பாதகமுமில்லை. இந்தச் சமயம் தப்பித்துக்கொண்டால், அதுவே போதுமானது. அப்படிக்கின்றி மீர்காசிமுக்கே வெற்றி உண்டாய் விட்டால், உண்மையை அவனுக்குத் தெரியாமல் மறைத்து வைப்பதற்கு அப்பொழுது ஏதாவது உபாயம் செய்துகொள்ளலாம். தற்சமயத்துக்கு மாத்திரம் கடினமான உத்தரவுகள் வாராமலிருக்கும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட துஷ்ட சங்கற்பத்தை அந்தத் தக்கிகான் செய்துகொண்டு அன்றிரவே நவாபுக்கு

அபத்தக் களஞ்சியமான ஓர் அர்ஜி அனுப்பினான். அஃதெப்படி யென்றால்:—

"பேகமவர்கள் அமியட்டின் படகில் அகப்பட்டார்கள். அவரை நான் தகுந்த மரியாதையுடன் அழைத்துவந்து கோட்டையில் சேர்த்தேன். தங்களிடத்திலிருந்து விசேஷ உத்தரவு ஒன்றும் வராமையால், நான் பேகமவர்களைச் சமூகத்துக்கு அனுப்பவில்லை. பேகம் அமியட்டின் வைப்பாட்டியாகப் படகில் இருந்து வந்தாரென்று இங்கிலீஷ்காரருடைய சிநேகிதர்கள், சேவகர்கள், படகுக்காரர், சிப்பாய்கள் முதலியவர்களின் வாய் மொழியால் எனக்குத் தெரிய வந்தது. இருவரும் ஒரே படுக்கையில் படுத்துக் கொண்டார்களாம். பேகமவர்களே இதையெல்லாம் ஒப்புக்கொண்டார்கள். ஆகவே அவர் இப்பொழுது கிறிஸ்துவராய்விட்டபடியால் மாங்கீருக்கு வரமாட்டேனென்று சொல்லிவிட்டார். அவர், "என்னை நிர்ப்பந்தம் பண்ணவேண்டாம். தயவுசெய்து நான் போகிற வழியிலேயே என்னை விட்டுவிடுங்கள். கல்கத்தாவிற்குப் போய் அமியட்டு துரையின் நண்பர்களுடன் வாழவேண்டுமென்று எனக்குமிருக்கிறது. நீங்கள் என்னைப் போகவிடாத பக்ஷத்தில் நானே தப்பித்துக்கொள்ளப் பார்ப்பேன்; நீங்கள் என்னை மாங்கீருக்கனுப்பப் பிரயத்னப்பட்டால், நான் தற்கொலை செய்துகொண்டு உயிரைவிடுவது நிச்சயம்" என்கிறாள். ஆகவே அவரை மாங்கீருக்கு அனுப்புவதா, அல்லது, இங்கேயே வைத்திருப்பதா, அல்லது, அவரிஷ்டப்படி விட்டுவிடுகிறதா, என்ற விஷயங்களைப்பற்றி சமூகத்தின் உத்தரவை யெதிர்பார்த்தவனாயிருக்கிறேன். சமூகத்திலிருந்து உத்தரவு கிடைத்தவுடனே, சித்தத்தின்படி நடக்கத் தயாராயிருக்கிறேன்."

இந்தக் கருத்தமைந்த அர்ஜி ஒன்றைத் தக்கிகான் எழுதினான். அன்றிரவே அந்தக் கடிதத்தைக் குதிரைச் சேவகன் ஒருவன் எடுத்துக்கொண்டு மாங்கீருக்குப் புறப்பட்டான்.

தூரத்திலுள்ள அறியாத ஆபத்துக்களைக்கூட நம்மனம் சிற்சில சமயங்களில் முன் குறிப்பாக அறிகின்றதென ஜனங்கள் சாதாரணமாய்ச் சொல்வதுண்டு. அது உண்மையென்று நாம் இப்பொழுது

சொல்ல வரவில்லை. ஆனால் எந்த நிமிஷத்தில் குதிரைச்சேவகன் அர்ஜிக் கடிதத்தை யெடுத்துக்கொண்டு மூர்ஷிதாபாத்திலிருந்து புறப் பட்டானோ, அப்பொழுதே தலனியின் தேகத்தில் ஒரு சிலிசிலிர்ப்பு உண்டாயிற்று. அந்த நிமிஷமே அவள் பக்கத்திலிருந்த அந்த மஹா புருஷன் அவளுடன் முதற்முதற் பேசினான். அது அவனுடைய பேச்சுக்குரல் தானோ அல்லது சீக்கிரத்தில் நேரிடப்போகிற ஆபத் தின் பிரதம சூசகமோ, யாதாயிருப்பினும், அந்நிமிஷமே தலனியின் சரீரம் குளிர்ந்து கூசி மயிர்க்குச்செறிந்தது.

அப்பொழுது பக்கத்திலிருந்த மகா புருஷன் "உன்னை யெனக்குத் தெரியும். நீ தலனிபேகமல்லவா?" எனத் தலனிபேகம் திடுக்கிட் டெழுந்தாள்.

அந்த மஹாபுருஷன்.—"உன்னை ஒரு போக்கிலிப்படவா இந் தத் தனிமையான இடத்தில் விட்டுப் போனானென்றும் எனக்குத் தெரி யும்" என்று சொல்ல, தலனியின் கண்களினின்று கண்ணீர் ஆறாய்ப் பெருகிற்று. அப்பொழுது அம்மஹாபுருஷன் "இப்பொழுது நீ எங்கே செல்லவேண்டு மென்கிறாய்" என்று கேட்க, அவளுக்கிருந்த பயமெல்லாம் உடனே போய்விட்டது. அதற்குத் தகுந்த காரணமும் அவளுக்கிருந்தது. மஹா புருஷன் முன் கேட்ட கேள்வியையே மீண்டும் கேட்க,

தலனி.—"நான் எங்கே போவேன்? எனக்குப் போக யாதோர் இடமுமில்லை. ஒரே ஒரு இடந்தானிருக்கிறது. ஆனால் அது வெகு தூரம். அங்கே என்னை யார் அழைத்துக்கொண்டு போவார்கள்" என்றாள்.

அதற்கு அந்த மஹாபுருஷன், "இனி நவாபினிடம் போக வேண்டுமென்னும் எண்ணத்தை அடியோடு விட்டு விடு" எனவே, தலனி திக்பிரமை யடைந்து வாய் குழறி "என் அப்படிச் சொல்லு கிறீர்கள்?" என்றாள்.

அதற்கு மஹாபுருஷன் "நீ போனால் ஆபத்தில் சிக்கிக்கொள் வது திண்ணம்" என, தலனி நடுங்கி, "வருகிற ஆபத்து வரட்டும். அதைவிட்டால் எனக்கு வேறு புகலிடமில்லை. அயலிடத்தில் க்ஷேம

மாய் இருப்பதைவிட சட்டின கணவனிடத்திற் போய் ஆபத்துக் குள்ளாவதா யிருந்தாலும் மேலாம்" என்ருள்.

"அப்படியானல் எழுந்திரு, நான் உன்னை மூர்ஷிதாபாத்தில் முகம்மது தக்கியினிடம் விட்டுப்போகிறேன். அவன் உன்னை மாங்கீருக்கனுப்பிவிடுவான். ஆனல் நான் சொல்லும் புத்திமதியைக் கேள். யுத்தமோ ஏற்கனவே ஆரம்பமாய்விட்டது. நவாபு தன் பரிஜனங்களை ருஹிதாஸ்கர் கோட்டைக்கனுப்பிவிட ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிருர். ஆகையால் இப்பொழுது மாங்கீருக்குப் போகவேண்டாம்" என்று மஹாபுருஷன் கூறினன்.

தலனி.—என்ன சம்பவித்தாலும், போய்த்தான் தீருகிறதென்று நான் நிச்சயித்து விட்டேன்.

மஹா.—நீ மாங்கீர் போய்ச் சேர்வாயென்று தோன்றவில்லை.

அதைக்கேட்டு தலனி சிந்திக்கலானுள், "தலைவிதி எப்படி யிருக்கிறதோ யாருக்குத் தெரியும்! உங்களுடன் கூட மூர்ஷிதாபாத்துக்கு வர நான் தயாராயிருக்கிறேன். என் தேகத்தில் பிராணன் உள்ள வரையில் நவாபின் சமுகத்துக்குப் போகும் எண்ணத்தை நான் ஒருபோதும் விடேன்" என, "அது எனக்கு நன்ருய்த் தெரியும், வா" என்று மஹாபுருஷன் சொன்னர்.

அவ்விருண்ட நிசியில் இருவரும் மூர்ஷிதாபாத்துக்குப் புறப்பட்டார்கள். தலனி என்னும் விட்டிற்பூச்சி எரியும் நெருப்பில் விழ வேகமாய்ச் சென்றது.

ஆறும் பாகம்

கார்யஸித்தி

முதலாவது அத்தியாயம்

பூர்வகதை

முன் அத்தியாயங்களில் சொல்லாமல் விட்ட கதையை இப்பொழுது சுருக்கிச் சொல்லுகிறேன். சந்திரசேகரர்தான் நாம் முன் பிரஸ்தாபித்த சந்நியாசி யென்று இதைப் படிக்கும் நண்பர்களுக்கு இனிது விளங்கி யிருக்கவேண்டும்.

என்றைக்கு அமியட்டு பாஸ்டருடன் மாங்கீரை விட்டுப் புறப்பட்டானோ, அன்றைய தினமே பாஸ்டரும் தலனிபேகம் முதலியவர்களும் அமியட்டுடன் போய்விட்டார்களென்று ரமாநந்தஸ்வாமிக்குத் தெரியவந்தது. அவர் கங்கையாற்றங்கரையிலே சந்திரசேகரனைக்கண்டு அவனுடன் இந்தச் சங்கதியைச் சொல்லிவிட்டு, "இனி நீ இங்கிருப்பதில் என்ன பிரயோஜனம்? உன் சொந்த ஊருக்குப் போய்ச் சேர். சைவலினியை நான் காசிக்கு அனுப்புகிறேன். நீ பூண்ட பரோபகார விரதத்தை இதுமுதல் செய்யத் தொடங்குவாய். இந்த யவனஜாதிப்பெண் (தலனி) மகா புண்யவதி. அவள் இப்போது ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாள். நீ அவளைத் தொடர்ந்து செல். சமயம் பார்த்திருந்து அவளைக் காப்பாற்றும் வழி தேடு. பிரதாபனும் உன்னைச் சேர்ந்தவனே. உன் க்ஷேமத்தைக் கருதுபவன். உன்பொருட்டுத்தான் அவன் இந்தத் துன்ப நிலைக்கு வந்திருக்கிறான். இந்தச் சமயத்தில் நீ அவனைக் கைவிடலாகாது. அவர்களைப் போய்ப் பார்" என்றார். இதை நவாபுக்குத் தெரிவிக்க வேண்டுமே என்று சந்திரசேகரர் சொல்ல, ரமாநந்தர் "வேண்டாம் அதை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்றார். இனி வேறு வழியில்லை யென்று கண்டு சந்திரசேகரர் குருவின் ஆணையைத் தாங்கினவராய் ஒரு சிறு படகில் ஏறிக்கொண்டு அமியட்டைத் தொடர்ந்து சென்றார்.

ரமாநந்த ஸ்வாமியும் சைவலினியைக் காசிக்கு அனுப்பவதற்குச் சரியான நம்பிக்கையுள்ள சிஷ்யனைத் தேடிச் சென்றார். அப்பொழுது சைவலினி இங்கிலீஷ்காரருக்குப் பின்னால் ஒரு தனியான படகில் போய்க்கொண்டிருக்கும் சங்கதி தற்செயலாய் அவருக்குத் தெரியவர, அவர்பாடு சங்கடமாய் விட்டது. இந்தப் பாவி யாரைப் பின்பற்றிச் செல்லுகின்றாள்—பாஸ்டரையா, சந்திரசேகரரையா? அப்பொழுது ரமாநந்தர் தனக்குள் "ஐயா, இந்தச் சந்திரசேகரனுக்காக நான் மறுபடியும் சம்சார வியாபாரங்களில் தலையிடும்படி வந்ததே" என்று சிறிது நேரம் தியங்கிக் கடைசியில் ஒரு தீர்மானம் செய்துகொண்டு அதே வழியிற் செல்வாராயினார்.

ரமாநந்த ஸ்வாமி தம் வாழ்நாள் முழுவதும் காலால் நடந்தே தேச தேசாந்தரங்களுக் கெல்லாம் யாத்திரை சென்று சஞ்சரித்தவரானமையால், ஒப்புயர்வற்ற பாதஸஞ்சாரி யெனப் பெயரெடுத்திருந்தார். அவர் கரையோரமாய் நடந்து சென்று சீக்கிரத்தில் சைவலினியைத் தாண்டி முன்னே சென்றார். அவர் விசேஷமாய் ஆஹார நித்திரைகளுக்கு வசமாகிறவரல்லர். இடைவிடாமற் செய்த அப்யாச பலத்தால் அவற்றையெல்லாம் அடக்கி வென்றவர். ஆகவே அவர் வேகமாய் நடந்து சந்திரசேகரரையும் கடந்து சென்றார். அவர் கரையோரமாய்ச் செல்வதைச் சந்திரசேகரர் பார்த்துச் சமீபத்திற் சென்று வந்தனம் பண்ணினார்.

உடனே ரமாநந்த சுவாமி: "எனக்கு நவத்வீபத்துப் பண்டிதர்களைப் பார்க்க வேண்டுமென்று இச்சை உண்டாயிருக்கிறது. ஆகவே வங்காளத்துக்குப் போவதென்று நிச்சயித்திருக்கிறேன். அதற்கு உன்னுடன் கூடப் பிரயாணம் செய்வதே நல்லதென்று நினைக்கிறேன்" என்றார். இப்படிச் சொல்லிக்கொண்டே அவர் சந்திரசேகரர் ஏறியிருந்த படகில் ஏறிக்கொண்டார்.

அவ்விருவரும் இங்கிலீஷ்காரரின் சிறு கப்பற் கூட்டத்தை அணுகினபொழுது தங்கள் தோணியை மறைவான வோரிடத்திற்குச் செலுத்திக்கொண்டுபோய்க் கரையில் இறங்கினார்கள். அப்பொழுது சைவலினியின் படகும் அங்கே வந்து சேர்ந்து மறைவாய்

நின்றதைக்கண்டு அவ்விருவரும் கரையில் ஒளிந்து நின்று என்ன நடக்கிறதென்று பார்க்கலானார்கள். பிரதாபனும் சைவலினியும் வெகு தூரம் நீந்திக்கொண்டுபோய் அங்கிருந்த ஒரு தோணியில் ஏறிக் கொண்டு தப்பியோடுவதை அவர்கள் கண்டு தாமும் தம் படகில் ஏறிக் கொண்டு அவளைப் பின் தொடர்ந்து சென்றார்கள். பிரதாபனும் சைவ லினியும் படகை நிறுத்தினதைக் கண்டு இவர்களும் தம் படகை அதற் குச் சிறிது தூரத்தில் நிறுத்தினார்கள்.

ரமாநந்த ஸ்வாமி அபார புத்திமானானபடியால், அப்பொழுது சந்திரசேகரனைப் பார்த்து "பிரதாபனும் சைவலினியும் நீந்திக்கொண்டு செல்லுகையில் அவர்களுக்குள் நடந்த சம்பாஷணையைக் கேட்க உன் னால் முடிந்ததா?" என்று கேட்டார்.

சந்திர.—இல்லை, முடியவில்லை.

ரமா.—அப்படியானால் இன்றிரவு தூங்காதே. அவர்களின்மேல் கண்ணோக்கமாயிரு.

அப்படியே இருவரும் தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தார் கள். விடியற்கால வேளையில் சைவலினி படகிலிருந்து மெள்ள இறங் கிக் கரையிலுள்ள அடர்ந்த காட்டில் நுழைந்து கண்ணுக்குத் தெரி யாமல் மறைந்ததைப் பார்த்தார்கள். அருணோதயமாகியும் சைவ லினி திரும்பிவரவில்லை. அப்பொழுது ரமாநந்த ஸ்வாமி சந்திரசேகர ரைப் பார்த்து "எனக்கு இது ஒன்றும் விளங்கவில்லை. அவள் மன தில் என்ன எண்ணிக் கொண்டிருக்கிறாளோ! அவளைத் தொடர்ந்து செல்வோம் வா" என்றார்.

பிறகு இருவரும் எச்சரிக்கையுடன் அவள் பின் சென்றனர். சாயங்கால வேளையில் மேகாடம்பரத்தைப் பார்த்து ரமாநந்த ஸ்வாமி சந்திரசேகரனை நோக்கி "உன் புஜத்தில் எவ்வளவு பலம் இருக்கி றது?" என்று வினவ, சந்திரசேகரர் புன்னகை புரிந்து ஒரு பெரிய பாறாங்கல்லை ஒரே கையால் எடுத்து வீசித் தூர எறிந்தார்.

அதைக்கண்டு ரமாநந்த ஸ்வாமி "நல்லது, நீ சைவலினியிடம் சென்று மறைவாயிருந்து, அவளைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள். சமீபத்தில் அடிக்கப்போகும் புயலில் அவளுக்கு உதவியில்லாவிட்

டால் அவள் மரிப்பது நிச்சயம். இதன் அருகாமையில் ஒரு குகை யிருக்கிறது. அதற்கு வழி எனக்குத் தெரியும். அபாயம் நேரிடுவதா யிருந்தால் நான் உனக்குச் சைகை காட்டுவேன். உடனே நீ அவளை உன் தோளில் எடுத்துக்கொண்டு என் பின்னே நடந்து வா" என்ருர்.

"சற்று நேரத்துக்கெல்லாம் மையிருள் வந்து மூடிக்கொள்ளுமே. வழி யெப்படித் தெரியும்?"

"நான் கிட்டவே இருப்பேன். இந்தத் தண்டத்தின் ஒரு நுனியை நீ பிடித்துக்கொள். மற்ருெரு நுனி என் கையிலிருக்கும்."

சந்திரசேகரர் சைவலினியைக் குகையில் விட்டு விட்டு வெளியில் வந்த பிறகு ரமாநந்தர் இவ்வாறு சிந்திக்கலாயினர். "நான் இத்தனை காலம் சர்வ சாஸ்திரங்களையும் ஓதினேன். சகல விதமான மனிதர் களுடனும் பேசியும் பழகியுமிருக்கிறேன். ஆனல் அவ்வளவும் வீணே இந்தப் பெண்ணின் மனத்தை யறியமாட்டாமல் விழிக்கிறேன். இந்தக் கடலுக்கு அடித்தலமில்லையோ?" என்று யோசித்துப் பிறகு சந்திரசேகரனைப் பார்த்து "சமீபத்தில் பர்வத மடம் ஒன்றிருக்கிறது. நீ அங்குபோய் இன்றிராத்திரி தங்கியிரு. சைவலினி விஷயமாய்ச் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றியபின், நீ மறுபடியும் யவன (முகம்மதிய) மங்கையைப் பின்பற்றிச் செல்வாய். பரோப காரத்தைத் தவிர்த்துப் பிறிதொரு விரதமும் உனக்குக் கிடையாது. இதை ஞாபகத்தில் வைத்துக்கொள். சைவலினியைப்பற்றி உனக்கு விசாரம் வேண்டாம். அவளைப் பார்த்துக்கொள்ள நான் இங்கே இருக் கிறேன். ஆனல் ஒன்று மாத்திரம் ஜாக்கிரதை, என் அனுமதியின்றிச் சைவலினியைப் பாராதே. நான் சொல்லுகிறபடி நீ நடக்கும் பக்ஷத் தில், சைவலினிக்குப் பரமாநுகூலம் உண்டாவது நிச்சயம்" என்ருர்.

இந்தச் சம்பாஷணை முடிந்தவுடன் சந்திரசேகரர் விடைபெற்றுச் சென்ருர். ரமாநந்த ஸ்வாமி அதன் பிறகு அந்தகாரத்தில் ஒருவருக் கும் தெரியாமல் குகைக்குள் நுழைந்தார்.

பின்னர் நடந்த சங்கதிகளெல்லாம் கதாநேயர்களுக்கு ஏற்கனவே தெரியும். உன்மத்தம் பிடித்த சைவலினியை யழைத்துக்கொண்டு சந்திரசேகரர் அந்த மடத்தில் ரமாநந்தஸ்வாமியின் எதிரில் போய்

நின்று, கண்ணில் நீர் தாரைதாரையாய்ப் பெருக, “ஆ! என் குருவே! என்ன இப்படிச் செய்துவிட்டீர்” என்றார்.

ரமாநந்த ஸ்வாமி சைவலினியின் ஸ்திதியை ஜாக்கிரதையாய் உற்றுப்பார்த்து மந்தஹாஸத்துடன் மொழியலுற்றார்.

“எல்லாம் சரிதான். நீ விசாரப்படவேண்டாம். இரண்டொரு நாள் இங்கே இளைப்பாறின பிறகு இவளை ஊருக்கழைத்துக்கொண்டு போ. முன்னிருந்த வீட்டிலேயே அவளைக் கொண்டுபோய் விடு. யார் இவளுடைய பழைய சிநேகிதர்களோ அவர்களையே இவளுடன் சதாகாலமும் இருக்கும்படி திட்டம்செய். பிரதாபனையும் அடிக்கடி வந்து பார்த்துக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள். அதற்கப்புறம் நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.”

குருவின் ஆணைப்படி சந்திரசேகரர் சைவலினியைத் தன்னூருக்கு அழைத்துக்கொண்டு சென்றார்.

இரண்டாவது அத்தியாயம்

ஹுக்கும் (உத்திரவு)

இங்கிலீஷ்காரருடன் யுத்தம் தொடங்கிவிட்டது. அத்துடன் மீர்காசிமிக்கும் நாசகாலம் ஆரம்பமாயிற்று. முதல் முதலில் காட்வா யுத்தத்தில் அபஜயம் உண்டாயிற்று. பிறகு குர்க்கன்கானுடைய நம்பிக்கைத் துரோஹம் வெளியாயிற்று. அதனால் நவாபின் கடைசியான ஆசையும் போய்விட்டது. இந்தச் சந்தியிலே அவன் புத்தியும் விகாரமடைந்தது. மீர்காசிம் இங்கிலீஷ்காரக் கைதிகளை வதம்செய்துவிடுகிறதென்று தீர்மானித்தான். அவன் மற்றவர்களையும் மிகவும் அக்கிரமமாய் நடத்தத் தலைப்பட்டான். இந்தச் சமயத்தில் மகம்மது தக்கி தலனியைப்பற்றி அனுப்பிய சமாசாரமும் வந்துசேரவே எரிகிற தீயில் எண்ணெய் விட்டது போலாயிற்று. ஆங்கிலேயரோ துரோகிகளாய் விட்டனர். தன் சொந்த சேனாபதியும் எஜமான துரோஹியாய் விடுவானென்று சம்சயிக்கவேண்டியிருந்தது. ராஜ்யலக்ஷ்மியும் விசுவாச காதகியாய்விட்டாள். இவையெல்லாம் போதாதென்று தலனி

யும் கற்புநிலை தவறிவிட்டாள். இனி அவனால் பொறுக்க முடியவில்லை. மீர்காசிம் தக்கிகானுக்குப் பதில் கடிதம் எழுதி "இனி தலனியை என்னிடம் அனுப்பவேண்டிய அவசியமில்லை. அவளை அங்கேயே விஷங்கொடுத்துக் கொன்றுவிடு" என்று தெரிவித்தான்.

மகம்மது தக்கி தன் கையாலேயே விஷபாத்திரத்தை யெடுத்துக்கொண்டு தலனியிடம் சென்றான். தலனி தன் எதிரில் அவன் வந்து நிற்பதைக்கண்டு ஆச்சரியமுற்று "இதென்ன கான் சாயபு! என்னை யேன் இப்படிப் பஜீத் பண்ணுகிறீர்" என்று எரிந்து விழுந்தாள்.

மகம்மது தக்கி தலையில் அடித்துக்கொண்டு "ஐயோ விதியே உன் விஷயத்தில் நவாபுக்கு அநுக்கிரஹம் இல்லையே" என்றான்.

தலனி சிரித்துக்கொண்டே "யார் உமக்குச் சொன்னது?" என்றாள்.

"என்னிடத்தில் உங்களுக்கு நம்பிக்கையில்லாவிட்டால், இதோ இருக்கிறது நவாபின் ஹுக்கும், நீங்களே பார்த்துக்கொள்ளலாம்" என்றான் தக்கி.

தலனி.—அப்படியானால் நீர் அந்த உத்தரவைச் சரியாய்ப் படிக்கவில்லை போலும்.

தக்கி உத்தரவை அவளிடம் கொடுத்தான். அதைப் படித்துவிட்டுத் தலனி சிறிது புன்னகை புரிந்து அந்தக் காகிதத்தை வீசியெறிந்துவிட்டு "இது சிருஷ்டனை. என்னுடனா இந்த வேடிக்கை? உமக்கென்ன நாசகாலம் நேர்ந்து விட்டது?" என்றாள்.

தக்கி.—தாங்கள் அஞ்சவேண்டாம், நான் தங்களைக் காப்பாற்றுகிறேன்.

தலனி.—ஓகோ! ஏதோ உத்தேசத்துடன் வந்திருக்கிறீர். இந்தச் சிருஷ்டனைக் கடிதத்தை யெடுத்துக்கொண்டு என்னைப் பயமுறுத்த வந்தீரோ?

தக்கி.—அப்படியானால் கேளுங்கள். நீங்கள் அமியட்டின் படகில் அவனது வைப்பாட்டியாக இருந்தீர்களென்று நான் நவாபுக்கு எழுதினேன். அதன்மேல்தான் இந்த உத்தரவு பிறந்திருக்கிறது.

இதைக் கேட்டதும் தலனி கோபத்தால் புருவத்தை நெறித்

தாள். அசைவற்ற கங்காஜலத்தின் மேலுண்டாகும் அலைகள் போல் அவளது நெற்றியில் சுருங்கிய மடிப்புகள் சேர்ந்து தோன்றின. அவளது புருவவில்லில் சிந்தையாகிய நாண் பூட்டப்பட்டது. மகம்மது தக்கி மனங்கலங்கித் தத்தளித்தான். தலனி "ஏன் அப்படி எழுதினாய்?" என்று கேட்க, மகம்மது தக்கி நடந்ததை யெல்லாம் ஒன்று விடாமல் ஆதியோடந்தமாய்ச் சொன்னான்.

தலனி.—ஏதோ தயவுசெய்து அந்த உத்தரவைக் காட்டும், இன்னொருதரம் பார்ப்போம்.

மகம்மது தக்கி மறுபடியும் அந்தக் காகிதத்தை அவள் கையிற் கொடுத்தான். அவள், அதை ஜாக்கிரதையாய் வாசித்துப்பார்த்து, அது யதார்த்தமானதே, சிருஷ்டனையன்றெனத்தேர்ந்து விஷமெங்கே என்று கேட்டாள்.

"விஷமெங்கே ? " என்ற வார்த்தையைக் கேட்டு மகம்மது தக்கி ஆச்சரியமுற்று "எதற்காக உங்களுக்கு விஷம் வேண்டும்?" என்றான்.

தலனி.—ஆக்ஞாபத்திரத்தில் என்ன ஹுக்கும் இருக்கிறது ?

தக்கி.—உங்களுக்கு விஷங்கொடுக்க வேணுமென்று.

தலனி.—சரி, விஷமெங்கே ?

தக்கி.—தாங்கள் உண்மையாகவே விஷபானம் பண்ணப் போகிறீர்களா ?

தலனி.—ஏன் கூடாது ? என் அரசன் கட்டளையல்லவோ அது ? அதை ஏன் நான் நிறைவேற்றக்கூடாது ?

மகம்மது தக்கி சாகமாட்டாத வெட்கத்துடன் மனம் பதைக்கப் பதைக்க, " நடந்தது நடந்து விட்டது. தாங்கள் விஷபானம் செய்ய வேண்டியதில்லை. அதற்குத் தகுந்த உபாயம் நான் செய்கிறேன் " என்றான்.

தலனியின் கண்களில் தீப்பொறி பறந்தது. அவள் தன் சிறிய உடலை உந்நதமாக்கிக்கொண்டு எழுந்து நின்று "உன்னைப்போன்ற கொடும் பாவியின் கையில் பிராணதானம் வாங்குகிறவள் உன்னிலும் கடைகெட்டவளாக வல்லவோ இருக்கவேண்டும்? போ, விஷத்தைக் கொண்டுவா " என்றாள்.

மகம்மது தக்கி தலனியை வியப்புடன் விழித்துப் பார்த்தான். விலாஸினியாயும் தருணியாயும் விளங்கும் அச்சுந்தரியை உற்றுப்பார்த்தான். யௌவனமாகிய சோனுமாரியால் லாவண்ய நதி அப்பொழுது தான் பூர்ணமாய்ப் பிரவஹிக்கத் தொடங்கியது. யௌவனமாகிய வசந்த காலத்தில் அவளது அங்கமலர்களெல்லாம் அகன்று விகஸித்தன. வசந்த ருதுவும் வர்ஷாகாலமும்(மழைகாலமும்)ஒன்ருய்க் கலந்தன. உன் ஆசைக்கண்மணி துக்கத்தால் துன்புறுகின்ருள். எனினும் பார்ப்பதற்கு எவ்வளவு மனோஹரமாயிருக்கிருள் ! ஈசா! துக்கத்தை ஏன் இவ்வளவு சுந்தர ரூபமாகச் செய்தாய் ? துக்கத்திற்குள்ளாகித் தத்தளிக்கும் இந்தத் தையலை, காற்ருல் மோதப்பட்டு உதிரும் இம்மலரை, அலைகளால் அடிக்கப்பட்டலையும் இவ்வானந்த வோடத்தை அடைந்து என் செய்வது ? எங்கே வைப்பது ? என்று யோசித்துக்கொண்டிருக்கையில் தக்கிகானுடைய காதில் சைத்தான் புகுந்து "உள்ளத்தில்" என்று இரகசியமாய் உரைத்தது.

அப்பொழுது தக்கிகான் "கேளடி, என் சுந்தரி, என்னிடம் வா, விஷத்தை யருந்தவேண்டிய அவசியமில்லாமலிருப்பாய் " என்ருன்.

இந்த வார்த்தையைக் கேட்டதும், எமக்கு எழுத வெட்கமாயிருக்கிறது—மகம்மது தக்கியைத் தலனி ஒரு உதை உதைத்தாள்.

மகம்மது தக்கி விஷங்கொடுக்க மனமில்லாதவனுய்த் தலனியை அரைப்பார்வையாய்ப் பார்த்துக்கொண்டு மெல்ல மெல்லத் திரும்பிச் சென்ருன்.

அவன் போனவுடனே தலனி தரையில் விழுந்து புரண்டு வேதனையால் துடிதுடித்துப் பின்வருமாறு பிரலாபித்தாள்.

"ஹா என் ராஜ ராஜேசுவரா ! ஷாஹான் ஷா, பாதிஷாக்களுக்கும் பாதிஷாவே! தங்கள் தாசானுதாசியாகிய இந்த அடிமைமேல் இவ்வளவு ஆக்ஞை ஏனே ? நான் விஷத்தைத் தின்னவா ? தாங்கள் ஆக்ஞாபிக்கும்போது நான் ஏன் தின்னக்கூடாது ? உங்கள் அன்பே எனக்கு அமிர்தம், உங்கள் கோபமே எனக்குக் கொடிய விஷம். நீங்கள் எப்பொழுது கோபித்துக்கொண்டீர்களோ அப்பொழுது நானும் விஷத்தை உட்கொண்டே தீர்வேன். உங்கள் அதிருப்தியைக்

காட்டிலும் விஷமென்ன அதிக வருத்தமுடையதோ? ஹா ராஜாதி ராஜா! பிரபஞ்ச பாஸ்கரா! திக்கற்றவர்களின் தஞ்சமே! லோக நாதா! தெய்வப் பிரதிநிதியே! தயாசாகரமே! தாங்கள் இப்போ தெங்கே இருக்கிறீர்கள்? இது தங்கள் ஆக்ஞையானபடியால், நான் மந்தஹாஸத்துடனே விஷத்தை யருந்துவேன். ஆனல் தாங்கள் பக்கத்திலிருந்து பார்க்கக் கொடுத்துவைக்க வில்லையே என்பதுதான் என் துக்கம்."

கரிமன் என்கிற வேலைக்காரி ஒருவள் தலனிக்கு ஊழியஞ் செய்வதற்காக வைக்கப்பட்டிருந்தாள். தலனி அவளைத் தன்னிடம் அழைத்துத் தன் நகைகளையெல்லாம் கழற்றி அவள் கையிற் கொடுத்துவிட்டு "நீ ஒருவருக்குந் தெரியாமல் ஹகீமினிடம் (வைத்தியனிடம்) போய் எனக்கு மறுபடியும் எழுந்திருத்தலில்லா நித்திய நித்திரையை உண்டாக்கும்படியான தூக்க மருந்து வாங்கிக்கொண்டு வா. இந்த நகைகளை விற்று மருந்தின் கிரயத்தைக் கொடுத்துவிட்டு மீதியை நீயே யெடுத்துக்கொள்" என்ருள்.

கரிமன், தலனியின் நீர் ததும்பும் கண்களினின்று சகலமும் தெரிந்துகொண்டாள். முதலில் அவள் சம்மதிக்கவில்லை. ஆனல் அடிக்கடி தலனி செய்த நிர்ப்பந்தத்தினுலும், அவள் கொடுத்த பெருந் தொகையினுலும், கடைசியில் அந்த மூடத்தனமுள்ள வேலைக்காரப் பெண் பணவாசையால் அதற்கிணங்கினுள்.

ஹகீம் ஔஷதம் கொடுத்தனுப்பினுன். அதை அறிந்த சேவகனெருவன் தக்கியினிடம் இரகசியமாய்ச் சென்று வேலைக்காரியான கரிமன் ஹகிம் மிர்ஜா ஹபீபினிடத்திலிருந்து இப்பொழுதுதான் விஷம் வாங்கி வந்தாளென்று சொல்லி விட்டான்.

தக்கிகான் கரிமனைப் பயமுறுத்திக் கேட்கும்பொழுது அவள் நடந்ததையெல்லாம் ஒப்புக்கொண்டு "விஷத்தைத் தலனி பேகத்தினிடம் கொடுத்துவிட்டேன்" என்ருள்.

உடனே மகம்மது தக்கி தலனியிடம் சென்ருன். பார்த்தான்,—தலனி கூப்பிய கையோடும் மேல் நோக்கிய முகத்தோடும், உயரப்பார்க்கும் கண்ணேடும் ஆசனத்தில் அமர்ந்திருந்தாள். அவ

ளது அகன்ற பத்மபலாச நேத்திரங்களினின்று கண்ணீர் தாரை தாரையாய் வடிந்து கன்னத்திற் பெருகி வஸ்திரத்தின் மேல் விழுந்தது. எதிரே வெறும் பாத்திரம் மாத்திரம் இருந்தது. தலனி விஷத்தை யருந்திவிட்டாள்.

"இது என்ன பாத்திரம் இங்கே விழுந்திருக்கிறது?" என்று மகம்மது தக்கி கேட்க,

"அதுதான் விஷம். நான் உன்னைப்போன்ற சண்டாள சாமி துரோகியல்ல. என் நாதனது கட்டளையை நான் நிறைவேற்றுகின்றேன். உனக்கும் அதுதான் கதி. மீதியுள்ளதை அருந்தி என் பின்னே வா" என்றாள் தலனி.

மகம்மது தக்கி ஒன்றும் பேசாது திகைத்து நின்றான். மெல்ல மெல்லத் தலனி கீழே சாய்ந்தாள். அவள் கண்கள் மூடின, எல்லாம் இருண்டன, தலனி போய் விட்டாள்.

மூன்றாவது அத்தியாயம்

குபேரன் கோவணாண்டியானது

மீர் காசிமின் சேனை 'காட்வா' சண்டையில் தோல்வியடைந்த பின் திரும்பி ஓடிவந்து விட்டது. எற்கெனவே முறிந்துபோயிருந்த அவன் அதிருஷ்டம் 'கிரியா' வென்னும் போர்க்களத்தில் பின்னும் அதிகமாய் முறிந்து போயிற்று. மறுபடியும் மகம்மதிய சேனையானது பிரிடிஷ் சேனைக்குமுன் நிற்கமாட்டாது காற்றிலகப்பட்ட தூசு போல் அடிபட்டு சின்னபின்னமாய்ச் சிதறிப்போயிற்று. போரில் விழிந்தழியாமல் தப்பினவர்கள் உதயநாலாவில் அடைக்கலம் புகுந்தார்கள். அவர்கள் அங்கே தங்களைச்சுற்றி நாற்புறமும் பள்ளம் வெட்டி இங்கிலீஷ் சைனியத்தை எதிர்நோக்கி வரவொட்டாது தடுத்தனர்.

மீர்காசிம் அவ்விடத்திற்குத் தானே நேராகச் சென்றிருந்தான். அங்கே அவன் இருக்கும்பொழுது சையத் அமீர் ஹுசேன் என்பவன்

அவனிடம் சென்று "கைதி ஒருத்தி சமுகத்துக்கு வரவேண்டு மென்று மிகவும் கவலைப்படுகிருள்; ஏதோ விசேஷ சங்கதிகள் சில வற்றைச் சமுகத்தில் விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டுமோம். அது இன்னதென்று நவாப் சாஹேபுக்கன்றி மற்றவொருவருக்கும் சொல்லமாட்டாளாம்" என்ருன்.

"யார் அது?" என்று மீர் காசிம் கேட்க,

"அவள் கல்கத்தாவிலிருந்து வந்தவள். வாரன் ஹேஸ்டிங்ஸ் துரை அவளை ஒரு கடிதத்துடன் அனுப்பியிருக்கிருர். அவள் சாக்ஷாத் கைதியல்ல. யுத்தத்துக்குமுன் அந்தக் கடிதம் அனுப்பப் பட்டதால் அடியேன் அதை வாங்கினேன். அப்படி வாங்கினது அடியேனது குற்றமாயிருக்கும் பக்ஷத்தில், பிரபுவின் சித்தப்படி நடக்க அடியேன் குலாமாய்க் காத்திருக்கிறேன்." என்று சொல்லி அமீர் ஹுசேன் அந்தக் கடிதத்தை நவாபுக்குப் படித்துக் காட்டினுன்.

வாரன் ஹேஸ்டிங்ஸ் எழுதியதாவது.—

"இவள் யாரோ எனக்குத் தெரியாது. அவள் மிகுந்த வருத் தத்துடன் என்னிடம் வந்து தான் கல்கத்தாவில் யாதொரு துணையு மின்றித் தனியே தவிப்பதாயும், தன்னை நான் உங்களிடம் அனுப்பி விடும் பக்ஷத்தில் பிழைத்துப்போவா ளென்றும் முறையிட்டாள். இப்பொழுது யுத்தம் தொடங்கப்போகிற சமயம். ஆனல் எங்கள் ஜாதியாருக்கு ஸ்திரீகளுடன் ஒருவித சண்டையும் கிடையாது. ஆகையால் அவளைத் தங்கள் சமுகம் அனுப்புகின்றேன். எனக்கு அவளைப்பற்றி நல்லது, கெட்டது, அல்லது நடுத்தரமானது ஒன்றும் தெரியாது."

இந்தக் கடிதத்தைக் கேட்டு நவாபு அவளை அழைத்துவரக் கட் டளையிட்டான். சையத் அமீர் உசேன் வெளியே சென்று அவளை யழைத்து வந்தான்.

நவாபு பார்த்தான்—குல்சம்.

அவளைப் பார்த்தவுடனே நவாபு அதிகக் கோபத்துடன் "நீயா! உனக்கென்னவேணும்? சாக இஷ்டமா?" என்ருன்.

குல்சம் நவாபைக் கண்கொட்டாது விழித்துப்பார்த்து "நவாப்

பிரபுவே, தங்கள் பேகம் எங்கே? தலனி பீபி எங்கே?" என்று வினவினாள். குல்சம் பேசின பேச்சின் தொனியையும் தோரணையையும் கண்டு அமீர் உசேன் பயந்து நவாபுக்குச் சலாம் செய்துவிட்டுச் சென்றான்.

அவன் கேட்ட கேள்விக்கு மீர்காசிம் பதில் சொல்வானாகி, "அந்தச் சண்டாளி போன விடத்திற்கு நீயும் சீக்கிரத்தில் போவாய்" என்றான்.

குல்சம்.—ஆமாம், நான் மாத்திரமல்ல, தாங்களும் கூடத்தான் போகவேணுமென்று தோன்றுகிறது. அதற்காகவே நான் இங்கே வந்தேன். நான் வரும்வழியில், தலனிபேகம் தற்கொலை புரிந்து கொண்டாளென்று ஒரு வதந்தி என் காதில் விழுந்தது. அது வாஸ்தவமா?

நவாப்.—தற்கொலையா! இல்லை அவள் இராஜாக்ஞையால் தண்டிக்கப்பட்டாள். அவள் குற்றத்துக்கு நீ உடந்தையாயிருந்தபடியால், நீ நாய்களால் கடியுண்டு சாகக்கடவாய்.

குல்சம் தரையில் விழுந்து புரண்டு கோவென்றலறிப் புலம்பினாள். நவாபை வாயில் வந்தபடி யெல்லாம் வைதாள். அந்தச் சத்தத்தைக் கேட்டுப் போர்வீரரும், மந்திரிமார்களும், பரிஜனங்களும், காவலாளிகளும் மற்று முள்ளோரும் வந்து விழுந்தார்கள். அவர்களுள் ஒருவன் குல்சத்தைத் தலைமயிரைப் பிடித்துத் தூக்கத் தொடங்க, நவாப் வேண்டாமென்று தடுக்கவே, அவன் ஆச்சரியமடைந்து, அவளைப் பிடித்தபிடியை விட்டு விட்டான். அப்பொழுது குல்சம் பேசத்தொடங்கி "நீங்கள் எல்லோரும் இங்கே இருப்பது நல்ல வேளை. நான் இப்பொழுது ஓர் அபூர்வமான கதை சொல்லப்போகிறேன். கவனித்துக் கேளுங்கள். எனக்கு மரண தண்டனை சீக்கிரம் விதிக்கப்படுமென்று எனக்குத் தெரியும். ஆனால் நான் இந்தவுலகத்தை விட்டுப் போய்விட்ட பிறகு அது ஒருவருக்கும் தெரியாமற் போய்விடும். ஆகவே அதைச் சொல்லுகிறேன், கேளுங்கள்" என்று சொல்லலானாள்.

"கேளுங்கள், பங்காளம், பேஹாரம் என்னும் நாடுகளை மீர்

காசிம் என்கிற மூடன் ஒருவன் ஆண்டு வருகிருன். அவனுக்குத் தலனி யென்ற பேகம் ஒருத்தி யிருந்தாள். அவள் நவாப்பின் சேனுதிபதியாகிய குர்க்கன்கானின் சகோதரி.”

இதைக்கேட்ட பிறகு ஒருவரும் அவளைப் பிடிக்கப் பிரயத்தினம் செய்ய வில்லை. எல்லாரும் ஒருவர் முகத்தை யொருவர் பார்க்கலாயினர். இந்தச் சங்கதியை முழுதும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று எல்லோருக்கும் ஆவல் அதிகரித்தது. நவாபும் ஒன்றும் பேசாமலிருந்தான். குல்சம் மறுபடியும் பேசலாயினுள்.

குர்க்கன்கானும் தலனி உன்னிஸ்ஸாவும் தங்களுக்குள் ஒரு ஏற்பாடு செய்துகொண்டு இஸ்பஹான் என்னும் ஊரைவிட்டுப் புறப்பட்டு ஜீவனேபாயத்தின் பொருட்டு வங்காளத்துக்கு வந்தார்கள். பிறகு தலனி மீர்காசிமின் குடும்பத்தில் அடிமையாய் அமர்ந்தபொழுது அண்ணனும் தங்கையும் ஒருவர்க்கொருவர் சகாயமா யிருக்கவேண்டுமென்று தமக்குள் பிரதிக்ஞை செய்துகொண்டார்கள்.”

பிறகு குல்சம், தானும் தலனியும் குர்க்கன்கான் வீட்டுக்குப் போன இராத்திரியில் நடந்த சங்கதிகளையெல்லாம் சவிஸ்தாரமாய்ச் சொன்னுள். தலனிக்கும் குர்க்கன்கானுக்கும் என்னென்ன சம்பாஷணை நடந்ததோ அதையெல்லாம் தலனியிடத்திலிருந்து தான் கேட்டபடியே கூறினுள். பிறகு கோட்டைக்குத் திரும்பி வந்ததையும், உள்ளே செல்லக்கூடாதென்று திரும்பி வந்ததையும், சன்னியாசியால் பெற்ற சகாயத்தையும், பிரதாபன் வீட்டில் தங்கினதையும், இங்கிலீஷ்காரர் எதிர்த்ததையும், தலனியைச் சைவலினியென்று நினைத்து இங்கிலீஷ்காரர் பிடித்துக்கொண்டதையும், படகில் சிறையிருந்ததையும், அமியட்டு முதலியவர்களின் மரணத்தையும், பாஸ்டருடன் அவர்கள் ஓடிப்போனதையும், கடைசியாகத் தலனியைப் பாஸ்டர் கங்கைக்கரையில் தனியே விட்டுப்போனதையும் அவள் விவரமாய் எடுத்துக் கூறிக் கடைசியாகப் பின்வருமாறு பேசி முடித்தாள்.

“அப்பொழுது சைத்தான் எனக்குள் புகுந்து கொண்டிருந்ததென்பதற்குச் சந்தேகமேயில்லை. இல்லாவிட்டால் அப்படிப்பட்ட சமயத்தில் நான் ஏன் பேகத்தைத் தனியே விட்டுப் பிரியவேண்டும்?

அந்தப் பொல்லாத பறங்கிக்காரன் படும் அவஸ்தையைக் கண்டு சகியாதவளாய் அவன்மேல் இரக்கங் கொண்டேன். அது கிடக்கட்டும். பின்னால் ஒரு இராஜாங்கப்படகு வந்துகொண்டிருந்தது. அதிலிருப்பவர்கள் பேகத்தைப்பார்த்து ஏற்றிக்கொண்டு வருவார்களென்று நினைத்தேன். இல்லாவிட்டால் நான் அவளையேன் விட்டுவிட்டுப் போகவேண்டும்? நான் பண்ணினது பிசகு. அந்தக் குற்றத்துக்குத் தகுந்த பிராயச்சித்தமும் எனக்கு நடந்து விட்டது. எப்படியென்றால், தலனி பின்னால் வரவில்லையென்று எனக்குத் தெரிந்த வுடனே என்னைக் கரையில் இறக்கிவிடும்படி நான் பாஸ்டரை எவ்வளவோ வேண்டிக்கொண்டும், அவன் ஒரே பிடிவாதமாய் மாட்டேனென்றான். பிறகு கல்கத்தாவுக்கு வந்தவுடனே, என் கண்ணிற்பட்ட ஒவ்வொருவரையும் என்னை இங்கே கொண்டுவந்து விடும்படி வேண்டிக்கொண்டேன். ஒருவராவது என் பிரார்த்தனையைக் காதிற் போட்டுக்கொள்ளவில்லை. பிறகு ஹேஸ்டிங்ஸ் துரை மகா தயாளுவென்று கேள்விப்பட்டேன். அவரிடம் சென்று அவர் காலில் விழுந்து அழுதேன். அவருடைய கிருபையால் இன்றைக்கு இங்கே வந்து சேர்ந்தேன். இப்பொழுது நான் தயாராக இருக்கிறேன். இனித் தாங்கள் எனக்கு மரணதண்டனை விதிக்கலாம். எனக்குப் பிழைத்திருக்க இஷ்டமில்லை."

இவ்வாறு பேசிவிட்டுக் குல்சம் அழத் தொடங்கினாள்.

விலையுயர்ந்த சிங்காசனத்தில் ஆயிரங்கதிர் வீசித் தகதகவென்றொளிரும் இரத்தினாபரணங்களின் ஜோதியில் மூழ்கினவனாய்ப் பங்காள நவாபு கீழே தொங்கவிட்ட முகத்துடன் உட்கார்ந்திருந்தான். அவனது அகண்ட சாம்ராஜ்யச் செங்கோல் அவன் கைப்பிடியினின்றும் நழுவிக்கொண்டிருந்தது. அவன் எவ்வளவு பிரயத்தனம் செய்தும் அது அவன் கையில் நிற்கவில்லை. ஒரு சிறிதும் கஷ்டமின்றி ஆளக்கூடியதும் வெல்லற் கரியதுமாயிருந்த அந்த இராஜ்யம் இப்பொழுது எங்கே போய்விட்டது? அவன் பூவைப் போக்கடித்துக் கொண்டு முள்ளை மகிமைப்படுத்தினான். குல்சம் சொல்லியது உண்மைதான்—பங்காளத்து நவாபு பெரிய மூடனே.

அப்பொழுது நவாபு அங்கிருந்த உம்ரா (பிரபு) க்களைப்பார்த்துக் கூறலுற்றுன். "இப்பொழுது நான் சொல்லப் போவதை நீங்கள் எல்லோரும் கவனித்துக் கேட்கவேண்டும். இவ்விராஜ்யத்தையாளத்தக்க திறமை என்னிடத்தில் இல்லை. இந்த அடிமைப்பெண் சொன்னது அவ்வளவும் உண்மையே—பங்காளத்தை எதிரிகளினின்று இரட்சிக்க உங்களால் முடியுமானுல் நீங்கள் அவ்வாறு செய்யுங்கள், நான் போகிறேன். நான் ருஹிதாஸ் கோட்டையில் மாதர்களின் மத்தியிற்போய் ஒளிந்து கொள்ளுகிறேன். இல்லாவிட்டால் உலகத்தைத் துறந்து பக்கிரியாய்ப் போய்விடுகிறேன்."

இவ்வாறு அவன் பேசியபொழுது அவனது வலிமை பொருந்திய வுடல் வெள்ளத்தில் நடப்பட்ட *வேயென நடுங்கிற்று. மீர் காசிம் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு இன்னும் பேசலானுன்—"நண்பர்களே, நான் உரைப்பதைக் கேளுங்கள். என்னை இங்கிலீஷ்காரராவது, அவர்கள் சொன்னபடிக் கூத்தாடும் சிராஜுத் தௌலாவைப் போன்றவர்களாவது கொல்லாதிருக்கும் பக்ஷத்தில், தலனியின் கல்லறையின் பக்கத்தில் என்னை என் மரணுநந்தரம் புதைத்து விடுங்கள். இதுதான் நான் உங்களை வேண்டிக்கொள்வது. இனிப்பேச என்னுல் முடியவில்லை. நீங்கள் இப்பொழுது போகலாம். ஆனுல் நான் இடும் ஒவ்வொரு கட்டளையை மட்டும் நிறைவேற்றுங்கள்.—அந்தத் தக்கிகானை நான் இன்னொருதாம் பார்க்கவேண்டும்" என்று சொல்லிவிட்டு "ஆலி இப்ராஹிம்கான்!" என்று கூப்பிட்டான்.

உடனே ஆலி இப்ராஹிம்கான் வந்து நின்றுன்.

"உன்னைப்போல வேறொரு மித்திரன் எனக்கு இவ்வுலகத்தில் கிடையாது" என்று அவனை நவாப் கொண்டாடி "உன்னிடத்தில் நான் செய்துகொள்ளும் பிரார்த்தனை ஒன்று உண்டு. அதாவது, தக்கிகானை என்னிடம் அழைத்துவா" என்றுன்.

இப்ராஹிம்கான் நவாபுக்குச் சலாம் செய்து விடை பெற்றுக்

* வேய்=மூங்கில்.

கொண்டு கூடாரத்தினின்றும் வெளிப்பட்டு குதிரையேறிச் சவாரி விட்டான்.

"இன்னும் யாராவது எனக்கு உதவி செய்ய மனமுள்ளவர் உண்டா?" என்று நவாபு வினவ, எல்லோரும் கை கூப்பிக்கொண்டு, உத்தரவாக வேண்டும் உத்தரவாக வேண்டுமென்றும் தத்தம் சம்மதியைத் தெரிவித்தனர்.

"உங்களில் யாராவது அந்தப் பாஸ்டர் என்பவனை என்னிடம் கொண்டு வருவீர்களா?" என்று நவாபு கேட்க,

"அவனைத் தேடிப்பிடிக்க, நான் இதோ கல்கத்தாவுக்குப் புறப்படுகிறேன்" என்றான் அமீர்ஹுசேன் என்பவன்.

நவாபு சற்றுநேரம் வரைக்கும் சிந்தையில் ஆழ்ந்திருந்து, பிறகு, "இனி அந்தச் சைவலினி யென்பவள்தான் பாக்கி. அவளையும் யாராவது அழைத்து வருவீர்களா?" என்றான்.

அப்பொழுது மகம்மது இர்பான் என்பவன், "இதற்குள் அவள் சொந்த ஊருக்குத் திரும்பிப்போயிருக்கவேணும். நான் போய் அவளைக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டான்.

நவாபு அதற்குமேல் "பேகத்துக்கு மாங்கீரில் தங்க இடமளித்த அந்தச் சந்நியாசியை யாராவது கண்டுபிடிப்பீர்களா?" என்றான்.

அதற்கு இர்பான் "உத்தரவு செய்யும் பக்ஷத்தில் நான் சைவலினியைத் தேடிப்பிடித்தபிறகு அவருக்காக மாங்கீருக்குப் போகிறேன்" என்றான்.

"குர்க்கன்கான் எவ்வளவு தூரத்தில் இருக்கிறான்?" என்று விசாரித்தான் கடைசியாக நவாபு. அதற்கு மந்திரிமார், "அவன் சைநியத்தோடு உதயநாலாவுக்கு வந்துகொண்டிருக்கிறானென்று கேள்விப்படுகிறோம். ஆனால் இன்னும் அவன் வந்து சேரவில்லை" என்றனர்.

"சைநியமா! சைநியமா!! யாருடைய சைநியம்?" என்று தனக்குள்ளேயே முணுமுணுத்தான் நவாபு.

"அவனுடையதே" என்று ஒருவன் நசுக்கி வைத்தான்.

மந்திரிமார் விடை பெற்றேகினர்.

அதன்மேல் நவாபும் தன் ரத்நசிங்காசனத்தை விட்டெழுந்திருந்து வைர மிழைத்த மகுடத்தை வீசி யெறிந்து முத்துமாலையைக் கண்டத்தினின்றும் பிய்த்தெறிந்து இரத்ந கசிதமான அரசகோலத்தையும் களைந்துதள்ளித் தரையில் கடகட வென்று புரண்டு "தலனீ தலனீ! அடி என் தலனீ!" என்று அலறிப் புலம்பினான்.

இம்மண்ணுலகத்தை ஆளும் நவாபின் மகிமை இவ்வளவே.

நான்காவது அத்தியாயம்

ஜான் ஸ்டால்கார்ட்

குல்சம் வாரன் ஹேஸ்டிங்ஸ் துரையின் சமுகம் சென்றிருந்ததைப்பற்றி முன் அத்தியாயத்தில் சொன்னோம். அவள் தன் விர்த்தாந்தத்தைச் சொல்லிக்கொண்டு வருகையில் பாஸ்டரின் சங்கதிகளையும் சவிஸ்தாரமாய்ச் சொல்ல வேண்டிவந்தது.

சரித்திரத்தில் வாரன் ஹேஸ்டிங்ஸுக்குக் கொடுங்கோலனெனப் பெயர் உண்டாயிருக்கிறது. காரியசீலர்களாயுள்ளவர்கள் தங்கள் கடமைகளை நேர்மையாய் நடத்துகையில், சிற்சில சமயங்களில் கொடுங்கோன்மையான செயல்களையும் செய்யவேண்டி வருகிறது. அரசாளும் உரிமையை மேற்கொண்டவன், தான் எவ்வளவு நியாயமும் உதாரகுணமும் உள்ளவனாயிருந்தபோதிலும் நாட்டின் பொது நன்மையை யுத்தேசித்து இப்படிப்பட்ட கொடுமையான செயல்களைச் செய்யும்படியான நிர்ப்பந்தத்துக்குள்ளாகி விடுகின்றான். இரண்டொரு ஜனங்களை இம்சிப்பதால் இராஜ்ய முழுவதுக்கும் க்ஷேமம் உண்டாவதாயிருப்பின், அப்படிப்பட்ட இம்சையைச் செய்வதும் தன் கடமையிற் சேர்ந்ததென அவன் கருதுகின்றான். பொதுவாய் நோக்குமிடத்து, நூதன ராஜ்யங்களை ஸ்தாபிக்கும் சாமர்த்தியமுள்ள வாரன் ஹேஸ்டிங்ஸைப்போன்ற புருஷர்கள் தயாளுக்களாகவும் நியாயவான்களாயும் இருக்க மாட்டார்களென்பது சுத்த அசம்பாவிதம். எவர்களது சுபாவத்தில் தயையும் நியாயமும் பொருந்தியில்லையோ, அவர்களுக்கு இராஜ்ய ஸ்தாபனம் முதலிய பெருங்காரி

யங்களைச் செய்யும் சாமர்த்தியம் உண்டாகாது. ஏனெனில் அவர்கள் சுபாவத்திலேயே பெருந்தன்மையற்ற இழிஞராயிருக்கின்றமையாலும் இப்பெருங் காரியங்களெல்லாம் அப்படிப்பட்ட இழிஞரால் செய்யக் கூடாதவைகளா யிருத்தலாலுமேயாம்.

வாரன் ஹேஸ்டிங்ஸினிடத்தில் தயை நியாயம் என்னும் இரு குணங்களும் பொருந்தியிருந்தன. அவர் இன்னும் கவர்னராகவில்லை. அவர் குல்சத்தை அனுப்பிவிட்டபிறகு பாஸ்டரைப் பிடித்துக் கொண்டு வரச்சொன்னான். பாஸ்டர் வியாதிஸ்தனாய் வந்து சேர்ந்ததைக்கண்டு வாரன் ஹேஸ்டிங்ஸ் முதல் முதல் அவனுக்கு வைத்தியம் செய்வித்தார். ஒரு நல்ல வைத்தியனது சிகிச்சையால் பாஸ்டருக்குச் சீக்கிரத்தில் சரீரம் சொஸ்தமாயிற்று.

பிறகு ஹேஸ்டிங்ஸ் அவன் குற்றத்தை விசாரிக்கத் தொடங்கினார். பாஸ்டர் பயத்தினால் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டான். வாரன் ஹேஸ்டிங்ஸ் இதை ஆலோசனை சபையில் பிரஸ்தாபத்துக்குக் கொண்டுவந்து பாஸ்டரை வேலையினின்றும் நீக்கிவைத்தார். பாஸ்டரை நியாயஸ்தலத்தில் கொண்டுவந்து நிறுத்த வேண்டுமென்று ஹேஸ்டிங்ஸுக்கு மனதிருந்தது. ஆனால் அதற்குச் சரியான சாக்ஷிகள் ஏற்படவில்லை. அன்றியும் பாஸ்டர் தன் தீவினைப்பயனை வேண்டியபடி அனுபவித்தாயிற்று. இதை யெல்லாம் யோசித்து ஹேஸ்டிங்ஸ் சும்மாயிருந்துவிட்டார்.

ஆனால் இந்தப் பெருந்தன்மையை அறியும்படியான புத்தி பாஸ்டருக்கில்லை. அவன் மகா அற்ப புத்தியுள்ளவன். சொற்ப குற்றத்துக்காகப் பெருந்தண்டனை தனக்கு விதிக்கப்பட்டதென்று அவன் நினைத்துக் கொண்டான். குற்றமுள்ள சேவகர் எல்லோரையும் போலவே அவ்வற்ப மதியும் தன் பூர்வ யஜமான்களிடத்தில் தீராப் பகைமை பாராட்டத் தொடங்கி, எப்படியாவது பழி வாங்கவேண்டுமென்று மனத்தில் உறுதி செய்துகொண்டான்.

ஸ்விட்ஜர்லண்ட் அல்லது ஜர்மனி நாட்டானாகிய டைஸ் ஸோம்பரென்னும் பெயருடைய ஒருவன் மீர்காசிமின் ஸைனியதளத்தில் உத்தியோகமாயிருந்தான். அவனை யெல்லாரும் 'ஸம்ரு' என்று

அழைப்பது வழக்கம். உதயநாலாவில் மகம்மதியரது கூடாரத்தில் அந்த ஸம்ரு சைநியத்துடன் வந்திருந்தான். பாஸ்டர் அவனிடம் போனுன். முதலில் அவன் ஸம்ருவீனிடம் ஒரு தூதனை வெகுசாமார்த்தியமாய் அனுப்பினுன். ஸம்ரு இவன் மூலமாய் இங்கிலீஷ்காரரின் இரகசியங்களை அறிந்து கொள்ளலாமென்று நினைத்துப் பாஸ்டரை வரவழைத்தான். பாஸ்டர் தன் உண்மைப்பேரை மறைத்துத் தன் பெயர் மிஸ்டர் ஜான் ஸ்டால்கார்ட் என்று சொல்லிக்கொண்டு ஸம்ருவின் கூடாரத்தில் நுழைந்தான். பாஸ்டரை அமீர் உசேன் தேடிக்கொண்டிருக்கையில், அவன் ஸம்ருவின் கூடாரத்தில் நுழைந்து விட்டான்.

குல்சத்தைத் தக்கவிடத்தில் நிறுத்திவிட்டு அமீர் உசேன் பாஸ்டரைத் தேடும் பொருட்டுப் புறப்பட்டான். அப்பொழுது சில பரிஜனங்கள் அவனிடம் வந்து, இப்பொழுது ஓர் அதிசயம் நடந்திருக்கிறது. இங்கிலீஷ்காரனொருவன் முசல்மான் சைனியத்தில் சேர்ந்து விட்டான். அவனை ஸம்ருவின் கூடாரத்தில் பார்க்கலாம்—என்றூர்கள். அதன் மேல் அமீர் உசேன் ஸம்ருவின் கூடாரத்துக்குள் சென்றுன்.

அமீர் உசேன் கூடாரத்திற் பிரவேசித்த பொழுது, ஸம்ருவும் பாஸ்டரும் ஒருவருடன் ஒருவர் பேசிக்கொண்டிருந்தனர். அமீர் உசேன் ஆசனத்தில் உட்கார்ந்ததும், ஸம்ரு பாஸ்டரை அவனுக்குக் காட்டி, இவர் பெயர் ஜான் ஸ்டால்கார்ட் துரையென்று சொல்ல, அமீர் உசேன் அவனுடன் சம்பாஷிக்கத் தொடங்கினுன்.

பலவிதமான விஷயங்களைப் பற்றிப் பேசிய பிறகு அமீர் உசேன் :—“லாரென்ஸ் பாஸ்டர் என்னும் இங்கிலீஷ்காரன் உமக்குத் தெரியுமா?” என்று கேட்டான்.

பாஸ்டரின் முகம் இரத்த வர்ணமாய்விட்டது. அவன் தலை குனிந்து தரையைப் பார்த்துக்கொண்டு விகாரமான குரலில், “லாரென்ஸ் பாஸ்டரென்றூ சொல்கிறீர்? அவன் யாரோ, எனக்குத் தெரியாது” என்று குழறினுன்.

“அவன் பெயரை நீர் ஒருபோதும் கேட்டதில்லையா?”

பாஸ்டர் சிறிதுநேரம் யோசனையிலிருந்து பிறகு, "பெயரையா? லாரென்ஸ் பாஸ்டரா? ஆமாம்! ஏது! இல்லை" யென்று திக்கித் திக்கி உளறினன்.

அமீர் உசேன் அந்தச் சங்கதியை அவ்வளவுடன் நிறுத்திவிட்டு மற்ற விஷயங்களைப்பற்றிப் பேசலானன். ஆனல் அதுமுதல் பாஸ்டர் முன்போல் உற்சாகமாய்ப் பேசாததையும் இரண்டொருதரம் அவ்விடத்தைவிட்டுச் செல்லப் பிரயத்தனப்பட்டதையும் அமீர் உசேன் பார்த்து அவனை இன்னும் சற்றுநேரம் இருந்து போகும்படி பலவந்தம் செய்தான். அவனுக்குப் பாஸ்டரைப்பற்றிய எல்லா சங்கதிகளும் தெரியுமென்றும் ஆனல் அவற்றை வெளியிட இஷ்டமில்லாதவனுயிருக்கிறுனென்றும் அமீர் உசேன் தீர்மானம் பண்ணிக்கொண்டான்.

சற்றுநோங்கழித்துப் பாஸ்டர் எழுந்துபோய்த் தன் தொப்பியை எடுத்துக்கொண்டு வந்து அதைத் தலையிற் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான். இது இங்கிலீஷ்காரரின் ஆசாரத்துக்கு விரோதமானதென்று அமீர் உசேனுக்குத் தெரியும்—அன்றியும் பாஸ்டர் தொப்பியைத் தலையில் வைத்துக்கொண்டிருக்கையில், அவன் தலையில் வழுக்கையான விடத்திலிருந்த புண்வடு அமீர் உசேன் கண்ணிற்பட்டது. அந்த வடுவை மறைக்கத்தான் பாஸ்டர் தொப்பியைத் தரித்துக்கொண்டானே?

அமீர் உசேன் விடை பெற்றுக்கொண்டு தன் கூடாரத்துக்குத் திரும்பிவந்து அங்கே குல்சத்தை வரவழைத்து, "என்னுடன்வா" என்றுன். குல்சம் கூடவே சென்றுள்.

அவன் திரும்பவும் ஸம்ருவின் கூடாரத்துக்குள் பிரவேசித்தான். குல்சம் வெளியே நின்று கொண்டிருந்தாள். பாஸ்டர் இன்னும் கூடாரத்தை விட்டுப்போகவில்லை. அமீர் உசேன் ஸம்ருவைப் பார்த்து "உமக்கு ஆக்ஷேபமில்லாதிருக்கும் பக்ஷத்தில் என்னைச் சேர்ந்த அடிமை ஒருத்தி உம்மைத் தரிசித்து சலாம் செய்ய விரும்புகிறுள். ஏதோ விசேஷ காரியம் இருக்கின்றதாம் என்றுள்."

ஸம்ரு, "அப்படியே, வரலாம்" என்று அனுமதி யளித்தான்.

பாஸ்டருடைய நெஞ்சம் திக் திக்கென்று அடித்துக்கொண்டது. அவன் வெளியே செல்ல எழுந்தான். அமீர் உசேன் புன்னகையுடன் அவன் கையைப் பிடித்துக்கொண்டு மறுபடியும் ஆசனத்தில் உட்கார வைத்தான். பிறகு குல்சத்தைக் கூப்பிட, அவள் வந்து பாஸ்டரைப் பார்த்தவளவில் அசைவற்று நின்றாள்.

"இவன் யார்?" என்று அமீர் உசேன் கேட்க,

"லாரென்ஸ் பாஸ்டர்" என்று உடனே விடை பகர்ந்தாள் குல்சம்.

அமீர் உசேன் பாஸ்டரின் கையைப் பிடித்துக்கொண்டான். "நான் என்ன செய்தேன்?" என்று பாஸ்டர் ஆக்ஷேபித்தான்.

அமீர் உசேன் அவனை இலட்சியம்பண்ணி ஒன்றும் சமாதானம் சொல்லாமலே, ஸம்ருவைப்பார்த்து "சார், இந்த ஆளை 'அர்ரெஸ்ட்' செய்யும்படி நவாபு கட்டளையிட்டிருக்கிறார். இவனை என்னுடன் கொண்டுவருவதற்குத் தயவுசெய்து சில சிப்பாய்களுக்கு உத்தரவு கொடுங்கள்" என, "என்ன சங்கதி?" என்றான் ஸம்ரு.

"அப்புறம் சொல்லுகிறேன்" என்று அமீர் உசேன் கூற, ஸம்ரு சில சிப்பாய்களைக் கூடவே போகும்படி பணித்தான். அமீர் உசேன் பாஸ்டரை ஜாக்கிரதையாய்ப் பிடித்துக்கொண்டு சென்றான்.

ஐந்தாம் அத்தியாயம்

மறுபடியும் வேதகிராமத்துக்கு வருவது

வெகு கஷ்டத்தோடு சந்திரசேகரர் சைவலினியை ஊருக்கு அழைத்து வந்தார்.

வெகுகாலம் வரையில் ஊரைவிட்டுப் போயிருந்து இப்பொழுது மறுபடியும் அவர் தம் அகத்தில் வந்து நுழைந்தார். அது அவருக்கு அடவியை விட அதிக பயங்கரமாயிருந்தது. கூரையில் ஒரு மஞ்சம்புல்லாவது மிகுந்திருக்கவில்லை. அதில் மூக்காற்பங்கு காற்றில் அடித்துக்கொண்டு போய்விட்டது. சில விடங்களில் ஆடு மாடுகள் புல்லைத் தின்றுவிட்டிருந்தன. கூறையின் மூங்கில்களை

அயலகத்தார்கள் கூசாமலெடுத்து அடுப்புக்கு விறகாய் உபயோகித் துக்கொண்டனர். முற்றத்தில் அடர்ந்த காடு வளர்ந்து விட்டது. பாம்புக்கூட்டம் பயமின்றிச் சஞ்சரித்தது. வீட்டின் கதவுகளையெல் லாம் கள்ளர் கொண்டேகினர். திறந்திருந்த அறைகளில் ஒரு சாமா னுவது காணப்படவில்லை. சிலவற்றைத் திருடர்கள் கொண்டு போய் விட்டனர். மிகுந்தவற்றைச் சுந்தரி தன் அகத்திற் கொண்டு போய் வைத்திருந்தாள். அறைகளில் மழையானது தாராளமாய்ப் பிரவேசித்துத் தரையை ஓதமாக்கிவிட்டது. ஒரு பக்கத்தில் 'பூஞ் சாளம்' பூத்திருந்தது. ஒரு பக்கம் மணற் புற்று உண்டாயிருந்தது. எலிகளும், வௌவால்களும் கூட்டங் கூட்டமாய் உலாவின. சந்திர சேகரர் சைவலினியின் கையைப் பிடித்துக்கொண்டு பெருமூச்செறிந்து அந்த வீட்டினுள்ளே நுழைந்தார்.

தாம் முன் எந்தவிடத்தில் நின்று தம் புஸ்தகக் குவியலில் தீயிட்டு, அவை தம் கண்முன்னுகவே கரியாய்ப் போனதைப் பார்த் தாரோ, அதை இப்பொழுது உற்று நோக்கினுர். பிறகு சந்திர சேகரர் "சைவலினீ" என்று கத்தினுர்.

சைவலினி பேசவில்லை. ஓர் அறையின் வாசற்படியில் உட் கார்ந்துகொண்டு முன் கனவிற்கண்ட கரவீர விருக்ஷத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவள், சந்திரசேகரர் என்ன சொன்னபோதிலும், ஒன்றுக்கும் விடையுரையாமல் நாற்புறமும் விழியைச் சுழலமிட்டுப் பார்த்துக்கொண் டிருந்தாள். ஒவ்வொரு சமயம் சொற்பப்புன்னகை அவள் வதனத் தில் க்ஷணநேரம் பிரகாசித்து மறையும். ஒருதாம் ஸ்பஷ்டமாய்ச் சிரித்து எதையோ விரலால் சுட்டிக்காட்டுவாள்போல் தோற்றினுள்.

சந்திரசேகரர் சைவலினியுடன் வீடுவந்து சேர்ந்த விஷயமாய் ஊரெல்லாம் அமளி குமளியாயிருந்தது. அவர்களைப்பார்க்க ஜனங்கள் திரள் திரளாய் வந்து கூடினுர்கள். சுந்தரி முதலில் வந்தாள்.

சைவலினிக்குச் சித்தப்பிரமை உண்டாயிருக்கும் சங்கதி சுந்த ரிக்கு ஒன்றும் தெரியாது. அவள் வந்தவுடனே, சந்நியாசி கோலத் துடன் விளங்கிய சந்திரசேகரருக்கு வந்தனம் பண்ணினுள். பிறகு

சைவலிங் இருப்பதைப் பார்த்துவிட்டு "இவளை அழைத்துக்கொண்டு வந்தையே, நல்ல காரியந்தான். பிராயச்சித்தம் பண்ணிக்கொண்டால் எல்லாம் சரியாய்ப்போய்விடும்" என்றாள்.

ஆனால் சுந்தரிக்கு ஒரு விஷயத்தைப் பற்றி மாத்திரம் ஆச்சரியமுண்டாயிற்று. அஃதென்னவெனில்: சந்திரசேகரர் எதிரே இருந்தும், சைவலிங்யானவள் அவ்விடத்தைவிட்டு எழுந்தும் போகவில்லை, முந்தானையால் தலையை மூடிக்கொள்ளவுமில்லை. மற்றப்படி, சுந்தரியைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டு சிரிக்கத்தொடங்கினாள். அதைக் கண்டு சுந்தரி "இது ஒருவேளை இங்கிலீஷ் தரஹாவோ என்னவோ! இங்கிலீஷ்காரனுடைய சஹவாசத்தில் இதைக் கற்றுக்கொண்டாளாக்கும்." என்று எண்ணிக்கொண்டு அவள் கிட்டச்சென்று தன் ஆடை அவள்மேல் படாதவாறு ஒதுங்கி யுட்கார்ந்துகொண்டு, "அடி சைவலிங், நான் இன்னாளென்று ஞாபக மிருக்கிறதா?" என்றாள்.

"இல்லாமலென்ன, நீ பார்வதி."

"அடி உன்னை வாரிக்கொண்டு போக அவ்வளவு சீக்கிரத்தில் என்னை மறந்து விட்டையா?"

"நான் என் மறந்துபோகவேணும்? நீ என் சோற்றுப் பானையைத் தொட்டதற்காக உன்னைக் கண்டம் கண்டமாய் வெட்டி யெறிந்தேனே, ஞாபகமில்லையா? அடி அக்கா, பார்வதி, ஒருபாட்டு பாடேன்" என்று சொல்லிவிட்டுத் தானே பாடத்தொடங்கினாள்.—

* அதுவே யென் அந்தரங்கம் என்னுசையும் அதுவேயாகும்.
† பதுமையான் பக்கம்விட்டுப் பாவையாள் இராதைபோயாள்
‡ மதியவன் தானும்வான வழியிடை விளங்கவில்லை
விதியிதென்! ஆசைவலையை வீசினேன் விசையின் வீணே!!

என்று பாடிவிட்டுப் பிறகு, "அடி பார்வதி யக்கா, எனக்கு ஒன்றும் தெரியவில்லையடி, யாரையோ காணவில்லை போலிருக்கிறது.— யாரோ இருந்தது போலிருக்கிறது, ஆனால் அவன் போய்விட்

---

* இராகம்—ஆனந்தபைரவி. † பதுமையான்=கண்ணன். ‡ மதியவன்=சந்திரன்.

டான்.—யாரோ வந்து கொண்டிருக்கிறது போலிருக்கிறது, ஆனல் வருகிறதில்லை—நான் எங்கேயோ வந்திருககிறது போலிருக்கிறது, ஆனல் அது நானிருக்கவேண்டுமென்று ஆசைப்படும் இடமல்ல. யாரோ வரவேண்டுமென்று நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன் போலிருக்கிறது, ஆனல் அவர் யாரோ எனக்குத் தெரியவில்லை" என்று பிதற்றினுள்.

சுந்தரி இதைக்கண்டு திப்பிரமை யடைந்து சந்திரசேகரரை இதற்குக் காரணமென்னவென்று விசாரிப்பவள் போல் அவர் பக்கம் திரும்பினுள்.

அவர் அவளைக் கிட்ட வரும்படி செய்கை காட்டி, அவள் சமீபத்தில் வந்தவுடன் அவள் காதில் "அவளுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது" என்று சொன்னுர்.

பின்னர் எல்லாம் அவளுக்கு விசதமாய் விட்டது. அவள் சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் மௌனமா யிருந்தாள். சுந்தரியின் கண்கள் முதலில் கலங்கின. பிறகு இமைகளின் உள்ளே ஈரம் சேர்ந்தது; கடைசியாக நீர்த்துளிகள் ததும்பிப் பெருகத் தொடங்கின—சுந்தரி அழுதாள். உத்தமமாதரே இவ்வுலகத்துக்குச் சிறந்த பூஷணம். முன்ஞெருநாள் இதே சுந்தரி,—சைவலினி படகுடன் கவிழ்ந்து நீரில் அமிழ்ந்து மாண்டுபோக வேண்டுமென்று திரிகாண சுத்தியாய்ப் பிரார்த்தித்தாள். இன்றைக்கோ அவளைப்போல் சைவலினியின் கதியைக் கண்டு மனமுருகிப் பரிதவித்தவர் வேறெருவருமில்லை.

சுந்தரி கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மெல்லமெல்லச் சைவலினியண்டை சென்று அவள் பக்கத்தில் உட்கார்ந்தாள். அவள் வெகு மெதுவாய்ப் பேசி, நடந்துபோன சங்கதிகளை வெகு நயமாய் ஞாபக மூட்டினுள்: சைவலினிக்கு எதுவும் ஞாபகத்துக்கு வரவில்லை. அவளது ஞாபகசக்தி முழுவதும் போய்விட்டதென்றும் சொல்வதற்கில்லை. அப்படியிருந்தால் பார்வதியின் பெயர் எப்படி அவள் ஞாபகத்துக்கு வந்திருக்கும்? ஆனல் வாஸ்தவமான விஷயங்கள் ஒன்றும் அவள் மனதில் விழவில்லை. அவைகளெல்லாம் உருக்குலைந்து தடுமாறி விபரீத விபரீதமாய் மாறி மாறி

அவள் ஞாபகத்துக்கு வந்தன. அவளுக்குச் சுந்தரியின் ஞாபகம் இருந்தது. ஆயினும் அவளை யடையாளங் கண்டுபிடிக்க அவளால் முடியவில்லை.

அதன் பிறகு சுந்தரி சந்திரசேகரரை ஸ்நாந போஜநாதிகளின் பொருட்டுத் தன் வீட்டுக்கனுப்பினுள். பிறகு சைவலினியின் விழுந்து போன வீட்டை வாசயோக்கியமாய்ச் சீர்ப்படுத்த வேலை செய்யத் தொடங்கினுள். கிரமக்கிரமமாய் அக்கம்பக்கத்துப் பெண்டுகள் ஒருவள் பின்னெருவளாய் வந்து சகாயம் புரிந்தார்கள். அவசியமாய் வேண்டிய சாமக்கிரிகளெல்லாம் வந்து சேர்ந்தன.

இதற்குள் பிரதாபன் லாட்டிவாலாக்களை யவரவர் இருப்பிடம் அனுப்பிவிட்டுத் தான் மாங்கிரைவிட்டுப் புறப்பட்டுத் தன்னூருக்குத் திரும்பி வந்தான். வந்ததும் சந்திரசேகரர் வீடுவந்து சேர்ந்தாரென்று கேள்வியுற்றுன். உடனே சந்திரசேகரரைப் பார்க்க வேதக் கிராமத்துக்கு ஓடிவந்தான்.

அதே தினத்தில் ரமாநந்த ஸ்வாமியும் அவனுக்கு முன்னுகவே அங்கே வந்திருந்தார். சந்திரசேகரர் ரமாநந்த ஸ்வாமியின் உபதேசத்தை யநுசரித்து சைவலினிக்கு ஔஷதம் கொடுக்கப்போகிருரென்று சுந்தரி செவியுற்று அடக்கமுடியாச் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினுள். ஔஷதம் கொடுப்பதற்காக ஒரு சுப லக்னமும் வைக்கப்பட்டது.

ஆரும் அத்தியாயம்

யோகமகிமையா அல்லது சித்தவசீகரண சக்தியா ?

அந்த ஔஷதம் இன்னதென்று எம்மாற் சொல்ல முடியாது. ஆனுல் அவ் ஔஷதத்தைப் பிரயோகிப்பதற்குப் பூர்வாங்கமாகச் சந்திரசேகரர் விசேஷ புண்ய ஸ்நான முதலிய ஆத்மசுத்தி செய்து கொண்டார். சாதாரணமாகவே அவர் ஜிதேந்திரியர். பசிதாகம் முதலிய சரீர சம்பந்தமான உபாதிகளை அவர் மற்றவர்களை விட அதிகமாய் அடக்கி வைத்திருந்தார். ஆனுலும் தற்சமயத்தில் அதற்கு

மேல் இன்னும் கடினமான சுத்த நிர்ஜலோபவாசத்தை ஆசரித்து ஔஷதத்தைப் பிரயோகிக்கும் அதிகார சம்பத்தையடைந்தார். சென்ற சில நாளாக அவர் மனத்தை ஈசுவர தியானத்திற் செலுத்தி வந்தார். பாரமார்த்திக சிந்தையைத் தவிர்த்துப் பிறிதொரு சிந்தைக்கும் அந்த மனத்தில் அவர் இடம் கொடுக்கவில்லை.

சரியான சுபலக்கினத்தில் சந்திரசேகரர் ஔஷதத்தைக் கொடுக்கத் தொடங்கினர். அவர் சைவலிநிக்கு ஒரு பாய் போடும்படி சொல்ல, சுந்தரியால் வைக்கப்பட்ட வேலைக்காரி அப்படியே பாயைப் போட்டாள்.

அந்தப் படுக்கையில் சைவலினியை விடும்படிச் சந்திரசேகரர் சொல்ல, சுந்தரி சைவலிநியைத் தொட்டுப் பிடித்துக்கொண்டு வந்து பலாத்காரமாய்ப் படுக்கவைத்தாள். சகஜமாய்ச் சொன்னால் சைவலிநி கேட்பதாயில்லை. சுந்தரி வீட்டுக்குப் போய் ஸ்நானம்செய்து விடலாமென்று அவளைத் தொட்டுக்கொண்டாள். பிரதிதினமும் எத்தனையோ தரம் ஸ்நானம் செய்கிறவளுக்கு இன்று சைவலிநியைத் தொட்டதற்காக ஸ்நானம் செய்வது ஒரு கஷ்டமா?

அப்பொழுது சந்திரசேகரர் எல்லாரையும் பார்த்து "கொஞ்ச நேரம் வெளியே போயிருங்கள். நான் கூப்பிடும்போது நீங்கள் வரலாம்" என்றார்.

எல்லாரும் வெளியே சென்ற பிறகு சந்திரசேகரர் ஔஷத பாத்திரத்தைத் தரையில் வைத்துச் சைவலிநியைப் பார்த்து "எழுந்து உட்காரு" என்றார்.

அவர் சொன்னதற்கெல்லாம் அவள் மிருதுவாய்ப் பாடிக்கொண்டிருந்தாளேயன்றி எழுந்திருந்தாளில்லை. அதன்மேல் அவளை அவர் நிச்சலமான திருஷ்டியுடன் உற்றுப் பார்த்துக்கொண்டே மருந்தைத் தம் உள்ளங்கையில் ஒவ்வொருதரமாய் எடுத்து அவளுக்குச் சாப்பிடக் கொடுத்தார். "இந்த ஔஷதம் என் கமண்டலுவிலுள்ள தீர்த்தத்தைத் தவிர வேறொன்றுமன்று" என்று ரமாநந்தஸ்வாமி சொல்லியிருந்தார். 'இதனால் என்ன பலன் உண்டாகும்?' என்று சந்திர

சேகரர் கேட்டதற்கு " இதனுல் அவளுக்கு யோகபலமுண்டாகும் " என்று ஸ்வாமிகள் விடையளித்தார்.

பிறகு சந்திரசேகரர் அவளது நெற்றி, கண் முதலிய அங்கங் களின்மேல் பற்பல விதமாய்க் கோணல் மாணலாய்க் கையைச் சுழற்றி ஞர். சற்று நேரங் கழித்து அவளது கண்ணிமைகள் மூடிக்கொண் டன. உடனே அவள் தலையையாட்டத் தொடங்கினுள்—கடைசியில் அயர்ந்த நித்திரையில் விழுந்தாள்.

அப்பொழுது சந்திரசேகரர் " சைவலினீ " என்று கூப்பிட்டார்.

சைவலினி நித்திராவஸ்தையி லிருந்துகொண்டே " அடியேன் " என்றுள்.

சந்திர.—நான் யார்?

சை.—என் பர்த்தா.

சந்திர.—நீ யார்?

சை.—சைவலினி.

ச.—இது எந்த இடம்?

சை.—வேதக்கிராமம்—தேவர் திருமாளிகை.

ச.—யார் யார் வெளியே காத்துக்கொண்டிருக்கிறுர்கள்?

சை.—பிரதாபன், சுந்தரி முதலியவர்கள்.

ச.—நீ ஏன் இவ்விடத்தை விட்டுப்போனுய்?

சை.—பாஸ்டர்துரை வந்து பிடித்துக்கொண்டு போனபடியால்.

ச.—இந்தச் சங்கதிகளெல்லாம் இத்தனை நாள் உன் ஞாபகத்துக்கு வராதிருந்ததேன்?

சை.—ஞாபகத்திலிருந்தது—ஆனுல் அதையெல்லாம் சரியாய் எடுத்துச் சொல்லமுடியவில்லை.

ச.—என் முடியவில்லை?

சை.—எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது.

ச.—வாஸ்தவத்திலேயே உனக்குப் பைத்தியமா? அல்லது கபடவேஷமா?

சை.—வாஸ்தவத்திலேயே பைத்தியந்தான். கபடவேஷமன்று.

ச.—இப்பொழுது எப்படி? இன்னும் உனக்குப் பைத்தியம் இருக்கிறதா?

சை.—இப்பொழுது இதெல்லாம் ஸ்வப்நமாய் விட்டது. தேவரீருடைய கடாக்ஷத்தால் எனக்கு இப்பொழுது சித்தம் ஸ்வாதீனமாய் விட்டது.

ச.—அப்படியானல் உண்மையைச் சொல்வையா?

சை.—ஆஹா, சொல்வேன்.

ச.—நீ ஏன் பாஸ்டருடன் ஓடிப்போனய்?

சை.—பிரதாபன் பொருட்டு.

சந்திரசேகரர் நடுநடுங்கிப் போனர். நடந்துபோன சங்கதிகளையெல்லாம் கண்ணுடியிற் பார்ப்பதுபோல் மறுபடியும் பார்க்கலாயினர்.

ச.—பிரதாபன் உனக்குக் கள்ளப் புருஷனு?

சை.—சீச்சீ!

ச.—பின்னே என்ன?

சை.—நாங்கள் ஒரு காம்பில் பூத்த இரண்டு புஷ்பங்கள். ஒரே வனத்தில் பூத்து வளர்ந்தோம். நீங்கள் ஏன் எங்களைப் பறித்துப் பிரித்தீர்கள்?

சந்திரசேகரர் நீண்ட பெருமூச்செறிந்தார். அவரது அபாரமான புத்திக்கு எதுவும் மறைந்து தப்பிப்போக மார்க்கமில்லை.

சந்திர.—என்றைக்கு மிலேச்சனுடைய படகினின்றும் பிரதாபன் ஓடிப்போனனே, அன்று நீங்களிருவரும் கங்கையில் நீந்தினது ஞாபகமிருக்கிறதா?

சை.—இருக்கிறது.

ச.—அப்பொழுது உங்களுக்குள் என்னென்ன சம்பாஷணை நடந்தது?

சைவலினி எல்லாவற்றையும் ஆதியோடந்தமாய் விவரித்துச்சொன்னள். அதைக்கேட்டுச் சந்திரசேகரர் பிரதாபனைப் பெரிதும் கொண்டாடினர். அவர் மறுபடியும் பிரச்னம் செய்யலானர்.

ச.—அப்படியானல், பாஸ்டருடன்கூட ஏன் வசித்தாய்?

சை.—கேவலம் வாஸமாத்திரம் தான். புரந்தரபுரத்துக்குப்

போய்ப் பிரதாபனைப் பார்க்கலாமென்று நம்பி அவ்வாறு செய்தேன்.

ச.—கேவலம் வாஸமாத்திரந்தானு! அப்படியானால் நீ பதிவிரதையா?

சை.—என் மனத்தில் என்னைப் பிரதாபனுக்கே சம்பூர்ணமாய்ச் சமர்ப்பித்து விட்டேன். ஆகவே என்னைப் பதிவிரதையென்று சொல்லலாகாது. நான் மகாபாபி.

ச.—மற்றைப்படி?

சை.—மற்றைப்படி நான் சுத்த பதிவிரதையே.

ச.—பாஸ்டர் விஷயமாகவோ?

சை.—மநோ வாக் காயமென்னும் திரிகரணங்களிலும் நான் பதிவிரதையே.

சந்திரசேகரர் தீக்ஷ்ண தீக்ஷ்ணமான பார்வை பார்த்துக் கையைச் சுழற்றிக்கொண்டே "பத்திரம், உண்மையைப் பேசு" என்றார்.

தூங்கிக்கொண்டிருந்த அந்த யுவதி திடீரென்று! புருவத்தை நெறித்துக் கொண்டு "உண்மையையே சொல்லுகிறேன்" என்றாள்.

சந்திரசேகரர் பெருமூச்செறிந்து சொல்லுவார்: "அப்படியானால் பிராமணப்பெண்ணாகிய நீ ஏன் ஜாதிப்பிரஷ்டையானாய்?"

சை.—தேவரீருக்குச் சகல சாஸ்திரங்களும் தெரியும். நான் ஜாதிப் பிரஷ்டையாய் விட்டேனா என்பதை நீங்களே சொல்லவும். மிலேச்சன் சோற்றை நான் தின்னவில்லை. அவன் தொட்ட ஜலத்தை நான் குடிக்கவுமில்லை. பிரதிதினமும் நானே என்கையால் சமையல் செய்துகொள்வேன். ஹிந்து பரிசாரிகை யொருவள் எனக்கு ஒத்தாசையாய் இருப்பதுண்டு. மிலேச்சனுடன் ஒரே படகில்தான் இருந்தேன். அது வாஸ்தவமே. ஆனால் அதுவும் * கங்காநதியின் மேலல்லவா?

சந்திரசேகரர் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு உட்கார்ந்தார்.

---

* கங்கை புண்யநதி யாகையால் அதன்மேல் மிலேச்சனுடைய படகில் இருந்தது தோஷமன்றென்பது கருத்து.

அவர் வெகுநேரம் சிந்தையில் ஆழ்ந்திருந்து பிறகு பேசலுற்றார். "ஐயையோ நான் என்ன அகாரியம் செய்துவிட்டேன்! ஸ்திரீஹத்தி செய்யத் தலைப்பட்டேனே" என்றலறினர். சற்றுநேரம் கழித்து மறுபடியும் வினவலானர்.

ச.—இதையெல்லாம் நீ முன்னமேயே ஏன் தெரிவிக்கவில்லை?

சை.—என் வார்த்தையில் யார் நம்பிக்கை வைப்பார்கள்?

ச.—யாருக்காவது இவற்றைப் பற்றித் தெரியுமா?

சை.—தெரியும்; பாஸ்டருக்கும் பார்வதிக்கும்.

ச.—பார்வதி எங்கே?

சை.—அவள் மாங்கீரில் மரித்து இப்பொழுது ஒரு மாசமாகிறது.

ச.—பாஸ்டர் எங்கே?

சை.—அவன் உதயநாலாவில் நவாபின் கூடாரத்தில் இருக்கிறான்.

சந்திரசேகரர் சிறிதுநேரம் விசாரத்திலாழ்ந்து புனரபி (மீண்டும்) பிரச்னம் செய்யத் தொடங்கினர்.

ச.—இந்த வியாதி தீருமென்று உனக்குத் தோன்றுகிறதா?

சை.—தேவரீர் அடியாளுக்கு யோகபலம் அளித்திருக்கிறீர்கள். அதன் பிரபாவத்தால் எனக்கு ஞானதிருஷ்டி உண்டாயிருக்கிறது. அதன் மூலமாய் எல்லாச் சங்கதிகளும் எனக்கு முன்னதாய்த் தெரிகின்றன. தேவரீரது திருவடியின் கிருபையைப் பெற்ற அடியாளுக்கு இப்பொழுது தாங்கள் கொடுத்த ஔஷதத்தினல் உடம்பு சொஸ்தமாவது நிச்சயம்.

ச.—உடம்பு சொஸ்தமான பிறகு உனக்கு எங்கே போக இஷ்டம்?

சை.—விஷம் கிடைத்தால் தின்று விடலாமென்றிருக்கிறது. ஆனல் நரக பயந்தான் பாதிக்கிறது.

ச.—ஏன் சாகவேண்டுமென்கிறாய்?

சை.—இல்லாவிட்டால் இவ்வுலகத்தில் எனக்குப் புகலிடம் ஏது?

ச.—ஏன், என்னுடன் இருக்கலாகாதா?

சை.—என்னை மறுபடியும் சேர்த்துக்கொள்வீர்களோ?

ச.—சேர்த்துக்கொள்ளாமலென்ன ?

சை.—அப்படியானல் என் மனோவாக்காயங்களால் உங்கள் பாத சேவை செய்கிறேன். ஆனல் உங்கள் பெயருக்குக் களங்கம் வருமே யென்றஞ்சுகிறேன்.

இந்தச் சமயத்தில் தூரத்தில் குதிரையின் காலரவம் கேட்டது. அதைக்கேட்டுச் சந்திரசேகரர் "எனக்குச் சொந்தமான யோகபலம் ஒன்றும் கிடையாது. உன்னிடத்தில் இப்பொழுதிருப்பது ரமானந்த ஸ்வாமியின் யோகபலம். இது என்ன சத்தம் சொல்" என்ருர்.

"அது குதிரையின் குளம்படிச் சத்தம்."

"யார் வருகிறது ?"

"மஹம்மது இர்பான் என்ற நவாபின் போர்வீரன்."

"அவன் வருவதற்குக் காரணம் ?"

"என்னை அழைத்துக்கொண்டு போக. நவாபு என்னைப் பார்க்க வேண்டுமென்று அபேக்ஷித்தான்."

"பாஸ்டர் அங்கே போனதற்கு முந்தியா அல்லது பிந்தியா நவாபு உன்னைப் பார்க்கவேண்டுமென்று அபேக்ஷித்தது ?"

"முந்தியுமன்று பிந்தியுமன்று. பாஸ்டரையும் என்னையும் அழைத்துவரும்படி ஒரே சமயத்தில் உத்தரவு செய்தான்."

"நீ ஒன்றும் சிந்திக்கவேண்டியதில்லை. தூங்கு."

என்று சொல்லிவிட்டுச் சந்திரசேகரர் வெளியே நின்றவர்களை யெல்லாம் உள்ளே வரச்சொன்னர். அவர்கள் உள்ளே வந்தவுடனே அவர்களுடன் பின்வருமாறு சொன்னர். "இப்பொழுது தூங்கிக் கொண்டிருக்கிருள். அவள் எழுந்திருந்தவுடனே பாத்திரத்திலுள்ள மருந்தை அவளுக்குக் கொடுங்கள். நவாபின் உத்தியோகஸ்தனெருவன் இங்கே வந்து கொண்டிருக்கிருன். அவன் நாளைக்கு இவளை அழைத்துக்கொண்டு செல்வான். நீங்களும் கூடப்போங்கள்" எனவே எல்லோரும் ஆச்சரியமுற்று பயந்துபோய் விட்டார்கள். "அவளை என் நவாபினிடம் கொண்டுபோகவேண்டும் ?" என்று எல்லோரும் கேட்கத் தலைப்பட்டனர்.

ச.—எல்லாம் நீங்களே சீக்கிரத்தில் தெரிந்து கொள்வீர்கள். விசாரப்படவேண்டாம்.

மகம்மது இர்பான் வந்து சேர்ந்தவுடன் பிரதாபன் அவனுக்குத் தக்க முகமனளித்து உபசாரம் செய்யும் வேலையில் பிரவர்த்தித்தான். சந்திரசேகரர் நடந்ததை யெல்லாம் ரமானந்த ஸ்வாமிக்கு ஆதியோடந்தமாக அந்தரங்கமாய்ச் சொன்னார். அப்பொழுது ரமாநந்த ஸ்வாமி "நாளைக்கு நாமிருவரும் நவாப் தர்பாரில் போயிருக்கவேண்டும்" என்றார்.

ஏழாவது அத்தியாயம்

தர்பார்

ஒரு பெரிய கூடாரத்தின் மத்தியில் ராஜசபை சூழ, வங்காளத்தின் கடைசி யரசன் வீற்றிருந்தான். கடைசியரசனென்று சொன்னதேனெனில் அவனுக்குப்பின் நவாபு நாமத்தைத் தரித்தவர் எவரும் ஒருகாலும் அங்கு அரசு புரியவேயில்லை.

அந்தத் தர்பாரிலே நவரத்னங்களிழைத்துச் சோபிக்கும் சிறந்த பொற்சிங்காசனத்தில் நவாப் மீர் காசிம் ஆலிகான், முத்தாலும் வைரத்தாலும் தன்னை அலங்கரித்துக்கொண்டு தன் உதமாங்கமாகிய சிரவில் இலங்கும் பாகையின்மேல் சூரியன்போல் ஜாஜ்வல்யமாய்ப் பிரகாசிக்கும் மகோஜ்வலமான வைரமணி யணிந்து வீற்றிருந்தான். இருபாரிசத்திலும் பரிஜனங்கள் கைகூப்பி வரிசை வரிசையாய் நின்றனர். அமைச்சர்கள் நவாபின் அனுமதி பெற்று முழந்தாள் தாழ்த்தி மௌனமாய் உட்கார்ந்தனர்.

"கைதிகள் வந்திருக்கின்றார்களா" என்று விசாரித்தான் நவாபு.

மகம்மது இர்பான்கான், எல்லாரும் வந்திருக்கிறார்களென்று சொல்ல, பாஸ்டரை முதலிற் கொண்டுவரும்படி நவாபு கட்டளையிட்டான்.

உடனே பாஸ்டர் நவாபின் முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான்.

நவாபு.—நீ யார்?

லாரென்ஸ் பாஸ்டர், இப்பொழுது தனக்கு இறுதிகாலம் கிட்டி விட்டதென்று அறிந்தவனாய், இத்தனை நாள் கழித்துக் கொஞ்சம் நற்புத்தி யடைந்து தனக்குள்ளே “இதுவரையில் நான் பிரிட்டிஷா ரின் பெயருக்குக் களங்கமுண்டாகும்படி நடந்து வந்தேன். இப்போ தாகிலும் இங்கிலீஷ்காரனைப்போல் கௌரவமாய் நடந்து சாவேன்” என்று சொல்லிக்கொண்டான்.

பாஸ்டர்.—என் பெயர் லாரென்ஸ் பாஸ்டர்.

நவாப்.—நீ என்ன ஜாதி?

பாஸ்டர்.—நான் இங்கிலீஷ்காரன்.

நவாப்.—இங்கிலீஷ்காரர் எனக்குச் சத்துரு. நீ சத்துருவாயிருந்து என் கூடாரத்துக்குள் ஏன் நுழைந்தாய்?

பாஸ்டர்.—ஏனோ நுழைந்தேன். நீர் அதற்காக என்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளும். நான் இப்பொழுது உம் வசத்திலிருக்கிறேன். நான் ஏன் நுழைந்தேனென்று கேட்க வேண் டிய அவசியமில்லை. அப்படி நீர் கேட்டாலும், உமக்கு யாதொரு விடையும் தரப்படமாட்டாது.

அதற்கு நவாபு கோபித்துக்கொள்ளாமல் புன்னகை புரிந்து “நீ நிர்ப்பயமானவன் என்பது நன்றாய் விளங்குகிறது. ஆனால் நீ நிஜம் சொல்லுவாயா?” என்றான்.

பாஸ்டர்.—இங்கிலீஷ்காரன் ஒருபோதும் பொய்யுரையான்.

நவாப்.—நிரம்ப சரி! அதையும் கூடிய சீக்கிரத்தில் பார்த்து விடுவோம்.

பிறகு நவாபு சுற்றிலும் பார்த்துவிட்டுச் சந்திரசேகரர் வந்திருப்ப தாக யாரோ சொன்னார்களே, அவர் வந்திருக்கும் பக்ஷத்தில் உடனே அவரை இங்கே கொண்டுவாருங்கள், என்றான்.

மஹம்மது இர்பான் சந்திரசேகரரை உள்ளே அழைத்துவந்தான். நவாபு அவரைப் பார்த்துவிட்டுப் பாஸ்டரின் பக்கமாய்த் திரும்பி “இந்த மனுஷ்யர் உனக்குத் தெரியுமா?” என்றான்.

பா.—பெயரை மாத்திரம் கேட்டிருக்கிறேன். அவர் எனக்குத் தெரியாது.

ந.—சரி அடிமைக் குல்சம் எங்கே?

குல்சமும் வந்தாள்.

ந.—இந்த அடிமை உனக்குத் தெரியுமா?

பா.—ஆஹா, தெரியும்.

ந.—யார் அவள்?

பா.—அவள் உம்முடைய அடிமை.

ந.—மஹம்மது தக்கியைக் கூப்பிடு.

தக்கிகானை மஹம்மது இர்பான் விலங்குடன் கொண்டுவந்து நிறுத்தினான்.

தக்கிகானுடைய மனம் இன்னும் அலைபாய்ந்து கொண்டேயிருந்தது. எந்தப் பக்ஷத்தைச் சேர்வதென்று அவனுக்கு மனோதிடம் உண்டாகவில்லை. ஆகையால்தான் அவன் இன்னும் சத்துரு பக்ஷத்திற் போய்ச் சேரவில்லை. ஆனால் இவன் அயோக்கியனென்றறிந்த நவாபின் சேனாதிபதிகள் இவன் காரியங்களை ஜாக்கிரதையாய்க் கவனித்து வந்தார்கள். ஆகையால் தான் ஆலி இப்ராஹிம்கான் அவனை அவ்வளவு அநாயாசமாய்ப் பிடித்துக் கட்டிக்கொண்டு வந்தான்.

நவாபு தக்கிகானைப் பார்க்காமலே, “குல்சம்! நீ மாங்கீரிலிருந்து கல்கத்தாவிற்குப் போன விவரத்தைச் சொல்லு” என்றான்.

குல்சம் முதலிலிருந்து எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் எடுத்துக்கூறித் தலனி பேகத்தைப்பற்றிய சங்கதிகளெல்லாவற்றையும் சொன்னாள். பிறகு, கையைக் கூப்பிக்கொண்டு, கண்களில் நீர் ததும்ப, உரத்த குரலில் பேசலுற்றாள்: “பிரபோ! இந்தப் பஹிரங்கமான தர்பாரிலே நான் இந்தத் துஷ்டனும் ஸ்திரீ காதகனுமாகிய மஹம்மது தக்கியின் பேரில் குற்றஞ்சாட்டுகின்றேன். தயவு கூர்ந்து என் பிராதை யங்கீகரியுங்கள். இவன் என் பிரபு பத்தினியின்பேரில் பொய்யான அபவாதத்தைக் கற்பித்து, என் பிரபுவை ஏமாற்றி, இவ்வுலகத்தில் உத்தம ஸ்திரீ ரத்னமாய் விளங்கும் தலனி பேகத்தை எறும்பை நசுக்குவது போல் நிர்த்தயையாய் நசுக்கி விட்டான். ஆண்டவனே! இந்த நராதமனையும் தாங்கள் அப்படியே

நிர்த்தயையாய் நசுக்கிவிட வேண்டுமென்பதுதான் என் வேண்டு கோள்" என்றாள்.

மகம்மது தக்கி தழ தழத்த குரலில் "அது பொய், உனக்குச் சாக்ஷி யார்?" என்றான்.

குல்சம் கண்களில் தீப்பொறி பறக்க கர்ஜித்துக்கொண்டு கூறத் தொடங்கினாள். "அடே, எனக்காடா சாக்ஷி? மேலே பாரடா— எனக்குச் சாக்ஷி ஆண்டவனடா! அடே உன் மார்பில் கையை வைத்துப் பிறகு கேளடா—எனக்கு நீயே சாக்ஷி? இதற்கும் மேலாக இன்னும் சாக்ஷி வேண்டுமானால், இதோ இந்தப் பரங்கிக்காரனைக் கேட்கலாம்" என்றாள்.

ந.—ஏ பரங்கி, என்ன சொல்லுகிறாய்? அந்தப் பெண்பிள்ளை பேசுகிறது வாஸ்தவந்தானா? நீயும் அமியட்டுடன் இருந்தாயல்லவா? பத்திரம், இங்கிலீஷ்காரன் ஒருபோதும் பொய்யுரையான்.

பாஸ்டர் நடந்ததையெல்லாம் ஒன்றும் ஒளிக்காமற் சொல்லிவிட்டான். தலனி குற்றமற்றவள் என்பது எல்லோருக்கும் இப்பொழுது விளங்கிற்று. தக்கியின் தலை குனிந்துபோய்விட்டது.

அப்பொழுது சந்திரசேகரர் எழுந்து வந்து நவாபை நோக்கி, "ஹே தர்மாவதாரா! இதில் நானும் ஒருசாக்ஷி. இந்தப் பெண் பேசியது அவ்வளவும் உண்மையே. நான்தான் அந்தச் சந்நியாசி" எனக் குல்சமும் அவருடைய அடையாளத்தைக் கண்டு பிடித்துக் கொண்டு "ஆமாம், இவர்தான் அந்தச் சந்நியாசி" என்றாள்.

சந்திர.—மஹாராஜா! இந்தப் பரங்கிக்காரன் சத்தியவாதியாயிருக்கும் பக்ஷத்தில் தயவுசெய்து இவனை இன்னும் இரண்டொரு கேள்வி கேளுங்கள்.

நவாபு சந்திரசேகரரது கருத்தை யறிந்துகொண்டு "நீரே கேட்கலாம். நீர்சொல்வதைத் துவிபாஷி தர்ஜுமா செய்வார்" என்றான்.

சந்திர.—நீ சந்திரசேகரன் பெயரைக் கேட்டிருப்பதாய்ச் சொன்னையே, நான்தான் அந்தச் சந்திரசேகரன். நீ அவளுடைய—

சந்திரசேகரர் அந்த வாக்கியத்தை முடிப்பதற்குள் பாஸ்டர் தடுத்து "நீர் கஷ்டப்பட வேண்டியதில்லை. நான் சுதந்திர புருஷன்

மரித்துப்போவேனே என்கிற பயம் எனக்கில்லை. நீர் கேட்கும் கேள்வி களுக்கு விடையளிப்பதும் அளியாதிருப்பதும் என் இஷ்டம். நீர் கேட்கும் எந்தக் கேள்விக்கும் உத்தரம் சொல்ல எனக்கிஷ்டமில்லை" என்றான்.

"சைவலினி வரட்டும்" என்றான் நவாபு.

"சைவலினி வந்தாள். முதலில் பாஸ்டருக்கு அவளை யடையா ளங் கண்டுபிடிக்க முடியவில்லை. அவள் அவ்வளவு நோயால் நொந்து வெளுத்து மெலிந்திருந்தாள். கிழிந்த கந்தையை உடுத்திருந்தாள். கேசபாசம் வாரி முடிக்காமல் அலங்கோலமாயிருந்தது. தேக முழு வதும் தூளி படிந்திருந்தது. சரீரத்தின் சர்மம் உலர்ந்து முரட்டுத் தனமாயிருந்தது. கூந்தல் அழுக்குப்படிந்து அவிழ்ந்தலைந்தது. முகத் தில் பைத்தியச் சிரிப்பு. கண்ணில் பைத்தியக்காரப் பார்வை. இந்தத் தோற்றத்தைக்கண்டு பாஸ்டர் நடுங்கிப்போனான்.

நவாபு.—அவளை உனக்குத் தெரியுமா?

பா.—தெரியும்.

ந.—யாரவள்?

பா.—சைவலினி.—சந்திரசேகரர் பத்னி.

ந.—அவளை எப்படி உனக்குத் தெரியும்?

பா.—நீர் என்ன தண்டனை வேண்டுமானாலும் விதிக்கலாம். நீர் கேட்கும் கேள்விகளுக்கு நான் இனி பதில் சொல்லப் போகிறதில்லை.

"உன்னை நாய்கள் பிடுங்கித் தின்னும்படி தண்டிக்க வேண்டு மென்பது என் இஷ்டம்."

பாஸ்டரின் முகம் உலர்ந்துபோயிற்று. அவன் கையும் காலும் நடுங்கத் தொடங்கின. ஆனால் அவன் சீக்கிரத்திலேயே தைரிய மடைந்து நவாபைப்பார்த்து "என்னை ஒழித்து விடுவதென்று தாங்கள் தீர்மானங்கொண்டிருக்கும் பக்ஷத்தில், தயவு செய்து வேறே எந்த விதமான மரணத்தையாவது விதியுங்கள்" என்றான்.

ந.—முடியாது. இந்தத் தேசத்தில் முற்காலத்தில் ஒரு தண் டனை யிருந்ததாம். அதென்னவென்றால்.—குற்றவாளியை முதலில் இடுப்புவரையில் மண்ணில் புதைத்து விடுகிறது. பிறகு கடிப்பதற்

கெனத் தயார் செய்யப்பட்ட நாய்களை அவன்மேல் ஏவிவிடுகிறது. அந்த நாய்கள் அவன்மேல் விழுந்து அவனைக் கடித்தபின் காயமான விடங்களில் உப்பைத் தூவி வைக்கிறது. நாய்கள் வயிறுநிறைய மாம்சபோஜனம் செய்துவிட்டுப் போனபின், குற்றவாளி பாதி பக்ஷிக்கப்பட்டும் பாதி செத்தபிணமாயுமிருக்கையில் அந்த நாய்கள் அதிகரித்த பசியுடன் மறுபடியும் திரும்பிவந்து அவன் மேல் விழுந்து அவன் தேகத்தின் மிகுந்திருப்பதையும் பக்ஷித்துவிடுமாம். உனக்கும் தக்கிகானுக்கும் அப்படிப்பட்ட மரணத்தை நாம் விதிக்கிறோம்.

அதைக் கேட்டவுடனே, கைதியாயிருந்த தக்கிகான் காயம்பட்டு வருந்தும் பசுபோல் கோவென்றலறி வீறிட்டான். பாஸ்டர் முழந் தாளிட்டுக் கூப்பிய கையோடும், மேல் நோக்கிய கண்ணோடும் கடவுளை மானசிகமாய்க் கூவியழைத்து இவ்வாறு பிரார்த்தனை செய்யலானான். "ஸ்வாமி, உன்னை நான் இதுவரையில் பிரார்த்தித்ததேயில்லை. உன்னைப்பற்றி நினைத்தது கூடக்கிடையாது. என் ஜன்மமெல்லாம் பாபத்தையே புரிந்தொழித்தேன். நீ யொருவன் இருக்கிறாயென்று கூட என் மனத்தில் படவில்லை. இன்றைக்கோ நான் நிர்க்கதியாய்ப் போய்விட்டபடியால் உன்னைக் கூவி யழைக்கிறேன். ஹே ஆபத் பாந்தவா, அநாதரக்ஷகா, என்னைக் கைவிடாதே, காப்பாற்று, காப்பாற்று" என்று கதறினான்.

இதைப்பற்றி ஒருவரும் ஆச்சரியமடைய வேண்டியதில்லை. ஆபத்து வந்துவிட்டால், தெய்வ நம்பிக்கை யில்லாதவன் கூடப் பரமாத்மாவைக் கூவியழைக்கிறான், பரம பக்தியுடன் பிரார்த்திக்கிறான். பாஸ்டரும் அப்படித்தான் பிரார்த்தித்தான்.

பிரார்த்தனை முடிந்ததும் அவன் கண்கள் கீழ் நோக்கியிருக்க, திருஷ்டி மாத்திரம் கூடாரத்துக்கப்பால் போய் விழுந்தது. திடீரென்று ஜடா மண்டலதாரியாய், இரத்த வஸ்திரம் தரித்து, திருநீறணிந்து வெள்ளைத் தாடியுடன் விளங்கும் மஹா புருஷன் ஒருவர் தன்னை உற்றுப்பார்த்துக்கொண்டு நிற்பதைப் பாஸ்டர் கண்டான். அந்தப் பார்வையால் பாஸ்டரின் கண்கள் ஆகர்ஷிக்கப்பட்டு நிச்சலமாய் நின்றன. வரவர அவனது சித்தம் அந்தப் பார்

வையின் வசமாய் விட்டது. கண்கள் விழுந்தன. தேக முழுவதும் பெருந்நூக்கத்தால் சோர்வுற்றதுபோல் சக்தியற்றுப் போயிற்று. அப்பொழுது ஜடாமண்டலதாரியின் உதடுகள் அசைந்து ஏதோ மிணுமிணென்று சொல்வதுபோல் அவனுக்குத் தோற்றியது. பிறகு நீருண்ட மேகத்தின் முழக்கம்போன்ற கம்பீரமான ஒரு கண்டத்வனி பாஸ்டரின் காதில் நுழைய, " நாய்களாற் கடிக்கப்பட்டுச் சாவதினின் றும் உன்னை நான் காப்பாற்றுகிறேன், நான் கேட்பதற்கு உண்மை யான விடை சொல். நீ சைவலினியின் ஜாரபுருஷனு ? " என்று யாரோ ஒருவர் கேட்பதுபோல் அவன் செவியிற் பட்டது.

பாஸ்டர் ஒருதரம் அந்த மலிந வேஷத்துடன் விளங்கும் பைத்தி யக்காரியை உற்றுப்பார்த்து " இல்லை " என்றான்.

அப்பொழுது ' இல்லை ' நான் சைவலிநியின் ஜார புருஷனல்ல என்ற வார்த்தைகளை எல்லோரும் கேட்டார்கள்.

அதே வஜ்ரகம்பீரமான த்வனியில் மறுபடியும் ஒருவினு வெழுந் தது. அதை வினவியது நவாபோ, சந்திரசேகரரோ, மற்ற யாரோ பாஸ்டருக்குப் புலப்படவில்லை. " அப்படியானுல் சைவலிநி ஏன் உன் படகில் தங்கியிருந்தாள் " என்று கம்பீரமான த்வனியிற் கேட்கப்பட்ட கேள்விதான் அவன் காதிற் பட்டது. அதற்குப் பாஸ்டர் உச்ச சுரத்தில் விடை பகர்ந்ததாவது—" நான் சைவலிநி யின் ரூப சௌந்தரியத்தைக் கண்டு மோகமடைந்து அவளை அவள் வீட்டினின்றும் அபஹரித்துக்கொண்டு போனேன். கொண்டுபோய் அவளை என் படகில் வைத்திருந்தேன். அவளுக்கு என்னிடத்தில் ஆசையிருக்குமென் றெண்ணியிருந்தேன். ஆனுல் ஆசை வைப்பதற் குப்பதிலாக அவள் என்னிடத்தில் தீராத அருவருப்புக்கொண்டிருந்த தாக அறிந்துகொண்டேன். நாங்கள் படகில் முதல் முதல் சந்தித்த பொழுது அவள் ஒரு கத்தியை யெடுத்து என்னைப் பயமுறுத்தி ' நானிருக்கும் அறைக்குள் நீ வருவாயாகில், நம்மிருவருடைய உயி ரும் இந்தக் கத்திக்கு இரையாய்விடும். நீ என்னை உன் தாய்க்குச் சமானமாய்க் கருதவேண்டும் ' என்றாள். அதற்கப்புறம் அவளை நான்

அண்டவுமில்லை தீண்டவுமில்லை" என்ருன். எல்லாரும் இதைக் கேட்டார்கள்.

சந்திர.—இந்தச்சைவலிநியை நீ எப்படி மிலேச்சனுடைய சோற்றைத் தின்னச் செய்தாய்?

"ஒரு நாளாகிலும் என் சோற்றையாவது நான் தொட்ட சோற்றையாவது அவள் புசித்ததில்லை; அவள் தானே சுயம்பாகம் செய்து கொண்டாள்" என்று பாஸ்டர் வியசனத்துடன் உரைத்தான்.

வின.—அவள் என்ன சமைத்துக்கொண்டாள்?

விடை.—வெறும் சோறுதான். அத்தோடு பால் தவிர அவள் வேருென்றும் சாப்பிடவில்லை.

வின.—ஜலம்?

விடை.—கங்கையிலிருந்து தானே மொண்டுகொண்டாள்.

அந்தச் சமயத்தில், பூம்! பூம்! என்ற சப்தம் திடீரென்றுண்டாயிற்று.

"அதென்ன?" என்று நவாபு கேட்டான்.

"வேறென்ன? இங்கிலீஷாரின் துப்பாக்கிகள் தான்." என்ருன் இர்பான் விசனத்துடன். "இங்கிலீஷ்காரார் கூடாரத்தை எதிர்த்துவிட்டனர்."

திடீரென்று ஜனங்கள் கூடாரத்தினின்றும் வெளியே ஓடிவாரத் தொடங்கினுர்கள். மறுபடியும் 'பூம்! பூம்! பூம்!' என்று பீரங்கிகள் முழங்கின. மீண்டும் அநேக துப்பாக்கிகள் ஏககாலத்தில் வெடி தீர்ந்து கர்ஜித்தன. அந்தப் பயங்கரகோஷம் குதித்துக் குதித்து முன்னே சென்றது. இரணபேரி முதலிய வாத்தியங்கள் முழங்கத் தொடங்கின. நாலு திக்குகளிலும் பயங்கரமான கோலாஹலம் உண்டாகி எங்குபார்த்தாலும் வியாபித்தது. குதிரைகளின் காலடிச்சத்தமும், ஆயுதங்களின் கோஷமும், போர்வீரர்களின் ஜயத்வனியும் ஒன்றுசேர்ந்து கடலலைபோல் கர்ஜிக்க, புகைப்படலம் ஆகாசமண்டலத்தை மறைத்து அஷ்டதிக்குகளிலும் போய் வியாபித்தது. அப்பொழுதுண்டான ஆரவாரத்தைப் பார்த்தால், சுகமான சுஷுப்தியில்

உள்ள ஒருவனைச் சுற்றிலும் அலை வீசிக் குமுறிக் கோஷிக்கும் சமுத்திரம் சூழ்ந்து கொண்டதுபோலிருந்தது.

உடனே நவாபின் மந்திரிகளும் சேவகர்களும் தட புடலாய்' கூடாரத்தினின்று வெளிப்பட்டார்கள். சிலர் போர்முகம் புகுந்தனர். சிலர் ஓட்டமெடுத்தனர். குல்சமும், சந்திரசேகரனும், சைவலினியும், பாஸ்டருங்கூட வெளியே போய்விட்டனர். நவாபும் கைதியாகிய தக்கியும்தான் உள்ளே இருந்தனர்.

பீரங்கிகுண்டுகள் கூடாரத்தில் விழத்தொடங்கின. அப்பொழுது நவாபு தன் கச்சையிலிருந்து கத்தியை உருவி தக்கியின் மார்பில் குத்திப் பாய்ச்சினன். தக்கி மாண்டனன். பிறகு நவாபு கூடாரத்தை விட்டகன்றனன்.

எட்டாவது அத்தியாயம்

போர்க்களம்

சைவலினியை யழைத்துக்கொண்டு சந்திரசேகரர் வெளியே வந்து பார்த்தார். ரமாநந்தஸ்வாமி பார்த்துக்கொண்டிருந்தார்.

ஸ்வாமி.—சந்திரசேகரா! இனி என்ன செய்யப் போகிறாய்?

சந்தி.—இப்போது சைவலினியை எப்படிக் காப்பாற்றுகிறது? நாலுபக்கத்திலும் பீரங்கிகுண்டுகள் மழைபோல்பொழிகின்றன. எங்கு பார்த்தாலும் ஒரே புகைமயமாயிருக்கிறது. இப்பொழுது எங்கே போகலாம்?

ஸ்வாமி.—விசாரப்படவேண்டாம். முசல்மான் சைநியம் எந்தப் பக்கமாய் ஓடிப்போகின்றது. தெரிகிறதா? எங்கே போர் தொடங்குவதன் முன்னமே சேனையானது முதுகு காட்டியோடுகின்றதோ, அங்கே வெற்றியைப்பற்றின பேச்சு என் பேசவேண்டும்? இந்த வெள்ளைக்காரர்கள் விசேஷ பாக்கியவான்கள், பலவான்கள்; சாமர்த்திய சாலிகளாயுமிருக்கின்றனர். அவர்கள் என்றைக்காவது ஒருநாள் பாரத வர்ஷ முழுமைக்கும் அதிகாரிகளாவார்கள், நட, ஓடிப்போகும் முசல்மான்களைப் பின் தொடர்ந்து செல்வோம். எனக்

காக நீ கவலைப்படவேண்டாம். இந்தப் பெண்ணைப்பற்றித்தான் நான் விசாரப்படுகிறேன்.

அம்மூவரும் சேர்ந்து, ஓடிப்போய்க்கொண்டிருக்கும் முசல் மான்களின் பின்னாலேயே நடந்து சென்றனர். திடீரென்று, அவர்களுக்கெதிரே கவசமணிந்து ஆயுதபாணிகளாய் விளங்கும் ஹிந்து சேனாவீரர்கள் போர்வெறியுடன் ஒரு மலைக்கணவாயி னின்றும் வெளிப்பட்டு இங்கிலீஷ்காரரை நோக்கிச் செல்வதைப் பார்த்தார்கள். மத்தியில் சேனைத்தலைவன் அசுவத்தின்மேல் ஆரோஹணித்திருந்தான். உடனே அவனைப் பிரதாபன் என்று அவர்கள் அனைவரும் அறிந்துகொண்டனர். பிரதாபனைக் கண்டதும் சந்திரசேகரர் மனங்கலங்கிச் சற்று நேரத்திற்கெல்லாம் பதை பதைக்கும் நெஞ்சத்துடன் அவனைப் பார்த்து, "பிரதாபா, இந்தத் துர்ஜயமான யுத்தத்தில் நீ யேன் வந்தாய்? திரும்பிப்போ" என்றார்,

பிரதாபன்.—நான் உன்னைத் தேடிக்கொண்டுதான் வந்தேன். வா, நிர்ப்பயமான இடத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன்.

இவ்வாறு சொல்லிப் பிரதாபன் அம்மூவரையும் தன் சிறு சேனையின் மத்தியில் அழைத்துக்கொண்டு திரும்பிச்சென்றான். அவனுக்கு அந்த மலைப்பிரதேசத்தின் கணவாய்களெல்லாம் நன்றாய்த் தெரியும். சீக்கிரத்தில் அவர்களைப் போர்க்களத்தினின்றும் வெகுதூரம் கொண்டு போய் விட்டான். போகும்போதே வழியில் தர்பாரில் நடந்தவற்றையெல்லாம் விஸ்தாரமாய்ச் சந்திரசேகரர் சொல்லக் கேட்டான். கடைசியில் சந்திரசேகரர் "பிரதாபா நீயே புண்யசாலி. எல்லாப் பெருமையும் உன்னுடையதே. எனக்கெல்லாம் தெரிந்துவிட்டது" என்றார்.

பிரதாபன் ஆச்சரியமுற்று அவரை ஏறிட்டுப்பார்த்து நின்றான்.

சந்திரசேகரர் துக்கத்தால் தழதழத்த குரலுடன் சொல்வாராயினார். "இந்தப் பெண் பரிசுத்தையென்று இப்பொழுது எனக்குத் தெரிந்தது. லோகதர்மத்துக்காக எவ்வித பிராயச்சித்தம் செய்து கொள்ளச் சொன்னபோதிலும் செய்து அவளைத் திரும்பவும் சேர்த்துக்

கொள்வேன். ஆனால் இனி சுகத்தை யநுபவிக்க மாத்திரம் நான் கொடுத்து வைக்கவில்லை.”

“ஏன், சுவாமிகளின் ஔஷதத்தால் யாதொரு அநுகூலமு மில்லையோ?”

“இல்லை, இதுவரையில் காணோம்.”

பிரதாபனுக்குத் துக்கம் வந்துவிட்டது. அவன் கண்களில் நீர் ததும்பிற்று. சைவலினி எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந் தாள். அவள் ஒரு பக்கமாய்த் திரும்பிப் பிரதாபனைக் கையைக் காட்டி யழைத்தாள். பிரதாபன் புரவியை விட்டிறங்கி அவளண்டை சென்றான். அவள் இரகசியமாய் “நான் ஒன்று சொல்லுகிறேன், கேட்கிறாயா? அக்கிரமமான காரியம் நான் ஒன்றும் சொல்லப்போவ தில்லை” என்றாள்.

பிரதாபன் ஆச்சரியத்துடன் “உன் பைத்தியம் வெறும் வெளி வேஷந்தானா?” என்றான்.

சைவலினி.—இந்த வேளைக்கு அப்படித்தான். இன்று காலை படுக்கையைவிட்டு எழுந்ததுமுதல் புத்தி தெளிந்து வருகிறது. உண்மையாகவே நான் இத்தனை நாளும் பைத்தியக்காரியாகவா இருந்தேன்?

பிரதாபன் முகம் மலர்ந்தது. அவன் மனத்தில் உண்டான எண் ணத்தைச் சைவலினி அறிந்துகொண்டு “உஸ். இப்பொழுது ஒன்றும் சொல்லவேண்டாம். நானே அவர்களுக்கு எல்லாம் சொல்லப்போகி றேன். ஆனால் எல்லாவற்றிற்கும் நீ சொல்லும் புத்திமதியைத்தான் எதிர்ப்பார்த்திருக்கிறேன்.” என்றாள்.

“என் புத்திமதி எதுக்கு?”

“என் பர்த்தா என்னைத் திரும்பச் சேர்த்துக்கொள்ளும் பக்ஷத் தில், நான் என் பாபசிந்தைகளை அவருக்குத் தெரிவிக்காமல் மறைத்து, அவரது நிர்மலமான சம்சயமற்ற காதலின்பத்தை யநுபவிப்பது நியாயமாகுமா?”

“அதற்கென்ன செய்யவேண்டு மென்கிறாய்?”

“ நடந்ததையெல்லாம் அவருக்குச் சொல்லி என்னை க்ஷமிக்கும்படி அவரைப் பிரார்த்திக்கலா மென்றிருக்கிறேன்.”

பிரதாபன் சிறிதுநேரம் யோசித்துப் பிறகு “ சரி, அப்படியே சொல்லு. ஆசீர்வதிக்கிறேன்—இதஃபாம் சுகீபவ, இனி சுகமாயிருப்பாயாக ” என்று சொல்லிப் பிரதாபன் கண்ணீருகுத்தான்.

சை.—நான் சுகமாயிருக்கப் போவதேது? நீ உலகத்தில் இருக்கும் வரையில் எனக்குச் சுகம் கிடையாது.

பிர.—அதெப்படி, சைவலினி?

சை.—நீ பிழைத்திருக்கும் வரையில் என்னை மறுபடியும் பார்க்கக்கூடாது, ஸ்திரீகளின் அந்தக்கரணம் அவ்வளவும் அழுகிப்போனது. அது எதுவரையில் ஸ்திரமாய் நிற்குமோ எனக்குத் தெரியாது. இந்த ஜன்மத்தில் இனி நீ ஒருபொழுதும் என்னைப் பார்க்கக்கூடாது.

பிரதாபன் அதற்கு விடை பகரவில்லை. அவன் உடனே குதிரையேறி அதைச் சவுக்கால் ஒருதட்டு தட்டி வேகமாய்ப் போர்க்களத்தை நோக்கிப் புறப்பட்டான். அவன் சேனையும் பின்தொடர்ந்தது.

அவன் போய்க்கொண் டிருக்கையில் “ எங்கே போகிறாய்?” என்று கேட்டார் சந்திரசேகரர். “ யுத்தத்துக்கு ” என்றான் பிரதாபன்.

சந்திரசேகரர் அவனை ஆதரவுடன் உரக்கக்கூவி யழைத்து “ போகாதே, போகாதே. வெள்ளைக்காரனுடன் சண்டை செய்தால் பிழைக்க முடியாது. மரணம் நிச்சயம்” என்றார்.

பிர.—பாஸ்டர் இன்னும் பிழைத்திருக்கிறான். அவனைக் கொல்ல நான் பொகிறேன்.

சந்திரசேகரர் பிரதாபனிடம் ஓடிவந்து கடிவாளத்தைக் கையிற் பிடித்துக்கொண்டு, “அப்பா, பாஸ்டரைக் கொல்வதால் என்ன பிரயோஜனம்? துஷ்டர்களைத் தண்டிக்க பகவான் இருக்கிறார், அவருடைய அதிகாரத்தை வாங்க நீ யார் நானார்? இழிந்தவர்களும் அதமர்களுமன்றோ சத்துருக்களின்மீது பழிவாங்குவார்கள். உத்தமர்களும் உதாரகுண சீலர்களும் க்ஷமிப்பார்கள்.” என்றார்.

பிரதாபன் ஆச்சரியமடைந்து புளகாங்கிதனானான். இத்தகைய பெருந்தன்மை தங்கிய வசனத்தை அவன் இதுகாறும் எவர் சொல்

லவும் கேட்டதில்லை. அவன் குதிரையை விட்டிறங்கிச் சந்திரசேகரரது பாததூளியைச் சிரமேற்கொண்டு, 'நீயே மனித ஜன்மமெடுத்தவருள் பாக்கியவான். நான் பாஸ்டரைக் கொல்வதில்லை. சத்தியம்" என்றான்.

உடனே பிரதாபன் புரவியேறிப் போர்முகம் நோக்கிச்சென்றனன்

அப்பொழுது சந்திரசேகரர்: "அப்படியானால், பிரதாபா, நீ என் மறுபடியும் போர்க்களத்துக்குப் போகின்றாய்?" என்று கேட்க, பிரதாபன் திரும்பி மதுரமான மந்தஹாஸத்துடன், "அங்கே எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது" என்று சொல்லிவிட்டுக் குதிரையைச் சவுக்கால் தட்டி அதிவேகமாய்ச் சென்று மறைந்தான்.

அந்த மந்தஹாஸத்தைக்கண்டு ரமாநந்தர் மிகவும் மனவருத்தமடைந்து சந்திரசேகரரைப் பார்த்து "உன் சம்சாரத்தை அழைத்துக்கொண்டு அகத்துக்குப்போ. நான் கங்கா ஸ்நானத்துக்குப் போகிறேன். உன்னை இரண்டொரு தினத்தில் மறுபடியும் வந்து பார்க்கிறேன்" என்றார்.

அதற்குச் சந்திரசேகரர் "பிரதாபனைப்பற்றி எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது" என, "அவன் சமாசாரத்தைச் சீக்கிரம் தெரிந்துகொண்டு வருகிறேன்" என்று ரமாநந்தர் கூறினார்.

ரமாநந்த ஸ்வாமி அவர்களை விடை கொடுத்தனுப்பிவிட்டுத் தாம் போர்க்களத்தை நோக்கி நடந்தார். அவர் போரில் அடிபட்டவர்களின் பயங்கரமான ஓலத்துடன் கூடிய அந்தக் கோரமான போர்க்களத்தில், புகைப்படலத்திற்கும் அக்நி மழைக்கும் நடுவே பிரதாபனைத் தேடி இங்குமங்கும் அலைந்தார். செத்த பிணங்கள் ஒன்றின்மேல் ஒன்று விழுந்து எங்கு பார்த்தாலும் ஒரே பிணக்காடாயிருந்தது. முழுவதும் மரித்தவர் சிலர், பாதி மரித்தவர் சிலர், அங்கச்சேதமுற்றவர் சிலர், மார்பில் குத்துண்டு துடிப்பவர் சிலர், "தண்ணியோ, தண்ணியோ" வென்று ஓலமிட்டுக் கதறுகின்றவர் சிலர். தங்கள் தாய், தகப்பன், கூடப்பிறந்தவர், பந்து, மித்திரர் முதலியவரின் பேரைச்சொல்லிப் புலம்பி அழுதவர் சிலர். அந்தப் பிணங்களின் நடுவே ரமாநந்த ஸ்வாமி பிரதாபனைத் தேடி யலைந்தார். அவன்

எங்கும் அகப்படவில்லை. குதிரைவீரர் சிலர் இரத்தம் தோய்ந்த அங்கத்துடன், அடிபட்ட குதிரைகளின் மேலேறிக்கொண்டு ஆயுதங்களைக் கீழே எறிந்துவிட்டுச் செல்வதையும், அக்குதிரைகளின் குளம்படிகளின் கீழ் விதிகிழிந்து விழுந்த வீரர்கள் மிதியுண்டு மாள்வதையும் கண்டார். இந்தக் கூட்டத்திலும் ரமாநந்த ஸ்வாமி பிரதாபனைத் தேடிப் பார்த்தார், காணவில்லை. அவர் பின்னும் சிறிது தூரம் சென்று பார்க்கையில், பதாதிகள் பலர் வெறுங்கையராய், மேல் மூச்சு வாங்க, இரத்தத்தில் மூழ்கி, ஓடுவதைக்கண்டு, அவர்களுக்குள்ளும் பிரதாபன் இருக்கிருனென்று பார்க்க, அங்கும் காணேம்.

இவ்வாறு தேடித்தேடி அலுத்துப்போய் ரமாநந்த ஸ்வாமி ஒரு மரத்தடியிற் போய் உட்கார்ந்தார். அவர் பக்கமாய் ஒரு சிப்பாய் ஓடிச்செல்வதைப் பார்த்து அவனை யழைத்து, "ஒவ்வொருவராய் எல்லாரும் ஓடிப்போய்க்கொண்டிருக்கிறீர்களே சண்டை போட்டது யார்?" என்ருர்.

சிப்பாய்.—ஒருவருமில்லை. கேவலம் ஒரு ஹிந்து மாத்திரமே தைரியமாய் நின்று யுத்தம் செய்தான்.

ஸ்வாமி.—அவன் எங்கே?

சிப்பாய்.—"கொத்தளத்தின் பக்கத்தில் பார்த்தால் அகப்படுவான்" என்று சொல்லிக்கொண்டே ஓடினன்.

அவன் சொன்ன வழியே ரமாநந்த ஸ்வாமி சென்ருர். அங்கே யாதொரு யுத்தமும் நடக்கக் காணேம். சில வெள்ளைக்காரர்களுடையவும் ஹிந்துக்களுடையவும் பிணங்கள் போராகக்குவிந்து விழுந்திருக்கக்கண்டு அங்கே போய்ப் பிரதாபனைத் தேடினர். அங்கே விழுந்திருந்தவர்களில் யாரோ ஒருவன் கோவென்றலறி ஓலமிடும் சத்தம் செவியிற் பட்டது. ரமாநந்த ஸ்வாமி அவனைப் பிடித்திழுத்து வெளியிற் கொண்டு வந்தார். பார்த்தார்—பிரதாபன்! அடிபட்டுக் குற்றுயிராய்ப் பிழைத்திருந்தான்.

அவர் கொஞ்சம் ஜலமெடுத்து அவன் முகத்தில் தெளிக்க, பிரதாபன் அவரைத் தெரிந்துகொண்டு நமஸ்காரம் செய்வதற்காகக் கையைத் தூக்க முயன்ருன், முடியவில்லை.

ஸ்வாமி.—உன் நமஸ்காரத்தை வேண்டாமலே உன்னை ஆசீர்வதிக்கிறேன். சீக்கிரமாய் சொஸ்தமடையக் கடவாய்.

பிரதாபன் (வருத்தத்துடன்) "சொஸ்தமா? சொஸ்தமாவதற்கு இன்னும் அதிக நேரமில்லை. தயவுசெய்து தேவரீர் பாததூளியை யென் தலைமேல் வைக்கவேண்டும்."

ஸ்வாமி.—அப்பொழுதே நாங்கள் வேண்டாமென்று தடுத்தோமே. இந்தத் துர்ஜயமான சண்டைக்கு ஏன் வந்தாய்? சைவலினி உன்னை இப்படித் தூண்டி விட்டாளோ?

பிரதாபன்.—தாங்கள் ஏன் அப்படித் திருவுள்ளத்தில் நினைக்க வேண்டும்?

ஸ்வாமி.—நீ சைவலினியுடன் பேசிக்கொண்டிருக்கையில் அவள் காட்டிய சில ஹாவபாவங்களால், இனி அவள் பைத்தியக்காரியல்லவென்று எனக்குத் தோன்றியது மல்லாமல், அவள் உன்னை முழுவதும் மறந்துபோக வில்லையென்று தெரிந்தது.

பிரதாபன்.—இனி நான் தன்னை இந்தவுலகத்தில் பார்க்கக்கூடாதென்று சைவலினி என்னுடன் சொன்னாள். ஆனால் நான் பிழைத்திருக்கும் வரையில் அவளுக்கும் சந்திரசேகானுக்கும் சுகமென்பது கிடையாதென்று எனக்கு நிச்சயமாயிற்று. என்னுடைய பரமப்பிரீதிக்குப் பாத்திரர்களும் எனக்குப் பரமோபகாரிகளுமாயுள்ளவர்களின் சுகாநுபவத்திற்குக் கண்டகம் (முள்) போலுள்ள இந்த ஜன்மத்தை இனி வைத்திருக்கக்கூடாதென்று தீர்மானித்தேன். ஆகையால்தான், நீங்கள் வேண்டாமென்று அவ்வளவு தூரம் தடுத்தும், இந்தப் போர்க்களத்தில் பிராணனை விடும்பொருட்டு ஓடிவந்தேன். நான் உயிரோடிருந்தால், சைவலினீயின் சித்தம், எப்பொழுதாவதொருகால், சபலமடைவதற் கிடமுண்டாகும். ஆகவே நான் போகிறேன்.

அதைக் கேட்டு ரமாநந்தஸ்வாமி நீராய் உருகிப்போனார். அப்படிப்பட்ட கருணைவெள்ளத்தை ரமாநந்த ஸ்வாமியின் கண்களில் இதற்கு முன் ஒருவரும் கண்டதில்லை. அவர் பிரதாபனை நோக்கி "அப்பா நீதான் இவ்வுலகத்தில் உண்மையான பரோபகாரி, நாங்களெல்லாம் வெறும் வேஷதாரிகள். மறுமையில் உனக்கு மோக்ஷம்

நிச்சயம். குறைவற்ற சாசுவத மோக்ஷ ஸாம்ராஜ்யம் ஸித்தம்," என்றார்.

ரமாநந்த ஸ்வாமி சற்றுநேரம் மௌனமாயிருந்து மறுபடியும் பேசத்தொடங்கி "அப்பா கேள்; நான் உன் மனத்தை முழுவதும் பரிசோதித்து விட்டேன். உலகத்தை ஜயிப்பது கூட உனது இந்திரிய ஜயத்துக்கீடாகாது. நீ சைவலினியைக் காதலித்திருந்தையா?" என்றார்.

தூங்கும் சிங்கம் விழித்துக்கொண்டெழுந்து விட்டது. பிணம் போற்கிடந்த அந்தப் பிரதாபன் திடீரென வலிமை பெற்றெழுந்து, மின்னற் கொடியெனப் பாய்ந்து ரோஷத்துடன் உன்மத்தன்போல் ஹுங்காரம் செய்து கர்ஜித்துப் பேசலாயினன். "ஏ பரதேசியே, உமக்கென்ன தெரியும்? எனது இந்தக் காதலை அறிந்துகொள்ளக் கூடியவன் இப்பிரபஞ்சத்தில் யாவன் இருக்கிறான்! சென்ற பதினறு வருஷகாலமாய் நான் சைவலினியை எவ்வளவு ஆசைப் பெருக்கத்துடன் காதலித்தேனே அதன் அருமையை எவனால் அறியமுடியும்? என்னுடைய காதல் தேக சம்பந்தமானதன்று. பிராணத்தியாக விருப்பமே அக்காதலின் முதிர்ச்சியாய் முடிந்தது. என் தேகத்தின் இரத்தத்திலும், இரத்த நரம்புகளிலும், எலும்புகளிலும் இந்தக் காதலானது அல்லும் பகலும் சுற்றி வியாபித்திருக்கிறது. அதன் மர்மத்தையறிய மனிதனால் ஒருகாலும் முடியவில்லை; இனி முடியப்போவதுமில்லை. ஐயோ, என் உயிர்போகும் சமயத்தில் இந்த விஷயத்தை என் எடுத்தீர்? இவ்வநுராகத்தால் கேடுதான் விளையுமென்று எனக்குத் தெரியும். ஆகவே நான் பிராண பரித்தியாகம் செய்துகொள்ளுகிறேன். என் மனம் மாசடைந்து விட்டது. சைவலினியின் மனம் மறுபடியும் எப்படி மாறுமோ யார் கண்டார்கள்? நான் மாண்டாலன்றி அதற்குப் பரிஹாரம் கிடையாது. ஆகையால் தான் என் பிராணனை விடுகிறேன். இப்பொழுது இந்த மர்மம் உமக்குத் தெரிந்துவிட்டது. நீர் மஹா ஞாதா, சாஸ்திரங்களெல்லாம் உமக்கு வாசோவிதேயம்—வாய்ப்பாடமாய்த்தெரியும். என் பாபத்துக்கு விமோசன மார்க்கம் என்ன சொல்லும்? ஸர்வேசுவரனது திருஷ்டியில் நான் தோஷியா? தோஷியானல், இந்தப் பிராயச்சித்தம் அதற்குத் தகுந்த விமோசனமாகுமா?" என்றான்.

ரமாநந்த ஸ்வாமி சொல்லலுற்ருர்.—அந்த விஷயம் எனக்குத் தெரியாது. மானிட அறிவு இவ்விடத்தில் சக்தியற்றதாய் வீடுகின் றது. சாஸ்திரங்கள் மௌனம் சாதிக்கின்றன. நீ போகும் உலகத் துக்கிறைவனுயுள்ளவன்தான் இதற்கு ஸமாதானம் உரைக்கவேண் டும். ஆனுல் இவ்வளவு மாத்திரம் நான் சொல்லக்கூடும். அதாவது புலன்களை அடக்குவதில் புண்யமுண்டாயின், அந்தமில் அழிவற்ற சுவர்க்கம் உன்னுடையதே. சித்தத்தை யடக்குவதிற் புண்யமுண்டா யின் தேவர்களும் உனக்கு நிகரான புண்யவான்களாகார். தன்னயம் கரு தாது பரோபகாரம் செய்வதில் புண்யமுண்டாயின், ததீசியைவிட உனக்கே சுவர்க்கத்துக்கு அதிக பாத்தியமுண்டு. இனி வரும் ஜன் மத்திலாவது உன்னைப்போல் எனக்கும் இந்திரிய நிக்ரஹம் கைகூட வேண்டுமென்பதே என் மனப்பூர்வமான பிரார்த்தனை.

இவ்வாறு ரமாநந்த ஸ்வாமி பேசி அமர்ந்தார். மெல்ல மெல்ல பிரதாபனது ஆவி பிரிந்து சென்றது. குற்றமற்ற காந்தியுள்ள அந்த ஸ்வர்ண விருக்ஷம் பசும்புற்படுக்கையில் சாய்ந்தது.

இனி போய்வா பிரதாபா! போய்வா! நித்தியாநந்த வீட்டுக்குப் போய்ச்சேர். எவ்விடத்தில் இந்திரிய நிக்ரஹம் செய்வதில் கஷ்ட மில்லையோ, சௌந்தரியத்தைக் கண்டால் மோஹிப்பதில்லையோ, காதலிப்பதில் பாவ முண்டாவதில்லையோ, அவ்விடத்திற்குச் செல் வாய். எவ்விடத்தில் அளவற்ற சௌந்தரியமும், அளவற்ற அன் பும், அளவற்ற இன்பமும், அவ்வளவற்ற வின்பத்தில் அநந்த புண்ய மும் உளவோ, அப்படிப்பட்ட திவ்யலோகத்துக்குச் செல்வாய். எவ்விடத்திலே ஒருவர் துக்கத்தைக்கண்டு மற்றவர் இரக்கங் கொள்ளு கிருர்களோ, ஒருவர் கடமைகளை ஒருவர் செய்கின்ருர்களோ, ஒரு வர் புகழ்ச்சியை மற்றவர் மகிழ்ந்து கொண்டாடுகிருர்களோ, ஒரு வருக்காக ஒருவர் துன்புற வேண்டியதில்லையோ, அத்தகைய உத்தம திவ்ய பதவிக்குச் செல்வாய். இனி லக்ஷம் சைவலிநிகள் உன் காலண்டை வந்து விழுந்தாலும் உன் மனத்தை மீண்டும் பெண்ணுசை யிற் பிடித்திழுக்க முடியாது.

முற்றிற்று.

MADRAS: THE GUARDIAN PRESS, MOUNT ROAD

Specially adapted for Elementary, Training & High Schools

LESSONS from GEOLOGY

பூதத்வ போதினி

BY MR. M. R. SUBRAHMANYAM, B.A.

(IN TAMIL)

நாமிருக்கும் பூமியின் தத்துவங்களை அறியாதிருப்பது பெரும்பேதமையே யன்றோ? பூமியின் தத்துவங்களைச் சரியாக அறியவேண்டுமாயின் Mr. சுப்பிரமணிய ஐயரவர்களால் இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு 30 படங்களால் நன்றாக விளக்கப்பட்டிருக்கும் **பூதத்வ போதினி** என்னும் நூலினை வாங்கி வாசித்தறியவும். இதில் அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இப்புத்தகம் எலிமெண்டரி ஸ்கூல் மாணுக்கர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும், உபயோகப்படும்படி எழுதப்பட்டிருக்கிறது. விலை **அணா 8**

This treats of rocks and minerals: their action and uses: Contains more than 30 fine illustrations, specially prepared for the book: most of the examples and illustrations given in the book are Indian.

Beautifully bound in full Calico: As. 8

இதைப்பற்றிய ஒரு முக்கிய அபிப்பிராயம்

H. Narayana Rao, Esq., M.A., F.G.S., Lecturer on Geology, Presidency College, Madras, writes :—This little book (Lessons in Geology by Mr. M. R. Subrahmanya Iyer, B.A.,) is an introduction to Geology in Tamil. By referring to Indian Examples, the author has atttempted to familiarize the reader with the various Geological phenomena without going too much into the details of the subjeet which would materially be repulsive to an ordinary reader, the author has given a general outline of the subject *in an easy and popular style.* The concluding chapter deals with the mode of occurrence in India of the most important minerals coal, gold and diamond. *I have no doubt that the book will supply a real want and I hope it will be largely used in secon dary schools and especially by teachers.*

THE GENERAL SUPPLIES Co., MYLAPORE, MADRAS, S

FOUNTAIN PENS

A large assortment of Fountain Pens, Clips, Inks, &c.

The **"Improved Fortune"** Fountain Pen : one of our best and most popular brand : specially manufactured for us by one of the leading manufacturers in England—Fitted with high class 14-carat Gold Nib and Silver Regulator, barrel beautifully chased : In attractive box, &c., complete. **Rs. 3-8**

The **"Fortune No. 3" Pen.** —This is also specially made to our order. **This is fitted with a special feed**—Has an excellent nib fitted to it : In Black or mottled color. Cone Cap Holder **Rs. 4-8**

The **"Caltonian"** Fountain Pen, fitted with 14-carat Gold Nib and Duplex feed. **Rs. 2-12**

The **"Supplies"** Pen. A very reliable Gold Nib Pen. Appreciated by all. **Rs. 2-8**

Note.—We have Waterman's & other varieties of Pens, Clips, Inks, etc., in stock.

THE GENERAL SUPPLIES Co., MYLAPORE, MADRAS, S.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயண வசனம்

பண்டித நடேச சாஸ்திரியாரால் எளிய தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, தகுந்த வித்வான்களைக்கொண்டு பார்வையிட்டு, பிழையறப் பரிசோதிப்பித்துக் கண்ணைக்கவரும்படி கனமில்லாத காகிதத்தில் (Feather weight paper) அச்சிடப்பெற்றது.

ஸ்திரீகளும், சிறுவர்களும்கூட எளிதில் தெரிந்துகொள்ளக்கூடிய தெளிவான எளிய நடையில் வசன ரூபமாய் இவ் வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது. இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும், மஹிமைக்கும், தக்கவாறு பெரிய எழுத்தில் பிழையறப் பரிசோதித்துச் செவ்வையாய் அச்சிட்டு, நேர்த்தியான கலிகோவில் அழகாய் பைண்டு செய்திருக்கிறது. ஒவ்வொரு புத்தகசாலைக்கும் இன்றியமையாதது.

தயாராயிருக்கும் காண்டங்கள்

பாலகாண்டம் ...	1 12 0	ஆரண்ய காண்டம்	1 12 0
அயோத்யா காண்டம்	3 0 0	கிஷ்கிந்தா காண்டம்	1 12 0
		ஸுந்தர காண்டம்	1 12 0

ம-ா-ா-ஸ்ரீ, பண்டித நடேச சாஸ்திரியாரால் எழுதப்பட்ட
அரிய தமிழ்ப் புத்தகங்கள்

தீக்கற்ற இருகுழந்தைகள்.—புதிய பதிப்பு. பண்டித நடேச சாஸ்திரியார் எழுதிய புத்தகங்களுள் இதுவே முதன்மையானது	ரூ. 0	அ. 12
மதிகெட்ட மனைவி	1	0
தீனதயாளு (மூன்றாம் பதிப்பு)	0	8
ஸ்ரீ மாமி கொலுவிருக்கை...	0	8
தலையணை மந்திரோபதேசம்	0	8
முத்திராராக்ஷஸம்	0	4
மிருச்சகடி	0	4
வேணீ ஸம்ஹாரம்	0	3
ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள்	0	6
கோமளம் குமரியானது	0	8
பாலகாண்டம் (வால்மீகி இராமாயண வசனம் உயர்ந்த பதிப்பு) ...	1	12
அயோத்யாகாண்டம் (வால்மீகி இராமாயண வசனம் உயர்ந்த பதிப்பு) ...	3	0
ஆரண்யகாண்டம் (வால்மீகி இராமாயண வசனம் உயர்ந்த பதிப்பு) ...	1	12
கிஷ்கிந்தாகாண்டம் (வால்மீகி இராமாயண வசனம் உயர்ந்த பதிப்பு) ...	1	12
ஸுந்தரகாண்டம்	1	12
நளோபாக்கியானம் நான்கு அழகிய படங்களுடன் ...	0	12

ஜெனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

APPROVED BY THE TEXT BOOK COMMITTEE

ஆர்யமத உபாக்யானம்

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது

ஐந்தாம் பதிப்பு

12 அழகிய சித்திரப்படங்களுள்ளது

ஓர் சிறந்த நீதிநூல்—54-இனிய கதைகள் கொண்டது. எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. இருபாலார்க்கும் மிகவும் பயன்படக்கூடியது. இப்பதிப்பில் அநேகம் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது.

இஃது ரிடையர்டு வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ திருநெல்வேலி ஏ. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள் செய்தது. சென்னை அட்வோகேட் ஜனரல் ம-ா-ா-ஸ்ரீ கனம் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் பி. ஏ., பி. எல்., ஸி. ஐ. இ. அவர்கள் எழுதிய சிறந்த முகவுரையுடன் கூடியது. பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு மிகவும் பயன்தரக்கூடியது.

முதல் பாகம் — விலை அணா 4

A COMPLETE COURSE IN
BLACKBOARD DRAWING

பிளாக்போர்டு டிராயிங்

ப்ரீ ஆரம் டிராயிங் (Free Arm Drawing), ப்ரீ டிராயிங் (Free Drawing) வரைவதற்குத் தகுதியான அநேக படங்கள் தமிழில் விளக்கத்துடன் அடங்கியுள்ளது. வட்டம், நேர்க்கோடுகள், நெடுவெட்டம், முட்டைவடிவம் முதலிய மூலாதார பாகங்களிலிருந்து ஆரம்பித்து, இவைகளைச் சேர்த்துச் சாதாரணமான வஸ்துக்கள், இலைகள், பூக்கள், காய்கள், பறவைகள், பிராணிகள், மனிதன், இவற்றின் அவுட்லயின் (Outline) வரையும் விதமும், எழுத்துக்களை எழுதும் மாதிரியும், கதை, கணக்கு, வாசகம், பொருட்பாடம், பூகோளம், சாஸ்திரம், இப்பாடங்களுக்கு வேண்டிய விளக்கப்படங்களும், அளவு மூல சித்திரம் (Drawing to Scale) கற்பனை சித்திரம் (Design) இவற்றிற்கு மாதிரிகளும் அடங்கியுள்ளது. எலிமென்டரி, டிரெயினிங் பாடசாலைகளின் பாடக்கிரமத்தை அநுசரித்தே எழுதப்பட்டிருக்கிறது. — விலை அணா 12

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

பெரிய புராணம்

மூலமும், அரும்பதவுரையும், வசனமும்

அறுபத்துமூவர் சரிதங்களடங்கியது

இந்நிலவுலகத்தில் ஆன்ம நாயகனை யடையப் பலவித நெறிகளிருப்பினும் அவைகளுள் சிறந்தது பத்திநெறியே யாகும். இதைப்பற்றி விரிவாகக்கூறும் பதிநூல் பெரியபுராணம்ஒன்றே.

இப்பெரியபுராணத்தை உரையோடு 19 ரூபாய்க்கும், மூலத்தைமாத்திரம் 3 ரூபாய்க்கும்விற்கின்றமையால் எளியவர்எளிதில் பெறமுடியவில்லை. ஆனதுபற்றி இந்நூல், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் அச்சிட்ட பிரதிக்கிணங்கப் பரிசோதித்த மூலத்தோடு அரும்பதவுரையும், வசனமும் சேர்த்து உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் டிம்மி109 பாரம்அல்லது872 பக்கங்கள் கொண்ட புத்தகமாக அச்சிடப்பட்டிருக்கிறது. இடையிடையே தேவாரங்களுஞ் சேர்க்கப்பட்டுள்ளன. இளங்கல்வியுடைய சிறுமியர்களும் வாசித்து எளிதில் பத்திச்சுவையை யுணர்ந்து களிப்பார்கள். உயர்ந்த காலிகோபயிண்டு செய்து தயாராயிருக்கிறது.

விலை ரூ. 3 0 0

சம்பந்த சரணாலய சுவாமிகள் அருளிச்செய்த கந்த புராண மூலமும், பொழிப்பும், விருத்தியும் ரூ. 2 0 0

திருமந்திரம்

மூவாயிர வருடஞ் சிவயோகமிருந்து ஒவ்வோராண்டிற்கு ஒவ்வோர் அருட்பாவாகத் திருமூலநாயனாரவர்களால் அருளிச் செய்யப்பட்டது. தனை பிரித்திருக்கிறது.அரும்பாக்கட்கு நக்ஷத்திரப்புள்ளி யிட்டிருக்கிறது. திருமூலநாயனார் கலர்படம் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. உயர்ந்த காகிதத்தில் (24 lbs Double Foolscap) அச்சிடப்பட்டிருக்கிறது. (F. Cap.) $59\frac{1}{2}$ பாரம் அல்லது 476-பக்கங்கள் உடையது. காலிகோ பயிண்டு செய்யப்பட்டது.

விலை ரூபாய் 1 8 0

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் 0 6 0

ஹனுமான்ஸிங் (அல்லது) கோலைகளவு திறவுகோல்

பிரணதார்த்திஹர சிவா, பி. ஏ., அவர்களால் இயற்றப்பட்டது. டாக்டர் கோனண்டாயில் இயற்றிய 'ஷர்லாக் ஹோம்ஸ்' என்னும் ஆங்கில நூலைத் தழுவியது. விலை அணா 12

பவானந்தரின் அபூர்வசாமர்த்தியங்கள் விலை அணா 8

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

கிரிஸெல்டா அல்லது பொறுமையுள்ள மனைவி

இப்புத்தகத்தில் மனைவியின் கடமைகள் மிகவும் அழகாய் எடுத்துக்காட்டி யிருக்கிறது. பெண்பாலார் ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்க வேண்டிய புத்தகம். 'பொறுத்தார் பூமியாள் வார்' என்பது இக்கதையினின்றும் நன்ருய் வெளியாகிறது.

விலை அணு 3

போஜ சரித்திரம்

இஃது ம-ா-ா-ஸ்ரீ. T. S. நாராயண சாஸ்திரியார், B·A., B.L., அவர்கள் இயற்றியது. ஏராளமாகத் திரவ்யச் செலவு செய்து கண்ணைப் பறிக்கக் கூடிய 16 சித்திரப்படங்கள் மிகவும் அழகாய் அச்சிட்டு ஸமயோசிதமாய் ஆங்காங்குச் சேர்க் கப்பட்டிருக்கின்றன. விலை ரூபாய் 1 8 0

விவேக போதினி

தொகுதி I

(1908ஹு ஜூலைமூ முதல், 1909ஹு ஜூன்மூ வரையில்)

இப்புத்தகம் சுமார் 400-பக்கங்கள் கொண்டது. சிறந்த வித்வான்களால் எழுதப்பட்ட அருமையான விஷயங்களும், பற்பல விநோதக்கதைகளும், அநேக நூதன உபந்யாஸங்களும் அடங்கி யிருக்கின்றன. ஒவ்வொரு புத்தகத்திலும் அநேக சித்திரப்படங்கள் வெகு அழகுடன் அச்சிடப்பட்டிருக்கின் றன. பள்ளிக்கூடங்களில் பரிசளிப்பதற்கு இது இன்றியமை யாதது. ஒவ்வொரு வீட்டிலும் பெண்டுகளும், பிள்ளைகளும் அவசியம் வாசிக்கவேண்டியது. ஒருவிதத்திலாவது இதற்கு நிகராக வேறொரு புஸ்தகத்தைச் சொல்ல வொண்ணுது. வாங்கி வாசித்துப்பார்த்த பின்புதான் இதன் பெருமை தெரியவரும். ஒவ்வொரு புத்தகமும் மிகவும் நேர்த்தியாகக் காலிகோ பைண்டு செய்து கில்ட் அக்ஷரங்கள் போடப்பட்டிருக்கிறது.

தொகுதி II

(1909ஹு ஜூலைமீ முதல் 1910ஹு ஜூன்மீ வரையில்)

தொகுதி III

(1910ஹு ஜூலைமீ முதல் 1911ஹு ஜூன்மீ வரையில்)

புத்தகம் 1-க்கு விலை ரூபாய் 4. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

சொற்ப பிரதிகள்தான் கையிலிருக்கின்றன. வேண்டிய வர்கள் சீக்கிரத்தில் எழுதிக்கொள்ளவேண்டும்.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

இங்கிலீஷ் வைத்திய சங்கிரகம்
(Compendium of English Medical Science)

புத்தகம் 1-க்கு விலை ரூ **3 8 0**

இதை இயற்றியவர் காலஞ்சென்ற M. ஜகந்நாத நாயுடு. இவர் மைசூர் அரண்மனையில் கௌரவம் பொருந்திய ஸர்ஜனுயும், திருவனந்தபுரத்து ஆயுள்வேத பாடசாலைத் தலைவராயும், சென்னை மெடிகல் காலேஜில் உபாத்தியாயராயுமிருந்தவர். இந்நூல் யாவருக்கும் உபயோகமாகும்படி எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகம் 7 பாகங்கள் கொண்டது.

முதற் பாகம்.—சரீரம்—மனுஷ சரீரத்தின் ஏற்பாடு, அதாவது சரீரத்தின் உறுப்புகள், அவைகளின் தொழில்கள்.

இரண்டாம் பாகம்.—சரீர வியாபாரம்—மானிட சரீரத்தின் உறுப்புகளின் சுகஸ்திதி.

மூன்றாம் பாகம்.—துணபாடம்—ஒவ்வொரு பதார்த்தத்தின் குணம், பிரயோஜனம், தோஷம், அதனைப் பிரயோகிக்கின்ற கிரமம், ஒரு வேளைக்கு உபயோகிக்கவேண்டிய பிரமாணம்.

நான்காம் பாகம்.—ஔஷத வைத்தியம்—வியாதிகளின் விபரம் ஒவ்வொன்றும் விமரிசையாக அனுபோகமான வரையில் எடுத்துக்காட்டி அவ்வியாதிக்குத்தக்கபடி ஔஷதம் உபயோகிக்கக் கைவல்லியமானது. இதில் வியாதிகளின் குணங்களை விமரிசையாய்ச் சொல்லியிருக்கிறது.

ஐந்தாம் பாகம்.—இரணவைத்தியம் (ஸஸ்திரீகம்)—இதில் நமக்கு எவ்வளவு ஞானமிருக்கவேண்டுமோ அதைக் கற்பிக்கிறது.

ஆறாம் பாகம்.—பிரசவ வைத்தியம்—இதனுள் கர்ப்ப உற்பத்தி முதல் பிரஸவகாலம்வரை நடந்துகொள்ளுகிற விதம், அவர்களுக்கு அந்தந்தக் காலத்தில் ஏற்படும் வியாதிகளுக்குத் தகுந்த பரிகாரம், மற்றும் பிரசவகாலத்தில் ஸ்திரீகளுக்கு இருக்கவேண்டிய கிரமம், புருஷாள் கவனிக்கவேண்டிய விதிகள், சிசு உற்பத்தியானதும் அதைக் கவனிக்கவேண்டிய விதங்கள்.

ஏழாம் பாகம்.—சுகபரிபாலனம்—நாம் உட்கொள்ளும் வஸ்துக்கள் மாரிக்காலங்களில் உடுக்கும் வஸ்திரம் ஜலபானாதிகள் முதலியவை.

இப்புத்தகம் ஒவ்வோர் குடும்பத்துக்கும் அத்தியாவசியமானது.

மேற்படியாரியற்றிய **பைஷஜ கல்பம்** **0 12 0**

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

ஹைகோர்ட்டு வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ ப-சம்பந்த முதலியார்
அவர்கள் இயற்றிய நவீன நாடகங்கள்

அமலாதித்யன்.—இது ஷேக்ஸ்பீயர் மகாகவி எழுதிய 'ஹாம்லட்' என்னும் நாடகத்தின் தமிழ் அமைப்பு	1	0
லீலாவதி ஸுலோசனை	0	12
இரண்டு நண்பர்கள்	0	12
சத்ருஜித்	0	12
மனோஹரன்	0	12
காலவரிஷி	0	8
யயாதி	0	8
சாரங்கதரன்	0	8
வேதாள உலகம்	0	8
காதலர் கண்கள்	0	12
பேயல்ல பெண்மணியே	0	8
கள்வர் தலைவன்	0	12
ரத்னவளி	0	12
பொன் விலங்குகள்	0	8
நற்குல தெய்வம்	0	8

BY THE SAME AUTHOR (IN ENGLISH).

Harischandra (A Drama)	1	0
Yayathi...	0	8

ம-ா-ா-ஸ்ரீ, ஏ. மாதவய்யா, பி. ஏ., அவர்களால்
இயற்றப்பட்டவை

	ரூ.	அ
பத்மாவதி சரித்திரம்.—ஒரு தமிழ் நாட்டுக்கதை. (இரண்டு பாகமும், அநேக படங்களுடன்.) புதிய பதிப்பு	1	0
விஜயமார்த்தாண்டம்.—ஒரு தமிழ் நாவல். வெகு அற்புதமான கதை	0	12
ஷை (காலிகோ பைண்டு)	1	2
முத்துமீனாக்ஷி.—ஓர் பிராமணப்பெண்ணின் சுயசரிதை	0	8
ஒதெல்லோ என்ற வெனிஸ் மோரியன்.—இச்சிறந்த நாடகம் ஷேக்ஸ்பீயர் சரித்திரம், பொதுப்பாயிரம், குறிப்புரை, வியாக்யானங்களுடன் எளிய தமிழ் நடையில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது; ஷேக்ஸ்பீயர் மகா கவியின் படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.	1	0
ஷை (காலிகோ பைண்டு)...	1	6
திருமலை சேதுபதி.—ஓர் நவீன நாடகம்... ...	0	8

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

THE "TAMING OF THE SHREW"
(An Adaptation)
நீலி வசீகரம்

இது ஆங்கில கவி சக்கிரவர்த்தியாகிய மஹாகவி, ஷேக்ஸ்பியர் என்னும் நாடகக் கர்த்தாவினல் இயற்றப்பட்ட டேமிங் ஆப் தீ ஷ்ரு (Taming of the Shrew) என்னும் நாடகத்தின் தமிழ் அமைப்பு. படுநீலியாய் யாவருக்கும் அடங்காப்பிடாரியாய், மணப்பவன் மனதை வெறுக்கக்கூடிய குணம் வாய்ந்தவள், நாளடைவில் மணந்தவனது நடத்தும் விதத்தினல் கொடுமை மாறி, கூச்சம் அரும்பி, வணக்கமலர்ந்து, கற்புத்தேன் ஒழுகும் பெண்கள் நாயகமாக வேற்றுமையடைந்த சரிதையைக் கூறுவது. இதில் பதிவிரதையின் மஹிமை, பெண்களது நடத்தை முதலிய பொதிந்து கிடப்பதன்றி, சாதுரியமும் கற்பனையும் பதிந்த பாகங்கள் நிரம்பிக் கிடக்கின்றன. கவி சக்கிரவர்த்தியின் அர்த்தம் நழுவாது தமிழ்ப்பிக்கப்பட்ட இப்புத்தகத்தைப் படியாதவர் தமிழின் இன்பம் பெருதவர் என்றே உறுதியாகக் கூறலாம். எல்லாரும் படிக்கவேண்டியது. விலை அணு 8

DRAUPADHI
திரௌபதி அல்லது மனத்திணிலை

இது திரௌபதியின் சரித்திரம். ஸ்ரீ வேதவியாஸ பகவான் எழுதியவடமொழி பாரதத்தின்வழியாக எழுதப்பெற்றது. பிறப்படைந்த காதை, மீன் பொறி எய்த காதை, ஐவரையடைந்தகாதை, அவை நடுவுற்ற காதை,உபதேசம்செய்தகாதை, அகந்தை யடங்குங் காதை, பழம் பொரூந்து காதை, மனனிலை நின்ற காதை, கீழ்மை யொழிந்த காதை, முடிவடைந்த காதை, என்னும் பத்து அதிகாரங்கள் அடங்கியது. ஸ்ரீ வியாஸ பாரதத்திற்கும் தமிழ் பாரதத்திற்கும் உள்ள வேறுபாடுகள் அங்கங்குக் கீழ்க் குறிக்கப்பட்டிருக்கிறது. இது தவிர இரண்டு அநுபந்தங்கள் உள்ளன. அதனுள் ஒன்றில் திரௌபதி ஒருவளே ஐவரை மணந்தது நியாயமா என்பதைப்பற்றி மார்க்கண்டேய புராணத்திலிருந்து எடுத்தெழுதப் பெற்றுள்ளது. மற்றொன்றில் திரௌபதியின் உட்பொருள் ரகஸ்யார்த்தங்கள் எழுதப் பெற்றுள்ளது. இப்புத்தகத்துள் பக்தியின் ஒழுங்கு, மனத்தின் சலனம், சலித்து வழிபடல், வழிபட்டு நிலையில் நிற்றலாகிய மனே பாவங்களின் விஷயம் நன்கு காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 8.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

4099

நளோபாக்யானம் **விலை அணா 12**

இஃது ஸ்ரீ மஹாபாரதத்திலிருந்து நேராக மிகவும் எளிய நடையில் **பண்டித நடேச சாஸ்திரி**, பி. ஏ., அவர்களால், தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. நளன், தமயந்தி என்னும் இவர்கள் திவ்யகதையை ஒவ்வொருவரும் அவசியம் படித்தல் வேண்டும். அநேகம் சிறந்த நீதிகள் அடங்கியுள்ளன. மேலும் இதற்கென்றே ஆர்ட் பேபரில் தயாரித்த நான்கு அழகிய படங்கள் இப்புத்தகத்தில் சேர்க்கப்பட் டிருக்கின்றன.

துப்பறியும் தமிழ் நாவல்கள்

அஜ்ஞாதவாஸம் அல்லது மாண்டவன் மீண்டமாயம்.—இஃது R. S. நாராயணசாமி ஐயர், பி. ஏ., பி. எல்., அவர்கள் இயற்றியது. **விலை அணா 8**

இராஜாம்பாள்

ம-ா-ா-ஸ்ரீ, ஜெ. ஆர். ரங்கராஜு அவர்கள் எழுதியது. மூன்று அழகிய சித்திரப்படங்களுடன் கூடிய துப்பு அறியும் சிறந்த நாவல். இதைப்போலொத்த நாவல் இதுவரையில் பிரசுரிக்கப்பட்டதில்லையென்பது இதை வாசித்தவர்களுடைய அபிப்பிராயம். வாங்கி வாசித்தால் தான் இதன் பெருமை தெரியும் ... ... **விலை அணா 12**

சந்திரகாந்தா

“இராஜாம்பாளை” எழுதிய ஜெ. ஆர். ரங்கராஜு அவர்களால் எழுதப்பட்டது. “இராஜாம்பாளை” வாங்கி வாசித்தவர்கள் இதை வாங்கிவாசிக்க விரும்புவார்களென்பது திண்ணம். இப்புஸ்தகம் பளபளப்பான 20-பவுன் காகிதத்தில் 202-பக்கங்கள் அடங்கியது. மேலும் இதிலும் இங்கிலீஷ் நாவல்களைப் போல் புதுமாதிரியாகக் கண்டோர் மனதைக் கவரும் மூன்று சித்திரப்படங்கள் ஆர்ட்பேபர் என்னும் வழவழப்பான காகிதத்தில் அச்சடித்துச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதைப்போலொத்த நாவல் இதுவரையில் வெளிவந்ததில்லையென்று பத்திராசிரியர்களாலும் மற்றவர்களாலும் புகழப்பெற்றது. **விலை அணா 12**

மோஹன சுந்தரம்

இதுவும் ஷை யார் இயற்றியது. 3 படங்கள் சேர்ந்தது. நன்றாய் எழுதப்பட்டது. ... ... **விலை அணா 12**

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

ஸ்ரீமத் பாகவத வினவிடை 1-ம் பாகம்

முதல் ஒன்பது ஸ்கந்தங்களின் கதை அடங்கியது

கபிலவாஸுதேவர், த்ருவர், ப்ராசீன பர்ஹிஸ், ரிஷப யோகி, ஜடபரதர், அஜாமிளன் முதலிய மஹான்களின் சரிதையும், ஸ்ருஷ்டி விஷயம், வருணாசிரம தருமம் முதலிய விஷயங்களும், தக்ஷயாகம், கஜேந்திரமோக்ஷம் முதலிய உபாக்யானங்களும் அமைந்திருப்பதன்றி, மஹாப் பிரளயம், சாஸ்திர சிருஷ்டிக் கிரமம், சாஸ்திர புராண சிருஷ்டிகளின் பொருத்தம், திரிமூர்த்திகளின் ஸமரஸம், நெடுங்கால அளவை ஆகிய இவைகளைப்பற்றிய வியாஸங்களை அநுபந்தமாக உடையது. பரசுராமாவதாரம் வரையுள்ள கதை பொருந்தியுள்ளது. பத்து உயர்ந்த சித்திரப்படங்கள் ஸ்கந்தத்திற்கேற்ற வண்ணமடங்கியது.

படங்களின் விபரம்.—(1) கிருஷ்ண பரமாத்மா வேணுகானம்,(2)சுகரம்பா,(3) க்ஷீராப்தி நாதர், (4)வராஹாவதாரம்,(5) பகவான் துருவருக்குப் பிரத்யக்ஷமாதல், (6) மத்ஸ்யாவதாரம், (7) கூர்மாவதாரம், (8)நரஸிம்மாவதாரம், (9) வாமனாவதாரம், (10) பரசுராமாவதாரம். படங்கள் மிக அழகாய் வழவழப்பான காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. விலை. ரூ 1

ஸ்ரீமத் பாகவத வினவிடை 2-ம் பாகம்

பத்து, பதினொன்று, பன்னிரண்டாம் ஸ்கந்தங்களின் கதை அடங்கியது. இதில் ஸ்ரீகிருஷ்ணபகவான் பிறப்பும் வளர்ப்பும், அவர் லீலைகளும் மிகவும் அழகாய் வர்ணித்திருக்கிறது. இப்பாகத்திலும் அநேக சித்திரப்படங்கள் அழகாய் அச்சிட்டு சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூபா 1

பிரபாவதி விலை அணா 8

இது வங்காளிபாஷையில் கனந்தங்கிய நரேந்திரநாத சட்டர்ஜி அவர்கள் இயற்றிய நவீனத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. கஷ்டம் கூலிதரும், முயற்சி திருவினையாக்கும் நெடுங்காலங் கடந்தபின் நடக்கும் மணத்தினால் வரும் ஸுகம் முதலியவைகளைப் பற்றிய இனிய செந்தமிழ் நவீனம். ஸரளமாக எவரையும் எடுத்தபின் கீழ்வைக்க முடியாமல் படிக்கும்படி செய்யும் திறமையுள்ளது. ஸ்ரீசைல தாதாசாரியாரால் இயற்றப்பட்டது.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

சந்திரசேகரன் விலை அணா 8

இது ஆனந்தமடம் என்ற தேசபக்தி புகட்டும் நாவலின் ஆசிரியராகிய ஸ்ரீபங்கிம்சந்திர சட்டோபாத்தியாயரால் பங்காளி பாஷையில்இயற்றப்பட்டு அந்தப் பங்காளிபாஷையிலிருந்தே நேராக தமிழில் மஹேசகுமார சர்மாவால் மொழிபெயர்க்கப்பட்டது. இதன் மூலத்தின் சொன்னயம் பொருணயமெல்லாம் சிறிதேனும் குன்றாமல், கற்பின் பெருமையையும், வைராக்யச்சிறப்பையும் தன்மறுப்பின் மாட்சியையும் விசேஷமாய் விளக்கிய அற்புதக்கதை அழகாய்வர்ணிக்கப்பட்டது. கற்புநிலையினின்றும் தவறுவதற்குச் சிறிது முயன்ற சைவலினி யென்னும் பெண்ணுக்குத் தனது பர்த்தா யோகசக்தியால் அருளிய வசீகர நித்திரையின்பிரபாவத்தால் அவள் துர்க்குணம் மாறி கிருதார்த்தமான வைபவத்தை இந்நூலைப்படித்தே அறியவேண்டும்.

ராஜம் அய்யர் சரிதை விலை அணா 8

இது கமலாம்பாள் சரித்திரம் என்னும் அற்புதக்கதையின் நூலாசிரியரும் பிரபுத்தபாரதம் என்ற மாதாந்தப் பத்திரிகையை மிகுந்த சிறப்புடன் நடத்தி ஆங்கிலம் உணரும் திறனுடையவர்களுக்கு நமது வேதாந்த உண்மைகளை எளிய நடையில் ஸுலபமாகத் தெரிவித்தவரும் ஆகிய ஸ்ரீமான் பீ. ஆர். ராஜம் அய்யர் பி. ஏ., அவர்கள், சரித்திரம். இதனுடன் இவர் செய்தநூல்களிலிருந்துஎடுக்கப்பட்டுள்ளஉபதேசமொழிகளும், இவர் முதலில் ஆங்கிலத்தில் எழுதிய வேதாந்த வியாஸமும் சேர்க்கப்பட்டுள்ளன.

மஹாபாரதம், சாந்திபர்வம்

கும்பகோணம் பிரம்மஸ்ரீ பாரதசாமாசாரியாரவர்களால்தமிழில்மொழிபெயர்க்கப்பட்டுப் பிழையறப் பரிசோதித்து நல்ல காகிதத்தில், பெரிய எழுத்தில் அச்சிட்டுக் கலிகோவில் நன்றாய்ப் பைண்டு செய்திருக்கிறது. பாரதத்தில் இப்பர்வமானது பலவகைப்பட்ட தருமங்களையும் உபாக்கியானங்களையும் தெரிவிக்கும் ஸாரமான பகுதியென்பதும், அவற்றைத் தெரிந்து கொள்ளுதல் இருபாலார்க்கும் பெரும்பயனை விளைவிக்குமென்பதும் யாவரும் அறிந்த விஷயங்கள்.

முதல்பாகம்	2 0 0
ஷை இரண்டாம் பாகம்	2 0 0
இரண்டு பாகமும் சேர்த்து வாங்குபவர்க்கு	3 8 0

ஜனரல் ஸ்ப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.